[ISSUED 30—11—1983

ஆணையர்
தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும்
வரலாற்று ஆராய்ச்சி
5 ஏப் 1984
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

FRIDAY 8th APRIL 1983

Volume CXCVIII (No. 1)

©
GOVERNMENT OF TAMIL NADU
1983

*Legislative Council Department*
*Fort St. George, Madras*-600 009

[Price Rs. 2.75 Paise]

(317)

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMIL NADU

THIRU S. L. KHURANA.

**Members of the Council of Ministers.**

1. The Honourable Thiru M. G. RAMACHANDRAN, Chief Minister in-charge of Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses and Archeology.

2. The Honourable Thiru V. R. NEDUNCHEZHIYAN, Minister in-charge of Finance, Planning. Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. The Honourable Thiru S. RAMACHANDRAN, Minister in-charge of Electricity, Iron and Steel Control.

4. The Honourable Thiru K. A. KRISHNASAMY, Minister in-charge of Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. The Honourable Thiru S. D. SOMASUNDARAM, Minister in-charge of Revenue, Commercial Taxes, Excise and Census.

6. The Honourable Thiru R. M. VEERAPPAN, Minister in-charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor Permits.

7. The Honourable Thiru C. ARANGANAYAGAM, Minister in-charge of Education including Technical Education and Official Language.

8. The Honourable Thiru K. KALIMUTHU, Minister in-charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. The Honourable Thiru C. PONNAIYAN, Minister in-charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt, Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. The Honourable Thiru P. KOLANDAIVELU, Minister in-charge of Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. The Honourable Thiru S. RAGAVANANDAM, Minister in-charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. The Honourable Dr. H. V. HANDE, Minister in-charge of Health.

13. The Honourable Thiru K. RAJA MOHAMED, Minister in-charge of Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. The Honourable Thiru S. MUTHUSAMY, Minister in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. The Honourable Thiru S. THIRUNAVUKKARASU, Minister in-charge of Large Scale Industries, Mines, Textiles, and Minerals.

16. The Honourable Thiru S. N. RAJENDRAN, Minister in-charge of Public Works, Khadi, Prohibition excluding grant of liquor permits and Passports, Public Works Department and Establishment matters relating to Public Works Department.

17. The Honourable Thiru M. VIJAYASARATHI, Minister in-charge of Harijan Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. The Honourable Thirumathi GOMATHI SRINIVASAN, Minister in-charge of Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

## தமிழ் நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

---

### தமிழ்நாடு ஆளுநர்.

திரு. சுந்தர்லால் குரானா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்மந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு திட்டம், சர்க்கரைப் பாகுக் கழிவு மற்றும் தொல் பொருள் இயல்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

நிதி, திட்டம், சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன் வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

மின்சாரம் மற்றும் இரும்பு எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

கிராம, குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

வருவாய், வணிக வரிகள், ஆயத்துறை மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி-அறநிலைய துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்

மாண்புமிகு மேலவைத் தலைவர்

டாக்டர் ம. பொ. சிவஞானம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்

புலவர் புலமைப்பித்தன்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. திரு. க. இராமமூர்த்தி
2. திரு. சி. இராமலிங்கம்
3. திரு. பா. ரா. தாமஸ்
4. திரு. ஜே. எம். மியாகான்

மேலவைச் செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.,

சார்புச் செயலாளர்

திரு. த. ப. டில்லிதுரை, பி.எஸ்சி., பி.எல்.,

விவாதப் பதிப்பாளர்

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எஸ்., பி.எல்.,

தலைமை நிருபர்

திரு. ச. சுவாமிநாதன்.

143178
D
Y2ll,32-N89
N83-1991-2

317
தமிழ்நாடு அரசுச் செயலகம் மற்றும்
5 ஏப் 1984

## பொருளடக்கம்


| | பக்கங்கள். |
|---|---|
| (i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | i—v |
| (ii) தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. | vi |
| (iii) தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல் .. | vii—xi |
| 1 வினாக்கள் விடைகள் .. .. .. | 1—22 |
| 2 ஒத்திவைப்புத் தீர்மானம் | |
| பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை மாணவர் விடுதிகள் மூடப்பட்டுவிட்டதால், அங்கு தங்கி படித்த ஏழை மாணவர்கள் அல்லல்படுவது குறித்து... | 22—25 |
| 3 அறிவிப்பு— | |
| வித்க்குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம் குறித்து, .. .. .. .. | 26 |
| 4 கவன ஈர்ப்பு— | |
| (1) தனியார் பள்ளிகளிலிருந்தும், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலிருந்தும் அரசுப்பள்ளிகளில் பணியாற்ற எடுத்துக் கொள்ளப் பட்டோருக்கு அரசு பணி ஈர்ப்பு ஆணை பிறப்பிக்காததால் பணிப்பாதுகாப்பு, பதவி உயர்வு, ஆண்டு ஊதிய உயர்வு, விடுப்புச் சலுகைகள் ஆகியவை கிடைக்கப் பெறாமை குறித்து. .. .. | 26—29 |
| (2) தமிழ்நாடு கல்விக்கடன் படிப்புதவித் தொகை விதிகளுக்குத் திருத்தங்கள் செய்யப்படாமையால், மேல் நிலைப் பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்குக் கடன் படிப்புதவித் தொகைகள் திடீரென நிறுத்தப்பட்டிருப்பது குறித்து. | 29—30 |
| 5 அரசின் தீர்மானம்— | |
| உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம் | 31—105 |
| 6 அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் .. | 105—106 |

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ் நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட பட்டியல்.

| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 1. அருணாசலம் திரு. கே. | நியமனம் |
| 2. ஆறுமுகம் திரு. சோ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 3. ஆற்காடு வீராசாமி. திரு. நா. | மாநில சட்டமன்றப் பேரவை |
| 4. ஆனந்தம் திரு. வி.வி.வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 5. இராகவானந்தம் திரு. எஸ். (தொழிலாளர் நல அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 6. இராசாமுகமது திரு. கா. (பாசனத்துறைஅமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 7. இராதா திரு. எஸ். ஆர். | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 8. இராமமூர்த்தி திரு. க. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 9. இராமலிங்கம் திரு. சி. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 10. கண்ணப்பன் காடுவெட்டி | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 11. சங்கரலிங்கம் திரு. ம. .. | திருநெல்வேலி - கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 12. சந்தோஷம் திரு. த. எம்.ஏ., பி.எல்., .. | தமிழ் நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 13. சனார்த்தனம். டாக்டர் இரா | தமிழ் நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 14. சிவஞானம். டாக்டர் ம.பொ. (மாண்புமிகு தலைவர்). | நியமனம் |
| 15. சீதாதேவி கிருஷ்ண சாமி. திருமதி | நியமனம் |

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி , ஆட்சி மொழி மற்றும் கைத்தறி.

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி பொன்னையன் (கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், கம்பெனிகள் பதிவு, கடன் கொடுத்தல், சிட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம் மற்றும் கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் சம்பந்தப்பட்டவை, பூமிதானம், கிராமதானம் மற்றும் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ் நாடு குடி நீர் - வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :

மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. க. இராசா முகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், மற்றும் வக்ப்.



14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

பெருந்தொழில்கள், சுரங்கமும் - கனி வளமும், மற்றும் நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. சோ. நீ. இராசேந்திரன் (கதர் மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

கதர், மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக) மற்றும் பயண இசைவுச் சீட்டு பொதுப்பணித் துறை மற்றும் பொதுப் பணித்துறை அலுவல்கள் சம்பந்தமாக.

17. மாண்புமிகு திரு. எம் விஜயசாரதி (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

அரிசன நலம், எழுது பொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலை வாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளி நாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும் (1) | | தொகுதி (2) |
|---|---|---|
| 49. வெற்றிடம் | .. | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 50. வெற்றிடம் | .. | செங்கற்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 51. வெற்றிடம் | .. | கோயம்புத்தூர் - நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 52. வெற்றிடம் | .. | கோயம்புத்தூர் - நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 53. வெற்றிடம் | .. | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 54. வெற்றிடம் | .. | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 55. வெற்றிடம் | .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 56. வெற்றிடம் | .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 57. வெற்றிடம் | .. | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58. வெற்றிடம் | .. | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59. வெற்றிடம் | .. | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60. வெற்றிடம் | .. | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 61. வெற்றிடம் | .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62. வெற்றிடம் | .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 63. வெற்றிடம் | .. | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

வெள்ளிக்கிழமை, 1983 ஏப்ரல் 8.

பங்குனி 25, துந்துபி—திருவள்ளுவராண்டு-2014.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (மாண்புமிகு டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### இராவண காவியம்

* 233 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) புலவர் குழந்தை எழுதிய இராவண காவியத்திலிருந்து சில பகுதிகளைப் பள்ளி மாணவர்கட்குரிய பாடத்திட்டத்தில் சேர்க்கும் உத்தேசம் ஏதும் அரசுக்கு உள்ளதா?

(இ) ஆம் எனில், அதற்கான நடவடிக்கைகள் எப்போது மேற்கொள்ளப் படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) & (இ) பள்ளிகளுக்கு தமிழ்ப் பாடத்திட்டம் வகுப்பது, தமிழ்ப்பாட நூல் தயாரிப்பது ஆகியவற்றைக் கவனிக்கும் வல்லுநர்குழுக்களே இதுபற்றி முடிவு செய்ய வேண்டியவை. 1983-84 ஆம் ஆண்டு 9-ஆம் வகுப்புக்கு புதிதாக தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிடவிருக்கும் தமிழ்ப்பாடப் புத்தகத்தில் இந்நூலிலிருந்து மருத நில வருணனை பற்றிய சில பாடல்களை அக்குழுக்கள் 'பல்சுவைப் பாடல்கள்' என்னும் தலைப்பின் கீழ் சேர்த்துள்ளதாக அறியப்படுகிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, புலவர் குழந்தை அவர்கள் எழுதிய இராவண காவியத்திலிருந்து சில பகுதிகளை ஒன்பதாம் வகுப்பு பாடநூலில் பல்சுவைப் பகுதி என்ற தலைப்பில் சேர்த்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்காக நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக, தமிழின மக்களை அரக்கர்களாக வருணிக்கிற இராம காவியம் மாணவர்களிடையே பல காலமாக இடம்பெற்றிருக்கிற காரணத்தால், அதைப் படிக்கிற மாணவர்கள் நம் இனத்தின் மீது தவறான எண்ணத்தைக் கொள்கிறார்கள். இதன் காரணமாக, இன

| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும் | தொகுதி |
|---|---|
| (1) | (2) |
| 16. சீத்தாபதி திரு ஆர் டி | மாநில சட்டமன்றப் பேரவை |
| 17. சுவாமிநாதன், திரு. ஜி. பி. பார்ம். | தமிழ் நாடு கிழக்கு பட்டதாரி கள் தொகுதி. |
| 18. தாமஸ், திரு. பா.ரா. .. | மதுரை - இராமநாத புரம் ஆசிரியர்கள் தொகுதி. |
| 19. தாமோதரன்திரு. ஏ. ஆர். | தமிழ் நாடு வடக்கு பட்டதாரி கள் தொகுதி. |
| 20. தாராசெரியன் திருமதி .. | நியமனம் |
| 22. தாஸ் திரு. ஏ.ஜே. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 21. துரைசாமி திரு. ஓ.எஸ்... | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 23. நல்லசிவன் திரு. ஆ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 24. நீலநாராயணன் திரு. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 25. ஜேப்பியார் திரு. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 26. புலவர் புலமைப்பித்தன் (மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்). | நியமனம் |
| 27. மந்தாகினி கிருஷ்ண மூர்த்தி. திருமதி | நியமனம் |
| 28. மாணிக்கம் திரு. ப. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 29. மியாகான் திரு.ஜே.எம். | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 30. மீனாட்சிசுந்தரம் திரு. க. | தஞ்சாவூர் - திருச்சிராப்பள்ளி புதுக்கோட்டை ஆசிரியர் கள் தொகுதி. |
| 31. முத்து திரு. எஸ். .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 32. முத்துசாமிதிரு. செ. .. | சேலம் - தர்மபுரி - கோயம் புத் ர் - நீலகிரி **ஆசிரியர்** கள் தொகுதி. |
| 33. முத்தையாசெட்டியார். டாக்டர் எம்.ஏ. | நியமனம் |



| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும் | தொகுதி |
|---|---|
| (1) | (2) |
| 34. முனுசாமி திரு. பி. .. | நியமனம் |
| 35. லீலாவதி செல்வி ஆ. .. | சென்னை - செங்கற்பட்டு ஆசிரியர்கள் தொகுதி. |
| 36. லெட்சுமிகாந்தன். திரு. சி.ரா. | வட ஆற்காடு - தென் ஆற்காடு ஆசிரியர்கள் தொகுதி. |
| 37. வசந்த பை திரு. ஜி. .. | சென்னை பட்டதாரிகள் தொகுதி. |
| 38. வள்ளிமுத்து திரு. ஈ.வி.வெ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 39. ஜான் திரு. வலம்புரி .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 40. வீரப்பன் திரு. இராம. .. (செய்தி - அறநிலையத் துறை அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 41. எஸ். வெங்கடேசன் திரு. ஈ. | நியமனம் |
| 42. ஹண்டே டாக்டர் எச்.வி. | சென்னை பட்டதாரிகள் தொகுதி. |
| 43. வெற்றிடம் | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 44. வெற்றிடம் .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 45. வெற்றிடம் .. | சேலம் - தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 46. வெற்றிடம் .. | சேலம் - தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 47. வெற்றிடம் .. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 48. வெற்றிடம் .. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் தமிழ் உணர்வையும், தமிழ் கலாச்சாரத்தையும் வளர்ப்பதில் யாருக்கும் பின்தங்கியவர் அல்ல. அந்த வகையில் பல நல்ல செயல்களை அவர் செய்து கொண்டு வருகிறார். அண்மையில் 2 நாட்களுக்கு முன்புகூட, ஆசிரியர்களின் நலன் கருதி பல்வேறு அறிவிப்புகளை இங்கே வழங்கியிருக்கிறார்கள். அதற்காக எல்லோருமே பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். நாங்களும் பாராட்டிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது, பல்சுவைப் பகுதி என்ற தலைப்பின்கீழ் இராவண காவியத்திலிருந்து சில பகுதிகளைச் சேர்ப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று இங்கே குறிப்பிட்டார்கள். கம்ப இராமாயண காப்பியத்திலிருந்து எடுக்கப் படும் சில பகுதிகள் தமிழ் இனத்தைப் பழித்தும் இழித்தும் சொல்கிற பகுதி யாக இருக்கக் கூடாது. அதைப்போலவே இராவண காப்பியத்திலிருந்து எடுக்கப்படும் பகுதிகளும் வேறு இனத்தை இழித்துப் பழிக்கிற பகுதிகளாக இருக்கக்கூடாது என்ற ஆலோசனையை வல்லுநர் குழுவுக்குத் தந்து, அந்த வகையில் ஏதேனும் சில பகுதிகள் இடம் பெற்றிருந்தால், அவைகளை நீக்க வேண்டும் என்ற ஆலோசனையை அரசே வல்லுநர் குழுவுக்குப் பரிந்துரை யாகச் செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இவ்வாறு பரிந்துரை செய்வது சரியல்ல என்பதைத்தான் நான் முன்பே அரசின் கருத்தாகக் குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கேட்கிற கேள்விகளையும் நான் அவைகளுக்குத் தருகிற பதில்களையும் பார்க்கும் வல்லுநர் குழு இராவண காவியத்தைப்பற்றித் தவறான கருத்தை வைத்திருந்தால், அதை மாற்றிக் கொண்டு அதைக் குறித்து நல்ல கருத்தை உருவாக்கிக் கொள்வார்கள் என்று தான் நம்புகிறேன். அதற்கு வேண்டுமானால் மறைந்த திரு. ரா. பி. சேதுப் பிள்ளை அவர்களின் இரண்டு வரிகளையும் இங்கே படித்துக் காட்ட விரும்பு கிறேன்.

> "தேனினும் இனிய செந்தமிழ்க் குழந்தை; நான் கம்ப
> ராமாயணக் கவிச் சுவையில் கட்டுண்டு கிடந்தனன்;
> தங்கள் இராவண காவியம் அக்கட்டை அவிழ்த்து
> விட்டது; கருத்துமாறுபாடு, வேறுபாடு வேறு."

என்பது ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களின் கருத்து. அதை இங்கே சொல் வதன் மூலமாக இராவண காப்பியம் என்பது நம்முடைய மாணவர்களுக்குப் பாடமாக வைக்கக்கூடிய தகுதியுடைய ஒரு சிறந்த காப்பியம் என்று உணர்ந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்.



## *Leave Facilities.*

* 234 Q.—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether it is a fact that, as per G.O. Ms. No. 899, Education, dated 22-4-1977, Teaching and Non-Teaching Staff in Arts and Science Colleges in the State, are enjoying all the leave facilities; and

(b) if so, the reasons for not extending the same to such staff of Private Engineering (Aided) Colleges and Polytechnics?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) ஆம்.

(இ) அரசு பொறியியற் கல்லூரிகள் மற்றும் அரசு பல்தொழில் கல்வி நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் அனைத்து விடுப்பு வசதிகளும் அரசு உதவிபெறும் தனியார் தொழில் நுட்பக்கல்வி நிலை யங்களில் பணியாற்றும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கும் 8—11—1982 முதல் நீட்டிக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-40)

**திரு. பா. ரா தாமஸ்:** தலைவரவர்களே, நான் கொடுத்த கேள்வியிலே சிறிய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சேர்த்துக்கொள்ள தலைவர் அவர்கள் அனுமதிக்க வேண்டும். கேள்வியை தங்கள் மூலமாகக் கொடுக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எப்போதும் மாண்புமிகு உறுப்பினர்கள் வினாக்களை அனுப்பும்போது, இருக்கின்ற சில விதிமுறைகளுக்கேற்ப மாற்றப் படுகின்றன. வேறு எந்த உள்நோக்கோடும் மாற்றப்படுவதில்லை.

**திரு. பா. ரா. தாமஸ்:** 31—3—1971 அன்று கல்லூரி ஆசிரியர்களுக்கு, ஏற்கெனவே நியமனம் ஆன நாளிலிருந்து ஈட்டிய விடுப்பு வழங்கலாம் என்று அரசாணை இடப்பட்டிருக்கிறது. ஆனால் தனியார் பள்ளிகளில் பணியாற்றக் கூடியவர்களுக்கு 1968 ஆம் ஆண்டிலிருந்து ஈட்டிய விடுப்பைக் கொடுத்து வருகிறோம். கல்லூரிகளில் பணியாற்றுகிறவர்களுக்கு மட்டும் 1950, 1955, 1960 என்று அவர்கள் நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்று, மூன்று நாள் என்று கொடுக்கிறோம். ஆகவே அந்தச் சலுகையை எல்லோருக்கும் விரிவாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவரவர்களே, இது பற்றிய விவரம் இப்போது என்னிடத்திலே இல்லை. இருந்தாலும் இந்தக் கருத்துருவை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : எல்லாவற்றையும் பரிசீலனை செய்துதான் 29—3—1982-ல் உத்தரவு போட்டிருக்கிறோம். மறு பரிசீலனை செய்வதற்கான வாய்ப்பு இல்லை.

*House Rent Allowance to Teachers of Thiyagesar Alai High School.*

* 236 Q.—Thiru A. R. DAMODARAN (on behalf of Thiru G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Education be pleased to state :

(a) whether it is a fact that the Staff and Teachers of Thiyagesar Alai High School, Manaparai, Tiruchirappalli District, who reside within the Municipality, are not being paid House Rent Allowance from 1975 onwards: and

(b) if so, the action proposed to be taken thereon ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) வீட்டு வாடகைப் படியை வழங்குமாறு 4—6—1981-ல் அரசு ஆணையிட்டுள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : திருச்சி மாவட்டம், மணப்பாறை, தியாகேசர் ஆலை உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு 1981 முதல் வீட்டு வாடகைப் படி வழங்குமாறு அரசு ஆணையிட்டுள்ளது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அதற்கு முன்பே வழங்கப்பட்டிருக்க வேண்டும். 1981-ல் உத்தரவிட்டிருந்தாலும், எந்த நாளில் இருந்து வழங்க வேண்டுமோ அந்த நாளில் இருந்து நிலுவைத் தொகை உட்பட வழங்க அரசு பரிவுடன் பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 4—6—1981 முதல் அளிக்குமாறு அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. அதிலே மாறுதல் செய்யும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

*Pay Scales of Polytechnic Staff*

* 237 Q.—Thiru A. R. DAMODARAN (on behalf of Thiru G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education be pleased to state :

(a) whether the Government are aware that there are several anomalies in the pay scales among Staff Members in the Polytechnics in the State, consequent on the implementation of U.G.C. Scales of Pay;



(b) if so, the nature of the anomalies; and

(c) the action proposed to be taken by the Government in the matter ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (இ) பல்கலைக்கழக மானியக் குழுவின் திருத்திய சம்பள விகிதங்கள் பொறியியல் கல்லூரி மற்றும் பல்தொழில் பயிற்சிக் கல்லூரியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு 1—1—1974 முதல் அமுலாக்கப்பட்டு பணப்பயன் 1—1—1977 முதல் கொடுக்கப்பட்டுள்ளது. இச்சம்பள விகிதங்கள் கொடுக்கப்பட்டதால் ஏற்பட்ட சில முரண்பாடுகளைத் தீர்க்க மற்றும் அடிப்படை சம்பள விகிதங்கள் அதிகமாக்கப்பட வேண்டுதல் போன்ற வேண்டுகோள்கள் அரசுக்கு வந்துள்ளன.

(உ) அரசினால் பெறப்பட்ட விண்ணப்ப மனுக்கள் ஒரு நபர் குழுவின் பரிந்துரைகளுக்கு அனுப்பப்பட்டன. அக்குழுவின் பரிந்துரைகளுக்கேற்ப பல முரண்பாடுகள் களையப்பட்டுள்ளன.

திரு. பா. ரா. தாமஸ் : திருமதி ராஜம்மாள் தேவதாஸ் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுவிட்டனவா ? முதலில் குறிப்பிட்டிருந்த கல்வித் தகுதியை மாற்றியமைத்து முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு என்பதிலே மாற்றம் செய்திருக்கிறார்களே, அந்த அடிப்படையிலே பரிந்துரைகள் எல்லாம் அமுலாக்கப்பட்டுவிட்டனவா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பணிபுரியும் உதவிப் பேராசிரியர்கள் 10 ஆண்டுகள் பணி புரிந்திருப்பின் அவர்களை பேராசிரியர்களாகப் பதவி உயர்வு கொடுத்து ரூபாய் 700-1,600 என்று சம்பள விகிதம் கொடுக்கப்பட்டிருக்கின்றனர். இதே போல் பொறியியல் கல்லூரி மற்றும் பல்தொழில் பயிற்சிக் கல்லூரிகளில் பணிபுரியும் கூட்டு விரிவுரையாளர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை இருந்தது. கல்விக் கொள்கை விளக்கக் குறிப்பின் மீது நடந்த விவாதத்திற்குப் பதில் அளிக்கையில் இந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அதைப் போலவே கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பணிபுரியும் பட்டமேல்படிப்பு அல்லது பட்டப்படிப்பு தகுதி பெற்றிருப்பினும் இல்லாவிட்டாலும், உடற்பயிற்சி இயக்குநர்கள் தங்கள் திருத்திய சம்பள விகிதங்களை 1—1—1974 முதலும் பணப்பயனை 1—1—1977 முதலும் பெற்றுள்ளனர். இதே போல உடற் பயிற்சி இயக்குநர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று கேட்டார்கள். அதையும் அரசு ஏற்றுக்கொண்டு 15—12—1981 அன்று அரசு ஆணை வழங்கியிருக்கிறது.

உணர்வு, தாய்மொழி உணர்வு போன்றவை பாதிக்கப்படுவதாக நிலவும் ஒரு கருத்தை அரசு போக்குவதற்குரிய நடவடிக்கைகளில் ஒன்றாகத்தான் தற்போது இராவண காவியத்தின் சில பகுதிகளைச் சேர்க்க முன்வந்துள்ளது என்று கருதுகிறேன். வல்லுநர் குழுதான் இத்தகைய பகுதிகளைப் பாடத் திட்டங்களில் சேர்ப்பது குறித்து முடிவெடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அந்த வல்லுநர் குழு என்பது நம்மில் சிலர் சேர்ந்த ஒன்றுதான். பெரியார், மற்றும் பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியில் வந்த அரசு அந்தக் கொள்கைகளை நிலைநிறுத்தும் வகையில் முயற்சிகளை மேற்கொள்கிறது என்ற வகையில் எல்லா வகுப்புப் பாடநூல்களிலும் இத்தகைய காவியத்திலிருந்து சில பகுதிகளையாவது வைக்க வல்லுநர் குழுவுக்குக் கூற முனைப்போடு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, புலவர் குழந்தை அவர்களால் எழுதப்பட்ட "இராவண காவியம்" என்ற நூல் 1948 ஆம் ஆண்டு அப்போதிருந்த அரசால் தடை செய்யப்பட்டிருந்தது. 1971 ஆம் ஆண்டு அந்தத் தடை நீக்கப்பட்டிருக்கிறது. ஆக இந்த இடைப்பட்ட காலத்தில் அதாவது 1948 முதல் 1971 வரை—இந்தக் காவியப் பகுதிகளை யாரும் பாடநூலில் சேர்க்க முடியாத ஒரு நிலை இருந்தது. 1971 ஆம் ஆண்டு தடை நீக்கப்பட்டுவிட்டதன் காரணமாக, தற்போது அதன் பகுதிகள் பாடநூலில் சேர்க்கப்படலாம் என்ற நிலை இருக்கிறது. இப்போது அமைக்கப்படுகிற வல்லுநர் குழுக்கள் இராவண காவியத்திலிருந்து பகுதிகளை எடுத்துப் பாடங்களாக வைக்க விரும்பினால், யாரும் அதைத் தடுக்க முடியாது. அவர்கள் தாராளமாக அப்பகுதிகளை எடுத்து பாடநூல்களில் வைக்கலாம். இப்போதுள்ள நிலைமை அதுதான். நம்மைப் பொறுத்த வரையில், இராவண காவியமும் ஒன்றுதான்; கம்ப ராமாயணமும் ஒன்றுதான்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மதச்சார்பற்ற அரசு என்று கூறப்படும் அரசுகள் ஒரு மதத்தை வளர்ப்பதற்கு உரிய முறைகளில் ஒன்றாக இராம காவியத்திலுள்ள சில பகுதிகளை எடுத்துப் பாடநூல்களில் சேர்த்ததன் காரணமாக தமிழ் இனத்தின்மீதே தவறான கருத்து உருவாக்கப்படுகிறது என்ற அடிப்படையில்தான் இராவண காவியமே உருவாக்கப்பட்டது. ஆனால் நமது அரசைப் பொறுத்தவரையில் இராவண காவியமும், கம்ப இராமாயணமும் ஒன்றுதான் என்று அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அப்படியானால் அதற்கு ஏற்ற அளவுக்குச் சமசந்தர்ப்பம் அளித்திருக்கிறார்களா? எனவே அனைத்துப் பாடநூல்களிலும் இராவண காவியத்திற்கும் சந்தர்ப்பம் அளித்தால்தான், மாணவர்கள் இரண்டையும் ஆய்வு செய்து ஒரு முடிவெடுக்க



வாய்ப்பாக இருக்கும் என்ற கருத்தை வல்லுநர் குழுவுக்கு அரசு எடுத்துச் சொல்லுமா? எனவே இக்காப்பியத்திலிருந்து கண்டிப்பாக சில பகுதிகளைச் சேர்ப்பதற்கு அரசு வல்லுநர் குழுவுக்குப் பரிந்துரை செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இப்படிப்பட்ட பொறுப்புகளில் அரசு தலையிடுவது என்பது நல்லதல்ல. இராவண காப்பியமும், கம்ப இராமாயணமும் இந்த அரசைப் பொறுத்தவரையில் ஒன்று என்று குறிப்பிட்டேன். மாணவர்களின் இலக்கிய ஆற்றலை வளர்ப்பதற்குப் பயன்படும் இலக்கியப் பகுதிகள் என்ற வகையில்தான் இவை இரண்டும் ஒன்று என்று அரசு கருதுகிறது என்று நான் குறிப்பிட்டேன். கம்பராமாயணம் என்பது எல்லோரிடமும் செல்வாக்கு பெற்றுள்ள, மிகப் பெரிய இலக்கியம். இதன் காரணமாக கம்பனும் புலவர் குழந்தையும் ஒன்று என்று நான் சொல்லவில்லை. மாணவர்களின் இலக்கிய ஆற்றலை வளர்க்க வேண்டும் என்ற அடிப்படையில் இலக்கியங்களிலிருந்து நாம் சில பகுதிகளை எடுத்துக் கொள்கிறோம். அந்த வகையில் இந்த இலக்கியத்திலிருந்தும் சில பகுதிகளை எடுத்துக் கொள்கிறோம். கம்ப இராமாயணத்திலிருந்தும் சில பகுதிகளை எடுத்துக் கொள்கிறோம். ஆனால் வாய்ப்புகளை வைப்பதற்குக் காரணம் அந்த இலக்கியங்களை எழுதியவர்களின் கருத்துக்களைப் பரப்புவதற்காக அல்ல என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: கருத்துவேறுபாடு உடையவர்கள்கூட இராவண காவியத்தை, தற்காலத்தில் எழுந்த மிகப் பெரும் காப்பியமாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். எனவே கல்லூரிகளில் இப்போது இராவண காப்பியத்தின் பகுதிகளை பாடமாக வைத்திருக்கிறார்களா? அதோடு வல்லுநர் குழுவில் அரசின் சார்பாக உறுப்பினர்களை நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: வல்லுநர் குழு அமைக்கப்படும் போது, அதற்கான உறுப்பினர்கள், கல்லூரிகளிலோ அல்லது பள்ளிகளிலோ அல்லது தனியார் நிறுவனங்களிலோ பணியாற்றுகிறவர்களாகவோ அல்லது பணி ஏதுமில்லாமல் இருந்தாலும் கூட, தகுதிகளின் அடிப்படையில் வல்லுநர்கள் என்ற அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் எந்தெந்தப் பகுதிகள் தேவை என்று கருதுகிறார்களோ அவைகளைத் தாராளமாக பாடநூல்களில் சேர்க்கலாம். இராவண காவியம் என்பது இராமாயணத்திலுள்ள கருத்துக்கு மாறுபட்டிருந்தாலும்கூட, அதிலுள்ள கவிச் சுவை என்ற அடிப்படையில் பார்க்கும்போது, அதுவும் ஒரு சிறந்த இலக்கியமாகத்தான் இலக்கிய வல்லுநர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, இன்னும் பேசப்பட்டு வருகிறது.

*திரு. க. மீனாட்சிசுந்தரம்:* ஏனைய துறைகளுக்கு வழங்கப்படுகிற வாகனக் கடன், திருமணக் கடன், வீடு கட்டும் கடன் பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளில் பணியாற்றுகிறவர்களுக்கு வழங்கப்படாமல் இருக்கிறது என்று குறிப்பிடப்படுகிறது. அது உண்மையா? அப்படி இருந்தால், அதை மாற்றி அவர்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:* கேட்கப்பட்டிருக்கிற மூலக் கேள்வி, அறிவியல் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் விடுப்புச் சலுகைகள் தனியார் பொறியியல் கல்லூரிகளிலும் பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளிலும் பணியாற்றும் ஊழியர்களுக்குத் தரப்படுகிறதா என்பது. அது தரப்படுகிறது என்ற விவரத்தை இங்கே சொல்லியிருக்கிறேன். மற்ற விவரம் என்னிடத்திலே இல்லை. தனியாகக் கேட்டால், சொல்லப்படும்.

## *Selection Grade for Physical Education Teachers*

* 235 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether it is a fact that the Tamil Nadu Physical Education Teachers' Association has made an appeal to the Government for fixing Selection Grade on the basis of 10 per cent of existing persons instead of posts as on 1-1-1971 in Ramanathapuram District; and

(b) if so, the action taken thereon

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:* (அ) மற்றும் (இ) முகவை மாவட்டம் உள்ளிட்ட எல்லா மாவட்டங்களிலும் உள்ள இரண்டாம் நிலை உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு 10 விழுக்காடு அடிப்படையில் தேர்வுநிலை 1—1—1971 முதல் அளிக்கப்பட்டு விட்டது.

தமிழ்நாடு உடற்பயிற்சி ஆசிரியர் கழகம் முதல்நிலை உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு 1—1—1971 முதல் பணியிடங்களில் 10 விழுக்காடு அடிப்படையில் தேர்வுநிலை வழங்கக் கோரியுள்ளது. இதனை ஏற்று கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை ஆணை நிலை எண் 549, நாள் 29—3—1982-ல் 1—1—1971 அன்று இருந்த முதல் நிலை உடற்பயிற்சி ஆசிரியர்கள் பணியிடங்களில் 10 விழுக் காட்டினை தேர்வு நிலை பணியிடங்களாக்கி 1—9—1980 லிருந்து பணிப்பயன் வழங்கி ஆணையிட்டுள்ளது.

முகவை மாவட்டத்தில் பணியில் உள்ள உடற்பயிற்சி ஆசிரியர்களில் 10 விழுக்காடு அடிப்படையில் தேர்வுநிலை வழங்கக் கோரிக்கைகள் எதுவும் பெறப்படவில்லை.



*திரு. பா. ரா. தாமஸ்:* தலைவரவர்களே, இந்தச் சலுகையை வழங்கியமைக்காக மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். முதல் நிலை, இரண்டாம் நிலை உடற் பயிற்சி ஆசிரியர்கள் ஆகிய இரு சாராரையும் ஒரே நிலைக்குக் கொண்டு வந்துவிட்டோம். ஆனால் முதல் நிலை உடற் பயிற்சி ஆசிரியர்களுக்கும், இரண்டாம் நிலை ஆசிரியர்களுக்கும் கல்வித் தகுதி வேறுபடுகிறது. கல்வித் தகுதியை அடிப்படையாகக் கொண்டு இரண்டு ஊதிய உயர்வை முதல் நிலை உடற் பயிற்சி ஆசிரியர்களுக்கு வழங்க மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:* தலைவரவர்களே, இதற்குத் தனியாகக் கேள்வி கேட்கவும்.

*திரு. க. மீனாட்சிசுந்தரம்:* 1—1—1971 முதல் பத்து சதவிதம் அளித்த நிலையை மாற்றி, 1—1—1971 முதல் பத்தாண்டுகள் பணிக்கால அடிப்படையில் தர வேண்டும் என்று சொல்லி, சங்கங்கள் கோரிக்கையை வைத்து அரசும் ஏற்று ஆணை பிறப்பித்து, அதற்குப் பின்னாலே அது நிறுத்தப்பட்ட காரணத்தாலே, அதை எதிர்த்து அவர்கள் வழக்கு மன்றம் சென்றபோது, வழக்கு மன்றமும் அவர்களுக்கு அதை வழங்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்திருந்தது. அந்த உத்தரவின் அடிப்படையில் அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்ததா?

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:* அது பற்றிய விவரம் இல்லை. தனியாகக் கேள்வி கேட்கவும்.

*திரு. செ. முத்துசாமி:* முதல்நிலை உடற் பயிற்சி ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், 1—1—1971 முதல் பத்து சதவீதம் தேர்வு நிலை வழங்க வேண்டும் என்று இரண்டாவது ஊதியக் குழுவும் பரிந்துரைத்து அது குறித்து அரசும் முடிவு எடுத்து ஆணையிட்டிருக்கிறது. அதிலே உள்ள தவறு என்னவென்றால், இந்தச் சம்பள விகிதத்தில் உள்ளவர்களுக்குத் தேர்வு நிலை சம்பள விகிதம் என்று தனியாக நிர்ணயிக்கப்படாததுதான். அப்படி நிர்ணயிக்காத தவறு ஊதியக் குழுவிலும் ஏற்பட்டிருக்கிறது, நிதித் துறையிலும் ஏற்பட்டிருக்கிறது. ஐந்தாண்டுக் காலத்திற்குப் பிறகு, அவர்களுக்கு தேர்வு நிலை சம்பள விகிதம் அமைக்கப்பட்டது. ஏற்கெனவே தேர்வு நிலை கொடுக்கப்பட்டிருக்கக் கூடிய அந்தத் தேதியிருந்து கொடுத்து பணப் பயனை பின்னாலே கொண்டுவந்திருக்கிறார்கள். எல்லோருக்கும் பணப்பயன் பின் தேதியிலிருந்து தந்திருக்கிறோம். ஆகவே 1—1—1971 முதல் பணப்பயனைத் தர அரசு மறுபரிசிலனை செய்யுமா? ஏனென்றால் அப்படி ஒரே ஒரு கேட்டிகரிக்குத்தான் ஏற்பட்டிருக்கிறது. மற்ற எல்லோருக்கும் தந்திருக்கிறோம். ஆகவே மறுபரிசிலனை செய்து 1—1—1971 முதல் தேர்வு நிலை சம்பளத்தைத் தர அரசு முன்வருமா?

அதைப் போலவே பொறியியல் துறை அல்லாத பயிற்சியாளர்கள் மேல் பட்டப்படிப்புத் தகுதியுடன் மூன்று ஆண்டுகள் பணிபுரிந்திருப்பின், கூட்டு விரிவுரையாளர்களாக பதவி உயர்வு கொடுக்கப்படுவதைப் போல், பொறியியல் துறை பயிற்சியாளர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை ஏற்கப்பட்டு 28—4—1981 ஆணையிடப்பட்டிருக்கிறது. பி.ஈ. பட்டப்படிப் பெற்று 3 ஆண்டு அனுபவமுள்ள, பயிற்றுனர் அல்லது பட்டயப் படிப்பு பெற் பத்தாண்டு அனுபவமுள்ள பயிற்றுனர்களுக்கும் கூட்டு விரிவுரையாளராக பதவி உயர்வு அளிக்கப்படுகிறது. வேறு சில கோரிக்கைகள் ஆய்வில் இருகின்றன.

### மாணவர்களிடையே கத்திக்குத்து

*238 வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1980 ஆகஸ்ட் மாதத்தில் தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் அரசினர் கல்லூரியில் மாணவர்களில் இரு பிரிவினரிடையே கத்திக்குத்து நடைபெற்றது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்குச் காரணம் யாது?

(உ) அது சம்பந்தமாக அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) மற்றும் (உ) கும்பகோணம் அரசினர் கல்லூரி இருபிரிவு மாணவர்களிடையே ஏற்பட்ட மோதலின் போது இச்சம்பவம் நடைபெற்றது. இது குறித்து பட்டுக்கோட்டை செஷன்ஸ் நீதிமன்றத்தில் வழக்கு நடந்து கொண்டு இருக்கிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவரவர்களே, இது போன்ற கல்லூரிகளில் இரு பிரிவினர் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது எந்த அடிப்படையில்? எந்த அடிப்படையில் தகராறுகள் நடந்தன? இன அடிப்படையிலா அல்லது அரசியல் அடிப்படையிலா அல்லது வேறு என்ன காரணம்?

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, 1980 ஆகஸ்ட் திங்களில் சோழன் போக்குவரத்துப் பெருந்தினைச் சார்ந்த நடத்துநர் ஒருவருக்கும் மற்றும் மாணவர் ஒருவருக்குமிடையே ஏற்பட்ட வாக்குவாதத்தினைத் தொடர்ந்து கும்பகோணம் அரசினர் கல்லூரியைச் சார்ந்த



மாணவர்கள் கண்டன ஊர்வலம் ஒன்று நடத்த முற்பட்டனர். இந்த முயற்சியினை ஒரு பிரிவைச் சார்ந்த மாணவர்கள் எதிர்த்தமையால், மாணவர்கள் கோஷ்டிகளுக்கிடையே மோதல் ஏற்பட்டது.

டாக்டர் இரா. சனார்த்தனம்: தலைவர் அவர்களே, இந்த மாணவர்கள் இரண்டு பிரிவினர்கள். அவர்களிடையே சண்டை போட்டு கத்திக்கொண்டதால் குத்திக்கொண்டார்களா? குத்துப்பட்டதால் கத்தினார்களா? கல்லூரியில் அமைதியின்மையைத் தவிர்ப்பதற்காக ஒரு குழு ஏற்படுத்தினார்கள் என்று சொல்கிறார்கள். அது நல்ல பரிந்துரைகளைச் செய்து, அதன்படி இப்போது ஒரு நல்ல அமைதியான சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்கிறார்கள். அப்படி எல்லாக் கல்லூரிகளிலும் அதை நடைமுறைப்படுத்தி வருகிறார்களா? மேலும் அந்தக் குழு கூடி மேலும் நிலைமைகள் ஆராயப்படுகின்றனவா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: நியமிக்கப்பட்ட ஆலோசனைக் குழு அனைத்து கட்சித் தலைவர்கள் கூட்டத்திலே எடுக்கப்பட்ட பல்வேறு முடிவுகளின் அடிப்படையிலே நாம் சில நடைமுறைகளைப் புதிதாகக் கொண்டு வந்ததன் விளைவாக இந்த முடியப்போகின்ற ஆண்டிலேகூட கல்லூரிகளைப் பொறுத்தவரையில், நல்ல முன்னேற்றமான நிலைமைகளைப் பார்க்கிறோம். தொடர்ந்து இப்படியே இருந்தால், ஓரிரு ஆண்டில் நம்முடைய கல்லூரிகள் இந்தியாவிலேயே மிகச் சிறந்த கல்லூரிகளாக நடைபெறுகின்றன என்ற பெயரை எடுத்துவிடும். அந்த அடிப்படையில் அந்தக் குழு மறுபடியும் ஓரிரு மாதங்களில் நடைபெற்றிருக்கின்ற நடைமுறைகளையும், இருக்கின்ற நிலைமைகளையும்பற்றி அந்த உறுப்பினர்கள் கவனத்திற்குக் கொண்டுவந்து மேலும் சில முடிவுகளை எடுத்து, அதை அடுத்த ஆண்டு அமுல்படுத்த இருக்கிறோம். இந்த குறிப்பிட்ட கல்லூரியில் 1980-லே நடைபெற்றதற்குப் பிறகு, அவ்வளவு பெரிய அளவுக்கு எதுவும் நடைபெறவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: பள்ளிக்கூடங்களில் பெற்றோர்கள் ஆசிரியர்கள் சங்கம் மூலம் ஓரளவுக்குத் தொடர்பு இருக்கிறது. கல்லூரியைப் பொறுத்த அளவில், அப்படிப்பட்ட நிலைமைகள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே மாணவர்களிடையே அமைதியின்மையைக் குறைக்க கல்லூரிகளுக்கும் அதுபோன்ற கல்வி நிறுவனங்களுக்கும் பெற்றோர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும். ஆகவே கல்லூரிகளிலும் பெற்றோர்கள் ஆசிரியர்கள் சங்கம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறதா? அப்படி இல்லை என்றால், இனியாவது அப்படி அமைக்க முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, பள்ளிகளிலும் மேல் நிலைப் பள்ளிகளிலும், பெற்றோர்கள் ஆசிரியர்கள் சங்கம் என்று இருக்கின்றன. ஆனால் கல்லூரிகளில் உள்ள

மாணவர்கள் பெற்றோர் கட்டுப்பாட்டில் இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. காரணம் அவர்கள் வயது வந்தவர்கள். அவர்களுடைய பிரச்சினைகளை அவர்களே தெரிந்து தீர்த்துக்கொள்ளக்கூடியவர்கள். ஆகவே அவர்களையே அணுகி, அவர்களுடைய கருத்துக்களைத் தெரிந்துகொண்டு அவர்களுக்கு அறிவுரைகளைச் சொல்லி அவர்கள் பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சி செய்தால், அதில் நிச்சயமாக நல்ல வாய்ப்புக்களை நாம் பெற முடியும். அப்படி பல கல்லூரிகளில் நடைபெற்றிருக்கிறது. கல்லூரிகளில் பெற்றோர்கள் மற்றவர்களைவிட, மாணவர்களும் ஆசிரியர்களும் இருந்தால், மிகச் சிறப்பாக இருக்கும் என்பதுதான் கடந்த ஓரிரு ஆண்டுக்கால அனுபவம். ஆகவே அந்த அடிப்படையிலே முயற்சிகளை மேற்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அரசியல் காரணமாகவும் மாணவர்கள் தேர்தல் காரணமாகவும், சிலபல நேரங்களில் மோதல்கள் ஏற்படுவதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அண்மைக்காலத்திலே கல்லூரிகளிலே சாதிச் சிந்தனையை ஏற்படுத்துவதும், அதனால் மோதல் வருவதும் இருக்கிறது. அதைப்பற்றி அரசு ஆராய்ந்ததா? அப்படி இருந்தால், அதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற கருத்து ஓரளவுக்கு உண்மைதான். அது உண்மை மட்டுமல்ல. அது எல்லோருக்குமே வருத்தத்தையும் வேதனையையும் தரக்கூடிய ஒரு நிலையாகவும் இருக்கிறது. கல்லூரிகளில் சாதி வேறுபாடுகள் அடிப்படையிலே, மாணவர்கள் ஒருவரையொருவர் தாக்கிக்கொள்வது என்பது யாருமே கற்பனை செய்ய முடியாத நிலைமையாகும். ஆகவே அதை எதிர்ப்பதிலும், ஒழிப்பதிலும் அரசு அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமைகளுக்குக் காரணமாக இருக்கக்கூடிய மாணவர்களை கல்லூரியை விட்டு நீக்குவதுதான் மிகச் சிறந்த முடிவாக இருக்கும். அந்தக் கல்லூரித் தலைவர்களை அந்த அளவுக்குக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று அதிகாரிகளுக்கு நான் ஆலோசனை கூறியிருக்கிறேன்.

## தமிழ் நாட்டில் உள்ள தரிசு நிலங்கள்

***239 வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்) :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாட்டில் எத்தனை ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்கள் நிரந்தர தரிசு நிலங்களாக இருக்கின்றன?



(இ) மாவட்ட வாரியாக அவை எத்தனை ஏக்கர் நிலங்கள்?

(உ) அவற்றைப் பயிரிடும் நிலங்களாக மாற்றுவதற்கு அரசு எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** (அ), (இ) மற்றும் (உ) ஒரு விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** இந்த விவர அறிக்கையில் தரிசு நிலங்கள் குறைவாக இருக்கின்ற பகுதிகளாக கோவை, நீலகிரி, தர்மபுரி, சேலம், செய்யாறு ஆகியவை, என் தொகுதியாக, நான் வெற்றிபெற்ற தொகுதியாக இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** பட்டதாரிகள் தொகுதியாக இருக்கிறது.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** அங்கே இருக்கின்ற உழவர்கள் திறமையானவர்கள் என்றால், மற்ற மாவட்டங்களில் இருப்பவர்களுக்கு இவர்களிடம் பயிற்சி கொடுக்கலாம் அல்லவா அல்லது இந்த நிலங்களைப் பயன்படுத்துவதற்கு பெரிய பண்ணைகளை உருவாக்கி, இஸ்ரேலில் செய்வதுபோல, ஏதாவது அமைப்பு முன்வருமானால், அதை அரசு ஏற்குமா? அதைவிட தமிழ் அறிஞர் தங்களிடம் நான் கேட்க விரும்புவது, மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை சொன்னார்கள் :

நாங்கூழ் புழுவே நாங்கூழ் புழுவே,
எம்மண்ணையும் செம்மண்ணாக்குவை
உன்பணி ஒவ்வாப் பணி

என்றார்கள். அந்தப் புழுக்களை வைத்து அந்த நிலங்களைச் சரி செய்ய முடியுமா என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தரிசு நிலங்களின் பரப்பளவு மாவட்டத்திற்கு மாவட்டம் உயர்வதற்குக் காரணம் உழவர்களுடைய உழைப்பு குறைவு அல்லது உழைப்பு அதிகம் என்பதல்ல. சில பகுதிகள் மேட்டுப் பகுதிகள், சில பகுதிகள் பாறை அதிகமான பகுதிகள் என்று இருக்கின்றன. சில பகுதிகளில் உவர் நிலங்கள் இருக்கின்றன. அத்தகைய காரணங்களால்தான் தரிசு நிலங்கள் இருக்கவேண்டிய நிலைமைகள் ஏற்படுகின்றன. நாங்கூழ் புழுவின் மூலம் எம்மண்ணையும் செம்மண்ணாக்கலாம் என்ற சுந்தரம்பிள்ளை அவர்கள் கவிதையின் கருத்தை எடுத்துச்சொன்னார்கள். மாண்புமிகு

---

@ 107 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(இ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது முதல் அமல்படுத்தப்படும்?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** (அ) ஆம்.

(இ) உலக வங்கி ஒப்புதல் பெற்றபின் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** உலக வங்கியில் இந்தத் திட்டத்தினைப் பரிசீலித்துக்கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஒப்புதல் எப்போது பெறப்படும்? இந்தத் திட்டம் எப்போது அமுலுக்கு வரும்? அதை விரைவுபடுத்துவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** அந்த வகையிலே முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் ஐந்து ஆண்டுகளுக்குச் செயல்படுத்தப்படும் என்பதால், அதை நாம் மேற்கொள்ள இருக்கிறோம். இதற்காக 3,950.46 லட்சம் ரூபாய் செலவிலே அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த இருக்கிறோம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** புதிய திட்டம் உருவாகி, முந்திரிச் சாகுபடியை அதிகப்படுத்த அரசு முனைந்துள்ள இந்த நேரத்திலே, ஏற்கெனவே இருக்கின்ற முந்திரிக் காடுகள் உள்ள வேதாரண்யம் பகுதியிலே, கடற்கரைப் பகுதிகளிலே அழிந்துகொண்டு வருகின்றன. அதைத் தவிர்க்க உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்க முனைந்திருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** முந்திரி உற்பத்தியைப் பொறுத்த வரையில், வேளாண் துறையில் தோட்டக் கலைத் துறையும், வனத் துறையும் மேற்கொள்ளுகின்றன. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லுவது வனத் துறையைச் சேர்ந்ததா என்று தெரியவில்லை. இருப்பினும் இந்தத் திட்டத்தை அதிகமாகச் செயல்படுத்த வேண்டும், புதிய பகுதிகளை முந்திரி உற்பத்திக்குக் கொண்டுவர வேண்டும், இருக்கின்ற பகுதிகளைப் பாதுகாக்க வேண்டும், முந்திரியை ஊடுபயிராகப் பயிரிட வேண்டுமென்று திட்டம் இட்டிருக்கிறோம். அழியும் நிலையில் ஏதாவது இருந்தால், அதைத் தடுத்து நிறுத்தலாம்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** தமிழ் நாட்டில் முன்னைவிட இப்போது அதிகமாக முந்திரி பயிரிடப்படுகிறது. சிலர் தந்திரமாக கெட்ட முந்திரியைக் கலந்து விடுகிறார்கள். தமிழ் நாட்டு முந்திரி நல்ல முந்திரியா என்று அறிய விரும்புகிறேன். இதற்குத் தண்ணீர் தேவையில்லை என்று சொல்லுகிறார்கள்.



இன்றைக்கு இலவம் பஞ்சு கிடைப்பதில்லை. கிடைத்தால் தலையணை தைத்துக்கொள்ளலாம். அதனையும், பனை மரம் போன்றவைகளையும் பெருக்கும் திட்டத்தை அரசு வைத்திருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** இவைகளுக்கெல்லாம் திட்டம் வைத்திருக்கிறோம். தமிழ் நாட்டு முந்திரி தரமான முந்திரிதான்.

**5—4—1983 அன்றைய வினாப் பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்ட வினாக்கள்.**

*Horse Races.*

* 185 Q.—THIRU E. S. VENKATESAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state, the income derived by the Government during 1980-81 and 1981-82 from the Horse Races in Madras and Udhagamandalam?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** சென்னை, உதகமண்டலம் ஆகிய இடங்களில் நடக்கும் குதிரைப்பந்தயங்கள் மூலம், 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 220.50 இலட்சமும், 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 243.03 இலட்சமும் அரசிற்கு வருவாய் வந்துள்ளது.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன்:** தலைவரவர்களே, அண்ணா மேம்பாலத்திற்கு அடியே உள்ள குதிரைச் சிலைகளில் கீழ்க்கண்டவாறு பொறிக்கப்பட்டிருக்கிறது.

200 ஆண்டுகளாக நடந்து வந்த குதிரைப் பந்தயத்தை நிறுத்துவது என்று 14—8—1974 ஆம் தேதியன்று தமிழக அரசு அறிவித்ததன் ஞாபகச் சின்னமாக அந்தச் சிலைகள் எழுப்பப்பட்டதாகப் பொறிக்கப்பட்டிருக்கின்றன. அந்த அறிவிப்பின் நிலை என்ன? அந்த அறிவிப்பைத் தொடர்ந்து என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன? அந்த அறிவிப்பை அமுலாக்க இந்த அரசு முன்வருமா? இந்த விவரங்களை அறிய விரும்புகிறேன். மேலும் அந்தக் குதிரைச்சிலைகளின் கதி என்ன என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் அதை நீக்க வேண்டுமென்று சொல்லுகிறார்களா, அல்லது இருக்க வேண்டுமென்று சொல்லுகிறார்களா என்பது தெரியவில்லை. முன்னால் இருந்த அரசு சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றியது. அதைப்பற்றி உச்ச நீதி மன்றத்திலே வழக்கு இருக்கிறது. மிக முக்கியமான நிலச் சீர்திருத்தச் சட்டம்

கூட உச்ச நீதி மன்றத்திற்குப் போயிருக்கிறது. எவ்வளவோ முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். பட்டியலுக்குக் கொண்டுவர எல்லாவிதமான முயற்சிகளையும் அரசு எடுக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** நான் குறிப்பாக ஒரு கேள்வி கேட்டேன். முந்தைய அரசின் அறிவிப்பை இந்த அரசு அமுலாக்குமா என்று கேட்டேன். அதுபற்றி அமைச்சரவர்கள் ஒன்றும் சொல்லவில்லை. குதிரைப் பந்தயத்தை ஒழிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** அது நீதி மன்றத்தில் இருக்கிறது. கொள்கை பற்றிய பிரச்சினைகளை கேள்வி நேரத்தில் சொல்வதில்லை, வழக்கமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, பொதுவாக குதிரைப் பந்தயங்கள் நடைபெறுகின்ற இடங்களிலிருந்து, வசூலிக்கப்படும் பணத்திற்கு முறையான கணக்குக் காட்டாமல், அரசுக்குச் சேர வேண்டிய வரியை முறையாகக் கட்டாமல், அந்த வரியைக் குறைக்க சில முயற்சிகளிலே அவர்கள் வெற்றிகரமாக ஈடுபடுவதாக செய்திகள் வந்திருக்கின்றன. அதை நான் புகாராகக் கூடச் சொல்லவில்லை. சில செய்திகள் வந்திருக்கின்றன. இதில் நம்முடைய தணிக்கைத் துறை சற்று உஷாராக இருந்து, கண்காணிக்க வேண்டும். Daily auditing என்ற முறையில் விழிப்புணர்ச்சியுடன் செயல்பட்டால், அரசுக்குச் சேர வேண்டிய வருமானம் சரியான முறையில் வந்து சேரும். அந்த முறையில் மாண்புமிகு அமைச்சரவர்கள், நான் சொல்லுகின்ற அடிப்படையிலே, உரிய நடவடிக்கைகளை எடுத்து. அரசின் வருமானம் எந்தவகையிலும் குறையாமல் வந்து சேர ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, அரசுக்கு வருவாய் வருகிறது என்று சொல்லும்போது, தைரியமாகக்கூடச் சொல்லலாம். 'புகாராகச் சொல்லவில்லை, செய்தியாகச் சொல்லுகிறேன்' என்று சொன்னார்கள். புகாராகக்கூடச் சொல்லலாம். அரசுக்குச் சேர வேண்டியதை யார் ஏமாற்றினாலும், புகார் சொல்லலாம். புகார் மட்டுமல்ல ; எந்தெந்த இடங்களில் எப்படிச் செய்கிறார்கள் என்று சொன்னால்கூடப் பரவாயில்லை. யாருக்கும் பயப்பட வேண்டிய தேவையில்லை. ஆகையால் அரசினுடைய வருவாயை யார் ஏமாற்றினாலும், தக்க நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்கிறது. அதற்கு வேண்டிய உதவிகளையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் அளிக்க வேண்டும். சில உறுப்பினர்களுக்கு, காரணங்களைக் கண்டுபிடிக்க வழி வகை தெரியும். அதைச் சொன்னால்கூட நல்லதுதான்.



THIRU J. M. MIAKHAN: Sir, it is learnt that the bookies indulge in malpractices and on account of that, much of the income that could be derived as fees by the Government is being lost, because the bookies instead of giving regular scrips give ordinary slips. Even in the conduct of the races, there seem to be some malpractices like the doping of horses, pulling of the reins, etc. Will the Government take proper steps to rectify them so that the loss of revenue to the extent of crores of rupees may be avoided ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்பதிலே சில சிக்கலான பிரச்சினைகள் இருக்கின்றன. குதிரைகள் வேகமாகப் போகும்போது, அதை நிறுத்தி விடுகிறார்கள் என்பதை எப்படிக் கண்டுபிடிப்பது என்பது தெரியவில்லை. புக்கிகள் தவறு செய்கிறார்கள் என்று அரசுக்குப் புகார்கள் வந்திருக்கின்றன. அவர்களை குதிரைப் பந்தய கிளப் நியமித்துக்கொண்டிருக்கிறது. புக்கிகளை அரசே நியமிக்கலாமா என்பது குறித்து அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல. அரசு அதிகாரிகளைப் போட்டிருக்கிறோம். அவர்களை அடிக்கடி மாற்றுவது அல்லது யார் போவது என்பதை அன்றன்று சொல்லுவது என்று வைக்கலாமா என்பது குறித்தும் யோசித்துக் கொண்டிருக்கிறோம். எந்த அளவுக்குத் தவறுகள் இல்லாமல் நடக்க வேண்டுமோ அந்த அளவுக்கு முயற்சி செய்கிறார்கள். வேடிக்கை பார்க்கப் போகிறவர்கள் எல்லாம் நுணுக்கமாகப் பார்த்து என்னென்ன தவறு நடக்கிறது என்று சொன்னால், உதவியாக இருக்கும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** இன்டர்வென்ஷன் பெட்டிங்கால் ஊட்டியில் வரி ஏய்ப்பு செய்வதை பெட்டிங் ஷாப்புகள் இழந்திருக்கின்றன. எல்லைப் பாதுகாப்புப்படை பரிசுச் சீட்டில் 77 லட்சம் ரூபாய்கூட எங்கள் குன்னூருக்குக் கிடைத்திருக்கிறது. ஊட்டியில் ஊருக்கு நடுவில் குதிரைப் பந்தய மைதானம் இருக்கிறது. அந்த இடத்தில் அரசு அலுவலகங்களுக்குக் கட்டிடங்கள் கட்டி, ஊருக்கு வெளியே குதிரைப் பந்தய மைதானத்திற்கு இடம் தரலாம். பினாங்கில் அப்படி இருக்கிறது. அங்கே தவறு நடப்பதாகச் சொல்லுகிறார்கள். குதிரைக்குப் பரிபாஷை இருக்கிறது. அதைத் தெரிந்தவர்களை வைத்து. அதைக் கண்டுபிடிக்கும் உத்தேசம் அரசுக்குண்டா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** குதிரைகளுக்குப் பரிபாஷை இருக்கிறதோ, இல்லையோ தெரியாது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அது மிருக வைத்தியர்களுக்குத் தெரிந்தாலும் தெரிந்திருக்கும்.

[1983 ஏப்ரல் 8

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: குதிரைகளைக் கன்ட்ரோல் பண்ணுவதைவிட ஜாக்கிகளைக் கன்ட்ரோல் பண்ணுவதாகச் சொல்லுகிறார்கள். அது உண்மையோ, இல்லையோ தெரியாது. ஊட்டியைப் பொறுத்தவரையில், ஊர் நடுவே மைதானம் இருக்கிறது. அதனால்தான் அநேகம் பேர்கள் கூடுகிறார்கள். ஊருக்கு வெளியே போனால் கூட்டம் வருமோ, வராதோ, தெரியாது. குதிரைப் பந்தய மைதானத்தை வெளியே வைத்து, ஊருக்குள்ளே இருக்கும் இடத்தில் அரசு அலுவலகங்களுக்கான கட்டிடங்கள் கட்டுவது நல்ல யோசனைதான்.

THIRU A. R. DAMODARAN: Sir, while thanking the Hon. Minister for the proposed action against the bookies, may I know whether the Government have a proposal to have Government-appointed jockeys to race the horses also in view of the complaint made by the hon. Member ?

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: சாடையாக நான் அதை விட்டுவிட்டேன். புக்கிகளை அரசு வேண்டுமானால் நியமிக்கலாமா என்பதுபற்றி சட்டதிட்டங்களைக் கொண்டு வருவதுபற்றி யோசித்துக்கொண்டிருக்கிறோம். ஜாக்கிகளை நாம் கட்டிக்காக்க முடியாது. (சிரிப்பு)

திரு. பா. ரா. தாமஸ்: குதிரைப் பந்தயம் ஒழிக்கப்பட மாட்டாது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேரவையிலே சொன்னதாக நான் பத்திரிகையிலே படித்தேன். அது உண்மையா? அரசு அப்படி கொள்கை வைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இங்கே சொன்னதைத்தான் நான் பேரவையிலும் சொன்னேன். அரசு குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதில்லை என்று கொட்டை எழுத்துக்களில் முதல் பக்கத்தில் போட்டிருந்தாலும், உள்ளே அதே பேப்பரில் நான் சொன்ன முழு விவரத்தையும் போட்டிருந்ததையும் நான் படித்துப் பார்த்தேன். அதை மாண்புமிகு உறுப்பினர் பார்க்கவில்லை போலும்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: குதிரைப் பந்தயத்தை இப்போது தனியார் நடத்துகிறார்கள். இப்போது அரசே லாட்டரி சீட்டை நடத்துவது போல், குதிரைப் பந்தயம் நடத்துவதும் தேசியமயமாக்கப்படுமா? அரசே குதிரைப் பந்தயத்தை நடத்தி, அதன் மூலம் வருவாயைப் பெருக்க அரசு முன்வருமா?



1983 ஏப்ரல் 8]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு உறுப்பினர் முன்பு கேட்ட கேள்விக்கும் இதற்கும் மாறுபாடு இருக்கிறது. முதலில் குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டுமென்று கேட்டார்கள். இப்போது அதை அரசே நடத்த வேண்டுமென்று கேட்கிறார்கள். இதுகுறித்து நான் ஏற்கெனவே பதில் சொல்லிவிட்டேன்.

## அழுகும் பொருட்கள்

* 186 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மீன், இறால், தவளை போன்றவற்றை அழுகும் பொருள் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்ற செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்போது முதல் நடைமுறைப்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) மற்றும் (இ) அழுகும் பொருள் பட்டியல் என்று அரசிடம் தனியே எதுவுமில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம்: ஏன் இறால் மீனை அழுகும் பொருள் பட்டியலில் சேர்க்கக் கூடாது? அது வெளிநாட்டுக்கு ஏற்றுமதியாகிற பொருளாச்சே.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அழுகும் பொருள் பட்டியல் என்ற ஒன்று இல்லை. ஆனால் தேங்காய், காய்கறி போன்றவைகளை அழுகும் பொருள்களாக வைத்திருக்கிறோம். மீனைப் பொறுத்தவரையில், அதைப் பிடித்து விற்பதற்குச் சங்கடம் ஒன்றுமில்லை. வரியும் இல்லை. இறால், தவளை, நண்டு, தவளையின் கால்கள் முதலியவற்றுக்கு கடைசி கொள்முதலின்போது ஐந்து சதவிகிதம் ஒருமுறை வரி விதிக்கப்படுகிறது. ஆனால் இறால், தவளை போன்றவற்றை ஏற்றுமதி செய்யும்போது, வரி போடப்படுவதில்லை.

## கரும்புக்கு கூடுதல் விலை

* 187 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கரும்புக்கு கூடுதல் விலை கொடுக்கவேண்டும் என தமிழக அரசு அறிவித்தும், இதுவரை அக்கூடுதல் விலை கொடுக்கப்படவில்லை என்பதனை அரசு அறியுமா?

உறுப்பினர் அவர்கள் எடுத்துத் தெரிவித்தார்கள். நாங்கூழ் புழு வரவேண்டுமானால்கூட, அதற்கே கூட ஈரப்பதம் வேண்டும். அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உற்பத்தி செய்வதற்கு முயற்சி எடுத்தால், பயன்படுத்திக் கொள்ளலாம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் அவர்களுடைய பகுதியிலே மிகக் குறைவாக தரிசு நிலங்கள் இருக்கின்றன என்பதை எடுத்துச்சொன்னார்கள். ஆனால் அதே நேரத்திலே தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை போன்ற பகுதிகளிலே தரிசு நிலங்கள் அதிகமாக இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நல்ல வளமான மாவட்டங்கள் என்று சொல்லக்கூடிய பகுதிகளிலேகூட இப்படி அதிகமான தரிசு நிலங்கள் இருப்பதற்கு என்ன காரணம்? ஓரளவுக்கு அங்கே நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகளை அரசோ, தனியாரோ செய்யாததாலே, அப்படிப்பட்ட நிலைமைகள் உருவாகியிருக்கின்றனவா அல்லது நிலத்தடி நீரை எடுப்பதற்கே தடைகள் இருக்கின்றனவா என்றும் அதைக் களைவதற்கு அரசு என்னென்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** நான் குறிப்பிட்டது போல, அந்த விளைச்சலுக்குப் பயன்படாத அளவுக்கு சில நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களைப் பயன்படுத்தி விளைச்சல் செய்ய வேண்டும் என்று அதற்குப் பணம் செலவழித்தாலும்கூட, சுண்டைக்காய் கால் பணம் சுமைகூலி முக்கால் பணம் என்று சொல்வதுபோல, அதற்குப் பயன்படுத்தக்கூடிய செலவு மிகமிக அதிகமான அளவுக்கு ஆகிவிடுகிறது. இருந்தாலும்கூட அரசு இப்போது புதிய 20 அம்சத் திட்டத்தின் அடிப்படையிலே, 3,624 ஹெக்டேரையும் வனத் துறையின் மூலம் 36,027 ஹெக்டேரையும் வேளாண் பொறியியல் துறையின் மூலமாக 3,474 ஹெக்டேரையும் நாம் மீட்டு அவைகளை விளை நிலங்களாக மாற்றியிருக்கிறோம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, இதிலே 3,36,000 ஹெக்டேர்கள் தரிசு நிலங்களாக இருக்கின்றன என்று தெரிகிறது. இது ஒரு மிகப் பெரிய எண்ணிக்கை. நிரந்தரமாக இவற்றை விளை நிலங்களாக மாற்றக் கூடிய முறையான திட்டங்கள் எதுவும் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, அத்தனை நிலத்தையும் முறையான அளவுக்குப் பயிர் நிலமாக மாற்ற முடியாவிட்டாலும், இப்போதெல்லாம் சாதாரண மழை இருந்தாலும், ஓரிரு நாட்கள் மழையிலேயே விளைவிக்க சில பயிர்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். அதுபோல மிகக் குறைந்த அளவுக்கு மழைத் தண்ணீர் இருந்தாலும்கூட, சில பெரிய மரங்களை எல்லாம் விளைவிக்கக்கூடிய ஒரு திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டம் இப்போது இல்லாவிட்டாலும், அதை ஆய்வு செய்யலாம் அல்லவா? அந்த முறையில் பயிரிடுவதற்கு ஆய்வு நடத்துவதற்கு இந்தத் துறை முன்வருமா?



**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** வேளாண் பொறியியல் துறையும் அது தொடர்பான நீர் பராமரிப்புத் துறையும் இத்தகைய முயற்சிகளிலே ஈடுபட்டிருக்கின்றன. வறட்சிப் பகுதியிலே எந்தெந்தப் பயிர்களைச் சாகுபடி செய்யலாம், எந்தெந்த வகையான விளை பொருள்களை உண்டாக்க முடியும் என்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர் மாவட்டங்களில் நிலத்தடி நீர் மிக மிகக் குறைந்து போயிருப்பதால், அங்கே விளைந்துகொண்டிருக்கக்கூடிய நிலங்கள் எல்லாம் தரிசாக ஆகிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலைகள் இருந்துகொண்டிருக்கின்றன. இப்போது சேலம் மாவட்டத்தில் ஒரு உயர்ந்த நீரோட்டம், வற்றாத ஜீவநதி பூமிக்கு அடியிலே மூன்று ஆயிரம் அடிக்குக் கீழே ஓடுவதாக இங்கே சொல்லப்பட்டது. அந்த நீரைப் பயன்படுத்துவதற்கான முயற்சியை வேளாண்மைத் துறை எடுத்து அதிலே வெற்றி பெறுவதற்கு சோதனைகள் நடத்துமா? அதற்கு ஏதாவது முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தண்ணீர் எங்கே எவ்வளவு பாதாளத்திலேயிருந்தாலும், அதை எடுக்க வேண்டும் என்பதுதான் நம்முடைய ஆர்வம், முயற்சி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, நிலத்தடி நீர் இருக்கின்ற பகுதியாக இருந்தால், அதைப்பற்றி அரசு ஆராயும்.

## முந்திரி பயிர் வளர்ப்புத் திட்டம்

* 240 வினா.—**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாட்டில் உலக வங்கி உதவியுடன் முந்திரி பயிர் வளர்ப்புத் திட்டம் ஒன்றை அமல்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் **உள்ளதா?**

(இ) ஆம் எனில், இதுகுறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** (அ) மற்றும் (இ) தமிழகத்திலுள்ள சர்க்கரை ஆலைகளுக்கு விவசாயிகள் வழங்கிய கரும்புக்கு டன் ஒன்றுக்கு கூடுதலாக ரூ. 10 வீதம் 1981-82 ஆம் சர்க்கரை பருவ ஆண்டிற்கு அரசு நிதியிலிருந்து, சர்க்கரைத் துறை ஆணையாளர் மூலமாக, கரும்பு விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டுவிட்டது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** வழங்கப்பட்டிருக்கின்ற அந்தக் கூடுதல் விலையினை, அதை உற்பத்தி செய்கின்ற விவசாயிகளும் மற்றவர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்களா? அதற்கு மேலும் அவர்களுக்குத் தேவை என்று சொல்லி ஏதாவது கோரிக்கை வைத்திருக்கிறார்களா? இதுசம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதா? என்ன முடிவு எடுக்கப்பட்டது?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** முன்பு இருந்த நிலைமையைப் பற்றியது மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வி. ஆனால் இப்போது செய்துள்ள அறிவிப்பை அவர்கள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு கரும்புக்கு விலை நிர்ணயம் செய்திருக்கிறார்களா? கரும்புக்கு விலை நிர்ணயம் செய்வது என்பது கரும்புக் கட்டைப் பொறுத்ததா? சுமையைப் பொறுத்ததா? அதிலுள்ள கரும்புகளின் எண்ணிக்கையைப் பொறுத்ததா? இல்லை, கரும்பைத் தேடி வரும் எறும்பு களின் எண்ணிக்கையைப் பொறுத்ததா? (சிரிப்பு)

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** விவசாயிகளின் நன்மையைப் பொறுத்தது. (சிரிப்பு)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் கேள்வி கேட்பது தான் அனுமதிக்கிற நேரத்தைப் பொறுத்தது. (சிரிப்பு)

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

**பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மற்றும் ஆதிதிராவிடர் நலத் துறை மாணவர் விடுதிகள் மூடப்பட்டுவிட்டதால், அங்கு தங்கி படித்த ஏழை மாணவர்கள் அல்லல் படுவது குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்கள் "மேல்நிலைப் பள்ளி மாணவர்களின் பிளஸ் 2 தேர்வு 4—4—1983-ல் தொடங்கி எப்ரல் திங்கள் முழுவதும் நடைபெறும்



நிலையில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மற்றும் ஆதிதிராவிடர் நலத் துறை ஆகியவைகளின் நிர்வாகங்களில் உள்ள மாணவர் விடுதிகள் 31—3—1983 அன்று மூடப்பட்டுவிட்டதால் மாநிலம் எங்குமுள்ள அவ்விடுதி ஏழை மாணவர்கள் விடுதிகளில் தங்கவோ, படிக்கவோ, உணவு உண்ணவோ அல்லது சொந்த ஊரிலிருந்து வரவோ முடியாமலும், வாடகை விடுதிகளில் தங்கவும், ஓட்டல்களில் சாப்பிடவும் பொருளாதார வசதியில்லாமலும் அல்லல் படுவது குறித்து" ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். இது எவ்வாறு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான விதிகளின்கீழ் வருகிறது என்பதை மட்டும் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவரவர்களே, தமிழகத்திலே உள்ள பள்ளிகள் எல்லாம், தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிற தண்ணீர் தட்டுப்பாட்டின் காரணமாக 31—3—1983-க்குள் மூடப்பட வேண்டுமென்று அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது. இதனால் ஒரு மாதத்திற்கு முன்னாலேயே பள்ளிக்கூடங்களை மூடுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தொடக்கப் பள்ளிகள் எல்லாம் ஏற்கெனவே மூடப்பட்டுவிட்டன. ஒவ்வொரு முறையும் இம்மாதிரி மூடப்படும்போதே அடுத்து திறக்கிற தேதியையும் அறிவிப்பது வழக்கம். ஆனால் இம்முறை ஜூன் 20 ஆம் தேதி வரை, அதற்குள்ளாக எந்தத் தேதியில் பள்ளிக்கூடங்கள் திறப்பது என்பதற்கான முடிவை இதுவரை எடுக்கவில்லை. இருபதாம் தேதிக்கு முன்பு இதுபற்றி அறிவிப்பு வரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேல்நிலைப் பள்ளி மாணவர்களின் பிளஸ் 2 தேர்வு 4—4—1983 அன்று தொடங்கியிருக்கிறது. இப்படி தொடங்கியிருக்கிற பிளஸ் 2 தேர்வு ஏப்ரல் மாத இறுதி வரை நடைபெற இருக்கிறது. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் ஆதிதிராவிடர் நலத் துறை நிர்வாகங்களின்கீழ் இருக்கிற மாணவர் விடுதிகளை தண்ணீர் தட்டுப்பாட்டின் காரணமாக மூடிவிட வேண்டுமென்று அரசு உத்தரவு போட்டிருக்கிறது. இப்படி உத்தரவு போட்டிருப்பதன் காரணமாக, பரிட்சைகள் எல்லாம் முடிவடைவதற்கு முன்னாலேயே விடுதிகள் மூடப்பட்டு விட்டதன் காரணமாக, ஏழை எளிய மாணவர்கள் விடுதிகளில் தங்கவோ, படிக்கவோ, உணவு உண்ணவோ அல்லது சொந்த ஊரிலிருந்து வரவோ முடியாமலும், வாடகை விடுதிகளில் தங்க முடியாமலும், ஓட்டல்களில் சாப்பிட முடியாத வகையில் அவர்களிடம் பொருளாதார வசதியில்லாத நிலையில் அவர்கள் அல்லல்படுகிறார்கள். அவர்கள் மிகவும் ஏழையெளியவர்கள் என்கிற காரணத்தால், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மற்றும் ஆதி திராவிடர் நலத் துறை மாணவர் விடுதிகளில் தங்க, படிக்க, உணவு உண்ண

## பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் ஆதி திராவிடர் நலத் துறை மாணவர் விடுதிகள் மூடப்பட்டு விட்டதால், அங்கு தங்கி படித்த ஏழை மாணவர்கள் அல்லல் படுவது குறித்து

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1983 ஏப்ரல் 8

சலுகை தரப்பட்டது. ஆனால் இன்றைக்கு விடுதிகள் மூடப்பட்ட நிலையிலே அவர்கள் வெளியிலே சென்று மிகவும் அல்லல் படுகிறார்கள். தேர்வுக்குக்கூட அவர்கள் கூர்ந்து படித்து கவனத்தைச் செலுத்த முடியவில்லை. ஊரிலே இருந்துகொண்டு வந்து தேர்வை எழுதவும் முடியாமல், வாடகை விடுதிகளில் தங்கியிருந்து படித்து, தேர்வை எழுதவும் முடியாமல் தவிக்கிறார்கள். 31—3—1983-க்குள் மூடப்பட வேண்டுமென்று அரசு உத்தரவு போட்டாலும், 19—3—1983-க்கு முன்னாலேயே சில விடுதிகள் மூடப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட நிலையிலே தேர்வு எழுதுகிற மாணவர்கள் பல விதத்திலும் மிகுந்த அல்லல் படுகிறார்கள். உடனடியாக விடுதிகளைத் திறந்து, தேர்வு முடிவடையும் வரை அவர்கள் அங்கு தங்க, படிக்க, உணவு உண்ண, நல்லமாதிரி தேர்வை எழுத அவர்களுக்கு வாய்ப்பினையும், வசதியையும் ஏற்படுத்தித் தர வேண்டும். அவர்கள் நல்லமாதிரி தேர்வு எழுத வேண்டும். அந்த வகையில் இதுகுறித்து விரிவாக அவையில் விவாதித்து, உடனடியாக முடிவு காண வேண்டியிருப்பதால், இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இந்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** தலைவரவர்களே, தமிழ் நாட்டில் தற்போது நிலவும் கடும் குடிநீர்த் தட்டுப்பாடு காரணமாக மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளும் அவற்றைச் சார்ந்த விடுதிகளும் 1—4—1983-க்குள் மூடப்பட வேண்டும் என்று அரசு ஆணை எண் 197. கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை, நாள் 29—1—1983-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. மேலும் மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தமட்டில், பாடங்களை நடத்தி முடித்த பள்ளிகளை 1—4—1983-லிருந்து மூடிவிட வேண்டும் என்றும் பிளஸ் 2 தேர்வுகள் நடக்கும் நாட்களில் மட்டும் மாணவர்கள் பள்ளிகளுக்குத் தேர்வுகளை எழுத வருமாறு அறிவுறுத்த வேண்டும் என்றும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலம் நடத்தப் பெறும் விடுதிகளில் தங்கிப் பயிலும் ஆதி திராவிடர்/பழங்குடியினர் மாணவர்களைப் பொறுத்தமட்டில், 1—4—1983 முதல் அவர்கள் தங்களது இல்லங்களில் தங்கியிருந்து, பயின்று தேர்வுகள் நடக்கும் நாட்களில் மட்டும் பள்ளிகளுக்குத் தேர்வு எழுத வருமாறு அறிவுறுத்தப்பட்டால், அவர்களால் தங்களது பொருளாதார மற்றும் வேறு பல சுற்றுப்புறச் சூழல்களினால் தங்களது படிப்பினில் போதிய கவனம் செலுத்தி, தேர்வுகளை நன்கு பயின்று எழுத இயலாது என்ற காரணங்களினால், ஆதி திராவிடர் நலத் துறையினர்



1983 ஏப்ரல் 8] [திரு. எம். விஜயசாரதி]

திராவிடர்/பழங்குடியினர் மாணவர்கள் அவர்களது பள்ளி/கல்லூரித் தேர்வுகள் முடியும்வரையில், விடுதிகளில் தங்க அனுமதியும், பள்ளி/கல்லூரி தேர்வுகள் முடியும்வரையில், இத்துறையின் மூலம் நடத்தப்பெறும் ஆதி திராவிடர்/பழங்குடியினர் பள்ளி/கல்லூரி விடுதிகளை நடத்தவும் அனுமதி வழங்குமாறு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி நலத்துறை இயக்குநர் அரசைக் கோரியிருந்தார்.

அரசும் இயக்குநரின் கருத்தை ஏற்று, கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மற்றும் நிதித் துறைகளைக் கலந்தாலோசித்து ஆதிதிராவிடர் நல அமைச்சர் மற்றும் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் அமைச்சரிடம் ஆணைபெற்று ஆதிதிராவிடர் நலத்துறையால் நடத்தப்பெறும் பள்ளி/கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களை பள்ளி/கல்லூரித் தேர்வுகள் முடியும் வரையில் விடுதிகளில் தங்க அனுமதியும் இயக்குநரை அதுநாள் வரை விடுதிகளை நடத்தவும் அரசு ஆணை எண் 1401, சமூக நலத் துறை, நாள் 30—3—1983-ல் ஆணை வெளியிட்டுள்ளது. அரசின் அனுமதியின் அடிப்படையில், பிற்பட்டோர் நல விடுதிகளும் தேவையான இடங்களில் தேர்வுகள் முடியும்வரை நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச்சொன்ன கருத்துக்களுக்கு ஏற்ப தமிழகத்தில் இருக்கின்ற ஆதிதிராவிடர் நலத் துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை விடுதிகளில் தங்கி பயிலும் மாணவர்களுக்கு இதனால் பிரச்சினை இருப்பதால், அவர்கள் அங்கு தங்கி, படித்து, தேர்வுகளை நல்ல முறையில் எழுத வேண்டுமென்ற உணர்வை அரசு மதித்து அதற்கேற்ற வகையில் ஆணையும் பிறப்பித்திருப்பதால், இதுகுறித்து மேற்கொண்டு இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இப்பொருள்பற்றி விவாதிக்கத் தேவையில்லை என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இதுபற்றி விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதுவதால், இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான அனுமதியை மறுக்கிறேன்.

(முற்பகல் 11.20)

### 3. அறிவிப்பு.

விதிக் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மேலவை விதி 192-ன்படி 1983-84 ஆம் ஆண்டுக்கான விதிகள் குழுவிற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்களை நான் நியமித்துள்ளேன் :

1. மாண்புமிகு மேலவைத் தலைவர் (தலைவர்)
2. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே
3. மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்
4. டாக்டர் தி. இரா. சனார்த்தனம்
5. திரு. ம. சங்கரலிங்கம்
6. திரு. த. சந்தோஷம்
7. திரு. க. இராமமூர்த்தி
8. திரு. ஜே. எம். மியாகான்
9. திரு. ஏ. ஆர். தாமோதரன்
10. திரு. ப. மாணிக்கம்
11. திரு. ஆ. நல்லசிவன்
12. திரு. வி. வி. சி. ஆனந்தம்
13. திரு. ஜி. சுவாமிநாதன்
14. திரு. ஜி. வசந்த பை.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது, நீர்ப்பாசனத் துறை அமைச்சர் (மேலவை முன்னவர்) அவர்கள் அலுவல் முறையில் உறுப்பினராக இருப்பார்.

### 4. கவன ஈர்ப்பு.

(1) தனியார் பள்ளிகளிலிருந்தும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலிருந்தும் அரசுப் பள்ளிகளில் பணியாற்ற எடுத்துக்கொள்ளப்பட்டோருக்கு அரசு பணி ஈர்ப்பு ஆணை பிறப்பிக்காததால் பணிப் பாதுகாப்பு, பதவி உயர்வு, ஆண்டு ஊதிய உயர்வு, விடுப்புச் சலுகைகள் ஆகியவை கிடைக்கப் பெறாமை குறித்து.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"தனியார் உயர்நிலைப் பள்ளிகளிலிருந்தும், ஊராட்சி ஒன்றிய தொடக்க நடுநிலைப் பள்ளிகளிலிருந்தும் அரசு உயர்நிலைப் பள்ளிகளில்





பணியாற்ற எடுத்துக் கொள்ளப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்டோருக்கு பல ஆண்டுகளாக அரசு பணி ஈர்ப்பு ஆணை பிறப்பிக்காததால் பணிப் பாதுகாப்பு, பதவி உயர்வு, ஆண்டு ஊதிய உயர்வு, விடுப்புச் சலுகைகள் ஆகியவைகள் கிடைக்கப் பெறாமல் அல்லல் படுவது குறித்து"

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இதுபற்றி விவர அறிக்கை* ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில், அந்த ஆசிரியர்களையெல்லாம் ஈர்ப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதிலே இரண்டாண்டுகள் சரியாக முடிக்கப் பெறாதவர்களுக்கு தேர்வாணைக் குழுவில் இசைவளிக்கப் படவில்லை. ஆனாலும்கூட இசைவைப் பெறுவதற்கு அரசு முயற்சி செய்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதேபோன்ற ஒரு பதில், இதே தலைப்பிலே கவன ஈர்ப்புத் தீர்மானம் வந்ததற்கும் கடந்த ஆண்டு அமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். "நாற்பத்தைந்து பேர்கள் தான் இப்போது ஈர்க்கப்பட வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு விரைவில் ஆணைகள் பிறப்பிக்கப்படும்" என்றெல்லாம் அப்போது சொன்னார்கள். அப்போதிருந்து தீவிரமாக நடவடிக்கைகள் எடுக்கப்படாத காரணத்தால், இன்றைக்கு நூற்றுக்கணக்கான பேர் அதிலே வரக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு மிகவும் அல்லலுக்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆகவே இப்போதாவது திட்டவட்டமாக இந்தத் தேதியில் முடித்து விடுகிறோம் என்ற வகையில் அரசு நடவடிக்கை எடுத்து, அவர்கள் எல்லாம் எந்தவிதமான சலுகையையும் பெறாமல் இருக்கிற அல்லலைத் தீர்க்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஆசிரியர்களை அரசுப் பணிக்கு ஈர்க்கப்படுகிற நடவடிக்கை அவ்வப் போது எடுக்கப்படவும், பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருக்களை அனுப்பவும், அரசு ஆய்வு செய்து அந்த ஆசிரியர்களை அரசுப் பணிக்கு திருப்பி ஆணை பிறப்பதுமாக இருந்து வருகிறது. தொடக்க நிலையில்கூட இது இருப்பதாகத் தெரிகிறது. அந்த அடிப்படையில்தான்—சென்ற ஆண்டும் இருந்திருக்கலாம்

---

* 107-108 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

## லிருந்தும் அரசுப் பள்ளிகளில் பணியாற்ற எடுத்துக் கொள்ளப் பட்டோருக்கு அரசு பணியேற்பு ஆணை பிறப்பிக்காததால் பணிப்பாதுகாப்பு, பதவி உயர்வு, ஆண்டு ஊதிய உயர்வு, விடுப்புச் சலுகைகள் ஆகியவை கிடைக்கப்பெறாமை குறித்து

[மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்] [1983 ஏப்ரல் 8

இந்த ஆண்டும் இருந்திருக்கலாம்—ஒரு குறிப்பிட்ட காலமாகியும் இப்படிப் பட்ட ஆசிரியர்களைப் பணிவரன்முறை செய்யாமல் இருக்கிறார்கள். அதற் காக அரசுதான் பொறுப்பு என்ற நிலை இருந்தால், சம்பந்தப்பட்ட அதிகாரி களிடம் உடனடியாக விளக்கம் கேட்கப்பட்டு, அதை விரைவுபடுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த அறிக்கையில் சில நிபந்தனைகளைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளை அடைந்தவர்களுக்குக்கூட பணி திருப்ப ஆணை பிறப்பிக்கப்படுவதில் மிக அதிகமான கால தாமதம் ஏற்படுகிறது. அதற்கான காரணம் எங்களுக்குத் தெரியவில்லை. ஏராளமான விபரங்கள் என்னிடம் இருக்கின்றன. பரவலாக இருப்பதால், குறிப்பிட முடியவில்லை. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, நம்முடைய கல்வித் துறை இயக்குநர் அலுவலகம் சற்று விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அறிவுரைகள் வழங்குவதோடு 1—6—1981 முதல் தொடக்கப் பள்ளிகளின் ஆசிரியர்களும் அரசு ஊழியர்களாக மாறிவிட்ட காரணத்தால், அந்த அரசுப் பள்ளிகள் அரசு உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படுகிற நிலைமையும் இருக்கிறது. இவ்வாறு அவைகள் உயர்த்தப் பட்டபோது பணி திருப்ப ஆணை பிறப்பிக்கப்படவில்லை. அப்படி பிறப்பிக்கப் படும்போது, ஏற்கெனவே அவர்கள் பணிபுரிந்த காலம் எவ்வாறு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும் என்ற கருத்தையும் அரசு பரிசீலனை செய்து முடி வெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட நிலைமைகளையும் பரிசீலிக்கவேண்டியிருப்பதுதான் இந்தத் தாமதத்திற்குக் காரணம்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசாங்கம் நல்ல நோக்கத்தோடு செய்ய வேண்டுமென்று நினைத்தாலும், சிறே சில நேரங்களில் சி.இ.ஓ. அலுவலகங்களில்கூட அடுத்த ஆண்டில் 'புரபோசல்' அனுப்பக்கூடிய நிலை இருக்கிறது. குறிப்பாக உத்தரவு வழங்கி, அந்தந்தக் கல்வி மாவட்டத்திலே அவர்களுக்கு சர்வீஸ் ரெகுலரைஸ் செய்வதற்கான குறிப்பை வழங்க அரசு முன்வருமா? சர்வீஸ் பதிவேட்டுக்கு அனுப்பவேண்டிய வரன்முறை களிலிருந்து அவர்களுக்கு நிரந்தர அளிப்பு வழங்கி கல்வித் துறையே இந்த



1983 ஏப்ரல் 8] [திரு. செ. முத்துசாமி]

நடவடிக்கைகளை அங்கீகரிப்பதற்கான முயற்சியை அமைச்சரவையிலே எடுத்து, காலதாமதம் இல்லாமல் நல்ல முன்னுதாரணமாக்க அரசு முன்வருமா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏதாவது சில குறிப்பிட்ட அதிகாரங்கள் நம்முடைய முதநிலை கல்வி அலுவலர் களுக்கு வழங்கப்படுகிற நேரில், அவர்களால் வெகு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் நிலை இருக்கிறது என்று அரசு கருதினால். அந்த அதிகாரங் களைத் தர அரசு தயாராக இருக்கிறது. வேறு சில பிரச்சினைகள் இதில் வராமல் இருக்க வேண்டும் என்பது நம்முடைய நோக்கமாகும். தேர்வாணைக் குழு வரம்புக்குள்ளிருந்து எடுக்க வேண்டுமென்பது அரசு எடுக்க வேண்டிய கொள்கை சார்பானது. அதைப்பற்றி நான் சொல்வதற்கில்லை.

**(2) தமிழ் நாடு கல்விக் கடன் படிப்புதவித் தொகை விதிகளுக்குத் திருத்தங்கள் செய்யப்படாமையால், மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களின் குழந்தை களுக்குக் கடன் படிப்புதவித் தொகைகள் திடீரென நிறுத்தப்பட்டிருப்பது குறித்து.**

திரு. பா. ரா. தாமஸ்: மாண்புமிகு தலைவர் அவர்களே, "தமிழ் நாடு கல்விக் கடன் படிப்புதவித் தொகை விதிகளுக்குத் தக்க திருத்தங்கள் செய்யப் படாமையால், மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் குழந்தை களுக்குக் கடன் படிப்புதவித் தொகைகள் கொடுக்கப்படாமல் திடீரென நிறுத்தப்பட்டிருப்பதும், அதனால் ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ள இடையூறும் குறித்து" நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை @ அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

---

@ 109 ஆம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

## தமிழ் நாடு கல்விக்கடன் படிப்புதவித் தொகை விதிகளுக்குத் திருத்தங்கள் செய்யப்படாமையால், மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்குக் கடன் படிப்புதவித் தொகைகள் திடீரென நிறுத்தப்பட்டிருப்பது குறித்து



**திரு. பா. ரா. தாமஸ் :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்தக் கடன் உதவித் தொகை கொடுப்பது குறித்து, 1962-லே ஒரு சட்டம் இருக்கிறது. அந்த 1962 சட்டத்திலே ஒரு சிறிய திருத்தம் செய்யவேண்டியிருக்கிறது. மேல் நிலைப் பள்ளிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்களின் குழந்தைகளும் இந்தச் சலுகைகளுக்கு ஏற்றவர்கள் என்று திருத்தம் செய்ய வேண்டும். இதற்கு மிகுந்த காலதாமதம் ஆகிறது ஆகவே தொழில் நுட்பக் கல்வி பயின்று வருகிற, ஆசிரியர்களுடைய குழந்தைகள் படிக்க முடியவில்லை. தொல்லைக்கு ஆளாகிறார்கள். ஆகவே விரைவில் ஆணையைப் பிறப்பிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, இதுதான் இப்போது பரிசீலனையில் இருக்கிறது. அதை விரைவுபடுத்த வேண்டுமென்று தொடர்பான அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இதிலே இருக்கிற இன்னொரு நிலைமை, இப்போது இதை நாம் திருத்தினால்கூட 6, 7, 8-வது வகுப்பு நடத்துகிற ஆசிரியர்களுக்குத்தான் அந்தப் பலன் கிடைக்கும். காரணம் வருமான வரம்பு வந்துவிடுகிறது. ஆகவே அவர்களுக்கு மட்டு மல்லாமல், பிளஸ் 1, பிளஸ் 2 வகுப்புகள் நடத்துகிற ஆசிரியர்களுக்கும் இதை விரிவுபடுத்த முடியுமா என்று அரசு ஆலோசித்து வருகிறது.

**திரு. பா. ரா. தாமஸ் :** இரண்டாவது பிரச்சினை என்னவென்றால் 1981-82 வரையிலும் மத்திய படிப்பு உதவித் தொகை (டாலண்ட்ஸ் ஸ்காலர்ஷிப்) இந்த மாநிலத்தில் உள்ள ஆசிரியர்களின் குழந்தைகள் படிப்புதவித் தொகைக்குச் சமமாக இருந்தது. ஆசிரியர்களின் குழந்தைகள் இதில் எந்த உதவியை வேண்டுமானாலும் ஏற்றுக் கொள்ளலாம் என்று இருக்கிறது. இப்போது மத்திய உதவித் தொகையை அதிகப்படுத்தியிருக்கிறார்கள். இதனால் இழப்பு ஏற்படுகிறது. ஆகவே மத்திய உதவித் தொகைக்குச் சமமாக மாநில உதவித் தொகையும் உயர்த்தப்படுமா ? அப்படி உயர்த்த கல்வி அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.



(முற்பகல் 10-30)

## 5. அரசின் தீர்மானம்.

### உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு @ பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

அவையின் முன் விளக்கக் குறிப்புகள் வைக்கப்பட்டிருப்பதால். அதன்மீது விவாதம் நடைபெற்ற பிறகு, நான் என்னுடைய பதில் உரையைக் கூற இருக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

THIRU A. R. DAMODARAN : Hon. Chairman, Sir, I thank you for calling me to inaugurate the discussion on the Policy Note on Food Situation in Tamil Nadu, which the Hon. Minister has been pleased to lay on the table of the House. In the recent past, we have had some discussion on the shortage that exists in Tamil Nadu and the need for the Central Government to rush food supplies to Tamil Nadu to tide over the present difficulty The Policy Note has outlined the failure of monsoons, various procurement operations that have taken place, and the demand on the public distribution system and has, in my opinion, very rightly requested the Central Government to rush rice supplies to the State. Only a few weeks ago, I read a note in a newspaper wherein it was stated that the Government of India had on hand nearly 4 million tonnes of rice in their godowns all over India and that they had about 6 to 7 million tonnes of wheat. In these circumstances, while I realise that there are other

@ 109-133 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

States which may also be making demands on the Government of India, to state that it is not possible even to import rice under any conditions, is to place intolerable strain on those states which are having deficit in rice or paddy at the present moment. May I point out that hundreds of crores of rupees are being spent on import of various articles, not necessarily food articles, and to plead that that the Government of India are unable to import rice is only an indication of the fact that they seem to be more concerned about the wheat-eating areas than about the rice-consuming areas? I do not wish to provoke a controversy in this regard because it already exists. But I feel that as far as Tamil Nadu is concerned, we are adopting too conservative a policy in the distribution through the public distribution system and that the Government of India going by the stock accounts of the Tamil Nadu Government, are taking advantage of the fact that we are having over 2 lakh tonnes of rice at present in our godowns. Complaints have been made by

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

various Members that our public distribution system has today so badly cracked up that less than 2 kg. of rice is being distributed through various fair price shops per fortnight. In fact I have myself tabled half a dozen Call-attention motions regarding the distribution of rict through fair price shops in South Arcot district. While the reply of the Hon. Minister was on anticipated lines, namely, that there was enough stock, I think that those of us who are in touch with consumers realise that the public distribution system in Tamil Nadu today is in a severe state of strain and that adequate rise is not being distributed, excepting, perhaps, in the metropolitan areas like Madras, which is under the constant supervision of officials as well as Minister of the Cabinet. My first request to the Hon. Minister is this. You have accepted the responsibility to give 9 likograms of rice to a family. Formerly, it was 20 kilograms. The Hon. Minister mentioned that they had now reduced it to 9 kilograms. I am subject to correction and I hope he will clarify in his reply. But, if you had accepted your responsibility to distribute a maximum of 9 kilograms of rice per family card, depending on the number of members in the family, then, start distributing 9 kilograms per card from today onwards. If you exhaust you rice-stocks by 30th April, your responsibility ceases. You will then find, as you send in your reports about the stock-position in your godowns, that there will be greater



consideration by the Government of India, because, at present, they do not seem to believe that you are in requirement of rice. No amount of White Papers, no amount of letters is going to convince them unless you really start distributing, through the public distribution system, the rice which you should distribute. You are not distributing this, Sir, in the Co-operative Saravanabhava Super-market, in the Uchimedu Civil Supplies shop, in half a dozen shops in Cuddalore alone, I have personally verified this and the fact remains that rice is not reaching the consumers. Instead of trying to save rice and keep it in your godowns, I would request you to fulfil your responsibility for which you have established the public distribution system. If you fulfil your responsibility in a manner in which you should and if you run out of stock by 30th April or by 10th May, you can, then, accuse the Central Government, very rightly, of not rushing adequate foodgrains for the public distribution system. What you are doing now is to cover up all the ills of your public distribution system. Even your answers in the Assembly and in the Council, if they are reported to the Government of India, will weaken your own case, Sir, because you will not confess that your public distribution system is on the verge of collapse. With all the statements made on the floor of the House, which are not going to be reported to the Central Government, we are only weakening our case by trying to make out that we have a perfect public distribution system.

Sir, recently, the Hon. the Chief Minister is reported to have made/a visit to one of the shops in the metropolitan area of Madras and discovered that, in the marking of family cards, there were errors, that about 40 to 50 per cent were bogus entries, and that many persons who should have been given rice, edible oil and kerosene were not given. Of course, the report came in the newspapers. Sir, I wish, sometimes, that I would have been able to take the Hon. the Chief Minister, in disguise, if disguise is possible, to hundreds of Civil Supplies shops and fair price shops in Tamil Nadu because this is so not only in the case of the metropolitan City of Madras. This is not an accusation against the Ministry or the Minister. It is an accusation against the system which you have established over which there is no control at all. There are hundreds of fair

price shops all over our State and all that I would request is this. If you really want to get a correct report of what is happening in these fair price shops, please send a squad which does not belong to your Civil Supplies Department but which belongs to some other independent agency and ask them to check, on a sample basis, the 1,000 or 1,500 family cards that have been attached to a shop. Then, you will find that 75 per cent of the entries made in such family cards are bogus.

I make this charge with all responsibility, because I have kept a watch on the situation. What appeared in the newspapers about the disappearance of 9 paddy bags overnight from a shop in Triplicane is not an isolated incident. It is happening every night every day in every village shop far away from our District Headquarters. I would, therefore, suggest that we should have a pilot check of 25 to 30 civil supplies shops selected on a random sample basis from 14 or 15 districts and then we will be able to find out the serious errors that have crept into the distribution system. I also wish to inform the Hon. Minister that a recent order passed by the Commissioner of Civil Supplies 1½ months ago says that no fresh card should be issued to any person in Tamil Nadu. To the Civil Supplies Department, human beings are mere statistical numbers. I am sure the

(முற்பகல் 10-40)

Civil Supplies Commissioner has given a report to the Government that in view of the fact that 11 million cards had already been issued to the public, this order was considered necessary, because they did not want to issue new cards. May I ask the Hon. Minister what would happen to the man who is transferred from one district to another, what would happen to the man who comes to Tamil Nadu newly and who wants a card? How can a department pass an order, a blanket prohibition, for the issue of family cards to anybody in Tamil Nadu? I have here a Family Card— because the Hon. Minister would like to know the great role of a family card—that was issued to a poor Harijan in Cuddalore by name Nagappan. In the enumeration that was conducted in September 1982 this Adi Dravida was omitted to be allotted to any shop. He came to me. He is a gardener earning Rs. 160 per month and he has three children and one wife



and he belongs to the Scheduled Caste. I wrote to the Taluk
Supply Officer, Cuddalore, certifying that J. Nagappan was
working as a gardener, that Nagappan had got a wife, Vasantha,
and three daughters—Vatsala, Manjula and Vanitha, that the
entire family was staying in a hut and that his income was
Rs. 160 per month, and stated "I request you to attach his card to
some shop in Manjakuppam so that he can draw his rice ration". I
was informed by the Taluk Supply Officer that he had received
instructions from the District Supply Officer who had received
instructions from the Commissioner of Civil Supplies that
endorsement on cards should not be made and that this man might
buy his rice from the open market. If this is going to be the
attitude with regard to an Adi Dravida family which wants rice
from the public distribution system, may I ask, "Whom are
the Government trying to help by establishing these shops?"
I request the Hon. Minister kindly to call for the order of the
Commissioner and ask him not to pass such a blanket order. It
is a disgrace for a Government to pass a blanket order that
family cards will not be issued afresh. There will be any
number of persons requiring new cards and I mentioned only an
isolated incident. There may be one million or two million
ghost cards. I agree. There are a lot of urban cases in which
the gardener and servant's family may be included in the card
and even after they leave their service, the rice and other
things will be continued to be drawn by the card-holders. There
may be living persons who are ghosts. The Government should
not make ghosts out of living persons. This sort of blanket
orders passed on the basis of mere statistical data should be
prohibited in this department and humane consideration should
prevail in the issue of family cards. I have no objection to the
Government making a detailed verification in the case of the
applicants who want such family cards, because when the price
of rice has gone up in the open market to Rs. 3.90, Rs. 4.20 or
Rs. 4.25. these poor families cannot buy rice in the open market.
I would, therefore, request that in the issue of cards such
orders should not be passed, that you should investigate every
case, and that every Taluk Supply Officer or District Supply
Officer should issue a card on verification. I am not asking you
to issue new cards, Sir

The next question that arises is about the producers. In every Policy Note—and I have the Notes from the year 1979 to the year 1983—crocodile tears have been shed about the procurement prices. In every Note, the State Government have said; "We have recommended to the Central Government to increase the procurement price of paddy; but the Central Government has refused." This controversy has gone on for four or five years and the farmer today still finds that the price that the Government are paying for paddy is far less than his cost of cultivation. What is the farmer to do in such circumstances? The Government want rice to distribute through their public distribution system as cheaply as possible, because they have 30 million consumers. But, what about the people who produce the rice? I consider it a disgrace on the part of the Government of India to import two million tons of wheat, to pay the American farmer and the Soviet farmer Rs. 150 more per quintal, to expend money in bringing wheat in ships, to incur expenditure in harbours and ports, so much so that the imported cost of wheat is 1½ times the national cost of wheat. What is the encouragement that we are giving to the producer and why are the Government following this policy? They state that it is to help maintain prices. 'Maintain prices' at whose cost, Sir? Is it at the cost of the producer and at the cost of the farmer? Many farmers who came to me said, "We have pleaded and pleaded and petitioned and petitioned. What do we do now?" I told them, "My friends, you have to change your tactics. First, you have to unionise yourselves. Secondly, not only do you have to unionise yourselves, but you have to adopt the device which Governments adopt and to unionise the landless labourers who are working under you. If you have unions of 10 millions of them, then, stop producing paddy and start producing other commercial crops. Then, the Government will come to their senses." Sir, we are heading for a situation where farmers will give up cultivation of paddy and, then, the Governments will be in real trouble. I would, therefore, make a request. I do not know whether this is a futile request because all that has been given is a Rs. 120 per quintal whereas the revised price for wheat is Rs. 151 per quintal. I do not know how we are going to enthuse our producers. But, I would like to express my serious concern about this so-called sympathetic



approach of pleading with the Central Government. I do not know why we have to accept the fixation of prices by the Agricultural Prices Commission. The Government stated that if they did not accept this price, they would not get funds from the Reserve Bank. Sir, the Government have got adequate funds to keep one lakh tons of rice in their godowns. For this, they require Rs. 23 crores. Their buffer stock operation will require only 2 lakh tons or 2½ lakhs tons for which they require about Rs. 50 crores. The Hon. the Finance Minister mentioned, in November, that he was flush with funds and with the increasing sources of revenue from Excise, Sales tax, Entry Tax, etc., it should be possible for the Government of Tamil Nadu to maintain their own buffer stock position without going to the Reserve Bank for credit. Unless they decide on this as a policy-matter, unless they set apart Rs. 70 crores or Rs. 80 crores for the maintenance of buffer stock operation, they will be perpetually depending on the Central Government for the fixation of prices of agricultural commodities. I hope that the Tamil Nadu Government will be able to set a new landmark in the history of our country by refusing to accept the prices that are fixed by the Agricultural Prices Commission and fix the price for paddy which they themselves say should be somewhere about Rs. 147 or Rs. 150 per quintal. Once they have accepted that they are going to pay at this price, let us hope that a policy decision will be taken that we will not keep on quoting the Central Government as an obstacle to the fixation of remunerative prices for the farmer.

Sir, the public distribution system deals primarily with foodgrains—rice, kerosene, sugar and a few other articles. I am thankful to the Hon. Minister for agreeing last year to have a State Advisory Committee on kerosene distribution. We have met once and we from the association have received great assistance from the officials of the Civil Supplies Ministry in understanding our difficulties. I would like the Hon. Minister to know that it is only in the district of Madurai that the District Revenue Officer convenes a monthly meeting and invites the wholesalers to the kerosene distribution meeting. At present, the meeting in other districts is confined to the officials of the Civil Supplies Corporation, to the District

Supply Officer and to the few revenue officials who may be concerned with the distribution of kerosene, and the wholesalers are not invited to these meetings. Only in Madurai they are also invited and there, I behave, the system is working very

(முற்பகல் 10-50)

well I request the Hon. Minister to issue direction that to these monthly meetings, or bi-monthly meetings, the wholesalers may also be invited, because at present in some districts, the quota of kerosene is not being lifted. In the distribution of kerosene, we have had a fatal policy which was announced on February 15 and fortunately withdrawn on March 19, namely, the dual pricing of kerosene which wrecked the public distribution not only in Tamil Nadu but throughout India. There were uproarious scenes in Madhya Pradesh and Uttar Pradesh protesting against the dual pricing of kerosene. Nine years ago, when Thiru Barooah was the Minister of Petroleum, he broached the subject whether we could have dual pricing in petroleum products. Then I happened to be the President of the All India Petroleum Dealers' Association. At that time, I told him that if we introduced dual pricing in petroleum products, it would destroy the network of distribution, and that is exactly what has happened. It is awful that without consulting the State Governments—particularly when in Madras we had a distribution policy trying to maintain a certain equilibrium in kerosene distribution—a mid-night order should have been issued. I can only express my happiness that this new policy has died a timely death in exactly 35 days. I hope it will never be revived in the field of petroleum distribution.

The only difficulty which I would like to apprise the Hon Minister of now is this. We are having 450 wholesalers in Tamil Nadu in kerosene who are the agents of oil companies. In the Metropolitan area and in some of the districts these wholesalers are not able to lift their quota because of certain manipulations made by the officers in charge of the retail shops. What they do is this. They keep on shifting the retail shops to another wholesaler so that one wholesaler loses his quota and another wholesaler will gain in the same. When this happens, the wholesaler who loses the quota loses a valuable right and he



compensation the officer so that he may not lose this quota. I may put it in as mild a language as possible. In other words, corruption can be rampant if the Government allow wholesalers' quotas to be meddled with by Taluk Supply Officers, Assistant Commissioners of Civil Supplies or any other officer of the Civil Supplies Department. I want the Government to ensure that the historical quota that an agency has built up over 25 years of effort is allotted to that particular wholesaler. If their retail distribution network is unable to uplift from a particular wholesaler, then they can always manage to uplift from another area so that the retail network may not suffer. Representations have been made to me and I wanted to bring it to the notice of the Hon. Minister because I would like this defect to be rectified. I am not concerned with the retail distribution because it has been entirely taken over and we are now concerned only with the upliftment of the wholesaler's quota.

Sir, may I now refer to the Civil Supplies Corporation which is part of the public distribution system and which has been built up with so much cost, effort and resources over a period of years ? We now have in the Civil Supplies Corporation, officials distributing the very same products that I mentioned, excepting for the fact that what was done by about 500 Subbiah Chettiars and Athimoola Goundars is being done by a dozen I.A.S. Officers, probably, another 40 Revenue Divisional Officers, probably another 25 District Supply Officers, 150 Taluk Supply Officers, 250 Revenue Inspectors, then, Senior Regional Managers, Junior Regional Managers, General Managers, Superintendents, etc. What a costly apparatus the Government have built up, Sir! And how proud we are of the fact that to distribute products for Rs. 100 crores, the Hon. the Finance Minister is to set apart Rs. 60 crores every year on subsidy for the maintenance of this wonderful organisation. I know that whatever I might say will neither be accepted by the Government of Tamil Nadu nor by the Government of India who are equally capable of losing tax-payers' money because we are spending Rs. 830 crores on the Food Corporation of India. Sir, a time has come for you seriously to think about this organisation and to evaluate its utility in the entire administrative set-up of our State. The Hon. Minister mentioned that, in Madras City, 2,000 family cards were attached to a particular Civil

Supplies shop and the reason he gave for not creating another shop was that the Civil Supplies Corporation was not able to get a shop of its own. Why do you want a shop of your own ? Or, even if you want a shop of your own, why cannot you recognise 50 or 60 shop-keepers in the locality, give them each 1,000 cards and, then, supervise the working of the arrangement ? Do you mean to say that the ills, the black-marketing or the malpractices would be any way more in that private shop than in your own shop ? Why does not the Hon. Minisc realise that we have created so tremendous a vested interest i the Civil Supplies Corporation and in the public distributio system that there are as many malpractices and ills ? Not onl that, Sir. There is another disturbing trend. Your Civi Supplies employees have now organised themselves into unions I am receiving letters, in my own district, from the union o Civil Supplies officials. They have said, " Your wholesale shop in two particular places are short-delivering kerosene." Instea of giving 200 liters in a barrel, I am supposed to deliver onl 180 litres. When I enquired, I found that we had an electri pump delivering the kerosene in that place that they ha accused and that we were delivering 200 litres. Moreover, th persons taking delivery are also signing in the bills, statin 'Measured and taken delivery.' What is happening is tha some bandicoots are taking away 15 liters from the barrel *e route* and want to put the blame on some other person. Thi is happening in every field of activity. While it has bee enunciated as a policy, I would request the Hon. Minister no to exclude private trade, the small shop-keepers, from th public distribution system. One of the biggest mistakes tha was made from 1979 and was proudly announced in all th Policy Notes was, ' We have excluded private trade from th distribution network'. At what cost, at what effort and witl what results ? The Hon. Minister may follow the example o the Hon. the Chief Minister and visit any shop today—he may accept this challenge—and find out how many bogus entries are being made in the public distribution shops and then decide for himself whether the exclusion of private trade totally from the public distribution system is right or wrong. One can understand the establishment of fair price shops in tribal areas and hilly areas and backward areas and inaccessible areas. But one cannot understand the policy of the Government in relation



to the other areas. In Cities and towns like Madurai, Madras, Salem, Coimbatore and Tiruchirappalli where there are thousands of shop-keepers who will do the job as efficiently as the Government's system and who will continue to pay the licence fees to the Government and who will not ask for subsidy in the distribution of these commodities, they could have been used. In

(முற்பகல் 11-00)

Madras City I welcome the introduction of blue, yellow or red cards or cards of some other colours and the issue of ration on a weekly basis. This is what we have been requesting for a long time. If the Government care for the consumer, they must give him his monthly ration once when he calls at the fair price shop. That it has been realised only after the Chief Minister made a visit to a shop is a matter of great surprise and shock to me. This is what we have been pleading for. The middle class housewife cannot go everyday to collect her ration and at the shop she will be asked to call at the shop the next day to collect her rice quota or one litre of palmolein or her 1½ kilograms of sugar. They must be given once a month at one shop. That the consumers have remained passive and that they have not, like Bombay housewives, taken their kettle and pans and gone on a march to the Secretariat is only an indication of the patience and tolerance of Tamil Nadu housewives and it is not an indication of the efficiency of the public distribution system. I would request that care be taken to open more shops wherever they are found necessary. If there are no premises, the Government may entrust the work, at least temporarily to persons who already have shops and when buildings become available, the Government can establish their own shops. Until the system of distribution is well-organised and so long as the errors, malpractices and other ills continue to be there in the system, any attempt that is made to cover up these ills is only adding insult to injury to the consumers and will not help either the cause of the Government or the cause of public distribution. I would only end by reminding that on January 19, the Prime Minister of India, after the Karnataka and Andhra debacle realised, in spite of the innumerable panels that we had, that it was necessary to have advisory panels. This is what we have been saying in respect of various councils at the State and the Central levels. In the application of the Essential Commodities Act, she has now advised the State Governments to have

advisory panels at the State and at the District levels, because she found that these traders were being subjected to hardship and, what is worse, corruption at all levels. I do not wish to make any specific charge. We have many officers in the Civil Supplies Department who are trying to do a nice job. But they are a few and nobody can control an organisation that has grown like a white elephant over a period of ten years. The Government are now having almost 40,000 to 50,000 people involved in the public distribution system. Now that no less a person than the Prime Minister herself has realised—after passing various laws making the Essential Commodities Act more stringent, more harsh and more punitive—that advisory panels are necessary, I would request that, even at the State level, such advisory panels may be formed. Whatever products you have in the public distribution system, whether it is sugar, rice or edible oil, please get the representative of the trade into the advisory panels. I can assure the Hon. Minister that, even if he holds one meetings for every trade once in three months or once in four months, the representative from that particular trade will have him an insight into the working of the public distribution system, the harassment that exists at all levels, the corruption that exists and the imperative need for us to cleanse this system if the Hon. Minister wants to fulfil the objectives for which the system has been established.

Thank you, Sir.

திரு. செ. முத்துசாமி: மேலவைத் துணைத் தலைவரவர்களே, உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது பேசுவதற்கான ஒரு வாய்ப்பு கொடுத்ததற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நாட்டைப் பொறுத்தவரையில், சுதந்திரம் அடைந்த பின்னர், நெடுங்காலம் வெளி நாடுகளுக்கு உணவைத் தேடிச் சென்ற நிலைமைகள் இருந்தன. பிறகு இந்திய நாட்டினுடைய விஞ்ஞான ஆய்வு முன்னேற்றத்தின் காரணமாக 'ஹைப்ரிட்' இனங்களை உண்டாக்கி, விவசாயப் பெரு மக்களுடைய கடுமையான உழைப்பால் தன்னிறைவை ஏற்படுத்திக் கொண்டது. பொதுவாக இப்படிப்பட்ட வறண்ட காலங்களில் எந்த ஒரு மாநிலத்திற்கும் உணவுப் பற்றாக்குறை சங்கடம் எழுவது என்பது இயற்கையான ஒன்று. இப்போது இயற்கையாக எழுந்துள்ள பிரச்சினையை,





நிர்வாக இயந்திரத்தில் அது, இது என்று காரணம் காட்டி, தமிழகத்தின் உணவு நிலைமையைப்பற்றி பிரத்தியட்சமாகப் பார்க்காத சூழ்நிலை இருப்பது கண்டு நான் மனம் வருந்துகிறேன். இந்தப் பிரச்சினையை கட்சிக்கு அப்பாற்பட்டு பார்க்க வேண்டும். இன்றைக்கு தமிழ் நாட்டுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் கிடைக்கவில்லை. மக்களுக்கு உணவை வழங்க தடுமாறிக் கொண்டிருக்கும் நிலைமையைச் சொல்லுகிறார்கள். அதற்குப் பின்னாலும்கூட, மத்திய அரசிலிருந்து தமிழகத்திற்கு வேண்டிய அளவிற்கு ஒதுக்காமலிருப்பது அல்லது தத்துவங்கள் பேசுவது, தேவையற்றதைச் சுட்டிக் காட்டுவது என்பதெல்லாம் மனிதாபிமான விஷயங்களுக்கு அப்பாற்பட்டவை. தமிழகத்தில் ஒற்றுமை குறைந்த காரணத்தால்தான், மத்திய அரசிலிருந்து பல நேரங்களில் பல விஷயங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. நான் கேரளாவைப் பார்க்கிறேன். டெல்லிக்குச் சென்றபோது பார்த்திருக்கிறேன். கேரளாவில் ஆண்டு கொண்டிருப்பது காங்கிரஸ் கட்சிதான். ஆனால், அந்த மாநிலத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும ஒன்றாகச் சேர்ந்து, கேரள மாநிலத்திற்குக் கிடைக்க வேண்டிய பிரச்சினைக்கு, சண்டை போடுகிறார்கள். அத்தகைய உணர்வுகள் தமிழகத்தில் குறைந்திருக்கின்றன. இப்படி நெருக்கடியான காலகட்டத்தில் மற்ற எல்லாப் பிரச்சினைகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு ஒன்றாகச் செயல்பட வேண்டும். இன்றைக்கு ஆண்டுகொண்டிருக்கிறவர்களுக்கு எதிர்க் கட்சிக்காரர்கள் ஒத்துழைப்பு தந்து, மக்களுக்கு இருக்கும் பிரச்சினையில் தீர்வு காணும் முயற்சியில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நாவலர் அவர்களுக்கு உள்ள பெருந்தன்மையை நான் அறிவேன். எந்தப் பொறுப்பை வகிக்கும்போதும் பெருநோக்கோடு இருப்பவர்கள். கல்வி அமைச்சராக இருந்தபோதும் பார்த்திருக்கிறேன். கட்சிப் பொதுச் செயலாளராக இருந்தபோதும் பார்த்திருக்கிறேன். உணவு வழங்கல் கொள்கையிலே பெருந்தன்மையோடு பல காரியங்கள் ஆற்றி வருகிறார்கள் என்று அறிகிறேன். தமிழகத்தில் உள்ள ஸ்டாக் பொசிஷனைப் பொறுத்தவரையில், இன்றைக்கு வைத்துள்ள நிலைமையிலே தவறுகள்கூட ஏற்பட்டுவிட்டதாகக் கூறுகிறார்கள். அப்படி ஏற்பட்டிருப்பதாகவே ஒத்துக் கொள்கிறேன். மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களைப் பெற்றுத் தருவதில் எல்லோரும் ஒன்றாக நிற்க வேண்டுமென்பதிலே கருத்து வேறுபாடு கிடையாது. அரிசி கிடைக்கவில்லை, கோதுமை கிடைக்கவில்லை. தமிழகத்திலே வறட்சி ஏற்பட்டது. அதற்குப் பிறகு சில மாநிலங்களிலே வறட்சி நிலை ஏற்பட்டது. முதலிலே வறட்சி ஏற்பட்டுள்ள தமிழகத்திற்கு முதலிலே தேவையான உணவுப் பொருள்களை வழங்க வேண்டுமென்பதில் எல்லோரும் ஒன்று கூடி நிற்க வேண்டும். தமிழன் என்ற உணர்ச்சியில் தமிழ் நாட்டிலிருந்து

[திரு. செ. முத்துசாமி] [1983 ஏப்ரல் 8

தேர்ந்தெடுக்கப்பட்ட எந்தப் பிரதிநிதியாக இருந்தாலும், தமிழ் நாட்டுக்கு வேண்டிய தேவைகளைக் கேட்டுப் பெற, கட்சி வேறுபாடற்ற முறையில் செயல்பட வேண்டுமென்று எல்லோருக்கும் வேண்டுகோள் விடுக்கிறேன்.

வறட்சி நிவாரணத்திற்காக ஒரு ஆணையாளரை நியமித்திருக்கிறார்கள். அது அவசரத் தேவையான ஒன்று. பேமைன் கமிஷனர், டிரவுட் ரிலீஃப் கமிஷனர் நியமிக்க வேண்டுமென்று சொன்னேன். அது குறித்து மிக நல்ல முறையிலே நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இதிலே கவனிக்க வேண்டியது இரண்டு விஷயங்கள். ஒன்று உணவு உற்பத்தி, இன்னொன்று வழங்கல். உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற எல்லா ஏற்பாட்டையும் செய்து, வெற்றி பெற்றிருக்கிறோம். வழங்கல் என்னும்போது நல்ல நிர்வாகம் இருந்தால்தான் வெற்றி அடைய முடியும். சிலர், இந்த நெருக்கடியில் அக்கிரமம் செய்வதைப் பார்க்கிறோம். மாநிலத்திற்கு அந்தப் பக்கம் கடத்துவது, வேறு நாட்டுக்குக் கடத்துவது என்ற நிலையைப் பார்க்கிறோம். வெளி நாட்டுக்குக் கடத்தப் படுகிறது என்னும்போது மத்திய அரசின் பொறுப்பாகிறது. கடல் மூலம் கடத்தும்போது மத்திய அரசின் கன்ட்ரோலில் வருகிறது. டெரிடரிக்குள்ளே கடத்தப்படும்போது மத்திய அரசு, மாநில அரசுகளின் பொறுப்பில் அது இருக்கிறது. இந்த நிலைமைகளை எல்லாம் நிறுத்தி, நெருக்கடி ஏற்பட்டுள்ள இந்தக் காலகட்டத்தில் உணவுப் பொருள்களைச் சரியாக வழங்குவதற்கும், உணவு இல்லாத நிலைமையை அறிவித்து, மத்திய அரசு உடனடியாக வழங்கக் கேட்டு, இருக்கும் உணவை சரியாக வழங்க நல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த நேரத்தில் நல்ல நிர்வாக இயந்திரத்தைப் பயன்படுத்த வேண்டும். இந்த நெருக்கடி நேரத்தில் தமிழக அரசு உயர்ந்து விளங்கியது என்று எல்லோரும் சொல்லுமளவிற்கு உயர்ந்த நல்ல நிர்வாக இயந்திரத்தைச் செயல்படுத்துவதை எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கும் நிலைமையில், இந்த நிர்வாகத்தைச் சரியாக நடத்தி, அமைச்சர் அவர்கள் காலத்திலே நிர்வாகம் திறமையாக இருந்தது என்று சொல்லுமளவிற்குச் செய்து, மக்களுக்கு விநியோகம் சரியாகப் போய்ச் சேர வேண்டுமென்று என்னுடைய ஆசையை தெரிவித்து, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.



1983 ஏப்ரல் 8]

(முற்பகல் 11-10)

திரு. எஸ். ஆர். இராதா : துணைத் தலைவர் அவர்களே, உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புமீது விவாதிக்கின்ற வாய்ப்பினைக் கொடுத்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்திலே உணவு நிலைமையைப் பொறுத்தவரையில், அரசியல் கட்சிகளாலே பல்வேறு கருத்துக்கள் சொல்லப்பட்டாலும், அரசியலுக்கு அப்பாற்பட்ட பொது நிலையிலே இருந்து பார்க்கின்றவர்கள் தமிழகத்தினுடைய நிலைமைகளைப்பற்றித் தெளிவாகத் தெரிந்துகொண்டிருக் கிறார்கள். இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்தவரையில், நெருக்கடியில் இருக்கிறோம். தமிழகம் மட்டுமல்லாமல் தமிழகத்திற்கு வெளியிலேயும் உணவு நெருக்கடி இருப்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. ஆனால் தமிழக அரசைப் பொறுத்தவரையில், இன்றைக்கு உணவைத் தர வேண்டிய அத்தியாவசிய நடவடிக்கை அனைத்தையும் அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதை எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள்கூட மறுத்துச் சொல்ல முடியாது. அதற்கான நடவடிக்கைகளை மிகத் தெளிவாக, மிக வேகமாக, மிகச் சிறப்பாக இந்த அரசு செய்துகொண்டிருக்கிறது என்பதை என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. உதாரணத்திற்கு ஒன்றே ஒன்றைச் சொல்கிறேன். இந்த ஆதாரம் முக்கியமான ஒன்று. 1974-75 ஆம் ஆண்டு ஏறக்குறைய ஒன்பது ஆயிரம் நியாய விலைக் கடைகளை மட்டும் வைத்துக்கொண்டிருந்தோம். இக்கடைகளின் மூலம் தமிழகத்திலுள்ள மக்களுக்கு அரிசி போன்ற பொருள்களை வழங்கிக்கொண்டிருந்தோம். ஆனால் 1982-83 ஆம் ஆண்டு 17,844 கடைகள் மொத்தத்தில் திறக்கப்பட்டிருக்கின்றன. இவ்வளவு எண்ணிக்கையுள்ள கடைகளின் மூலமாக மாதந்தோறும் 85 ஆயிரம் டன் அரிசி தருவது என்பது ஒரு சாதாரணமான காரியமல்ல. இந்தப் புள்ளிவிவரத்தைப் பார்க்கின்ற நேரத்தில் எந்த அளவிற்கு, ஒருசில ஆண்டு களிலேயே, நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கை பெருகியிருக்கிறது, வளர்ந்திருக்கிறது என்பதை நாம் அறிய முடிகிறது. தமிழகத்திலே இருக்கிற மக்களைக் காப்பாற்றுவதற்காக அரசு செய்ய வேண்டிய அத்தியாவசியமான காரியத்தைச் செய்திருக்கிறது என்பதை நாம் இதிலிருந்து அறிய முடிகிறது. இப்படி நம்முடைய அரசு ஏழையெளிய மக்களுக்கு திட்டமிட்டு நல்ல காரியங் களைச் செய்கிற நேரத்தில் லாப நஷ்டம் பார்க்கிற வியாபாரிகள்கூட இந்த நாட்டிலே பல பேர் இருந்துகொண்டிருக்கிறார்கள். என்னைப் பொறுத்த வரையில், ஒன்றைச் சொல்கிறேன். ஏழையெளிய மக்களுக்கு நியாய விலைக் கடைகள் மூலமாக உணவுப் பொருள்களை வழங்குகிற பிரச்சினையைப் பொறுத்தமட்டில், தயவுசெய்து லாப-நஷ்டக் கணக்கைப் பார்க்கக் கூடாது. உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன்.

[திரு. எஸ். ஆர். இராதா] [1983 ஏப்ரல் 8

கல்வியை நாம் மக்களுக்கு அளிக்கிறபோது எந்த ஆதாயத்தையும் பார்ப்பதில்லை. அந்த வகையில் தமிழகத்திலே உள்ள மக்களுக்குக் கல்வி வசதிக்காக அரசு பல கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்டு வருகிறது. அதுபோல் அரசு சுகாதாரம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் மூலமாக பல கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்டு மக்களுக்கு இலவசமாகச் சிகிச்சை அளித்து உடல் நலத்தையும், சுகாதாரத்தையும் பேணுகிறது, எந்தவித ஆதாயத்தையும் எதிர்பாராமல். அதேபோல காவல் துறையைப் பொறுத்த வரையிலும்கூட, மக்களைக் காப்பாற்ற, நாட்டிலே சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க எந்தவித ஆதாயத்தையும் எதிர்பாராமல் கோடிக்கணக்கான ரூபாய்களை அரசு செலவிடுகிறது. மேற்கண்டமாதிரி பல்வேறு பணிகளை பல்வேறு துறைகளின் மூலமாக அரசு எந்தவிதமான லாப நஷ்டக் கணக்கையும் பார்க்காமலே நாட்டு மக்களின் நலன் கருதி, அத்தியாவசியத் தேவை கருதி, கோடிக்கணக்கான பணத்தைச் செலவு செய்துகொண்டிருக்கிறது. அதே அடிப்படையில் ஏழையெளியவர்களுக்கு நியாய விலைக் கடைகளின் மூலமாக உணவு வழங்குகின்ற பிரச்சினையைப் பொறுத்தவரையிலும்கூட, அரசு லாப நஷ்டக் கணக்கைப் பார்க்காமல், அத்தியாவசியத் தேவை என்கிற அணுகு முறையில் பார்க்க வேண்டும். மளிகைக் கடை நடத்துகின்றவர்களைப் போல லாப நஷ்டக் கணக்கைப் பார்க்கக் கூடாது. இந்த நியாய விலைக் கடைகளின் மூலமாக அரசு ஏழையெளிய மக்களுக்கு உணவு வழங்குவதன் காரணமாக நாட்டில் இருக்கின்ற ஒரு நிலைமையை நான் சுட்டிக்காட்டுகிறேன். இப்போது நாம் தமிழகத்திலே இருக்கின்ற நியாய விலைக் கடைகளின் மூலமாக நியாய விலையில் உணவுப் பொருள்களை வழங்கிக் கொண்டிருப்பதன் காரணமாக நிச்சயமாகச் சொல்கிறேன். கொள்ளை லாபமடிக்கிற, பல்வேறு தவறுகளைச் செய்கின்ற வியாபாரிகளின் தொல்லைகளை நாம் கட்டுப்படுத்த முடிகிறது. இப்படி நாம் உணவுப் பொருள்களை வழங்குகின்ற நிலை மட்டும் இல்லாமல் இருந்திருந்தால், தமிழக ஏழையெளிய மக்கள் ஒருசில கொள்ளை லாபம் அடிக்கின்ற வியாபாரிகளுடைய கைகளிலே அகப்பட்டு பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாகியிருப்பார்கள். அவர்களுடைய போட்டா போட்டியிலிருந்து நாம் மக்களை மீட்டிருக்கவே முடியாது.

இப்போதெல்லாம் ஒருசில பெரியவர்கள் ஒரு பிரச்சினையைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சாதாரண ஏழையெளியவர்கள் தாங்கள் வாங்குகின்ற அரிசியை இரண்டு ரூபாய்க்கு வாங்கிவிட்டு யாருக்காவது மூன்று ரூபாய்க்கு விற்கின்ற நிலைமை வரும்போது, அதைப் பெரிதுபடுத்தி, அதைப் பிரச்சினை யாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் தமிழகத்திலே கோடிக்கணக்காக கொள்ளையடிக்கிற வியாபாரிகள் இருக்கிறார்களே, அவர்களைப்பற்றிச்



1983 ஏப்ரல் 8] [திரு. எஸ். ஆர். இராதா]

சுட்டிக்காட்ட எந்தப் பெரியவர்களும் அல்லது வியாபாரிகளும் முன்வருவதில்லை. ஆனால் ஒன்றுமே இல்லாதவர்களுக்கு சாதாரண ஏழையெளிய மக்கள்மீது பெரிதாகக் குற்றம் சொல்ல முன்வந்து விடுகிறார்கள். கலப்படம் செய்து கொள்ளை லாபம் அடிக்கிற வியாபாரிகளைப்பற்றி தமிழகத்தில் இருக்கிற எந்த நல்ல வியாபாரியாவது தகவல் சொல்ல முன்வருகிறாரா?

**திரு. ப. மாணிக்கம் :** கலப்படம் செய்து கொள்ளை லாபம் அடிக்கிற வியாபாரிகளுடைய பெயர்களைக் குறிப்பிட்டுச் சொல்வார்களா?

**திரு. எஸ். ஆர். இராதா :** பெயர்களை, என்னை குறிப்பிட, மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். நான் எந்த ஒரு தனிப்பட்ட வியாபாரியைப்பற்றியும் சொல்லவில்லை. நாட்டிலே தவறு செய்துகொண்டிருக்கின்ற வியாபாரிகளைப் பற்றியும் ஒட்டுமொத்தமாகத்தான் நான் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் ஆசைப்பட்டால், அந்தத் தனிப்பட்ட பெயர்களையும்கூட நான் சொல்லத் தயாராக இருக்கிறேன். ஆனால் தனிப்பட்ட மனிதர்களைப்பற்றி நான் எப்போதுமே சிந்திக்கவில்லை. இன்றைக்கு சாதாரண ஏழையெளிய மக்கள் செய்கிற சிறிய தவறுகளைச் சுட்டிக்காட்ட சில பெரிய மனிதர்களுக்கு எவ்வளவு தூரம் ஆர்வம் இருக்கிறதோ அதேபோல கொள்ளை லாபம் அடித்துக் கொண்டிருக்கின்ற வியாபாரிகளுடைய பெயர்களையும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற நிலைமை வர வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரசின் உணவுக் கையிருப்பைப் பொறுத்தவரையில், அதனைச் சரிவரச் செய்ய வேண்டிய கடமை இந்த அரசுக்கு இருக்கிறது. சாதாரண ஏழையெளிய மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களை வழங்க வேண்டுமென்கின்ற நிலைமையில் இருக்கின்ற அரசு, கடமையை ஏற்றிருக்கின்ற அரசு, அதற்கான சேமிப்புக் கிடங்குகளை அமைக்க வேண்டும். இன்றைக்கு அத்தியாவசியப் பொருளில் மிக முக்கிய இடத்தில் இருப்பது அரிசி. இந்த அரிசி யாருடைய கையிலிருந்து நமக்கு வருகிறது என்று பார்த்தால், வியாபாரிகளுடைய கையிலிருந்துதான் நமக்கு வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இந்த நேரத்தில் நான் தமிழக அரசுக்கு மிகவும் பணிவன்போடு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். தயவுசெய்து தமிழகத்தில் இருக்கிற அனைத்து ரைஸ் மில்களையும் அரசின் கைவசம் கொண்டுவர வேண்டும். இன்றைக்கு ரைஸ் மில்களிலிருந்துதான் அனைத்து காரியங்களும் நடைபெறுகின்றன. அப்படிப்பட்ட காரியங்களை நாம் அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதன் மூலம் தவிர்க்க முடியும். அதன் பிறகு தவறுகள் நடைபெற வாய்ப்பிருக்காது.

[திரு. எஸ். ஆர். இராதா] [1983 ஏப்ரல் 8

இப்படி நாம் உணவு நிலைமையைப் பற்றிச் சிந்திக்கின்ற நேரத்தில் பலர் அரசியல் ரீதியாக பல்வேறு பிரச்சினைகளை எழுப்பிக்கொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். தமிழகத்தில் வறட்சி நிலை ஏற்பட்டு, உணவுத் தட்டுப்பாடும் ஏற்பட்டிருக்கிறது. தமிழகத்திற்கு அரிசி தாருங்கள் என்று கேட்டால், மத்திய தொகுப்பிற்கு என்ன தந்தீர்கள் என்கிற எதிர் கேள்வியைப் போடுகிற நிலைமையை சில பேர் கிளப்பிக் கொண்டிருக்கிறார்கள். அதுபற்றி இங்கே தெளிவாகப் புள்ளிவிவரம் கொடுத்திருக்கிறார்கள்.

1980 ஆம் ஆண்டு 1 லட்சத்து 91 ஆயிரம் டன் அரிசி கேட்டிருக்கிறோம். ஆனால் மத்திய அரசு கொடுத்தது 93 ஆயிரம் டன். அதேபோல 1981 ஆம் ஆண்டு நாம் கேட்டது 11 லட்சம் டன். ஆனால் அவர்கள் கொடுத்தது 4 லட்சத்து 80 ஆயிரம் டன். 1982 ஆம் ஆண்டு மே மாதம் வரை நாம் கேட்டது 5 லட்சம் டன். ஆனால் மத்திய அரசு கொடுத்தது 1 லட்சத்து 61 ஆயிரம் டன் இப்படி நம்மிடம் தெளிவாகக் கணக்குகள் இருக்கின்றன. மத்திய தொகுப்பிற்கு என்ன கொடுத்தீர்கள் என்று கேட்பவர்களைப் பார்த்து, நான் சொல்கிறேன், தயவுசெய்து அதுபற்றிய விவரத்தைத் தெளிவாகக் கொடுத்திருக்கிறார்கள், அதைப் படித்துப் பாருங்கள். 1970 ஆம் ஆண்டு 50 ஆயிரம் டன் கொடுத்திருக்கிறோம் என்றால், 1970-ல் நடைபெற்றது உங்கள் ஆட்சியா என்று கேட்கலாம். அப்படி எங்கள் ஆட்சியில் நிலைமை என்ன என்று கேட்டால், நான் சொல்கிறேன். 1980 ஆம் ஆண்டு அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு இருக்கிறபோது, மத்திய தொகுப்புக்கு இரண்டு லட்சம் டன் அரிசி தர வழிவகை செய்தோம். ஆனால் அதை மத்திய தொகுப்புக்கு வாங்கினார்களா என்றால், மத்திய சர்க்காரே அதை வாங்கிக்கொள்ள முடியவில்லை. 73 ஆயிரம் டன்னை வாங்கிக்கொண்டு பாக்கியை வேறு காரியங்களுக்குப் பயன்படுத்துங்கள் என்று சொல்லி விட்டார்கள். மத்திய அரசின் தொகுப்புக்கு அரிசி என்று சொல்லுகின்ற நேரத்தில், அவர்களுக்கு நாம் தர வேண்டுமென்று சொல்கின்ற நேரத்தில், பொதுவாகச் சொன்னால், யாரிடம் எவ்வளவு கேட்க வேண்டுமென்று மத்திய அரசுக்குத் தெரிய வேண்டாமா? பற்றாக்குறை, வறட்சி, மழை இல்லாமல் அமைதியில்லாத நிலை. இப்படி எல்லாம் இருக்கும்போது, மத்திய அரசின் தொகுப்புக்குத் தரவில்லையே என்று சொன்னால், எப்படி மத்திய தொகுப்புக்கு அரிசி கிடைக்கும்? இந்த சாதாரண விஷயம் கூட மத்திய அரசிலே இருக்கிற அதிகாரிகளுக்குத் தெரியவில்லையே? இங்கு தமிழகத்தில் இருக்கிற அரசியல்வாதிகளுக்குக்கூட தெரியவில்லையே என்பதுதான் எனக்கு இருக்கிற வருத்தம் எல்லாம்.



1983 ஏப்ரல் 8] [திரு. எஸ். ஆர். இராதா]

இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்தவரையில், குறிப்பாக சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரை ஒரு சுவரொட்டியை ஆங்காங்கே ஒட்டியிருக்கிறார்கள். அதிலே தமிழகத்திலே உற்பத்தி 55 லட்சம் டன். தமிழகத்திற்கு ஓராண்டிற்குத் தேவை 10 லட்சம் டன். மீதம் இருக்கிற 45 லட்சம் டன் அரிசி எங்கே? கேரளாவுக்கு அதைக் கொடுத்தது யார்? 'மக்களைப் பட்டினி போடாதே' என்று அகில இந்திய சிவாஜி மன்றம் என்கிற பெயராலே சுவரொட்டி ஒட்டியிருக்கிறார்கள். அதைப் படித்துப்பார்த்தபோது எனக்கே ஆச்சரியம் ஏற்பட்டது. வெறும் 10 லட்சம் டன் அரிசி தேவைக்கா எங்களது மாண்புமிகு அமைச்சர் நாவலர் அவர்கள் சமாளிக்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள், மத்திய அரசை வேறு கேட்கிறார் என்று நினைத்தேன். 55 லட்சம் டன் விளைகிற தமிழகத்திற்கு வெறும் 10 லட்சம் டன் அரிசிதான் தேவையா? இதைக் கொண்டு கிட்டத்தட்ட 5 கோடி மக்களுக்கு வழங்க முடியுமா? அப்படி என்றால், நம்மைவிட மிக மிகக் குறைவாக மக்கள் தொகை இருக்கிற கேரளாவுக்கு 45 லட்சம் டன் தேவை என்று சொல்லி வாங்குகிறார்களே, அது யானைக்கா, இல்லை வேறு யாராவது சாப்பிடுகிறார்களா என்கிற எண்ணம்கூட எனக்கு ஏற்பட்டது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தாஸ் அவர்களைக் கேட்கிறேன். இப்படி சுவரொட்டி ஒட்டினால், அதைப் படித்துப்பார்க்கிற ஏழையெளிய பொது மக்கள் என்ன நினைப்பார்கள்? இந்த அரசு ஏதோ பெரிய தவறு செய்திருக்கிறது என்று தானே நினைப்பார்கள். ஆனால் உண்மை நிலைமை என்ன என்று எனக்குத் தெரியும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் தெரியும். படித்துப் பார்க்கிற ஏழையெளிய சாதாரண மக்கள் என்ன நினைப்பார்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இப்படி தவறான தகவல்களை பொது இடங்களில் ஒட்டலாமா?

நான் மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் அவர்களைக் கேட்கிறேன். எந்தெந்த சுவரொட்டிகளையோ எல்லாம்—ஆபாசம் என்று சொன்ன உடனே போலீசார் பாய்ந்து சென்று பிடிக்கிறார்கள். அப்புறப்படுத்துகிறார்கள். ஆனால் இவர்கள் எவ்வளவு தவறான விவரத்தை, புள்ளிவிவரத்தை இந்த சுவரொட்டிகளிலே தந்திருக்கிறார்கள். கேரளாவிற்குப் போயிருக்கிறது என்று சொன்னால், 45 லட்சம் டன் அரிசி கேரளாவிற்குத் தேவையில்லை என்கிற நிலைமையில், கேரளாவிலிருந்து வெளிநாட்டிற்குக் கொடுத்திருக்கிறார்கள், மத்திய அரசு அதற்கு உடந்தையாக இருந்திருக்கிறது. அவர்களுக்குத் துணையாக இருந்திருக்கிறது. அதுதான் அப்படிப் போயிருக்கிறது என்கிற ஒரு கணக்கை மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள்

(முற்பகல் 11-20)

மிகத் தெளிவாக இங்கே சுட்டிக்காட்டினார். இப்படி ஒரு சுவரொட்டி இருக்கிறது என்று சொன்னால், இந்த அரசு அதற்காக என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? நாவலர் அவர்கள் நடவடிக்கை எடுக்கமாட்டார்கள். நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன், 'அட்லீஸ்ட்' நோட்டீசாவது கொடுத்து . . .

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த நாடு நெடுஞ்செழியன் என்ன புள்ளிவிவரம் சொல்கிறான் என்றுதான் கவனித்துக் கொண்டிருக்கிறதே தவிர, மற்றவர்களுடைய புள்ளி விவரங்களில் கவனம் செலுத்தவில்லை. "பயனில் சொல் பாராட்டுவானை மகனெனல் மக்கட் பதடி எனல் . . ." என்று இதை விட்டுவிட்டுச் செல்ல வேண்டிய நிலைதான்: இதற்கு நடவடிக்கை தேவையில்லை.

திரு. எஸ். ஆர். இராதா: நாவலர் அவர்கள் என்னுடைய விவாதத்தையே முடித்து விட்டார்கள் என்று மிகுந்த கவலைப்படுகிறேன். நாவலர் அவர்களுடைய புள்ளிவிவரத்தை நாடு எப்படி நம்பிக்கொண்டிருக்கிறதோ அதைப் போல் நானும் நம்பிக்கொண்டிருக்கிறேன். ஆனால் இப்படிப்பட்ட ஒரு நிலைமை வருகிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல் தமிழகத்திற்கு அரிசி வேண்டுமென்று நாம் கேட்கிற நேரத்தில், தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கிறவர்கள் கேட்கிறார்கள் என்ற நிலையில் இந்தியாவை ஆண்டு கொண்டிருக்கிற இந்திரா அவர்கள் கொஞ்சம் தெளிவாக நிலைமையை என்னவென்று கேட்டுக் கொண்டு சொல்லியிருக்கலாம். ஒரே ஒரு வார்த்தை போகிற போக்கில் சொல்லிவிட்டார்கள் சரியான வினியோகம் இல்லையென்று. இந்த ஒரு வார்த்தைதான் வெளியே வருகிறதே தவிர, குறிப்பிட்டுக் கூறி இந்த முறையிலே வினியோகத்திலே இந்த இடத்தில் தவறு இருக்கிறது, இந்த வினியோகம் இந்த அரசாலே செய்ய முடியவில்லை, அப்படி முடியாத அரசு இருக்கலாமா என்ற கேள்வியைக் கேட்டால், நான் திருமதி இந்திரா அவர்கள்மீது வைத்திருக்கிற மரியாதையை இன்னும் கொஞ்சம் அதிகமாக உயர்த்தியிருப்பேன். ஆனால் அவர்கள் அப்படிச் சொல்லவில்லை. ஏதோ போகிற போக்கில் சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள். நான் நினைக்கிறேன், இந்த சுவரொட்டியின் புள்ளிவிவரம் கொடுத்த மேதைகள் அவர்களிடம் சொல்லியிருப்பார்களோ என்னவோ? அவர்களுடைய வார்த்தைகளை வைத்துக்கொண்டு வினியோகம் சரியல்லவென்று சொன்னால், தைரியமாக இந்த மன்றத்தில் சொல்வேன், இந்தியாவிலேயே எந்த மாநிலத்தையும்விட சீரான வினியோகம் தமிழகத்திலேதான் நடைபெறுகிறது



என்று ஆதாரத்தோடு தெளிவாகத் தெரிவிப்பதற்குக் காத்துக்கொண்டிருக்கிறேன். அந்த அளவுக்கு ஒரு கட்டுப்பாட்டுடன், மக்களுக்கு அரிசி மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் தருகிற அளவுக்கு எந்த மாநிலமும் இல்லையென்பதைமட்டும் நான் தைரியமாகச் சொல்கிறேன். ஆனால் திருமதி இந்திரா சொல்கிறார். அவர்களே சொல்லிவிட்டால், பல பேருக்கு அதிர்ச்சி ஏற்படுகிறது. "சொல்லக்கூடாதவர்களே சொல்லிவிட்டார்கள், இவர்களையா நீங்கள் பேசுகிறீர்கள்?" என்று கேட்கிறவர்களை நான் பார்க்கிறேன். நேற்று முன்தினம் கூட ஒரு நண்பர் வேகமாகக் கேட்டார்கள். நீங்கள் மத்திய அரசை அரிசி கேட்டு சைக்கிள் ஊர்வலம் நடத்துகிற நேரத்தில், திருமதி இந்திராவைத் தாக்கவில்லையா என்று. நாங்கள் சைக்கிள் பேரணி நடத்தினோம். மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுவதற்காக, மத்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டும் என்பதற்காக சென்னை மாநகரத்தில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில், சைக்கிள் ஊர்வலங்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தாலே நடத்தப்பட்டன. சென்னை ஊர்வலத்திலே மட்டும் தமிழக வரலாற்றையே திருப்புகிற அளவுக்கு இதுவரை சென்னை மாநகரத்தில் ஊர்வலம் இதுமாதிரி நடக்கவில்லை என்று சாதாரண மக்கள் சொல்கிற அளவுக்கு எழுச்சி மிக்க ஊர்வலம் 12 வயது இளைஞர் முதல் 45 வயது இளைஞர்கள் வரை எழுச்சியோடு கோஷம் போட்டுச் செல்கிறார்கள் என்று சொன்னால், நான் எண்ணிப் பார்க்கிறேன், கிழவர்கள் என்று சொல்கிறார்கள், 15 நபர்கள்தான் அப்படி, மற்றவர்கள் அந்த வரிசையில் வருகிறார்களே அத்தனை பேரும் இளைஞர்கள், எதிர்காலத்தை நம்பிக் கொண்டிருக்கிற இளைஞர்கள், எதிர்காலத்திற்காக வாழ்ந்து கொண்டிருக்கிற இளைஞர்கள். அவர்களை மட்டும் சைக்கிள் ஊர்வலத்தை டெல்லிக்குக் கொண்டு போங்கள் என்று சொல்லியிருந்தால், போராட்டம் அல்ல, டெல்லி சர்க்காரையே நடுங்க வைக்கிற அளவுக்கு அந்த ஊர்வலத்தை என்னால் நடத்த முடியும். ஆனால் இந்த ஊர்வலத்தைப் பார்த்தவர்கள் மத்திய அரசுக்குச் சொல்ல வேண்டிய நியாயமான காரணத்தைச் சொல்லியிருக்கலாம். எவ்வளவு பேர் போனார்கள், அதிலே இவ்வளவு இளைஞர்கள், ஏழை எளியவர்கள்தான் அதிகம். எந்தப் பணக்காரரையும் பார்க்க முடியவில்லை. மிட்டாமிராசுகள் இல்லை. அத்தனை பேரும் வாடகை சைக்கிளில் வந்து, அல்லது சொந்த சைக்கிள்களில் வந்து, அவர்களாகவே கோஷம் போட்டார்களே தவிர, யாரும் கோஷம் போட வைக்கவில்லை என்று மத்திய சர்க்காருக்கு திருமதி இந்திரா காந்திக்கு சொல்லியிருந்தால், திருமதி இந்திராவுக்குக் கருணையாவது வந்திருக்கும். சைக்கிள் ஊர்வலத்தில் இருந்த எழுச்சியையெல்லாம் விட்டுவிட்டு, இந்திரா காந்தியைப் போய் என்ன பேசினார்கள். எப்படி தாக்கினார்கள் என்று ஏதோ பெரிய அளவுக்குத் தாக்கி கேவலமாகப் பேசிவிட்டதைப் போல்

சொல்கிறார்கள். நான் காங்கிரஸ் நண்பர்களுக்குச் சொல்கிறேன். திருமதி இந்திரா காந்தியைத் தாக்கியவர்கள் யார்? வாய்ப்பு கிடைத்தபோது தி.மு.க. அதிகமாகத் தாக்கியது. இனிமேல் தமிழகத்தில் யாரும் தாக்க முடியாத அளவுக்குப் பேச்சு பேசியாகிவிட்டது. காங்கிரசில் இருப்பவர்கள் தாக்கவில்லையா? திரு. திண்டிவனம் இராமமூர்த்தி பேசவில்லையா, திரு. தாஸ் பேசவில்லையா? வாய்ப்பு கிடைக்கும்போது பேசுகிறார்கள், இப்போது வாய்ப்பு கிடைக்கவில்லை, பேசவில்லை, அவ்வளவுதான். திரு. தாஸ் அவர்களுக்குச் சொல்கிறேன். எல்லோரும் வாய்ப்பு கிடைத்தால் தாக்குகிறார்கள். இன்றைக்கு நாங்கள் தாக்குகிறோம், நேற்று தி.மு.க.-வினர் தாக்கினார்கள். அதற்கு முன்பு காமராஜர்கூட தாக்கினார். அவர் எதிர்க்கிற காலத்தில், திரு. திண்டிவனம் இராமமூர்த்தி, திரு. தாஸ் போன்றவர்கள் தாக்கினார்கள். ஆக தாக்குகிற நோக்கத்தைப் பார்க்கவேண்டுமே தவிர, ஏன் தாக்குகிறார்கள் என்பது அல்ல. நான் இன்னும் சொல்வேன், தாக்குவதற்காக அந்த சைக்கிள் ஊர்வலம் என்று சொன்னால், நிலைமைகள் வேறுவிதமாக ஆகியிருக்கும். ஆனால் எங்களுடைய கட்சியில் கட்டுப்பாடுகளை விதித்தார்கள். இன்ன விதமாகத்தான் கோஷங்களை எழுப்ப வேண்டும் அதற்கு அதிகமாகச் சொல்லக்கூடாது என்று கட்டுப்பாடான ஊர்வலத்தை நடத்தியதற்குப் பின்னாலே மத்திய சர்க்காருக்குச் சொல்லி யிருந்தால், மத்திய சர்க்கார் கொஞ்சமாவது செவி சாய்த்திருந்தால் அது வாய்ப்பாக இருந்திருக்கும். அந்த வாய்ப்பை இழந்துவிட்டு, அந்த சைக்கிள் ஊர்வலத்தைப் பார்த்து ஒரு சுவரொட்டி ஒட்டி வைத்தார்கள். "அரிசி கேட்க வேண்டிய நேரத்தில் ஆசிய விளையாட்டு பார்க்கிறார்கள். மக்கள் ஆலாய்ப் பறக்கிற நேரத்தில் உங்களுக்கு சைக்கிள் விளையாட்டு தேவையா?" என்று ஒட்டினார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால், சைக்கிள் ஊர்வலத்திலே நம்முடைய நண்பர்கள் அருமையாகச் சொன்னார்கள், "கூவத்திலே கொள்ளையடித்தவர்கள் சைக்கிளில் வருகிறார்கள், வீராணத்திலே கொள்ளை யடித்தவர்கள் சென்னையிலே உலா வருகிறார்கள், மஸ்டர் ரோல் ஊழல் செய்தவர்கள் சைக்கிளிலே வருகிறார்கள்" என்று சொன்னார்கள். அப்படிச் சொன்னதால் ஏற்பட்ட கோபம் காரணமாக ஆசிய விளையாட்டு பார்க்கலாமா என்று கேட்டிருக்கிறார்கள். எங்கள் தலைவர் புரட்சித் தலைவர் ஆசிய விளையாட்டு நடக்கும் நேரத்தில் அரிசியைக் கேட்கத்தான் அங்கே போனாரே என்று கேட்டிருக்கிறார்கள். எங்கள் தலைவர் புரட்சித் தலைவர் ஆசிய விளையாட்டைத் தாக்கியதைப்போல, நாங்களும் பேசியிருந்தால், மத்திய அரசு யோசித்திருக்கும்.





திரு. ப. மாணிக்கம்: தலைவர் அவர்களே, ஆசிய விளையாட்டுபற்றி கம்யூனிஸ்ட் கட்சி என்ன சொல்லியிருக்கிறது என்று உறுப்பினர் பார்த்தாரா என்று தெரியவில்லை. ஆகவே விபரம் தெரியாமல் பேசுகிறார். விபரத்தைத் தெரிந்துகொண்டு பேசினால் நல்லது.

திரு. எஸ். ஆர் இராதா: திரு. மாணிக்கம் சொல்வதைப் பார்த்தால், ஆசிய விளையாட்டை ஆதரிப்பது போல் தெரிகிறது. ஆசிய விளையாட்டு நடைபெற பல்வேறு காரணங்கள் சொன்னார்கள். அதற்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள். அந்த அடிப்படையிலே சொன்னேனே தவிர, அவர்கள் சொன்ன நியாயங்களையோ காரணங்களையோ மறுத்துச் சொல்லவில்லை. காரணங்களைச் சொல்லமுடியாத வேகத்தில், அவசரத்தில் பேசுகிறேனே தவிர, அவர்கள் என்னென்ன காரணங்களைச் சொல்லி தாக்கினார்களோ, அதை நான் விமரிசிக்க வரவில்லை. பல்வேறு காரணங்கள் சொல்லி, அந்த விளையாட்டுபற்றிய நிலைமையைச் சொன்னேன். ஒரு நிலைமையை மத்திய சர்க்காரில் இருக்கிற மந்திரிகளுக்குத் தெரிவிக்க, எம்.பி.-க்கள் கையெழுத்து போட வேண்டுமென்று சொன்னால், நம்மிலே அண்ணா தி.மு.க., தி.மு.க. என்ற பாகுபாட்டால், வேறுபாட்டால் "அரிசியே வேண்டாம். நாங்கள் தி.மு.க. உறுப்பினர்கள் கையெழுத்து போட மாட்டோம்" என்று சொன்னால், காஷ்மீர் எம்.பி.-க்கள் கேலி செய்கிறார்கள். கேரளாவில் அரிசி வேண்டுமென்று சொன்னால், அத்தனை எம்.பி.-க்களும் கையெழுத்து போடுகிறார்கள்.

திரு. நீலநாராயணன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அரிசி விஷயத்தில் டெல்லி பாராளுமன்ற எம்.பி.-க்கள் கையெழுத்து கேட்கப்பட்டு, அந்த மனுவில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கையெழுத்து போடவில்லை என்ற பொருள்படக்கூடிய முறையில் இப்போது உறுப்பினர் திரு. இராதா பேசிக் கொண்டிருக்கிறார். இந்த மனு கொடுக்கப் படுவதற்கு முன்பே, அங்கேயிருக்கிற இரண்டு சபைகளுடைய நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் திரு. முரசொலி மாறன் அவர்களையோ, பாராளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் திரு. சி. டி. தண்டபாணியையோ, "இப்படி ஒரு மனு கொடுக்கப் போகிறோம், ஒட்டுமொத்தமாக தமிழகத்தில் இருக்கிற எல்லா எம்.பி.-யும் கையெழுத்திட்டுக் கொடுத்தால் நலமாக இருக்கும்" என்று கேட்டார்களா, அப்படி அவர்கள் கேட்டு இவர்கள் கையெழுத்துப் போட மறுத்தார்களா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஆனால் எனக்குக் கிடைத்த தகவல் அவர்கள் கேட்கவில்லை என்பதுதான்.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்கள் பெரியவர், மரியாதைக்குரியவர். மிக நன்றாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஆனால் இது இரண்டு பேரையும் விசாரிக்கவேண்டிய ஒரு

(முற்பகல் 11-30)

பெருண்மையாகும். திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கேட்டார்களா, அவர்கள் மறுத்தார்களா என்றால், எனக்குத் தெரிந்த தகவல், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினவர்களைப் பார்த்து கையெழுத்துப் போடக் கேட்டிருக்கிறார்கள். சென்ட்ரல் ஹாலில் பலமுறை உட்கார்ந்து அவர்களிடம் பேசியிருக்கிறார்கள். பல தி.மு.க. எம்.பி.-க்கள் தலைமையிடத்தில் கேட்டுத்தான் கையெழுத்துப் போடுவோம் என்று சொல்லி, பின்னர் அவர்கள் கையெழுத்துப் போட தயாராக இல்லை என்று சொல்லும் நிலை வந்த பிறகு, அண்ணா தி.மு.க. எம்.பி.-க்கள் தாங்களே கையெழுத்துப் போட்டு அந்த மனுவைக் கொண்டு போய் கொடுத்துவிட்டார்கள். இதில் நான் பாகுபாடு காட்டியோ வேறுபாடு காட்டியோ பேசவில்லை.

**திரு. நீலநாராயணன்:** உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும் என்று தான் நான் மீண்டும் குறுக்கிடுகிறேன். அண்ணா தி.மு.க.-வைச் சார்ந்தவர்கள் தி.மு.க.-வைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரைப் பார்த்துக் கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் பேசும் போது, "தமிழ்நாட்டினுடைய ஒற்றுமையை எடுத்துக் காட்டுகிற வகையில் அங்கே நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயல் அமையவில்லை" என்று குறிப்பிட்டார். ஆனால் உண்மை என்னவென்றால், அந்த முறையில் கொடுக்கப்பட்ட மனுவே அமையவில்லை. இங்கேயிருக்கிற அரசியல் காழ்ப்புணர்ச்சி அந்த மனுவில் இடம் பெற்றிருந்தது. அந்த மனுவில் இருந்த ஒரு சில பாராக்கள், ஒரு சில வாசகங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தால் ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமையில் அமைந்திருந்த காரணத்தால், ஒரே ஒரு தோழர் திரு. அர்ச்சுனன், எம்.பி., அவர்கள் மட்டுமே கையெழுத்துப் போட மறுத்திருக்கிறார். இது கூட பின்னர்தான் தெரியவந்தது. மனு கொடுப்பதற்கு முன்பாக அண்ணா தி.மு.க.-வைச் சார்ந்தவர்கள் தி.மு.க.-வின் தலைவர்களைச் சந்தித்ததோ அல்லது இப்படி ஒரு மனுவைத் தயாரித்திருக்கிறோம், அதில் கையெழுத்துப் போடுங்கள் என்று கேட்டதோ இடையாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்கள் இப்படி பேசியிருக்கக் கூடாது என்றுதான் நான் கருதுகிறேன். முதலில் "யார் கேட்டார்கள்" என்று கேட்டுவிட்டு, அதற்குப் பின்னாலே



"கேட்டார்கள், அதில் சில குறைபாடுகள் இருந்தன, அதன் காரணமாகக் கையெழுத்துப் போடவில்லை" என்று சொன்னால், உண்மை என்ன என்பது தெளிவாகிறது. இதற்காக நான் அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அண்ணா தி.மு.க. எம்.பி.-க்கள் கேட்டார்கள் என்று பதிவு செய்ததற்காக நான் அவருக்கு மீண்டும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். எழுதப்பட்ட வாசகங்களில் தவறு இருந்தது அல்லது சொல்லப்பட்ட விஷயங்களில் மாற்றம் தேவைப்பட்டது என்ற கருத்திருந்தால், அவர்கள் என்ன செய்திருக்க வேண்டும்? அரிசித் தட்டுப்பாட்டு நிலையை உணர்ந்து, தமிழக மக்களின் நிலைமையை உணர்ந்து எதிர்க் கட்சியாக உள்ள திராவிட முன்னேற்றக் கழகம் என்ன செய்திருக்க வேண்டும்? இதை அன்றைக்கே பகிரங்கப்படுத்திவிட்டு, இப்படிப்பட்ட வாசகம் அந்த மனுவில் இருப்பதால் நாங்கள் கையெழுத்துப் போடவில்லை என்றாலும், தமிழகத்திற்கு மத்திய அரசு அரிசி தர வேண்டும் என்று வற்புறுத்தியிருந்தால், அது சரியாக இருந்திருக்கும்...

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்தப் பக்கத்தில் உட்கார்ந்திருக்கிற காரணத்தால், எதிர் அவையிலிருந்து வருகிற சத்தம்தான் அதிகமாகக் கேட்கிறது. எனவே நம் அவையின் அறைக் கதவுகளை மூடினால் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(மேலவையின் கதவுகள் மூடப்பட்டன.)

**திரு. எஸ். ஆர். இராதா:** அந்த அளவுக்குச் சொல்லியிருந்தால், தமிழகத்தில் நிலவி வரும் அரிசித் தட்டுப்பாட்டிக்கு நாம் ஒரு நடவடிக்கையை முனைப்போடு எடுத்திருக்கிறோம் என்பதையாவது ஏற்றுக்கொள்ள முடியும். எப்படியோ மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்கள் இந்த உணர்வை இங்கே வெளிப்படுத்தியதற்காக நான் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பொதுப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், அண்ணா தி.மு.க.-வும் தி.மு.க.-வும் மிகவும் முனைப்போடு இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான், இங்கேயுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. தாஸ், திரு. முனுசாமி போன்றவர்கள் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருப்பார்கள். இல்லையென்றால் அவர்கள் என்ன நினைத்துக்கொள்கிறார்கள் என்றால், "இவர்கள் இரண்டு பேரும் அடித்துக் கொள்கிறார்கள். இதில் நாம் புகுந்து விளையாடலாம்; அரிசியே தர வேண்டாம்; மக்கள் பட்டினியாகக் கிடக்கட்டும். கேரளாவுக்கு மட்டும் அரிசி கொடுப்போம். யார் நம் கட்சிக்கு ஓட்டுப் போட்டார்களோ அவர்களுக்கு மட்டும் நாம் அரிசி கொடுத்தால் போதும்" என்று நினைத்துக்கொள்கிறார்கள். கேரளத்தைப் பொறுத்த

வரையில், அது காங்கிரஸ் ஆளுகிற மாநிலமாக இருந்தாலும், இந்தப் பிரச்சினையில் கம்யூனிஸ்ட் கட்சியும் ஒரே அணியில் முன்வந்து நிற்கிறது. அதுதான் மாநிலத்திற்கு நல்லதாக இருக்கிறது. அந்த நிலைமை தமிழகத்தில் இன்றையதினம் இல்லை. இதற்குக் காரணம் இங்கே இருக்கிற சில அரசியல் வாதிகள்.—எல்லா அரசியல்வாதிகளையும் நான் இப்படிச் சொல்ல மாட்டேன். —அரசியல் இலாபம் சம்பாதிக்க வேண்டும் என்று எண்ணுகிற ஒரு சிலர், அரசியல் என்றால் அது தனக்காகத்தான் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு அரசியல் ஆதாயம் தேடுவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ள ஒரு சிலர் அரசியலில் இன்னும் குழப்பத்தைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாகத்தான் தமிழகத்தின் நிலைமையை நாம் மத்திய அரசுக்கு சரியாக எடுத்துச் சொல்ல முடியாத நிலை உருவாகியது என்பதைப் பணிவன்போடு இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் ஒன்றைத் தெளிவாகக் குறிப்பிட்டார். அதிலும் அவர் அதிகமாகப் பெட்ரோலைப் பற்றியே பேசுவதில் நேரத்தைச் செலவழித்துவிட்டார்கள். அதில்கூட இங்கே இருக்கிற வியாபாரிகள் என்னென்ன கலப்படங்களைச் செய்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. இராமலிங்கம் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அரிசியில் கல்லைக் கலக்குகிறார்கள். பேரிச்சம் பழத்தில் வெல்லத்தைக் கலக்குகிறார்கள் என்று இப்படி எந்த எந்தப் பொருளில் எதை எதையெல்லாம் கலப்படம் செய்கிறார்கள் இந்த வியாபாரிகள் என்று பட்டியலே போட்டு வைத்திருக்கிறார். இத்தனையும் செய்பவர்கள் தமிழகத்தில் உள்ள வியாபாரிகள்தான். நேற்றையதினம்கூட கலப்படத்தைத் தடுக்க வேண்டுமென்றால் சட்டம் போட்டுத்தான் தடுக்க வேண்டும் என்று இங்கே பேசினோம். இதைச் சொல்லும்போது, தமிழகத்தில் உள்ள எல்லா வியாபாரிகளுமே கலப்படம் செய்கிறார்கள் என்று நான் சொல்ல முன்வரவில்லை. சிலர் அப்படிச் செய்கிறார்கள். சில நல்ல வியாபாரிகளும் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட முனைப்போடு நாம் உணவுத் துறையில் செயல்படவில்லை என்றால், தமிழகம் சில கொள்ளைக்காரர்களின் கையிலே சிக்கிக் கொண்டு, அதன் காரணமாக ஏழை எளிய மக்கள் திண்டாடுகிற நிலைமை ஏற்பட்டுவிடும் என்று சொல்லி, மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் மணி அடிப்பதற்கு முன்னாலே என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.





* Thirumathi MANDAKINI KRISHNAMURTHI: Hon. Deputy Chairman, Sir, while going through this Policy Note on the food situation in Tamil Nadu and after constantly reading the papers and listening to different opinions, one particular question came to my mind. We are talking about so many all-India Boards like the Pollution Prevention Board, the River Waters Board, etc. Then, why not we think in terms of an all-India Food Board in which the Chairmen of all the Civil Supplies Corporations are taken as members? If that is done, that Board will be in a position to give a clear picture about the food situation of a particular State.

Sir, while we are now thinking about the scarcity conditions in our own State, I am remainded of how, with one voice, we all felt so much for the Government of India when the United States of America caused worry about the working of the Tarapur plant by not supplying uranium. At that time, we all felt why several conditions and constraints were being placed on the working of a scientific venture. With the same one voice, we now feel why conditions are laid down by the Government of India, on the supply of foodgrains to Tamil Nadu, especially at a time of emergency like this when our State is passing through drought conditions. We are faced with all sorts of conditions. They say, 'You have not given rice at such and such a time; so, we are not releasing the quota of foodgrains'. We all feel that this should not have been done at this time when we are facing drought conditions.

Sir, I know something about this subject, because I have been a Member of the State level Village Shops Committee. Some months back, during the meetings of that Committe our Food Secretary, who had all the statistics at his finger-tips, had given a clear picture about the food situation. Even then, he was able to inform us of the difficult situation that our State would be facing if monsoon failed. I also found that the representatives of the Government of India were always tight-lipped. They were not coming out with indications of any concrete help for us to get over this drought situation. Sir, I am an Independent Member and I do not belong to any political Party. But, when the State is going through such a serious drought, I think that conditions should not be laid down by the Government of India in the matter

of supply of foodgrains. Let us remind them of how we felt when the Tarapur plant suffered. Let us tell them that we are having the same feeling when we are faced with the present situation in our State.

Now, Sir, with the limited resources at our command, what best should be done is being done. I remember that, when Thiru Mohan Dharia introduced the Village Shop system on a socialistic pattern it was Tamil Nadu, which accepted it and opened 4,083 village shops, which stood second or third in the whole of India in the number of shops opened. It is a record that any State

(முற்பகல் 11-40)

could be proud of. In about four districts, we are having direct village shops and in other districts, we have shops through Co-operative organisation. If these shops were not there particularly during drought period, the people would have been put to great hardship. When we were going round the State in connection with the Select Committee on Co-operative Societies Bill, I used to take some time on my own to go and see some of these rural village shops, because, being a student of economics, I wanted to know about their working. I was very much impressed about them, because in the remotest villages, these village shops had come to the aid of the people who, otherwise, would have been denied the supply of essential articles, especially in times of emergency. We hear people talk so much about corruption and all that. This, has become a great phenomenon, especially when people suffer from poverty. I would like to suggest that at the time of recruitment of personnel for these shops, care should be taken to see that persons not connected with the private shops nearby should be recruited. When such personnel are able to have contact with the private shop-keepers nearby, malpractices take place. We should see that they do not have any link or any contact with the nearby private shops. This happens only in such cases where these people. I mean lower rank, have some contact. But by and large the system is functioning quite successfully satisfactorily.

Talking about the scarcity, I want to say that whenever scarcity occurs, the charitable institutions, like ours; feel it very much because we were not able to draw our quota of rice for





the month of March. We are denied the quota as there is no rice in the godowns to give to us. We do not grumble even though it is difficult for us to buy rice in the open market at a greater cost. As voluntary organisations, we are having buffer heart to tolerate the suffering that comes. Whenever a policy is announced, the Government godowns treat us a affiluent. We should also be treated as poor institutions and helped. When the distribution is done, we should be treated in a different manner from the other commercial institutions like hotels, in drawink the requirements from the wholesalers and Government godowns. The School co-operative store helped the schools for supply of note-books at concessional rate and also came to our aid by supplying rice though at a higher rate, when godowns could not supply. We heard the Industries Minister say that for repairs 20 bags of cement, on production of house tax receipt, could be given. I plead that school co-operatives can issue cement for repair o f school buildings. I pray and hope the sufferings of the people would be over soon. At the same time, I would like to say that the Co-operatives, especially these Co-operatives that are functioning in dicerent schools, came to the aid of the institution because, through these Co-operatives, we were at least able, though the price was a little higher by Re. 1 or Re. 0/50, to get rice in this period of emergency. I would appeal that we, the voluntary organisations, should be treated differently and that we should be placed in a higher and more advantageous position in the matter of release of food articles. There should be more co-ordination between the Civil Supplies Corporation and the Civil Supplies Department so that the various instructions may be carried out properly at all levels. In this connection, I again would like to appeal to the Civil Supplies Department to allow these School Co-operatives to draw cement. The other day, the Hon. the Minister for Industries was saying that 20 bags of cement could be given on the mere production of the Corporation House Tax receipt. If these schools are permitted to draw this quantity of 20 bags, or whatever their requirements of cement are, through these School Co-operatives during the holidays, the schools will be able to carry out small repairs and similar things. I would like the Civil Supplies Department to think about issuing such permits to these School Co-operatives where there is no chance of any kind of mismanagement. I would like to compliment the School Co-operatives who are doing their job wonderfully well.

(Thirumathi Mandakini Krishnamurthi) [1983 ஏப்ரல் 8

With these words, I would like to tell the Hon. the Food Minister, who has Finance also at his heart, that he is putting up a brave front in spite of difficulties. Let us wish that the future will be bright and that rains would help us in time to get over our difficulties.

Thank you.

திரு. ப. மாணிக்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழகத்திலே உணவு நிலைமைபற்றி அரசு அறிவித்துள்ள கொள்கை விளக்க அறிக்கையில் பல்வேறு விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. குறுவையைப் பொறுத்தவரையில், தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாயம் செய்திருந்த ஏக்கர் குறைவாக இருந்தபோதிலும், விளைச்சல் மிக அதிகமாக இருந்தது. அந்த நேரத்தில் அரசு அதிகமான கொள்முதல் செய்திருக்குமானால், நல்ல பலன் கண்டிருக்க முடியும். அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய விவர அறிக்கையில் இந்த விளைச்சலில் இரண்டு இலட்சம் டன்னுக்குள் கொள்முதல் செய்ய விரும்புவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அதே நேரத்தில் தஞ்சை மாவட்டத்தில் சிவில் சப்ளைஸ் அதிகாரிகள் நேரிடையாக விவசாயிகளிடம் கொள்முதல் செய்வதற்காக, 300 இடங்களுக்கு மேல் ஏற்பாடு செய்திருந்த போதிலும், அநேகமாக வியாபாரிகள் மூலமாகவே கொள்முதல் நடந்தது. விவசாயிகள் விளைச்சலை நேரிடையாகக் கொள்முதல் நிலையங்களுக்குக் கொண்டு வந்தபோது சாப்பதம் என்றும், பதர் என்றும் தள்ளுபடி செய்து பல சிரமங்களை விவசாயிகளுக்குக் கொடுத்த காரணத்தாலே, விவசாயிகளிடத்திலே உற்சாகம் இல்லாமல் போய்விட்டது. இந்தப் பிரச்சினையை தஞ்சை மாவட்டத்திலே மாவட்ட ஆட்சியாளரிடம் எழுப்பி பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் நடத்தியிருக்கிறார்கள். நானும்கூட முறையிடு செய்திருக்கிறேன். நேரடியாகக் கொள்முதல் திறம்படச் செய்திருந்தால், நிச்சயமாக இன்னும் அதிகமாகக் கொள்முதல் செய்திருக்க முடியும், நம்மிடத்திலே கையிருப்பு அதிகமாக இருக்கும். கையிருப்பு இப்போதுள்ள நிலைமையைச் சமாளிக்க போதிய அளவு இருக்கும் என்று நான் சொல்லவில்லை. மொத்த விளைச்சல் 55 இலட்சம் டன்னில் 25 இலட்சம் டன் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது. மொத்த விளைச்சல் குறைவாக இருந்தாலும், விவசாயிகள் அக்கறை செலுத்தி உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறார்கள். இதுபற்றி முன்பே கூட இந்த அவையிலே கூறியிருக்கிறேன். குறிப்பாக நெற் பயிர் பால் வைக்கும் நேரத்தில் தண்ணீர் வேண்டும். அப்போது தண்ணீர் இல்லாமல் போய்விட்டது சம்பா பயிருக்கு. விவசாயிகள் அதிகச் செலவு செய்து எப்படியும் தங்களுடைய விளைச்சலைக் காப்பாற்றி நெல்லைப் பெற வேண்டும் என்று



1983 ஏப்ரல் 8] [திரு. ப. மாணிக்கம்]

கடும் முயற்சி எடுத்தார்கள். இப்படிப்பட்ட விவசாயிகளுக்கு, நெல் உற்பத்தியாளர்களுக்குக் காட்டப்பட வேண்டிய பரிவு, சலுகை, காட்டப்படவில்லை. இப்போது கொள்கை அறிக்கையில், அவர்களுக்குக் கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டிருப்பது உண்மையிலே விவசாயிகளுக்குப் போய்ச் சேரவில்லை என்பதை விவரமாகச் சொல்லுகிறேன். குற்றச்சாட்டாகச் சொல்லுவதற்காக அல்ல. அரசு அறிக்கையிலே பார்க்கும்போது, ஒழுங்குபடுத்தப்பட்டு தரப் பட்டிருந்தபோதிலும், அங்கே ஸ்தலத்திலே சரிவர நடக்கவில்லை. அங்கே கோளாறு நடக்கின்றது. இந்தக் கோளாறு காரணமாக தஞ்சை மாவட்டத்திலே மிகப் பெரிய கூக்குரல் எழுப்பினார்கள். காரணம் வியாபாரிகள் மூலமாகச் சுலபமாக வாங்கிக்கொள்ள முடிகிறது என்ற ஏற்பாடு நடைமுறையில் தஞ்சை மாவட்டத்திலே நடந்து வருகிறது. தஞ்சை மாவட்டத்திலே திரும்பவும் அப்படிப்பட்ட நடைமுறை இருப்பதால்தான், விவசாயிகளிடம் மிகப் பெரிய அதிருப்தி தொடர்ந்து நிலவுகிறது. இல்லாவிட்டால் கொள்முதல் இன்னும் அதிகம் செய்ய முடியும். அப்படி அரசு முயற்சிக்க வேண்டும். ஆரம்பத்திலேயிருந்து அரசு போதிய அக்கறையோடு கொள்முதல் செய்திருந்தால், நிச்சயமாக அதிகமாகச் செய்திருக்க முடியும். இதையெல்லாம்

(முற்பகல் 11-50)

நான் சொல்வதற்குக் காரணம், நம்முடைய கையிருப்பை சிறிது அதிகப் படுத்தியிருக்கலாம் என்பது தவிர, மத்திய அரசு கொடுக்கத் தயங்குகிறது என்ற நிலைமையும் இருக்கிறது. அவர்களுடைய உணவுக் கொள்கையில், தமிழ் நாடு மாநிலத்தைப் பொறுத்து மட்டுமல்ல. பொதுவில் குறைபாடு இருக்கின்றது. அதனால் மக்களுக்குப் பொது விநியோகத்தில் உத்தரவாதத்தைத் தரக்கூடிய நிலையில் இல்லை. அந்த உணவுக் கொள்கையில் குறைபாடுகள் இருப்பதால்தான், தமிழ் நாட்டிற்கு அவர்கள் தருவதற்குத் தயங்குகிறார்கள். நம்முடைய அரசைப் பொறுத்தவரையில், அவர்கள் தருவார்கள் என்று நம்பி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் தகவலை நாம் இன்னும் நம்புகிறோம். இதைப்பற்றி நம்முடைய அறிக்கையிலே 9-வது பாராவிலே சொல்லியிருக்கிறார்கள். மறுபடியும் 10-வது பாராவிலே சொல்லியிருக்கிறார்கள். அப்படி நம்பிக்கை தெரிவிப்பதிலே தப்பு ஒன்றும் இல்லை. தமிழ் நாட்டிலே இன்றைக்கு பல்வேறு கிளர்ச்சிகள் ஏற்பட்டிருக்கின்றன. அந்தக் கிளர்ச்சிகள் எல்லாம் தமிழ் நாட்டிலே அரிசி அதிகமாகத் தேவை என்பதற்காகத்தான். இந்தக் கிளர்ச்சியினுடைய நோக்கம் எல்லாம், பலன் எல்லாம் அரிசி தேவை என்பதுதான். அரிசி கொள்முதலிலும் ஸ்டாக் வைப்பதிலும் கோளாறு இருக்கிறது. கொள்முதலிலே இப்படி ஒரு கோளாறு

[திரு. ப. மாணிக்கம்] [1983 ஏப்ரல் 8

இருக்கிறது. அடுத்த ஆண்டு மழை பெய்யும் என்று எதிர்பார்ப்பதாக இருக்கிறது. அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது என்பதல்ல. அது எல்லோருக்கும் தெரிந்திருக்கின்ற ஒன்று. அநேகமாக ஜூன் மாதத்திலிருந்து அக்டோபர் மாதம் வரை நெருக்கடி இருந்த நேரம். ஏனென்றால் அடுத்த அக்டோபர் மாதம்தான் அறுவடை வரும். இந்த நிலையிலேகூட வரக்கூடிய ஆண்டிலேயாவது விவசாயிகளுக்கு நாம் விலையைக் கூட்டித்தர வேண்டும். மத்திய அரசு தடுக்கிறது என்ற பிரச்சினை எழலாம். ஆனால் ஒரு இன்சென்டிவ் என்ற முறையிலே விலையைக் கூட்டித் தருவது நல்லது. சென்ற ஆண்டிலே அல்லது அதற்கு முந்திய ஆண்டிலேகூட திருச்சியிலே ஓபன் மார்க்கட்டிலே 65 கிலோ உள்ள மூட்டை ரூ. 100-க்கு போயிற்று. 55 கிலோ மூட்டை தஞ்சாவூரிலே 48 ரூபாய்க்குக்கூட போகவில்லை. ஒரு பத்து ரூபாய் கூட்டிக் கொடுங்கள் என்று கேட்டோம். அதற்கு "சாத்தியமில்லை" என்றார்கள். அதற்கு மத்திய அரசு மறுக்கிறது என்று சொன்னார்கள். இன்றைக்கு நெருக்கடி வந்த பிறகு, இந்த அரசு கூட்டிக் கொடுக்கிறது. எனவேதான், நெருக்கடி நேரத்திலே, கூட்டிக் கொடுத்து வருகிறது. அதிகமாகக் கொடுக்கிறது. அதில் தவறு இல்லை. அது சரியானது தான். ஆனால் விவசாயிகளிடத்திலே ஊக்கம் ஏற்படச் செய்வதற்கு தமிழகத்திலே நிச்சயமாக விலையை அதிகரித்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏதோ ஒரு வகையில், வண்டிச் சத்தம், போனஸ் என்று தருவது மிக மிக அவசியம். அடுத்த ஆண்டு நம்முடைய அரசு, இந்த ஆண்டு ஏற்பட்ட கொடிய அனுபவத்தை எச்சரிக்கையாகக் கொண்டு, கையிருப்பை அதிகமாக வைத்திருக்கவேண்டுமென்பதை ஒரு உறுதியான கொள்கையாக வைத்திருக்க வேண்டும். விளைந்திருக்கிறது, பார்த்துக் கொள்வோம் என்றுதான் இருக்கிறோம். எப்போதுமே பொருளாதாரச் சிந்தனை பலவீனமாக இருக்கிறது. எங்களுடைய பொருளாதாரச் சிந்தனை கட்சியினுடைய சிந்தனை என்று கருத வேண்டாம். நடைமுறையிலே பார்த்தால் இப்படிச் சொல்வதாகக் கருத வேண்டாம். நடைமுறையில் செய்யவேண்டும். இது ஒரு தனி கொள்கை. அது கம்யூனிஸ்ட் கட்சியாகவோ மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியாகவோ, அந்தப் பொருளாதாரக் கொள்கையை ஏற்காத அரசாகவோ கூட இருக்கலாம். ஆனால் பொது வினியோக கையிருப்பு விஷயத்திலே உஷாராக இருக்க வேண்டும். பொது வினியோக முறையைக் காப்பாற்ற வேண்டும் என்று சொன்னால், உஷார் தன்மையில் கையிருப்புகள் வைத்திருக்கவேண்டும். நம்முடைய அரசுக்கு கடந்த காலத்தில் ஓபன் மார்க்கெட்டில் எப்படியும் அரிசி கிடைத்தது. ஊனங்கள் பார்த்துக் கொள்வார்கள் என்ற முறையிலே சென்றுவிட்டிருந்தாலும்கூட, இந்தக் கையிருப்பு குறைவாக இருக்கிறது, எனவே இந்தக் கொள்கையை வரக்கூடிய காலத்திலே மாற்றிக்கொள்ள வேண்டும். எப்போதும் கூடுதல் கையிருப்பு



1983 ஏப்ரல் 8] [திரு. ப. மாணிக்கம்]

இருப்பதிலே ஒன்றும் தவறு இல்லை. அதனாலே தமிழகம் கெட்டுவிடாது. பொருளாதாரம் சீர்குலைந்துவிடாது. நெல் மார்க்கெட்டு, அரிசி மார்க்கெட்டு கூட்டுறவாக இருக்கும். மக்களுடைய வாழ்க்கையிலே அவர்களுக்கும் திருப்தி ஏற்பட முடியும். ஆகவே கையிருப்பு விஷயத்திலே வரக்கூடிய காலத்திலேகூட உபரி கையிருப்பு என்ற கொள்கையை மேற்கொள்ள வேண்டும். இரண்டாவது, கையிருப்பைத் தேக்கி வைப்பதிலே இன்றைக்கு பல நிறுவனங்களை புதியதாகவும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். பல்வேறு கிடங்குகள் நிறுவனம் என்று தனியாக அமைத்திருக்கிறார்கள். ஆனால் நடைமுறையிலே விதிகள் எப்படி இருக்கின்றன என்று சொன்னால், நஞ்சையில் கொள்முதல் செய்து அரிசி ஸ்டாக் செய்து, அது தர்மபுரிக்குச் சென்று, தர்மபுரியிலிருந்து வேறு இடத்திற்கு, உதாரணமாக மதுரைக்கு அனுப்பும்போது, டிரையேஜ் என்று போட்டு ஒரு பர்சென்ட் அனுமதிக்கப்படுகிறது. உண்மையிலேயே நஷ்டம் வரும். இந்த ஒரு சதம் இல்லாமல் இல்லை. நான் சொல்வது தவறாக இருந்தால், திருத்திக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். விசாரித்துத் தெரிந்த தகவலைத்தான் சொல்கிறேன். ஒரு கிடங்கிலிருந்து இன்னொரு கிடங்கிற்குப் போகும்போது, ஒரு பர்சென்ட் குறைகிறது. இப்படி மூன்று கிடங்குகளுக்குப் போனால் மூன்று சதவிகிதம் குறைகிறது என்கிறார்கள். இந்தக் கணக்கு சரி கட்டுகின்ற கணக்கு. கணக்குப் பார்க்கிறது என்று தமிழ் நாட்டில் பழமொழி இருக்கிறது. கணக்குப் பண்ணுவது என்று மதுரையில் இருக்கிறது. எல்லா விஷயத்திலும் கணக்குப் பண்ணி முடிப்பார் என்று சொல்வார்கள். அப்படி என்றால் சரி கட்டுகின்றது என்று பொருள். அதுதான் அந்த வேலை. இந்த அளவுக்கு டிரையேஜ் அவசியமானதுதானா? அதை நிறைவு பண்ண வேண்டும். காரணம் அதனாலே நிதி பற்றாக்குறை நஷ்டம் ஏற்படுகிறது. அது நஷ்டம் மட்டுமல்ல. அது ஸ்டாக்கையும்கூட குறைக்கிறது. இருக்க வேண்டிய ஸ்டாக்கையும் குறைக்கிறது. இந்த விஷயத்திலே மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

அடுத்தபடி, வினியோகம்பற்றிச் சொல்கிறேன். இந்த வினியோகத்தைப் பொறுத்தவரையில், பல்வேறு நடைமுறைகள் இருக்கின்றன. அந்த அனுபவங்களைப்பற்றி இந்த அவையிலேயே பல்வேறு உறுப்பினர்கள் எட்டிக் காட்டினார்கள். இன்றைக்கு இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பதுபோல, கட்டுப்பிலே இல்லை. காரணம் கையிருப்பு குறைவு. அதனாலேதான் குறைந்திருக்கிறது என்ற நிலையை என்னால் உணர முடிகிறது. புதுக்கோட்டையிலே ஒரு கார்டுக்கு மாதம் இத்தனை கிலோ அரிசி தருகிறார்கள். சில இடங்களில் இரண்டு கிலோதான். இன்னும் சில இடங்களில் எட்டு கிலோ என்று இருக்கிறது. இப்படி வித்தியாசமாக வினியோகம் நடக்கிறது. சென்னை

போன்ற பெரிய நகரங்களிலே அதைப்பற்றிப் பரப்பக்கூடாது என்பதற்காக அது அரசுக் கொள்கையாகக்கூட இருக்கலாம். அதைப்பற்றி முழுமையாக நான் எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால் இங்கே கூடுதலாகத் தேவைப்படுகிறது. அவசியம்தான். காரணம் சென்னைப் பகுதியிலே சமாளிக்கக்கூடிய நிலை இல்லை. செங்கற்பட்டு வறண்டிருக்கின்ற காரணத்தினாலே நம் பகுதியிலே அப்படி கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. ஓபன் மார்க்கெட்டுக்கு, பகிரங்க மார்க்கெட்டுக்கு இடமில்லை. ஆனால் என்ன நடக்கிறது என்று சொன்னால், பல்வேறு மாவட்டங்களிலே பல்வேறு முறைகள் இருக்கின்றன. நியாய விலைக் கடைகள் எப்படி நடக்கின்றன என்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். அவசியமான முறையில் செலவு செய்து அவைகளை நிர்வகிக்க வேண்டும். காரணம் இதைப்பற்றியெல்லாம் முன்னாலேகூட பேசியிருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அப்போது குறிப்பிட்டிருக்கிறார்கள். நியாய விலைக் கடையில் உள்ளவர்கள் முழு நேர ஊழியர்கள் அல்ல, பகுதிநேர ஊழியர்கள். அந்த ஊழியர்கள் சில நேரம் கடையைத் திறக்காமல் போகிறார்கள். வாழ்க்கை உண்மைகளை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டால் மட்டும் போதாது. அது பிரச்சினைகளைத் தீர்த்து விடாது. அதை எப்படி தீர்த்துக்கொள்வது என்று பார்க்க வேண்டும். பல்வேறு இடங்களிலே பல்வேறு நிலைகளிலே பகுதி நேர ஊழியர்கள் கடைகளைச் சரியாகத் திறப்பதில்லை. அது மட்டுமல்ல. பல்வேறு மோசடிகள் நடக்கின்றன. எனவே இந்த அரசின் உணவுத் துறை அதை நிச்சயமாகப் பரிசீலனை செய்து சரிவர நடக்கச்செய்ய வேண்டும். அது இப்போது சரியாகச் செயல்படவில்லை. மக்களிடம் புகார்கள் என்ன என்று கேட்க வேண்டும். மக்களை அணுகிக் கேட்பதில் என்ன தப்பு? கேட்கலாம். இதற்கு விஜிலென்ஸ் அல்லது செல் என்பது எதற்கு? ஒரு கட்டத்திலே ஒரு இடத்திலே பிடிக்கிறார்கள். இன்னொரு இடத்திலே சரிகட்டிவிடுகிறார்கள். அந்த விவரங்களுக்குள்ளே நான் போகவில்லை. ஆனால் இந்தக் கடைகளில் இருக்கின்ற குறைகளைப்பற்றிப் பேசிக்கொள்வதிலே மட்டும் பயன் இல்லை. இந்தக் கடைகள் ஒழுங்காக செயல்படுகின்றனவா என்று பார்க்க வேண்டும். அப்படிச் செயல்படவில்லை என்றால், அந்தக் கடைகளை மூடிவிட வேண்டும். இல்லையென்றால் அவைகள் நன்கு செயல்படுவதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். இரண்டும் இல்லாமல் சும்மா போர்டு போட்டு, அதனால் ஜனங்களுக்குப் பயன் இல்லாமல் இருக்கிறது. அதிலே ஒன்றை வைத்திருக்கிறார்கள். அவர்கள் அதில் ஆதாயம், வருமானம் தேடிக்கொள்ள வாய்ப்பிருக்கிறது.





இப்போது விநியோகத்திலே இருக்கக்கூடிய சில குறைபாடுகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சென்னையிலே பல இடங்களிலே விநியோகத்திலே நிறைய கோளாறுகள் இருக்கின்றன. அதிலே விவரங்களுக்குள்ளே போகாவிட்டாலும் ஒன்றைச் சொல்கிறேன். ஆவடியிலே நேரடியாகப் பார்த்த பிறகு இந்த உண்மையைச் சொல்கிறேன். க்யூவிலே பல பேர்கள் காலையிலே நிற்பார்கள். அவர்களில் பல பேர்கள் ஆவடியிலே வேலைபார்க்கும் பேக்டரி தொழிலாளர்கள். அவர்கள் நிற்கும்போது, அங்கே உதவி செய்வதாக ஒரு சிலர் இருக்கிறார்கள். இன்னவர்கள் என்று நான் குறிப்பிடவில்லை. நான் கட்சியைக் குறிப்பிடவில்லை. அதிலே பல கட்சிகள் இருக்கின்றன. ஆளுங் கட்சி இருக்கிறது. எதிர்க் கட்சியும் இருக்கிறது. கட்சிபற்றிச் சொல்லவில்லை. தொண்டர்கள் என்று சொல்லிக்கொண்டு அங்கே நிற்கிறார்கள். ஆனால் அவர்கள் தொண்டர்கள் அல்ல. They are not தொண்டர்கள். அவர்கள் 'டௌட்ஸ்' தான். காரணம் சென்னையிலே சில நேரங்களிலே இப்படிப்பட்டவர்கள் சென்னை நகரத்தினுடைய பண்பாட்டில் வருகின்ற ஒரு பகுதியினராக இருக்கிறார்கள். குறிப்பாக இந்நாடு சுதந்திரம் பெற்ற பிறகு 1947க்குப் பிறகு இது அதிகமாக இருக்கிறது. இன்றைக்கு இப்படி தொண்டர்களாக வந்திருக்கிறார்கள். இவர்கள் 'டௌட்ஸ்'. அவர்களை மீறி ஜனங்கள் போக முடியாது. இப்படிப்பட்ட சேவை நடந்து கொண்டிருக்கிறது. நிற்பவர்கள் மூன்று ரூபாய் கொடுத்தால், க்யூவிலே நிற்க வேண்டாம். ஒரு ரூபாய் ரேஷன் கடைக்காரருக்கு, இரண்டு ரூபாய் இவர்களுக்குப் பங்கு. பத்து நிமிடத்திலே ரேஷன் வாங்கிக்கொண்டு போவதைப் பார்க்கலாம். இது நடக்கிறது. அவர்கள் வேலைக்குப் போகிறார்கள். இவைகளை ஒழுங்குபடுத்த வேண்டும். இரண்டாவது பல இடங்களிலே பல மாவட்டங்களிலே நடக்கிறது. இங்கே சென்னையிலே பல இடங்களிலே பத்து மடங்கு நடக்கிறது. அரிசி விநியோகத்திலே ஒரு மூட்டையை எடுத்து நல்ல அரிசியாக இருந்து கொஞ்சம் நல்ல ரகமாக இருந்தால், அந்த மூட்டையை அறுத்துப்பார்த்து தள்ளி வைத்துவிடுகிறார்கள். யாராவது கேட்டால் "அது உங்களுக்கு இல்லை" என்று சொல்கிறார்கள். அதை விலைக்கு பகிரங்க மார்க்கெட்டுக் கடைக்காரர்களுக்கு விற்கிறார்கள். நான் கேள்விப்படுவதல்ல. நான் நேரில் பார்த்ததை வைத்துச் சொல்கிறேன். இத்தகைய மோசடிகள்

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(நண்பகல் 12-00)

போது விநியோக முறையில் நடக்கவேண்டுமா? இதன் விளைவாகப் பல ரேஷன் கடைகளிலே கலவரம் ஏற்படும் அபாயம் இருக்கிறது. இது ஏப்ரல்

மாதம். மே மாதத்தில் கல்வரம் ஏற்படும் ஆபத்து இருக்கிறது. இந்தமாதிரி விஷயங்களில் உணவுத் துறை அதிகாரிகள் தனி ஏற்பாடு செய்து, அவற்றைக் களைய முயற்சி எடுக்க வேண்டும். விநியோகத்தில் கோளாறு இருப்பதைக் களைய வேண்டும். நமக்கு உணவுப் பற்றாக்குறை இருப்பது உண்மை. ஒன்று, கடந்த காலத்தில் கையாண்ட கொள்கையின் விளைவாக இந்த நிலை வந்திருக்கிறது. இரண்டு, மைய அரசு தர வேண்டுமென்று கேட்பதிலே இந்த அவையிலே எல்லோருடனும் சேர்ந்து, நானும் தமிழகத்திற்குக் கூடுதலாகத் தர வேண்டுமென்று கேட்பதில் ஆட்சேபணையில்லை. மத்திய அரசு தர வேண்டுமென்று கேட்கிறோம். இந்த அவையில் கேட்பது மாத்திரமல்ல, வெளியிலே மக்களைத் திரட்டி, அதற்காக வலியுறுத்தவும் தயாராக இருக்கிறோம். மத்திய அரசிடம் கேட்பது மாத்திரமல்ல, நம் கையிருப்பு குறைவு. ஆறு லட்சம் டன் பற்றாக்குறை இருக்கிறது. எனவே வரக்கூடிய மாதங்கள் மிக நெருக்கடியானவை. எப்படி இதை அணுகுகிறோம் என்பதுதான் இதில் முக்கியமானது. இந்த நேரத்திலே, பிரதம மந்திரி அவர்கள் 'மேனேஜ்மெண்ட்' பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குள் போகவில்லை. நம்முடைய தேவை என்ன? அதற்கு முதலிடம் கொடுக்கிறோம். பிரையாரிட்டி கொடுக்கிறோம். இன்றைய நெருக்கடியில் மக்களுக்கு விநியோகம் செய்வதற்கு முதலிடம் கொடுக்காமல், சகல திட்டங்களையும் சரிக்கட்டலாமென்றால், அதில் பாதி. இதில் பாதி என்று, அரைக் கிணறு தாண்டியது மாதிரிதான் இருக்கும். மக்களுக்கும் அதிருப்தி, புதிய திட்டங்களிலும் அதிருப்தி. சமுதாயத்திற்கு நல்ல காரியம் என்று அகல அடி எடுத்து வைத்துவிட்டோம். அதில் மாட்டிக்கொண்டால் வேறுவிதமாகப் போய்விடும். சேற்றிலே கால் மாட்டினால், ஜாக்கிரதையாக எடுக்கலாம். காலை ஊன்றி அழுத்தி, சேற்றுக்கு என்னைவிட பலமா என்று எண்ணினால், உள்ளேதான் போகும். எனவே நல்ல பொது விநியோக முறையை ஏற்படுத்தி, உணவு நிலைமை மோசமாக ஆகாமல் இருக்கும்படி கையிருப்பை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

* திரு. நீலநாராயணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1983-84 ஆம் ஆண்டுக்கான உணவு நிலைமை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னுடைய கருத்துக்களை இங்கே கூறுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு இங்கே வைக்கப்பட்டிருக்கிற உணவு நிலைமை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு இதே மன்றத்திலே நம்முடைய திரு. அமைச்சரவர்கள் உணவு குறித்த





அறிக்கையை வைத்தார்கள். சென்ற ஆண்டு கொடுத்த அறிக்கையே கொஞ்சம் இளைத்தாற்போல இருந்தது என்று சொன்னால், அதை யாரும் மறுக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். ஆனால் நம்முடைய அரசினுடைய நல் முயற்சியின் காரணமாக இந்த ஆண்டாவது இந்த நிலைமை மாறி, இளைத்திருந்த உணவு நிலைமை எழுந்து நடமாடாதா என்று என்னைப் போன்றவர்கள் உண்மையிலேயே எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். அதற்கு மாறாக இன்றைய தினம் சென்ற ஆண்டு இளைத்திருந்த உணவு நிலைமை, அதைவிட மோசமாகி நரை கட்டி, இருமலோடு பரிதாபகரமான நிலைமையை எய்தி இருக்கிறது என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்குக் காரணம் என்ன என்று கூறும்போது, நம்முடைய ஆட்சியாளர்கள் ஆகாயத்தைக் காட்டுகிறார்கள். வானம் பொய்த்து விட்டது, ஆகவே மழையில்லை; மழையில்லை, ஆகவே விளைவில்லை; விளைவு இல்லை, ஆகவே உணவுப் பொருள்கள் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்று இங்கே காரணங்களை அடுக்கடுக்காகக் கூறிக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் காரணங்களிலே நாங்கள் வித்தியாசப்படவில்லை. எனக்கு முன்னாலே பேசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் இங்கே ஒரு கருத்தைச் சுட்டிக் காட்டினார்கள். கையிருப்பு வைத்துக்கொள்வது உணவுக் கொள்கையிலே மிக முக்கியமாகக் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்று என்பதை அவர்கள் இங்கே சுட்டிக் காட்டினார்கள். 1960 ஆம் ஆண்டு என்று கருதுகிறேன். இதே அவையிலே நம்முடைய உணவு அமைச்சரவர்கள் மிகக் கம்பீரமாக ஒன்றைச் சுட்டிக் காட்டினார்கள். நம்முடைய நாட்டினுடைய விளைச்சலில் நம்முடைய நாட்டுக்குத் தேவையானது போக எஞ்சியவற்றை, கென்யா நாட்டுக்கு 20 டன், பெரு நாட்டுக்கு 10 டன், க்யூபா நாட்டுக்கு 20 டன், மேற்கு ஜெர்மனிக்கு 5 டன் என்று 55 டன்களை நாம் ஏற்றுமதி செய்திருக்கிறோம் என்றும், அதன் காரணமாக அரசுக்கு 70 லட்சம் ரூபாய்க்கு மேலே லாபம் வந்தது என்றும் மிகக் கம்பீரத்தோடு எடுத்து வைத்தார்கள். உண்மையிலே நான்கூட மகிழ்ச்சியடைந்தேன். ஆனால் இன்றையதினம் இந்த அறிக்கையிலே சுட்டிக்காட்டியிருப்பதைப் படிக்கும்போது வருந்த வேண்டிய சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறேன். தமிழ்நாட்டில் அரிசி உற்பத்தியைப் பொறுத்தவரையில், பஞ்சாப் போலவோ, அரியானாவைப் போலவோ உபரி மாநிலம் அல்ல; அதே சமயத்தில் கேரளாவைப்போல, வங்கத்தைப்போல பற்றாக்குறை மாநிலமும் அல்ல; நமக்குத் தேவையான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்துகொள்கின்ற சுய தேவைப் பூர்த்தி மாநிலமாக அமைந்திருக்கிறது என்று உணவு அறிக்கையிலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்திலேதான்,

பற்றாக்குறை மாநிலம் அல்ல, சுய தேவைக்கு எந்த அளவுக்குத் தேவையோ அந்த அளவுக்கு உற்பத்தி செய்துகொள்கின்ற தன்மையிலே இருக்கும் இந்த நாடு, இந்த அறிக்கையை அளிக்கின்ற ஆட்சி, நிச்சயமாக ஒருவேளை எதிர்காலத்தில் இன்றையதினம் ஏற்பட்டிருப்பதுபோல பஞ்சமோ அல்லது வறட்சியோ ஏற்பட்டால் கையிருப்பு இருக்க வேண்டுமென்பதற்காக இருப்பை வைத்துக்கொள்ள வேண்டுமென்று அன்றைய தினமே, 1930-லே இந்த மேலவையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. என்ன காரணமோ, இந்தக் கையிருப்பு இன்றையதினம் அந்த அளவுக்கு இருந்து கொண்டிருக்கிறது என்பதைப்பற்றி நம்முடைய மேலவை உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். வறட்சியும், பருவ மழை தவறுவதும் நம்முடைய மாநிலத்திற்குப் புதிதல்ல. ஒவ்வொரு முறையும் சிலபல கால கட்டங்களிலே இந்த நாடு வறட்சியைச் சந்தித்துத்தான் இருக்கிறது. அவைகளைச் சமாளித்துத்தான் இருக்கிறது. இல்லை என்று கூற முடியாது. அந்தந்த சமயங்களிலே ஆட்சியிலே இருக்கக்கூடியவர்கள் எடுக்கின்ற நடவடிக்கைகள், அதற்காக எடுக்கின்ற முயற்சிகள் இவைகளைப் பொறுத்து இந்தப் பற்றாக் குறை சமாளிக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் கடந்த கால வரலாறு என்று சொன்னால் அதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்று கருதுகிறேன். வறட்சியும், பஞ்சமும் வருகின்றபோது மத்திய அரசை நாம் கேட்கக் கடமைப் பட்டிருக்கிறோம். கேட்காமல் அவர்கள் கொடுக்க வேண்டுமென்பதிலே எங்களுக்கு இரண்டுபட்ட கருத்து இல்லை. ஆனால் கேட்கின்றபோது, அவர்கள் சொல்லுகின்ற பதில் என்ன என்பதை நாம் உணர்வதற்கு முன்னால், நம்மைப்பற்றி அவர்கள் என்ன கருதிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். கேட்பதற்கு முன்னால் கேரளாவுக்கு அரிசியைக் கொட்டிக் கொடுக்கிறது. மத்திய அரசு. வாய் திறப்பதற்கு முன்னதாக வங்கத்திற்குக் கொட்டிக் கொடுக்கிறது மத்திய அரசு. தமிழ் நாடு என்று சொன்னால், தயக்கம் காட்டிக்கொண்டிருப்பானேன்? இதை நாம் எண்ணிப் பார்க்கும்போது, உள்ளபடியே வேதனைப்படத்தான் வேண்டியிருக்கிறது.

(பிற்பல் 12-10)

ஆனால் நாம் இதற்காக எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், முயற்சிகள் என்ன என்பதை எடுத்துக்காட்டுவதற்கு முன்னதாக நம்மைப் பற்றி மத்திய அரசு இப்படி தயக்கம் காட்ட என்ன காரணம் ஏற்பட்டிருக் கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். 1982-ல் மத்திய அரசினுடைய உள்துறை அமைச்சகம் தமிழகத்தினுடைய கிராமப் பொருளாதாரம் எந்த அளவுக்கு இருக்கிறது என்று அறிய ஒரு கமிட்டியைப் போட்டு ஒரு ஆய்வை



நடத்தியிருக்கிறது. 'தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், கிராமப்புறங்களின் முன்னேற்றத்திற்கு வழங்கப்பட்ட நிதியினை அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு வசதி படைத்த பணக்காரர்களுக்குப் போய்ச் சேரும் வகையில் செலவழித்திருக்கிறது, கிராமப்புறங்களில் உள்ள ஏழையெளியவர்களுக்கு அந்த நிதி சரியாய் போய்ச் சேரவில்லை' என்கிற கருத்தை, ஆய்வு செய்த அந்தக் கமிட்டி கூறியிருக்கிறது. அதுபோல் அவர்களாலே அமைக்கப்பட்ட பிளானிங் கமிஷன் 1981-82 ஆம் ஆண்டிலே ஒரு 'ஆன்யுவல் ரிப்போர்ட்' (Annual report) டைச் சமர்ப்பித்திருக்கிறது. அதிலே அவர்கள் குறிப்பிட்ட ஒரு கருத்து அண்மையிலே வெளிவந்தது. பொதுக் காரியங் களுக்கு 19 புள்ளிகளிலே செய்ய வேண்டிய வேலைகளை இவர்கள் 194 புள்ளி களிலே செலவு செய்திருக்கிறார்கள் என்பதோடு மட்டுமல்லாமல், 12 மணி நேரத்திலே செய்யவேண்டிய பணிகளை தமிழகத்திலே 48 மணி நேரம் எடுத்துச் செய்திருக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் இதைகுறித்து சுருக்கமாக என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், தமிழக அரசைப் பொறுத்தவரையில் மத்திய அரசு என்ன கருதிக்கொண்டிருக்கிறது என்று சொன்னால், 'ஊதாரித்தனமாகச் செலவு செய்கிறார்கள், சோம்பேறித் தனமாகப் பணியாற்றுகிறார்கள்' என்று நம்மைப் பார்த்து கணித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கணிப்பு தவறான கணிப்பு என்பதை எடுத்துக் காட்ட நம்முடைய அரசு முனைந்ததா? அதிலே நம்முடைய அரசு தவறி விட்டது என்பதை யாருமே ஒத்துக்கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா:** மத்திய அரசு சொன்ன அந்தப் புள்ளி விவரங்களை மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் நம்புகிறாரா? அல்லது அதை ஆதரிக்கிறாரா? அல்லது அதை எதிர்த்து அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று சொல்கிறாரா? இதுபற்றித் தெளிவாக சொல்ல வேண்டும்.

**திரு. நீலநாராயணன்:** அதற்கு பதில் சொல்ல வேண்டியவர்கள் ஆளும் கட்சித் தரப்பிலே இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தான். இது நம்ப முடியாததல்ல என்பதை நாடு இன்றைக்கு இருக்கின்ற நிலைமையே தெளிவாகக் காட்டும் என்கிற அளவுக்கு நிலைமைகள் நாட்டிலே இருந்துகொண்டிருக்கின்றன என்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அதற்கு நான் பின்னாலே வந்து கொண்டிருக்கிறேன். மத்திய அரசைத் தட்டிக் கேட்க இங்கே இருக்கின்ற கட்சிகள் எல்லாம் ஒன்றாக இணைந்து போராட வேண்டுமென்று இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். அதிலே ஓரளவு திராவிட முன்னேற்றக் கழகம் பின்தங்கிவிட்டது என்கிற பொருள்பட இங்கே

எடுத்துக் கூறினார்கள். அப்படி அவர் சொல்லிவிட்ட காரணத்தால், நான் அதற்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பொறுத்த வரையில், நாட்டு மக்களுடைய பிரச்சினையை அடிப்படையாக வைத்து தன்னுடைய ஆட்சியை நடத்திக் கொண்டிருந்தால், அதற்கேற்ப அதிகாரத்தை உபயோகப்படுத்திக்கொண்டிருந்தால், உண்மையிலேயே அதுகுறித்து எங்களுக்குக் காழ்ப்பு இல்லை. அப்படிப்பட்ட நிலையிலே எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு நாங்கள் நியாயமான கோரிக்கைகளுக்கு ஒத்துழைப்பு கொடுக்கத் தயாராக இருந்துகொண்டிருக்கிறோம். ஆனால் போகிற நிலைமை, இருக்கின்ற நிலைமை இவைகளையெல்லாம் பார்க்கின்ற நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்காகவே சில பல காரியங்களைச் செய்வதாக நாங்கள் சந்தேகப்பட வேண்டிய அளவுக்கு காரியங்கள் இங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதிலே ஒன்றுதான் பேரணி முழக்கங்கள். ஒரு நண்பர் இங்கே சுட்டிக்காட்டினார். 'நாங்கள் மத்திய அரசை எதிர்த்துப் பேரணி போனோம், அதை யாரோ கிண்டல், கேலி செய்தார்கள்' என்று இங்கே சுட்டிக்காட்டினார். நான் அந்த விஷயத்திற்குள்ளே போக விரும்ப வில்லை. ஆனால் என்னைப் பொறுத்தமட்டில், நான் சுட்டிக்காட்டுவதெல்லாம் அந்த சமயத்திலே ஒரு கவிராட்டி போட்டார்கள். அப்படி போடப்பட வேண்டிய நியாயம்பற்றி இங்கே நண்பர் ஒருவர் சுட்டிக்காட்டினார். 'அங்கே ஆபியா விளையாட்டு, இங்கே சைக்கிள் விளையாட்டு' என்றெல்லாம் போஸ்டர் போட்டதாகவும் இங்கே சுட்டிக்காட்டினார்கள். நான் கேட்கிறேன். நாங்கள் பேரணி நடத்தினோம். நீங்கள் எந்த சமயம் பார்த்து பேரணி நடத்தி னீர்கள்? அதை எண்ணிப்பார்க்க வேண்டாமா? மத்திய அரசு அங்கே யிருந்து வறட்சி நிவாரணத்திற்குரிய கமிட்டியை அமைத்து, அந்தக் கமிட்டி இங்கே இருக்கின்ற நிலைமைகளை நேரில் வந்து பார்த்து, அங்கே போய் ரிப்போர்ட்டைக் கொடுக்கிறது, அங்கேயிருந்து பிரதமர் அவர்கள்—யாருடைய அழைப்போ, யாருடைய வற்புறுத்தலோ அதைப்பற்றி நான் சொல்ல விரும்ப வில்லை—இங்கே பார்வையிட வருகிறார்கள். வறட்சி நிவாரணத்திற்காக வறட்சி எங்கெங்கே இருக்கிறது என்பதை ஹெலிகாப்டரிலே சென்று பார்க்கிறார்கள், பார்த்து விட்டு இவ்வளவு பணம், இவ்வளவு அரிசி, கோதுமை சேங்ஷன் செய்கிறேன் என்று சொல்லிவிட்டு அம்மையார் அவர்கள் போகிறார்கள். கமிட்டி பரிந்துரையைத் தருகிறது. அதன் அடிப்படையிலே ரூ. 72 கோடி நிவாரண உதவி ஒதுக்கப்படுகிறது என்கிற அடிப்படையிலே அறிக்கை தருகிறார்கள். அந்த நேரம் பார்த்துத்தான் இவர்களால் பேரணி நடத்தப்படுகிறது. இது எதற்காக என்று நான் அறிய விரும்புகிறேன்.



அவர்கள் உண்மையிலேயே மத்திய அரசைத் தட்டிக் கேட்க வேண்டுமென்ற எண்ணத்தோடு இந்தப் பிரச்சினையிலே ஈடுபட்டிருப்பார்களே என்று சொன்னால், என்னைக் கேட்டால் அவர்கள் பேரணி எடுக்க வேண்டிய நேரம் எது? இதுவா நேரம்? ஜனசக்தி பத்திரிகையிலே பாரா பாராவாக, அடித்து அடித்து எழுதினார்கள். "வட ஆற்காடு மாவட்டத்திலே பஞ்சம் அதிகம். வறட்சியின் கொடுமையைத் தாங்க முடியாமல் அங்குள்ள மக்கள் பக்கத்திலே இருக்கின்ற கர்நாடகாவுக்கு மந்தை மந்தையாக, கால்நடைகளைப்போல சாரி சாரியாகப் போகிறார்களே, அதைத் தடுத்து நிறுத்தி, அவர்களுக்கு நிவாரணம் கொடுக்கக் கூடாதா?" என்று எழுதியிருந்தார்கள். அன்றைய தினமே அ.தி.மு.க. பேரணி நடத்தி, மத்திய அரசே நிவாரணத்திற்கு உங்கள் பதில் என்ன என்று தட்டிக் கேட்டிருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு பேரணி நடத்திக் காட்டுகின்றது. அதற்கு எதிராக ஒரு போட்டியாக ஒரு பேரணியை நடத்தியிருக்கின்றார்கள். அந்த வகையிலே ஏதோ ஒரு காரணத்தைக் காட்டி நாங்களும் பேரணி நடத்தி னோம் என்கிற அளவிலேதான் இவர்களுடைய பேரணி அமைந்திருந்தது. அது கொள்கையின்பாற் அமைந்த பேரணியல்ல. எங்களுக்கு எதிராக நடத்தப்பட்ட பேரணி என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : அவர்கள் பேரணி நடத்தியதாகவும் நாங்கள் அதற்குப் போட்டியாக எதிர்ப் பேரணி நடத்தியதாகவும் மாண்புமிகு உறுப் பினர் இங்கே சொன்னார். நான் அவருக்குப் பணிவோடு ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். அத்தகைய எண்ணமே மாண்புமிகு உறுப்பினர் கொண்டிருப்பாரானால் தயவுசெய்து மறந்து விட வேண்டும். உங்களுக்கு எதிராக போட்டியாக நாங்கள் இருக்க வேண்டிய காலம் போய்விட்டது. இப்போது எங்களுடைய நிலை வேறு. மத்திய அரசு சரியான முறையிலே நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டது. இந்திரா அம்மையார் அவர்கள் வந்து பார்த்ததற்குப் பிறகு கூட, [illegible] வஞ்சனை காட்டுகிறார்கள். தமிழகத்தின் நிலைமையை அவர் கண்டு உணர்ந்ததற்காகத் தான் பேரணி நடத்திக் காட்டினோம். நியாய மாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் பேரணிக்கு எதிராக எங்களுடைய பேரணி நடத்தப்படவில்லை. என்னுடைய இந்த விளக்கத்தை பெரியவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. நிலநாராயணன் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. ஏ. ஜே. தாஸ் எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாருக்குப் பதில் சொல்லப் போகிறீர்கள்?

[1983 ஏப்ரல் 3

**திரு. ஏ. ஜே. தாஸ் :** மத்திய அரசைக் குறிப்பிட்டு 'ஓர வஞ்சனையாக' நடந்து கொண்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா இங்கே குறிப்பிட்டார். அப்படி ஓர வஞ்சனையாக நடந்துகொள்கிறார்கள் என்றால், இப்போது 72 கோடி ரூபாய் நிவாரணத்திற்கான அறிவிப்பு வந்திருக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** நாம் கேட்டது 241 கோடி ரூபாய். ஆனால் அவர்கள் அறிவித்தது 10 கோடி ரூபாய்.

(திரு. எஸ். ஆர். இராதா எழுந்தார்)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** விவாதம் எங்கெங்கோ சுற்றுகிறது.

**திரு. எஸ். ஆர். இராதா :** மத்திய அரசுக்கு ஓர வஞ்சனை இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. தாஸ் குறிப்பிட்டார். நான் பேசும்போது, 11 மணிக்கு ஓர வஞ்சனை இருந்தது, சொன்னேன். இப்போது 12 மணிக்கு அவர்கள் ஓர வஞ்சனை இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் தொடர்ந்து ஓர வஞ்சனை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. நீலநாராயணன் :** அவர்கள் பேரணி நடத்தியது போட்டிக்காக அல்ல என்று இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா சுட்டிக்காட்டினார். அது என்னுடைய கருத்துமட்டுமல்ல. சென்னை நகர மக்களுடைய, பத்திரிகையாளர்களுடைய கருத்துக்களைத்தான் நான் பிரதிபலித்தேனே தவிர, வேறல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றொன்று, மத்திய அரசை இவர்கள் தட்டிக் கேட்பதுபற்றி நமக்கு அட்டியில்லை. நியாயமானவற்றுக்கு தேவையானால் நாங்களும் உங்களுடன் சேர்ந்து, உங்களுடைய கருத்துக்களை வலுப்படுத்த தயாராக இருந்து கொண்டிருக்கிறோம். ஆனால் வழியிலே எங்களைக் கைவிடாதீர்கள் (சிரிப்பு)—இது தான் நான் கேட்டுக்கொள்வதெல்லாம். இதை நான் எதற்காக சொல்கிறேன் என்றால், இங்கிருந்து மிகுந்த வீராப்போடு என்ன செய்

(பிற்பகல் 12-20)

கிறேன் பார் என்கிற எக்காளத்தோடு டெல்லிக்குச் செல்கிறார்கள். இங்கேயிருந்து வீராவேசமாகப் பேசிவிட்டு போகிறவர்கள், டெல்லியிலிருந்து திரும்பும் போது சோர்ந்துபோய் வந்து, "அவர்களைச் சொல்லி குற்றம் இல்லை, அவர்கள் நிலைமை அப்படி, அவர்களும் நம்மைப் போலத்தான் இருக்கிறார்கள்"



1983 ஏப்ரல் 8] [திரு. நீலநாராயணன்]

என்று சொல்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் நம்முடைய உணவு அமைச்சர் 'அன்னை' பத்திரிக்கையிலே எழுதியே காட்டினார்கள். அரிசி என்ன டெல்லியின் கூரையிலேயே விளைகிறதா என்று. நம்முடைய எதிர்ப்பு உணர்ச்சி முனை மழுங்காமல் இருக்க வேண்டும். உதாரணத்திற்குச் சொல்கிறேன். சமீபத்தில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் நாம் முழங்கியிருக்கவேண்டாமா? நம்முடைய நிலைமைகளைப்பற்றி எடுத்துக் கூறியிருக்க வேண்டாமா? நம்முடைய முதலமைச்சர் அங்கே சென்று கலந்து கொண்டிருக்க வேண்டாமா? ஏன் போகவில்லை? பொது ஜனங்களின் நன்மைக்காக அந்தக் காரணங்களைச் சொல்ல முடியாது என்று சொல்லப்படுகிறது. அதை வைத்துத்தான் சொல்கிறேன், எதிர்த்துப் பேசுகிறார்கள், எக்காளம் இடுகிறார்கள், அடுத்த நிமிடம் சரண்டர் ஆகிவிடுகிறார்கள். இதனுடைய நிலைமை என்ன, விபரம் என்ன என்று எனக்குப் புரியவில்லை. உங்களோடு வந்தால் நாங்கள் தவித்து நிற்கவேண்டிய நிலைமை வரும். அதற்காகத்தான் தனித்துப் போராடலாமா என்று நாங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சரண்டர் என்ற ஒரு வார்த்தையை உபயோகிக்கிறார். அதனுடைய முழு அர்த்தம் என்ன என்று தெளிவுபடுத்தவேண்டும்.

**திரு. நீலநாராயணன் :** சரணாகதி என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா :** அது ஒரு வைதிகமான வார்த்தை, சரணாகதி என்றால் யாரிடத்தில் யார் அடைகிறார்கள் என்பதையும், யார் அதை ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதையும் அவர் சொல்லியாக வேண்டும்.

**திரு. நீலநாராயணன் :** துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய பேச்சும் எழுத்தும் நாட்டிலே அதைத்தான் செய்து கொண்டிருக்கின்றன. அதற்கு எத்தனையோ உதாரணங்களைச் சொல்ல முடியும். கொடுக்கப்பட்டிருக்கிற நேரத்தில் பேச்சை முடிக்க வேண்டும். எனவே அடுத்த பிரச்சினைக்குப் போகிறேன்.

கோவாவுக்கு அரிசி அனுப்பப்பட்டதுபற்றி, கடத்தப்பட்டது பற்றி சுட்டிக் காட்டினார்கள். அது பிரச்சினைக்குரிய ஒன்றுதான். கோவாவுக்கு அரிசி கடத்தப்பட்டது என்பதை என்னாலே ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அரசு அனுமதிக்குத்தான் கோவாவிற்குச் சென்றது என்று நான் கருதுகிறேன். இதுவரையில் மொட்டாக அரிசிதான் சென்றது, வணிகர்கள் மூலமாக. ஆனால் இந்தத் தடவை சன்னரக அரிசியும் அனுப்பப்பட்டிருக்கிறது என்பதும், அதுவும் வியாபாரிகள், வணிகர்கள், 'பற்றாக்குறை இருக்கிற இந்த சந்தர்ப்பத்தில் அனுப்பாதீர்கள், தடுத்து நிறுத்துங்கள்' என்று சொன்னதற்கும் பின்னாலே அனுப்பப்பட்டிருக்கிறது. அரசுடைய லைசென்ஸ் பெற்றுத்தான்

சென்றது. நான் அதைக் குறை கூறவில்லை. கொடுக்கவேண்டுமென்று நினைத்தால் கொடுக்கப்படும். வேண்டாம் என்று சொல்லவில்லை. பக்கத்தில் இருக்கிற சகோதரர்களுக்குக் கொடுக்கிறோம். ஆனால் கொடுக்கிற நேரத்தில், கொஞ்சம் ராஜதந்திரமாக பேரம் பேசியாவது கொடுத்திருக்கக் கூடாதா? நீங்கள் தண்ணீர் கொடுப்பீர்களா என்ற நிபந்தனையைப் போடக் கூடாதா? சரியான சமயத்தில் பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்திலிருந்து கேரள அரசு தண்ணீரைத் திறந்து விட்டிருந்தால், கோவை மாவட்டத்தில் 80 ஆயிரம் ஏக்கர் நிலம் இன்றையதினம் பச்சைப் பசேல் என்று நமக்கு விளைச்சலைத் தந்திருக்காதா? இப்போது வாடி வதங்கி விட்டதே. என்ன காரணம்? பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தினை அவர்கள் உரிய நேரத்தில் திறந்து விடாமல் இருந்ததே காரணம். இந்த அளவுக்காவது அரசு முயற்சி எடுத்துக் கொள்ளக்கூடாதா என்றுதான் நான் இதைச் சுட்டிக் காட்டுகிறேனே தவிர வேறல்ல.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய உரையிலேயே விரிவாக, விளக்கமாகப் பேசவேண்டுமென்று இருந்தாலும், ஒருவேளை மறந்து விடுவேனோ என்று கருதி இப்போதே இதற்கு விளக்கம் தந்து விடுவது நல்லது என்று கருதுகிறேன். தமிழகத்திலிருந்து ஒரு கிலோ அரிசி கூட அரசாங்கத்தின் அனுமதியுடன் அங்கே அனுப்பப்படவில்லை என்பதை தெளிவாக, திட்டமாக, திட்டவட்டமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன். அரிசி அனுப்பப்பட்டிருக்கிறது. அனுப்பப்பட்டதற்குக் காரணம், ஒரே (ஸோன்) Zoue ஆக்கி இருப்பதால் 50 சதவீதம் லெவி கொடுத்துவிட்டு மீதி அரிசியை எடுத்துக்கொள்வதற்கு பர்மிட் கொடுத்துத் தீரவேண்டும். பர்மிட் கொடுக்காவிட்டால் மத்திய அரசு நம்மைக் கேட்கிறது. மத்திய அரசு நம்மைக் கேட்கவிடாமல் தடுக்கிறது. இப்போது ஆந்திராவிலிருந்து 25 சதவிகிதத்தை அங்கே கொடுத்துவிட்டு ஆந்திர அரிசி தமிழகத்திற்கு ஏராளமாக வருகிறது. அப்படி வருவதற்குக் காரணமே லெவிதான். லெவி கொடுக்காமல் பர்மிட் கிடைக்காது. பர்மிட் வாங்காமல் போக முடியாது. இதிலே ஹைகோர்ட் கூட தீர்ப்பினை வழங்கியிருக்கிறது. நேற்று கூட ஒரு தீர்ப்பு வந்திருக்கிறது. "வியாபாரிகளிடத்தில் அதிகமாகக் கொள்முதல் செய்துவிட்டீர்கள். அதைத் திருப்பிக் கொடுங்கள்" என்று நேற்று ஒரு தீர்ப்பு வந்திருக்கிறது. ஆகவே இவர்களை ஏன் தடுத்து நிறுத்தினீர்கள் என்றுதான் கோர்ட்டுகள் நம்மைக் கேட்கின்றன. ஏன் நீங்கள் தடுக்கிறீர்கள் என்று மத்திய அரசு எங்களுக்கு எழுதுகிறது. கேரள உணவு அமைச்சர் 6, 7 கடிதங்கள் எனக்கு எழுதிவிட்டார்கள். நாங்கள் ஆந்திராவிலிருந்து கொண்டு வருகிற அரிசியை தமிழகத்தில் தடுத்து நிறுத்திவிடுகிறார்கள் என்றும் கர்நாடகத்திலிருந்து வருகிற அரிசியைத் தடுத்து நிறுத்துகிறார்கள் என்றும்,





தயவு செய்து தடுத்து நிறுத்தாதீர்கள் என்றும் கேட்டிருக்கிறார்கள். நாங்கள் அனுப்பினோம், நாங்கள் அனுப்பினோம் என்று இங்கும் சொல்கிறார்கள். ஆகவேதான் இதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

திரு. நீலநாராயணன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்தை நான் ஏற்றுகொண்டுதான் சொல்கிறேன். இங்கே கடத்தப்பட்டது என்று சொன்னார்கள். கடத்தப்படவில்லை. சட்டப்படிதான் எடுத்துச் செல்லப்பட்டது என்று சொல்கிறேன். நான் கேட்பது, அப்படி பர்மிட் கொடுக்கும்போதுகூட பேரம் பேசியிருக்கலாம் என்பதுதான். அதை நாம் விட்டுவிட்டோம் என்பதற்காக நான் சொல்கிறேன். வேறு அல்ல. இந்த அரசு பல விஷயங்களில் இந்த உணவைப் பொறுத்த வரையில் சொல்லியிருக்கிறது. ஆனால் சொன்னதை நிறைவேற்றி இருக்கிறதா என்று பார்த்தால், எனக்கு ஐயமாகவே, சந்தேகமாகவே இருக்கிறது. இந்த அவையிலேயும் சரி, அந்த அவையிலேயும் சரி, முதலமைச்சர் பேசிய பேச்சுகள் புத்தக உருவில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதில் "நாங்கள் உணவுக்கொள்முதல் செய்வதிலும் சரி, விநியோகம் செய்வதிலும் சரி இடைத் தரகர்களுக்கு இடம் அளிக்க மாட்டோம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றையதினம் என்ன நடைபெற்றிருக்கிறது என்பதை நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. மாணிக்கம் அவர்கள் எடுத்துக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. மாணிக்கம் அவர்கள் எடுத்துக் கூறினார் வருவதற்கு அனுமதி வழங்கியிருக்கிறோம் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். கடந்த காலத்தில் யார் யார் மீது நம்மாலேயே குறை சொல்லப் பட்டதோ அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் இன்றையதினம் அனுமதி வழங்கப் பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல. ஒன்றை நான் உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். யார் யாருக்கோ கொடுக்கப்பட்டிருக்கிறதென்று சொல்லப்படுகிற இந்த நிலைமையின் காரணமாக தமிழகத்திலே உணவு விஷயத்திலே 10 கோடி ரூபாய் அளவுக்கு ஊழல் நடந்திருக்கிறது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்குக் காரணம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரோ, மாண்புமிகு உணவு அமைச்சரோ என்று நான் சொல்லமாட்டேன். அவர்களுக்கு இந்த விஷயம் தெரியாது. இப்போது தெரிந்திருக்கும் என்று கருதுகிறேன். இன்றையதினம் திடீரென்று சிவில் சப்ளைஸ் டிபார்ட்மென்டிலே இருந்த அதனுடைய உயர் அதிகாரி திரு. நடராஜன், ஐ.எ.எஸ்., அவர்கள் மாற்றப்பட்டிருக்கிறார். அவரோடு கூட 150 ஊழியர்கள் திடீரென்று ஒரே சமயத்தில் மாற்றப்பட்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன? உணவு அமைச்சர் அவர்களுடைய பதிலிலே இதைக் கூறுவார்கள் என்று கருதுகிறேன். இடைத் தரகர்கள் ஒழிக்கப்பட்டார்கள் என்று பெருமை

போலாம். அது சரியாகக் கவனிக்கப்படாமல் போய் விட்டதால் அதிகாரிகள் மட்டத்திலே அதிகாரிகள் மட்டும் என்றுகூட சொல்லமாட்டேன். இதிலே முக்கியமான ஆளுங்கட்சி புள்ளிகள் கூட சிக்கலாம் என்று கருதுகிறேன். அப்படிப்பட்ட விவரம் இன்று சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்ட்டில் ஏற்பட்டிருக்கிறது என்பதை உணவு அமைச்சர் விளக்குவார் என்று கருதுகிறேன். இறுதியாக ஒன்றை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையில், நான் என்னுடைய மக்களைப் பட்டினி போடமாட்டேன், பசிக்க விடமாட்டேன் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை நாம் மறக்கவில்லை. ஆனால் இன்று தமிழகத்தின் நிலைமை என்ன? விழுப்புரம் பக்கத்தில் பாப்பாக்கம் கிராமத்திலே 19 பேர் பட்டினியால் செத்துவிட்டார்கள் என்று கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டிலே அதன் தலைவர் திரு. மாணிக்கம் அவர்கள் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். இந்த நாடு என்ன செய்துகொண்டிருக்கிறது? ஜம்பம் அடித்துக் கொண்டார்கள். என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? நான் அதைக் கேட்க ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, பட்டினியால் சாகவில்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். ஆகவே குறிப்பிட்ட இடத்தில் அப்படி நடக்கவில்லை. அப்படிப் பட்டினிச் சாவு இருந்தால், நாட்டிலே பரவலாக இருக்கும், ஒரே ஒரு இடத்திலே மட்டும் நடக்காது. அது தான் உண்மை. உண்மை எதுவாக இருந்தாலும், தீவிரமாக விசாரிக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளோம். ஆகவே அது உண்மையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** விவாதம் நிறைவெய்தும்வரை, அவையின் அனுமதியோடு, அவையின் நேரத்தை நீட்டிக்கிறேன்.

(பிற்பகல் 12-30)

திரு. நீலநாராயணன்: அரசினுடைய அறிக்கைகள் எப்போதும் அப்படித் தான் வந்து கொண்டிருக்கும். ஆனால் அங்கே சென்று விசாரித்தால்தான், அதனுடைய உண்மை தெரியும். எனவே அப்படிப்பட்ட முறையில் அதை விசாரித்துப் பார்க்க வேண்டும் என்று மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், இப்போது ரூபாய் 75 இலட்சம் செலவில் பாரதிக்கு மண்டபம் எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன். தமிழுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஒரு கவிஞ





னுக்குச் செய்யப்படும் மரியாதை அது என்பதால், அதை வரவேற்கிறேன். அந்தக் கவிஞன்தான் பாடினான் " . . . தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்று. இன்றையதினம் அப்படிப் பாடிய பாரதி வாழ்ந்த நாடுதான் பட்டினி காரணமாக 19 பிணங்களைச் சுமந்து கொண்டிருக்கிறது. பட்டினியால் அவர்கள் செத்தார்கள் என்று சொல்லப்படுகிறது. அதை அரசு உறுதி செய்யப் போகிறதோ இல்லையோ, ஒன்றை மட்டும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். இத்தகைய நிலைமைகள் நம் நாட்டில் உருவாகிக் கொண்டிருக்கின்றன. இந்த அடிப்படையில் ஒன்றை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன். இத்தகைய நிலைமைகளைச் சமாளிப்பதற்கு அரசு என்ன செய்யப் போகிறது என்று கேட்பதற்கு முன்னால், பைரன் கவிதையை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

"Starvation, Starvation, starvation,
If there will be
No salvation, salvation, salvation
There will be a revolution, revolution, revolution".

லார்டு பைரன் அவர்களின் இந்த வரிகள் ஏதோ வெறும் கவிதையின் வரிகள் மட்டுமல்ல. இதை நான் இங்கே சிரிப்பதற்காகக்கூட சொல்லவில்லை. இது காலத்தின் தீர்ப்பு. இந்தத் தீர்ப்புக்கு ரஷ்யாவிலே ஜார் மன்னன் இரையானான். இந்தக் காலத்தின் தீர்ப்புக்கு பிரெஞ்சு நாட்டின் 14-வது லூயி மன்னன் இரையானான். அந்தத் தீர்ப்பு உங்களையும் எதிர்நோக்கி இருக்கிறது; எனவே உஷாராக இருங்கள் என்று கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் உணவு நிலைமையைக் குறித்து அவையின் முன் வைக்கப்பட்ட கொள்கைக் குறிப்பின்மீதான விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களையொட்டி சில பல விளக்கங்களை மட்டும் நான் தருவதற்கு முற்படுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பல்வேறு கருத்துக்களை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, உணவுப் பங்கீட்டு முறையில் மேலும் பல தன்மைகள் ஏற்பட வேண்டும் என்று வற்புறுத்தி, இந்த முயற்சிகள் அனைத்தும் வலுப்படுத்தப்பட வேண்டும், ஒழுங்கு படுத்தப்பட வேண்டும், செம்மைப் படுத்தப்பட வேண்டும் என்பதற்கான காரண காரியங்களையெல்லாம் சிறப்பாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 ஏப்ரல் 8

இறுதியாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்கள் இங்கே எதிர்க் கட்சியைச் சார்ந்தவர் என்ற முறையில் பேசினார்கள். அவரிடமிருந்து என்ன எதிர்பார்க்க முடியுமோ அந்த அளவுக்குத்தான் அவரும் இங்கே பேசினார். நான் அதற்கு மேல் அவரிடம் எதிர்பார்க்கவும் இல்லை. அவ்வளவுதான் அவரிடம் எதிர்பார்க்க முடியும். அந்த வகையில்தான் அவர் கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார். இறுதியாக லார்டு பைரன் அவர்களுடைய கவிதை வரிகளை இங்கே குறிப்பிட்டுக் காட்டினார். இப்படிப்பட்ட இலக்கிய வரிகள் இங்கே எடுத்துச் சொல்லப்படுமானால், அதுகூட நன்றாகத்தான் இருக்கும். இப்படிப்பட்ட உணவுப் பிரச்சினை வருகிறபோது, இலக்கிய ஆர்வத்தில் நாம் அதையும் சுவைத்து பேரின்பம் பெற வாய்ப்பும் வசதியும் ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். லார்டு பைரன் சொன்ன "ஸ்டார்வேஷன், ஸ்டார்வேஷன்" என்ற அளவுக்கு தமிழகம் போய்விடவில்லை, நாம் அந்தக் கட்டத்திற்கு இன்னும் வரவில்லை. ஸ்டார்வேஷன் வந்தால் சால்வேஷன் வேண்டும் என்றார். ஸ்டார்வேஷன் என்ற நிலைக்கு நாம் வந்துவிட்டால், கட்டாயமாக இந்த அரசு சால்வேஷன் செய்யும். அதற்கான உறுதிப்பாடு இந்த அரசுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த இரண்டு நிலையும் முடிந்தால்தான், பிறகு ரெவல்யூஷன் அல்லது ரெபல்லியன் என்ற நிலை வரும். அந்த நிலை கண்டிப்பாக இங்கே வராது. அந்தக் கட்டம் இங்கே கண்டிப்பாக வராது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாட்டில் வறட்சி ஏற்பட்டால், அதன் காரணமாக பற்றாக்குறை ஏற்படுவது இயற்கை. அதாவது இயற்கையாகப் பெய்ய வேண்டிய மழை பொய்த்துப் போனால் வறட்சி வரும் என்பதை எல்லோரும் அறிவோம். இதைத்தான் நாம் திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்லி வருகிறோம். மழை இல்லாத காரணத்தால், குடிநீர்க் குறை இருக்கிறது. இதற்காக நாட்டில் குடிநீரே இல்லை என்பது அர்த்தமல்ல. குடிநீரே இல்லை என்று விளம்பரப்படுத்திக்கொண்டு, செய்திகளைப் பெரிதுபடுத்திக்கொண்டு மக்கள் பீதியடைய வேண்டும் என்ற அளவுக்குச் சிலர் தற்போது செய்து கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தில் பற்றாக்குறை இருப்பது என்னவோ உண்மை. அதைச் சமாளிக்க வேண்டியது அரசின் கடமை என்பதும் உண்மை.

போதுமான அளவுக்கு மழை இல்லாத காரணத்தால், உணவு விளைச்சல் இல்லை. உணவு விளைச்சல் இல்லாத காரணத்தால், உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. உணவே அறவே இல்லை என்ற தன்மையில்லை. மழை இல்லாததால், நீர்த் தேக்கங்களில் போதுமான நீர்நிலை இல்லை. நீர்நிலை இல்லாததால், புனல் மின்சார உற்பத்திக்கு வாய்ப்பு இல்லை. எனவே அதைச் சமாளிக்க வேண்டிய கட்டாயம் இப்போது நமக்கு ஏற்பட்டிருக்கிறது.



1983 ஏப்ரல் 8] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வறட்சி ஏற்பட்டால் பற்றாக்குறை ஏற்படும். பற்றாக்குறை ஏற்படும் போது, நாம் சாதாரண காலங்களில் எடுக்கிற முயற்சிகளைவிட இந்த நேரத்தில் நாம் நம்முடைய நினைவை, அறிவை, ஆற்றலை, மற்றும் பொருளை எல்லாம் செலவழித்து பற்றாக்குறையைப் போக்க வேண்டிய கடப்பாடு இருக்கிறது. வறட்சிக்கு அடுத்த கட்டம் பசி. பசிக்கு அடுத்த கட்டம்தான் பட்டினி. பட்டினியைச் சமாளிக்க முடியாதபோதுதான் சாவு வரும். ஆனால் நமக்கு இருப்பது தற்போது வெறும் பற்றாக்குறைதான். அதற்கு அடுத்த கட்டங்கள், எதுவும் தமிழகத்தைப் பொறுத்த வரை, இன்னும் வந்துவிடவில்லை. நான் சொன்ன அந்த இலக்கணப்படி நாம் தற்போது வறட்சி நிலையில் தான் இருக்கிறோம். அடுத்த கட்டங்களுக்குப் போய்விடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே மாத்திரம்தான் இத்தகைய வறட்சி நிலை என்பதில்லை. இந்தியாவில் இருக்கிற 22 மாநிலங்களில் 15 மாநிலங்கள் வறட்சியாலே பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பக்கத்தில் இருக்கிற கருநாடக மாநிலத்தில் 19 மாவட்டங்களில் 13 மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். ஆனால் இங்கேதான் ஏதோ ஆளும் கட்சியால் தான் இவ்வளவு இடர்ப்பாடுகளும் இடையூறுகளும் ஏற்பட்டிருப்பதைப் போல் ஆளும் கட்சியின்மீது இருக்கிற காழ்ப்புணர்ச்சியின் காரணமாக இயற்கையாக ஏற்பட்ட இந்த நிலைமையையே ஆளும் கட்சியின்மீது திருப்பி விடுவதன் மூலம் ஆளும் கட்சிக்குக் கெட்ட பெயர் உண்டாக்கலாம் என்ற அரசியல் நோக்கத்தோடு பலர் சொல்லுகிறார்கள். அதைக்கூட நான் தடுக்கவில்லை. கிடைக்கிற வாய்ப்பை எப்படியெப்படி எல்லாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமோ அப்படியெல்லாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று நினைப்பதுதான் அரசியல்வாதியின் எண்ணமாக இருக்கும். அதைப்பற்றிக்கூட நான் சொல்ல வரவில்லை. ஆனால் இந்தியாவில் உள்ள 22 மாநிலங்களில் 15 மாநிலங்கள் வறட்சியாலே பாதிக்கப்பட்டிருக்கின்றன. இப்படி இந்தியாவில் பல்வேறு இடங்களிலும் ஒரு பொதுவான தன்மை இருக்கிறது என்பதைக் கண்டு கொண்டிருக்கிறோம். ஆனால் தமிழகத்தில் மட்டும்தான் . . .

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் இந்தியாவில் உள்ள 15 மாநிலங்களில் வறட்சி நிலைமை இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். ஆனால் தமிழகத்தில் வறட்சி எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். வறட்சியை அடுத்து பசி, பசியை அடுத்து பட்டினி என்று கட்டம் கட்டமாக அடுக்கிச் சொன்னார்கள். இன்றைய தினம் இங்கேயிருக்கிற வறட்சியின் காரணமாக, இந்த மாநிலத்து மக்கள் வேறு மாநிலங்களுக்குக் குடியேறக்கூடிய அளவுக்கு வறட்சி இருக்கிறது.

ஆனால் மற்ற 14 மாநிலங்களில் மக்கள் சொந்த மாநிலங்களிலிருந்து வேறு மாநிலங்களுக்குச் சென்று குடியேறுகிற அளவுக்கு வறட்சி இல்லை. நான் இதை ஏதோ அரசியலுக்காகச் சொல்லவில்லை. தமிழ் நாட்டிலிருந்து மட்டும் தான் மக்கள் அண்டை மாநிலங்களுக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள். இது 'தினமணி,' பத்திரிகையைப் பார்த்தாலும், 'தின மலர்' பத்திரிகையைப் பார்த்தாலும் புரியும். வடாற்காடு மாவட்டத்திலிருந்து மக்கள் கருநாடக மாநிலத்திற்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். அதைப்போலவே தர்மபுரி மாவட்டத்திலிருந்தும் கருநாடகத்தில் குடியேறியிருக்கிறார்கள். அப்படிப் பட்ட சூழ்நிலை தமிழகத்தைத் தவிர, வேறு எந்த மாநிலத்திலாவது இருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கினால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பல மாநிலங்களிலும் இல்லாத ஒரு நிலைமை எப்போதும் தமிழகத்தில் உண்டு. குறுவை பயிர் அறுவடையாகும்போதும், சம்பா பயிர் அறுவடையாகும் போதும், தமிழ் நாட்டில் உள்ள இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து மக்கள் தஞ்சை மாவட்டத்திற்குப் போய் குடிபெயருவதும், பிறகு அறுவடை முடிந்த பிறகு மீண்டும் இராமநாத புரம் மாவட்டத்திற்குத் திரும்புவது என்பதும் சாதாரணமாக இங்கே இருக்கும் முறையாகும். வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் தெளிவாக ஒரு அறிக்கையை அளித்திருக்கிறார். ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட மாதத்தில் வடாற்காடு மாவட்டத்திலிருந்து மாவட்டத்தின் ஒரு பகுதியினர் கருநாடக மாவட்டத்திற்குச் சென்று அங்கே அறுவடை செய்து கூலி பெற்றுக்கொண்டு அந்தப் பணி முடிந்ததும் திரும்பு வது வழக்கமாக இருக்கிறது என்று அவர் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். வடாற்காடு மாவட்டத்தில்தான் இப்படிப்பட்ட முறை இருக்கிறது. தர்மபுரி, சேலம், கோவை, புதுக்கோட்டை, தஞ்சை மாவட்டங்களிலிருந்து மக்கள் வாழ முடியாமல் கடல் கடந்து சென்று விட்டார்கள் என்றோ அல்லது வேறு மாவட் டங்களுக்கும் மாநிலங்களுக்கும் போய்விட்டார்கள் என்றோ சொல்லுகிற நிலை இல்லை. ஸ்ரீவஸ்தவா தலைமையில் வந்த குழுவினர்கூட . . .

**திரு. ப. மாணிக்கம் :** தென்னாற்காடு மாவட்டத்தில் திட்டக்குடி வட்டார கிராமத்திலிருந்து வேலை வாய்ப்பு இல்லாததன் காரணமாகவும் வறட்சியின் காரணமாகவும் பஞ்சாப் போன்ற மாநிலங்களுக்கு வேலை தேடிச் சென்றிருக் கிறார்கள். சந்தேகம் இருந்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கேயே சென்று விசாரித்துப் பார்க்கலாம். வேலையும் இல்லை, உணவும் இல்லை என்ற காரணத்திற்காக குடிபெயர்ந்து போவது வேறு சில மாவட்டங்களிலும் நடந்துகொண்டுதான் இருக்கிறது.





**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** வடாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கை தந்திருக்கிறார் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைந்த கடந்த 5 ஆண்டுகளில் அப்படி வடாற்காடு மாவட்டத்திலிருந்து கருநாடக மாநிலத்திற்குச் சென்றிருக்கிறார்கள் என்று எப்போதாவது அறிக்கை வந்திருக்கிறதா? இதிலிருந்தே ஆண்டுதோறும் வடாற்காடு மாவட்டத்தி லிருந்து மக்கள் கருநாடக மாநிலத்திற்குப் போகிறார்கள் என்பது தவறு என்று புலனாகும். இந்த ஆண்டு மட்டும்தான் வடாற்காடு மாவட்டத்தில் இப்படிப்பட்ட நிலைமை உருவாகியிருக்கிறது. வேலை இல்லை. அரிசி கிடைக்கவில்லை; இனிமேல் இங்கே இருந்தால் வாழ முடியாது என்ற சூழ் நிலையில் மக்கள் அங்கிருந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். எனவே இதை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர், பொறுப்பானவர், விவரம் தெரிந்தவர் விட்ட அறிக்கையைச் சொன் னேன். அதிலே தவறு இருக்குமானால், அதற்கான தன்மைகளை எடுத்துச் சொல்லலாம். அப்படிப் போயிருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரத்தைத் தெரிந்து, அறிந்து, தெளிந்த நிலைமையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவருக்குக் கிடைத்த தகவல்களை விட மாவட்ட ஆட்சித் தலைவருக்குப் பொருத்தமான வேறுபல தகவல்கள் கிடைக்கக் கூடும். அப்படி போகவில்லை என்று சொல்லவில்லை. வறட்சி இல்லையென்று சொல்லவில்லை. பற்றாக்குறை இருக்கிறது என்று சொன் னேன். 1979-80-ல் 61 இலட்சத்து 75 ஆயிரம் டன் விளைந்த இடத்திலே 28 இலட்சம் டன் விளைந்திருக்கிறது. 61 இலட்சம் விளைந்த தமிழகத்திலே 28 இலட்சம் டன் விளைந்திருக்கிறபோது, பற்றாக்குறை இருக்கிறது. ஆகவே வேலை தேடிப் போயிருக்கலாம். அதற்கு வாய்ப்பு இருக்கிறது. சில பேர் போகிறார்கள் போகவே போகாதீர்கள், இங்கேயே இருந்து சாகுங்கள், மாநிலப் பற்றோடு இருங்கள் என்று சொல்லுகிற நிலைமை மனிதாபிமானம் படைத்தவர்களுக்கு இருக்காது. வசதியுள்ள இடத்திற்கு வேலை தேடிப் போவது என்பது மனித இயற்கை. நல்ல காலங்களிலேயே அப்படிப் போயிருக் கிறார்கள். அகமதாபாத், போபால், பம்பாய் போன்ற இடங்களைப் பார்த் தால், அங்கே வேலை செய்கிற அத்தனை பேரும் தமிழகத்திலே இருந்து வேலை தேடிப் போனவர்கள்தான். அப்படி நல்ல காலத்திலேயே போயிருக் கிறார்கள். அகமதாபாத் மில்களில் வேலை செய்பவர்கள் தமிழகத்திலிருந்து போனவர்கள்தான். போபாலிலே பார்த்திருக்கிறேன். அங்கேயுள்ள நெறி பர்யிலர் பினாண்டில் வேலை தேடி பெரும்பாலோர் தமிழகத்திலேயிருந்து

போயிருக்கிறார்கள். இப்போதுதான் வேலை தேடிப் போகிறார்கள் என்பதல்ல. நல்ல காலத்திலேயே போயிருக்கிறார்கள் என்பதற்காக குறிப்பிட்டேன். பசி வந்தால் எங்கே சோறு கிடைக்கிறதோ அங்கேதான் போவார்கள். தஞ்சாவூரிலே அரிசி கிடைக்கிறது என்றால், அங்கே போவார்கள். சென்னையிலே குண்டு விழுந்தபோது திருக்கழுக்குன்றம் போனார்கள். காரணம் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக. அப்படிப்பட்ட சூழ்நிலை தொடர்ந்து இருக்கிறது. குறிப்பிட்ட சில இடங்களிலே இருக்கிறது. எல்லா இடத்திலும் இல்லை. தனிப்பட்ட குடும்பத்திலே அவதி இல்லை, நிம்மதியாக மூன்று வேளையும் சாப்பாடு போடுகிறோமே, ஏன் அவர்கள் போகிறார்கள் என்று கேட்டேன்? இங்கே பற்றாக்குறை இருப்பதால் தவிக்கிறார்கள். கூடுமான வரையில் இவற்றைச் சமாளிக்கும் தன்மைகளை மற்றவர்களைப் போல நாமும் எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்ட இவற்றையெல்லாம் எடுத்துச் சொல்லுகிறேன். மனித முயற்சிக்கு எவ்வளவு ஆற்றல், திறமை இருக்கிறதோ அந்த அளவிற்குச் செய்ய முயற்சிக்கிறோம். வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களுக்கு இருக்கிற திறமை எனக்கு இல்லாமல் இருக்கலாம். திரு. நீலநாராயணனுக்கு இருக்கிற திறமை எங்களுக்கு இல்லாமல் இருக்கலாம். "ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ் கடலில் நாழி முகவாது நானாழி." எங்களுக்கு இருக்கிற அறிவை வைத்துத்தான் நாங்கள் ஆற்ற வேண்டும். ஆகவே எங்களுடைய நோக்கங்களிலே கெடுதல் இருக்கிறதா, வேண்டுமென்றே எதையாவது செய்கிறோமா, செய்ய முடிந்ததை சிலவற்றுக்காகச் செய்யாமல் விட்டுக் கொடுத்திருக்கிறோமா போன்ற குற்றச்சாட்டுக்களைச் சொன்னால், நாங்கள் திருத்திக்கொள்ளலாம், அல்லது இல்லாமல் போக்க முயற்சி செய்யலாம். ஆனால் இயன்ற அளவிற்குச் செய்கிறோம் என்பதை எடுத்துச்சொல்வேன். எடுக்க வேண்டிய காலத்திலே நடவடிக்கைகள் எடுத்திருந்தால், இப்படிப்பட்ட நிலைமைகள் வராது என்று சொன்னார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில், போதிய அளவிற்கு மழை பெய்து போதுமான அளவிற்கு விளைச்சல் இருந்தால், ஓரளவிற்கு மார்ஜினல் சர்ப்ளசாக இருக்கும் தமிழகம். கர்நாடகா எப்போதும் மார்ஜினல் டெஃபிசிட் ஸ்டேட். என்றைக்கும் கேரளம் டெஃபிசிட் ஸ்டேட். என்றைக்கும் சர்ப்ளஸ் ஸ்டேட் ஆந்திரம். ஆந்திராவில் சிலபல மாவட்டங்கள் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்ட இந்த நிலையில்கூட ஒரு கோடியே 8 லட்சம் டன் விளையக் கூடிய இடத்தில் இந்த ஆண்டு ஒரு கோடியே 4 இலட்சம் டன் விளைந்திருக்கிறது. நான்கு இலட்சம் டன்தான் குறைவு என்று கணக்குச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அங்கே சிலபல இடங்கள்தான் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதற்கே அவர்கள் 125 கோடி ரூபாய் நிவாரணப் பணிக்காக வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். ஆந்திராவும் அவர்கள் கேட்க





வேண்டிய அளவுக்கு வறட்சியால் தாக்கப்பட்டிருக்கிறது. இங்கே எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்காமல் இல்லை என்பதை இந்த அவையிலேயே எடுத்துச் சொல்லியிருக்கிறேன், மற்ற அவையிலும் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். பல தடவை வற்புறுத்தி எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இங்கே பலரும் எடுத்துச் சொல்லியது மட்டுமல்லாமல், இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களும் இங்கே வந்தது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. நேரிடையாக வந்து பார்த்து நிலைமைகளைப் புரிந்துகொள்ளுகிற முயற்சி எடுத்ததை நாங்கள் வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். அவர் வந்து பார்த்துவிட்டுச் செல்வதற்கு முன்னதாக வந்த குழுவினர் பார்த்துவிட்டு நாங்கள் நினைத்ததற்கு மேல் வறட்சிக் கொடுமை இருக்கிறது என்று சொன்னதோடு மட்டுமல்லாமல், "என்னுடைய சொந்த ஊர் பீகாரிலே கூட இப்படிப்பட்ட சூழ்நிலை இல்லை, அதைவிட கடுமையாக குடிதண்ணீர் கிடைக்காத நீங்கான சூழ்நிலை இருக்கிறது" என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அம்மையார் அவர்கள் பார்த்துவிட்டுச் சென்றார்கள் என்பதைப் பொறுத்த வரையில் மகிழ்ச்சி. பார்த்துவிட்டுப் போகிறபோது வறட்சிப் பணிகளை ஆற்றுவதற்கு பத்து கோடி ரூபாயை உடனடியாக ஒதுக்குகிறோம் என்று சொன்னார்கள். அதிலே நமக்கு மகிழ்ச்சி. இன்னும் பல தடவை வந்தாலும், ரொம்ப மகிழ்ச்சிதான். ஒரு வாரத்திற்கு இரண்டு தடவை வந்து ஒவ்வொரு தடவையும் 10 கோடி ரூபாய், 15 கோடி ரூபாய் ஒதுக்கி 217 கோடி ரூபாய் நமக்குக் கிடைத்தால் சரி. நமக்குப் பணம் வேண்டும். கொழுக்கட்டை வேக வேண்டும். அது எந்தச் சட்டியிலே வேகும், எப்படி வேகும், யார் வேக வைக்கிறார்கள் என்பது பிரச்சினை அல்ல. கடைசியில் ஒன்றைச் சொல்லிவிட்டுப் போனார்கள். முன்கூட்டியே நடவடிக்கை எடுத்திருந்தால், இந்த நிலை வந்திருக்காது என்று மற்றவர்கள் சொன்ன கருத்தைக் கேட்டுக் கொண்டு சொல்லியிருக்கிறார்கள் என்ற முடிவிற்கு வருகிறேனே தவிர, அவரே இருக்கின்ற நிலைமைகளை ஆராய்ந்து பார்த்துவிட்டுச் சொல்லியிருக்கிறார்கள் என்று நினைக்கவில்லை. இங்கேயுள்ள அரசியல் மாச்சரியங்கள் காரணமாக, இந்த ஆளும் கட்சியின் மீது கொண்டுள்ள காழ்ப்புணர்ச்சியின் காரணமாக பலரால் எடுத்துச் சொல்லப்பட்ட கருத்தைப் பிரதிபலிக்கும் முறையில் தான் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார் என்று யூகிக்க வேண்டியிருக்கிறது. இருக்கிற நிலைமைகளை ஆராய்ந்த பிறகு, அம்மையார் அவர்கள் முடிவு சொன்னார்கள் என்று எடுத்துக் கொள்ள முடியவில்லை. நாம் பல தடவை வற்புறுத்தி எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 ஏப்ரல் 8

அரிசியைப் பொறுத்த வரையில் கொள்முதல் ஓரளவிற்குச் செய்கிறோம். ஓரளவிற்குத்தான் கொள்முதல் செய்ய முடிகிறது. சென்ற ஆண்டு கணக்கை எடுத்துப் பார்த்தால், கிட்டத்தட்ட 60 இலட்சம் டன் விளைந்திருந்தால், அவரவர்கள் சொந்த உபயோகத்திற்குப் பயன்படுத்துவதற்காக 30 இலட்சம் டன்னை ஒதுக்கிவிட்டாலும் கூட, வெளிச் சந்தைக்கு 30 இலட்சம் டன்கள் வந்திருக்க வேண்டும். அதில் வியாபாரிகள் 50 சதவிதம் நமக்குத் தர வேண்டும் என்றால், நமக்கு 15 இலட்சம் டன்கள் வந்திருக்க வேண்டும். 15 இலட்சம் டன்கள் வெளிச்சந்தையில் விற்றிருக்கவேண்டும். நமக்கு வந்தது நாலரை இலட்சம் டன், ஐந்து இலட்சம் டன்தான். ஆகவே நமக்குத் தெரியாமல் போயிருக்கிறது. நம்முடைய கண்ணுக்கும் கொண்டு வராமல், கருத்துக்கும் கொண்டு வராமல், கணக்குக்கும் கொண்டு வராமல் இடையிலே போயிருக்கின்ற நிலைமைகளைப் பார்க்கிறோம். இந்த நிலைமைகளைப் பார்க்கிறபோது, மத்திய அரசுதான் ஓரளவிற்குத் தர வேண்டும். நாம் 80 ஆயிரம் டன் கேட்டபோது, 20 ஆயிரம் டன், 25 ஆயிரம் டன், 30 ஆயிரம் டன், 35 ஆயிரம் டன் என்று கொடுத்தார்கள். அதையும் நாம் கொள்முதல் செய்ததையும் வைத்துக் கொண்டு ஓரளவிற்குச் சமாளித்துக்கொண்டு வந்தோம். நாம் சமாளித்துக் கொண்டு வந்திருக்கிற நிலைமையிலும் 1981, 1982 மே மாதம் வரையிலும் கூட மத்திய அரசினுடைய தொகுப்பிற்கு நாம் அரிசி தரவில்லைதான். நாம் அரிசி தரவில்லை என்ற காரணத்தைச் சொல்லி 1981-ல் நிறுத்தவில்லை. தரவில்லை என்று சொல்லி 1982 மே மாதம் வரையில் அவர்கள் நிறுத்தவில்லை. கூடுமானவரை இருக்கிறதை வைத்துக்கொண்டு கொடுத்தார்கள். திடீரென்றுதான் ஜூன் மாதத்திலிருந்து கொடுக்காமல் நிறுத்திவிட்டு இது வரையில் கொடுக்காமல் இருக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டது. அது வரையில் கொடுப்பதற்குக் காரணம் இல்லாமல் இருந்தபோது, திடீரென்று ஒரு காரணம் வருவானேன் என்பதற்கு விளக்கம் கேட்கவேண்டிய அவசியத்திலே நாம் எல்லாம் இருந்தோம். அவர்கள் கொடுக்க வேண்டிய நிலைமை இருந்தது. திரும்பத் திரும்ப நாம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். 1975, 1972 வரையில் சிங்கிள் சோன் கிடையாது. முன்பு ஒரு மாவட்டத்தினுடைய அரிசி பிற மாநிலத்திற்குப் போகக் கூடாது என்று ஒவ்வொரு மாவட்டமும் தடை போட்டு தங்களிடம் நிறுத்தி வைத்துக் கொள்ளலாம் என்ற கட்டுப்பாடு இருக்கிறது. அப்படி கட்டுப்பாடு இருந்தால், நம்முடைய மாநிலத்தினுடைய அரிசி அந்த வகையிலே வெளியே போக வழி வகை ஏற்படாது. கொள்முதல் செய்வதில் இன்னுமொன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த அவையினர் தெளிவு பெற வேண்டும் என்பதற்காகவும்,



1983 ஏப்ரல் 8] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வெளியே இருப்பவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவும் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். கொள்முதல் செய்கிற முழு அதிகாரம் மாநில அரசுக்கு மட்டுமே இல்லை. மத்திய அரசின் கிடங்குகள் இருக்கின்றன, கொள்முதல் அதிகாரிகள் மற்றவர்கள் இருக்கிறார்கள் ஆகவே நாங்கள் கொள்முதல் செய்து அவர்களுக்குத் தரவில்லையென்று எண்ணினால், அவர்கள் கொள்முதல் செய்வதற்கு உரிமை இருக்கிறது. அவர்கள் கொள்முதல் செய்வதற்கு உரிமை தந்திருக்கிறோம். திரு. ராவ் பிரேந்திர சிங் சார்பில் உள்ள அந்தத் துறையினர் கொள்முதல் செய்து தில்லிக்குக் கூட எடுத்துக்கொண்டு போயிருக்கக் கூடும். நாங்கள் கொள்முதல் செய்தால்தான் உண்டு. நாங்கள் கொள்முதல் செய்யாவிட்டால் அவர்களுக்கு இல்லை என்ற நிலை இல்லை. நாம் ஒரு பக்கம் கொள்முதல் செய்கிறோம். மத்திய அரசாங்கத்தின் இந்திய உணவுக் கழகம் மற்றொரு பக்கம் கொள்முதல் செய்யும். கொள்முதல் செய்யாமல் இல்லை. 1981-82-ல் மத்திய அரசாங்க நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் 11 ஆயிரம் டன் கொள்முதல் செய்திருக்கிறார்கள். நம்முடைய இருப்பிலிருந்து தரவில்லை என்ற காரணத்தைச் சொன்னபோது, இந்த அவையில் மட்டுமில்லாமல் ஆரம்பத்திலேயிருந்து எடுத்துச்சொன்னோம். 1971-72 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்டபோது, சர்ப்ளஸ் ஏற்பட்ட போது, 50 ஆயிரம் டன் தந்திருக்கிறோம். கொள்முதல் செய்து வைத்திருக்கிற அரிசியை திருடவோ வேறு வழியில் செலவழிக்கவோ முடியாது. வெளி நாட்டிற்கு அனுப்பப்பட்டது பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. நீல நாராயணன் அவர்கள் குறிப்பிட்டார்கள். வெளிநாட்டிற்கு நாமாக அனுப்ப முடியாது. மத்திய அரசினுடைய அனுமதி இல்லாமல், அவர்களுடைய டைரக்ஷன் இல்லாமல், அவர்கள் நமக்கு உரிமம் வழங்காமல் வேறு எந்த நாட்டிற்கும் அனுப்ப முடியாது. அந்த முறையில் சர்ப்ளஸ் ஏற்பட்டபோது, 1971-72-ல்—இந்த அவையில் திரும்பத்திரும்ப எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. நான் மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன்—50 ஆயிரம் டன் கொடுத்திருக்கிறோம். 1972-73-ல் ஒரு இலட்சத்து 11 ஆயிரம் டன் கொடுத்திருக்கிறோம். 1973-74லே தரவில்லை. வறட்சி நிலை காரண

(பிற்பகல் 12-50)

மாகத் தரவில்லை. 1974-75-லே தரவில்லை. வறட்சி நிலை காரணமாகத் தரவில்லை. 1975-76-லே நெல் விளைவு சரியாக இருந்தது. அப்போது கட்டுப்பாடும் இருந்தது. ஒரு மாநிலத்திலேயிருந்து மற்றொரு மாநிலத்திற்கு அரிசி, நெல் கொண்டுபோகக்கூடாது என்று தடை விதித்திருந்தபோது, நெல் கொள்முதல் செய்ய முடிந்தது. இன்னும் கூட சொல்கிறேன்.

இப்போது டிரேடர்ஸ் லெவி மட்டும்தான் நாம் வைத்திருக்கிறோம். 1974-75-லே பார்மர்ஸ் லெவியும் வைக்கப்பட்டிருந்தது. விவசாயிகளிடத்திலேயும் 50 பர்செண்ட் கொள்முதல் செய்வது, வியாபாரிகளிடத்திலேயும் மில்காரர்களிடத்திலேயும் கொள்முதல் செய்வது, என்ற முறை இருந்ததன் காரணமாக, அதிகமாக நாம் கொள்முதல் செய்தோம். அப்படிச் செய்ததன் காரணமாக 2,93,000 டன் 1975-76-லே அனுப்ப முடிந்தது. 1976-77-லே குடியரசுத் தலைவர் ஆட்சிதான் நடைபெற்றது. அப்போது மத்திய அரசு ஆட்சி நடைபெற்ற போதுகூட, மத்திய அரசு ஆட்சிக்கு மத்திய அரசுப் பிரதிநிதியாக இங்கே ஆளுநர் அவர்கள் ஆட்சி நடந்தபோதுகூட, ஒரு கிலோ அரிசிகூட தரவில்லை. 1976-77-லே தரவில்லை. 1977-78-லே தருவதற்கு இல்லை. வறட்சி நிலை இருந்தது. 1978-79-லே நிலைமைகள் சரியாக இருந்ததன் காரணமாக, 2 லட்சம் டன்கள் நாம் ஒதுக்கி வைத்தோம். அதற்குப் பிறகு 1979-80-லே வறட்சி ஆரம்பமாகி இருந்ததன் காரணத்தினாலேயே, நாமே எழுதினோம். 1980-81-லே பற்றாக்குறை ஏற்பட்டது. நானும் மீண்டும் எழுதினேன், திரு. ராவ் பிரேந்திர சிங் அவர்களுக்கு. "நாங்கள் கொடுப்பதுபற்றி ஆட்சேபணை இல்லை. கொள்முதல் இருக்கிறது, கொடுக்கிறோம். ஆனால் கொடுப்பதை வேறு பல மாநிலங்களுக்கு நீங்கள் 'அலாட்' செய்து கொடுத்துவிடுகிறீர்கள். எங்களுக்கு அரிசிப் பற்றாக்குறை இருக்கிறது என்று கணக்கில் தெரிகிறது. எங்களுக்கு அரிசி வேண்டும் என்று நாங்கள் கேட்கின்றபோது, நீங்கள் பஞ்சாபிலிருந்தோ, ஹரியானாவிலிருந்தோ அல்லது ஹைதராபாத்திலிருந்தோ, ஒதுக்கீடு செய்கின்றபோது, ஒதுக்கீடு செய்கின்ற அளவுக்கு வருவதில்லை. ஒதுக்கீடு செய்வது ஒன்றாக இருக்கிறது. நமக்கு வந்து சேர்வது சரியான அளவுக்கு இல்லாமல் வேறாக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் வேகன்கள் வேறு தேவைப்படுகின்றன. நாங்கள் கேட்கிறபோது கிடைக்கவில்லை. கேட்கின்றபோது ஒதுக்கீடு செய்வது ஒன்றாக இருக்கிறது, வருவது வேறாக இருக்கிறது. கேட்ட வேகன்கள் கிடைக்காத நிலை இருக்கிறது. சென்ற ஆண்டுகூட பஞ்சாபிலே 10 ஆயிரம் டன் அரிசி அங்கே இருக்கின்ற நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகக் கொள்முதல் செய்து வைத்து' அதை அங்கேயிருந்து நகர்த்துவதற்கு வேகன்கள் கேட்டுப்பார்த்து, கேட்டுப்பார்த்து வேகன்கள் அனுமதிக்காததால்தானே, நாம் கொடுத்த அட்வான்சைத் திருப்பிப் பெற்றுக்கொண்டோம். 11 ஆயிரம் டன்னை போன ஆண்டுகூட பஞ்சாபிலேயிருந்து கொண்டு வரமுடியாத சூழ்நிலை ஏற்பட்டது. ஆகவே திரு. ராவ் பிரேந்திர சிங் அவர்களுக்கு எழுதினேன். "நாங்கள் கொடுத்துவிட்டு, மறுபடியும் பற்றாக்குறை இருக்கிறது என்ற கட்டாயத்தில் இருக்கும்போதுதான் நாங்கள் வாங்கு-





வோம். ஆக எங்களுடைய கணக்கிலே அது இருக்கிறது. உங்களிடத்திலே தேவையான அளவுக்குத்தான் கேட்போம். அதிக அளவுக்குக் கேட்கவில்லை." என்று நானே கடிதம் எழுதினேன். அதற்குப் பிறகு ஏற்பட்டிருக்கின்ற சூழ்நிலையைப் பார்த்தீர்களானால்கூட, அடிக்கடி இதைப்பற்றி நாங்கள் கேட்காமல் இல்லை. 1980-ல் நாம் கேட்ட 1,91,000 டன்னில் மத்திய அரசு வழங்கியது 93,205 டன். அதையும் நம்முடைய கொள்முதலையும் வைத்துக்கொண்டு நுகர் பொருள்கள் வாணிபக் கழகத்தின் மூலமாகப் பகிர்ந்து கொடுத்தோம். 1981-ல் நாம் கேட்டது 11,26,000 டன். ஆனால் மத்திய அரசு நமக்கு வழங்கியது 4,80,000 டன். இதை மத்திய தொகுப்பிலிருந்து நமக்கு வழங்கியது. அந்த ஆண்டிலே நாம் மத்திய அரசுக்கு ஒரு கிலோ அரிசி கூட கொடுக்கவில்லை. ஆனால் மத்திய அரசு நம்முடைய நிலைமையைக் கண்டு அந்த 4,80,000 டன் அரிசியைத் தந்தால் தான், நாம் நிலைமையைச் சமாளிக்க முடிந்தது. 1982 மே திங்கள் வரையிலே நாம் கேட்டது 5 லட்சம் டன். ஆனால் மத்திய அரசு ஒதுக்கியது 1,61,000 டன். இப்போது இருக்கின்ற சங்கடங்கள், வேதனை, வாட்டம், வருத்தம், எல்லாம், அப்போது ஓரளவுக்காவது கொடுத்ததன் காரணமாக சமாளித்தோம். ஆனால் இப்போது கொடுக்காததால் கஷ்டப்படுகிறோம். மத்திய அரசு 1981-82 ஆம் ஆண்டிலே தராமல் இருந்திருக்குமேயானால், நாம் அதிகக் கஷ்டப்பட்டிருப்போம். அதே மாதிரி 1982 மே வரையில் 1,61,000 டன் கொடுக்காமல் இருந்திருந்தால், இன்னும் நாம் கொஞ்சம் அவதியுற வேண்டியதாக இருந்திருக்கும். அதே தன்மையை அவர்கள் தொடர்ந்து கடைப் பிடித்திருந்தால் ஓரளவுக்காவது தமிழகத்திலே இருக்கின்ற நிலைமைகளை சமாளித்திருக்கலாம். ஜூன் வரையிலே கேட்டது 1 லட்சம் டன். ஒன்றும் வரவில்லை. ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் வரையில் ஒரு லட்சம் டன் கேட்டோம். அதுவும் வரவில்லை. இன்றைக்கு நவம்பர், டிசம்பர், ஜனவரி, பெப்ரவரி, மார்ச் ஒவ்வொரு திங்களும் 80 ஆயிரம் டன்னாவது அனுப்புங்கள் என்று கேட்டோம். அதற்கும் பதில் வரவில்லை. இதை நான் எடுத்துச் சொல்கின்றபோது. எடுக்கவேண்டிய முயற்சிகளை எடுக்க வேண்டிய நேரத்தில் எடுக்க வேண்டும் என்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்கிறார்கள். வெளியிலேயும் சொல்கிறார்கள். அதிலே நான் சொல்வது எடுக்க வேண்டிய முயற்சிகளை அவ்வப்போது எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஜூனிலே, ஜூலையிலே, ஆகஸ்டிலே வருமா என்று எதிர் பார்த்தோம். ஜூனிலேயே நிறுத்திவிட்டார்கள். ஜூலையிலே அறவே நிறுத்திவிட்டார்கள். திடீரென்று ஒரு கொள்கை முடிவு எடுத்து இருக்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்று இதுவரையிலே அவர்களும்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 ஏப்ரல் 8

விளக்கவில்லை. நம்மாலேயும் தெரிந்துகொள்ள முடியவில்லை. அது வரையிலும் தொடர்ந்து கொடுத்துக்கொண்டு வந்த மத்திய அரசு, மாதா மாதம் நாம் கேட்ட அளவுக்குத் தராவிட்டாலும் ஒரு அரைப் பங்கு ஒரு கால் பங்கு ஒரு முக்கால் பங்கு என்று தந்துகொண்டிருந்த மத்திய அரசு ஜூனிலிருந்து ஏன் நிறுத்திவிட்டது என்பதற்கான காரணத்தை அவர்களும் சொல்லவில்லை, நம்மாலும் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் நாம் வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம். எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை நாம் எடுக்காமல் விட்டோமா என்றால், அடிக்கடி இந்த அவையிலேகூட சொல்லியிருக்கிறோம், எடுத்திருக்கிறோம். மீண்டும் அதை நினைவூட்ட விரும்புகிறேன். 1982 அக்டோபர் திங்களில் டெல்லிக்குச் சென்று பிரதமர் அவர்களை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சந்தித்து, அரிசி தரும்படியாகக் கேட்டார்கள். அக்டோபர் திங்களிலே நேரடியாகச் சந்தித்து அவர்களிடத்திலே கடிதம் கொடுக்கப்பட்டது. 7-1-1983 அன்று பிரதமருக்கு மறுபடியும் அதை நினைவுபடுத்தி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதினார்கள். நிதி அமைச்சர் என்ற முறையில் நான் 14-10-1982 அன்று இதற்காக டெல்லிக்குச் சென்று வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களை தனியாகச் சந்தித்து, உணவு பங்கீட்டுத்துறை அமைச்சர் அவர்களையும் தனியாகச் சந்தித்து, சிவில் சப்ளைஸ் மினிஸ்டரையும் தனியாகச் சந்தித்து அரிசி வழங்க வேண்டும் என்று நான் கேட்டேன். 14-10-1982-லே வற்புறுத்தி நம்முடைய கோரிக்கையை எடுத்து வைத்தேன். 8-11-1982-ல் அவருக்கு நினைவுபடுத்தி அவர்களுக்கு மீண்டும் விரிவாகக் ஒரு கடிதம் எழுதினேன், பேச்சு வார்த்தையின் அடிப்படையில். 13-11-1982-ல் மறுபடியும் நான் டெல்லிக்குச் சென்றேன். வேளாண்மைத் துறை அமைச்சரைக் கண்டேன். இணை அமைச்சராக இருந்த திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்களையும் நேரிலே கண்டு இவ்வளவு பற்றாக் குறை இருக்கிறது என்று சொன்னேன். பபர் ஸ்டாக் என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் சொன்ன மாதிரி பபர் ஸ்டாக் சேர்த்து வைத்திருந்தால், கட்டுப்பாடு இல்லாமல் குறைபாடு இல்லாமல் வழங்க முடியும். குறைந்தது 3 மாத கால அளவுக்காவது பங்கீட்டுக் கடைகளிலே பகிர்ந்து கொடுக்கின்ற அளவுக்கு நமக்குத் தொகுப்பு இருக்க வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் மறுபடியும் அவர்களிடத்திலே எடுத்துச் சொன்னேன். 13-11-1982 அன்று மாண்புமிகு திரு. பகவத் ஜா ஆசாத் கூட்டிய உணவு அமைச்சர்கள் மகாநாட்டில் நான் கலந்துகொண்டேன். அரிசி வேண்டுமென்ற தன்மையை எடுத்துச் சொன்னேன். "இப்படிப்பட்ட பயங்கரமான சூழ்நிலை வருகிறது. வறட்சி நிலைமை கடுமையாக ஆகிக்கொண்டிருக்கிறது. மேலும் ஆகும்



1983 ஏப்ரல் 8] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

போல் இருக்கிறது" என்று விவரங்களையெல்லாம் எடுத்துச் சொன்னேன். அவர்களிடத்திலே நாம் கேட்டு வற்புறுத்தினோம். அதற்குக்கூட திரு. பகவத் ஜா ஆசாத் அவர்கள் சொன்னது என்னவென்றால், "எனக்கு சிவில் சப்ளைஸ் அமைச்சர் என்று பெயர் இருக்கிறதே தவிர அரிசிப் பங்கீடு முற்றும் வேளாண்மைத்துறையில் இருக்கிறது. சிமெண்ட் வேண்டுமென்றால் அந்த அமைச்சரைக் கேட்க வேண்டும்." இதை அங்கேயிருந்து எங்களுக்குச் சொல்கிறார். "எல்லா மாநில அமைச்சர்களும் கேட்டுக்கொண்டிருக்கிறோம். வங்காளம் கேட்கிறது, திரிபுரா கேட்கிறது, கேரளம் கேட்கிறது, நாங்களும் கேட்கிறோம். எல்லோரும் கேட்கிறோம். அது வேண்டுமென்றால் அதற்கு என்று ஒரு அமைச்சர் இருக்கிறார் — தொழில் அமைச்சர் இருக்கிறார். அவரைப் போய் கேளுங்கள். உங்களுக்குச் சர்க்கரை வேண்டுமென்று சொன்னால் அதையும் அவர்களிடத்திலே போய் கேளுங்கள் என்று ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு அமைச்சர் இருக்கின்றார், அவரைப் போய் கேளுங்கள்" என்று சொல்கிறார். "பாமாயில் வேண்டுமென்றால் என்னிடத்திலே கேளுங்கள். அதை மட்டும் தருகிறேன். மண்ணெண்ணெய் கேட்கும்போது, அதற்கு கிரோசின் மினிஸ்டர், பெட்ரோலியம் மினிஸ்டர் அவர்களிடத்திலே கேட்க வேண்டும். அவர் சொல்வதிலிருந்து எனக்கு என்ன புரிந்தது என்றால், அமைச்சர் பதவியிலே உட்கார வைத்து இது எல்லாம் அவர்களிடம் கொடுக்காமல் இருக்கிறார்கள், "நீங்களாவது சொல்லுங்கள்" என்கின்ற மாதிரி இருந்தது எனக்கு.

THIRUMATHI TARA CHERIAN: May I ask a question, Sir? The Hon Minister is now giving many details. It seems that there had been a big communication-gap between the people and the Government. The Government could have, through the Press and other media, given all these details about the Hon. the Chief Minister and other Members of the Cabinet travelling up and down. If that had been done, the Government would not have been subjected to so much of criticism. We never knew all the details before.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அது நாள் வடிவிலே மற்றவைகளில் எல்லாம் வரும். 7-1-1983 வேளாண்மைத் துறை அமைச்சருக்கு இந்தக் கோரிக்கையை வலியுறுத்திக் கடிதம் எழுதினேன். அது மட்டுமல்ல அதிகாரிகள் மட்டத்திலே, அவர்களை 'கன்வின்ஸ்' பண்ணி அவர்கள் எழுதி வைத்திருக்கின்ற கருத்துக்களின் அடிப்படையிலே முடிவு எடுக்க வாய்ப்பு இருக்கும் என்ற காரணத்தினால் அந்த அதிகாரிகளிடத்திலே நிலைமை களை எடுத்துச்சொல்லி, அந்த அதிகாரிகள் குறிப்பிட்டுத் தந்தால் எளிதாக

இருக்கும் என்று கருதி, உணவுத் துறைச் செயலரை அங்கே நேரடியாக அனுப்பினேன். கடிதம் வேண்டாம், டெலிபோன் வேண்டாம் என்றும், அவரிடம் நேரில் போய் பேசுங்கள் என்றும் சொல்லி, 8-9 1982, 19-9-1982, 14-10-1982, 12-11-1982, 22-12-1982 இந்த நாட்களிலே எல்லாம் உணவுத் துறைச் செயலர் நேரடியாகப் போய் அங்கேயிருக்கின்ற அதிகாரிகளிடம் போய் பேசிவிட்டு வந்திருக்கிறார். தமிழ் நாடு உணவுத் துறையினுடைய இணைச் செயலர் அவர்களும் நவம்பர் 82. டிசம்பர் 82, 21-1-1983-லே போய் பேசி விட்டு வந்திருக்கிறார்கள். 23—10—1982-ல் முன்னாள் இணை வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் சென்னைக்கு வந்தபோது, கோட்டையில் வருவாய்த்துறை அமைச்சர் மற்ற உயர் அதிகாரிகளை வைத்து பேச்சுவார்த்தை நடத்தியபோது கூட, அந்தப் பிரச்சினையை எடுத்துச் சொன்னோம். அவரைப் பொறுத்தவரையிலும், தமிழகத்திலே பல இடங்களிலே பேசுகிறபோது தமிழகத்தை நாங்கள் தவிக்க விட மாட்டோம் என்றும் அந்தப் பற்றாக்குறையை நீக்க முயற்சி செய்வோம், என்றும் அவர் இணை அமைச்சராக இருந்தபோது வாக்குறுதிகளைத் தந்திருக்கிறார். இவ்வளவுக்கும் பிறகு நாம் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்பவர்களுக்குதான் இந்த விளக்கத்தைத் தருகிறேன். இவ்வளவு நடவடிக்கை எடுத்ததற்குப் பிறகும் ஒரு கடிதம் வரவில்லை. 10—1—1983

(பிற்பகல் 1-00)

அன்றுதான் ஒரு கடிதம் வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. ராவ் பிரேந்திர சிங் அவர்களிடமிருந்து வந்தது. "தமிழ் நாட்டில் இருக்கிற அரிசியை நலிந்த பிரிவினருக்கு மட்டும் நியாயமான முறையில் பிரித்துக் கொடுங்கள்"—இந்த அறிவுரைதான் வந்தது. "உங்களிடம் இருக்கும் அரிசியை நலிந்த பிரிவினருக்குத் தாருங்கள், நியாயமாகப் பங்கீடு செய்கிற அளவுக்கு, நலிந்த பிரிவினருக்குத் தாருங்கள்" என்று சொன்னார்கள். இதற்குப் பிறகு வராது என்று சொன்ன பிறகு, ஆயிரம் ரூபாய்க்குக் கீழே வருமானம் உள்ளவர்களுக்குக் கொடுப்போம் என்று முடிவெடுத்து, ஓரளவுக்கு அதைக் கடைப் பிடித்து வருகிறோம். எதற்காக இதைச் சொல்ல வருகிறேன் என்றால், அரசு முயற்சிகள் அத்தனையும் எடுத்தாலும்கூட, ஓரளவுக்கு உதவி செய்ய வேண்டிய பொறுப்பு மத்திய அரசிடம் இருக்கிறது என்பதற்காகத்தான். மத்திய அரசினுடைய சூடு கூறிய விவாதத்தை இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்கள் குறிப்பிட்டார்கள். நிர்வாகத்தில் குறைபாடு இருக்கிறது, குற்றங்கள் நிகழ்கின்றன என்பதை ஒத்துக்கொள்கிறேன். நிர்வாகம் செம்மையாக நடைபெறுகிறது என்று வாதாட விரும்பவில்லை. இந்தியாவில் உள்ள 22 மாநிலங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும் நிலையிலே,





இன்னும் சொல்லப்போனால் வெள்ளைக்காரர்கள் ஆண்ட காலத்திலிருந்து சொல்கிறேன்; இன்னும் சொல்லப்போனால் கட்சிமாச்சரியம் இல்லாமல் சொல்கிறேன், எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும், அகில இந்தியாவிலும் நிர்வாகத்திலே முன்னணியில் தமிழகம் இருக்கிறது என்பதைத் திட்டவட்டமாகச் சொல்ல விரும்புகிறேன். நிர்வாகத்தில் குறைபாடுகள் இருக்கலாம். இன்னும் சீர்திருத்த வழி இருக்கிறது. ஒத்துக்கொள்கிறேன். 1981 டிசம்பர் மாதத்தில் இந்தியப் பிரதமர், திருமதி இந்திரா காந்தி அவர்கள் ஒரு நாள் நோட்டீஸ் கொடுத்து, 5 ஆண்டுத் திட்டம் நிறைவேற்றப்படும் தன்மைகளைப் பார்க்க வருகிறேன் என்று சொன்னவுடன், அதிகாரிகளைக் கூட்டிவைத்து, அவர்களுக்கு விளக்கி, எந்தெந்த அளவுக்கு நிறைவேற்றி இருக்கிறோம் என்பதையும், மத்திய அரசு அனுமதி தந்ததைவிட 60 கோடி, 70 கோடி. 106 கோடி ரூபாய் அளவுக்குக் கூடுதலாகச் செய்திருக்கிறோம் என்றும் தெரிவித்த பின்னர்; குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைச் சிறப்பாக நிறைவேற்றுகிறோம் என்றும் தெரிவித்த பின்னர், பிரதம அமைச்சரவர்கள் திருப்தி அடைந்தார்கள். அதோடு, நிருபர்கள் கூட்டத்தில் திருப்தி அடையும் அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன, சிறப்பாகத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்கள் என்ற தன்மையை அவர்கள் சொல்லிவிட்டுச் சென்றார்கள்.

பங்கீட்டைப் பொறுத்தவரையில், பின்னாலே சொல்ல இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். பங்கீட்டு முறையைப் பொறுத்தவரையில் கூட, மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, செக்ரட்டரீஸ் கான்பரன்சில்கூட மத்திய அமைச்சகத்தினுடைய செயலாளர் தமிழ் நாட்டினுடைய செயலாளருடைய யோசனை, மற்றவைகளைக் கேட்டு எப்படி நடைமுறைப்படுத்தப்போகிறார்கள் என்று அறிந்துகொண்டு செய்தால் நல்லது என்று யோசனை சொல்லியிருக்கிறார்கள். டாகுமென்டரி ஃபிலிம், எடுத்து, இந்தியா முழுவதும் காட்டுவது நல்லது என்று தெரிவித்து, அதற்கு தமிழகத்தைத் தேர்ந்தெடுக்கிறோம் என்று சொல்லி, மலைப் பகுதிகள், சிற்றூர்கள், நகரங்கள் ஆகிய இடங்களில் எப்படி நடைபெறுகிறது என்று டாக்குமென்டரி ஃபிலிம் எடுத்து, ஒரு திங்களுக்கு முன்னால் அதைச் செம்மைப்படுத்திப் போயிருக்கிறார்கள். அந்த அளவுக்குப் பணியாற்றி வருகிறோம் என்பதைக் காணலாம்.

இவ்வளவுக்கும் பிறகு 5,000 டன் கோதுமை, 5,000 டன் அரிசி அனுப்புவதாக திரு. பகவத் ஜா ஆசாத் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதிலே கட்சி வேறுபாடு இல்லாமல் எல்லோரும் வற்புறுத்திய நிலையில், ராஜ்ய சபா, பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும், வேறு மாநிலத்தைச்

சேர்ந்த உறுப்பினர்களும்—ஜனதா, லோக்கல் உறுப்பினர்களும்—சேர்ந்து கேட்டபோது, அவர் ஆத்திரத்தோடு கூறினார் 'அரிசி டெல்லியில் உள்ள கூரையிலா கொட்டுகிறது' என்று அப்போது உறுப்பினர்கள் அதுபற்றி எடுத்துச் பேசி, "இவ்வளவு அரிசி இருக்கிறது, இவ்வளவு தர முடியும் என்று சொல்லுங்கள்" என்று கேட்டார்கள். அதைப் பார்த்து காங்கிரஸ்காரர்கள் சிரித்த உடனே, ராஜ்ய சபை உறுப்பினரான திரு. செழியன் அவர்கள் "இதுபோன்றுதான் 'பிரெஞ்சுப்' புரட்சியின்போதும் அரண்மனையில் இருக்கிறவர்கள் சிரித்தார்கள், அந்தச் சிரிப்பு போலியான சிரிப்பு; ஆனால் குடிசையில் உள்ள மக்களின் அழுகைதான் உண்மையான அழுகை, கடைசியில் அழுகைதான் வெற்றி பெறும் என்று வரலாற்றுப் பேரறிஞர்கள் எழுதியிருக்கிறார்கள்" என்று சொல்லியதோடு, "கூரையில் விளைகிறதா என்று கேட்டால், அது எங்களைக் கிண்டல் செய்வதாக இருக்கலாம்; நீங்கள் சிரிக்கலாம்; அதன் விளைவை அனுபவிக்க இருக்கிறீர்கள்" என்று பதில் சொன்ன குறிப்பு இருக்கிறது.

5,000 டன் தந்தார்கள். மகிழ்ச்சியடைந்தோம். அது போதாது என்று சொன்னோம். 80 ஆயிரம் டன் அரிசியும், 40 ஆயிரம் டன் கோதுமையும் தந்தால், இந்த ஆண்டு சமாளிக்கலாம், அடுத்த ஆண்டு தென் மேற்குப் பருவ மழையும், வட கிழக்குப் பருவ மழையும் பெய்தால், ஓரளவுக்குப் பிரச்சினையைச் சமாளிக்கலாம் என்று அவர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் நேரடியாக வந்த பிறகு 10,000 டன் தருகிறோம் என்று சொல்லிச் சென்ற பிறகு, 15,000 டன் அரிசியும், 15,000 டன் கோதுமையும் தருவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நன்றி சொல்லுகிறோம். அதில் கோபித்துக் கொள்கிற மாதிரி இல்லை. ஆனால், அது போதாது என்று இன்றைக்கும் வற்புறுத்துகிறோம்.

15,000 டன் அரிசி, 15,000 டன் கோதுமை—30,000 டன் வருகிறது. ஒரு லட்சத்து இருபதினாயிரம் டன் தேவைப்படும் இடத்தில் இன்னும் கொஞ்சம் கூடுதலாகத் தந்தால் சமாளிக்கலாமென்று தெரிவித்திருக்கிறோம். அகில இந்திய அளவில் பார்த்தால்கூட—இருக்கிற நிலைமையைச் சொல்கிறேன்—நமக்கு இருக்கிற கஷ்டத்தை, அவர்களுக்கு இருக்கிற கஷ்டத்தைச் சொல்கிறேன். 1978-79-ல் எல்லா உணவுப் பொருள்களும் சேர்த்து, மொத்த உணவு உற்பத்தி அரிசி, கோதுமை எல்லாம் சேர்த்து, 13 கோடியே 20 லட்சம் டன்களாகும். 1981-82-லே 13 கோடியே 30 லட்சம் டன்களாகும். 1982-83; சென்ற ஆண்டிலே, ஓரளவிற்குக் குறைந்தது. கிட்டத்தட்ட ஒரு லட்சம் டன்கள் விளைவு குறைந்திருக்கிறது. 13 கோடியே 30 லட்சம்



டன்கள் விளைந்த இடத்தில் 1982-83-லே 12 கோடியே 25 இலட்சம் டன்கள்தான் விளைந்திருக்கிறது. ஆனால் மத்திய அரசு மொத்தத்திலே கொள்முதல் செய்திருப்பது 12-1/2 சதவிகிதம்தான். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்ன மாதிரி, கிட்டத்தட்ட அரிசியின் அளவு 6-லிருந்து 6-1/2 லட்சம் டன்கள்; மீதி கோதுமை என்று கணக்கு இருக்கிறது. அதிலே எட்டில் ஒரு பங்குதான் அவர்கள் கொள்முதல் செய்திருக்கிறார்கள். நமக்குப் பற்றாக்குறை இருப்பதால், மத்திய அரசு தன்னுடைய இருப்பிலிருந்து தராததன் காரணத்தால், நெல்லை விளைவித்து பிற மாவட்டங்களுக்குத் தரும் வாய்ப்பைக் கொண்ட தஞ்சை மாவட்டத்திலே நூற்றுக்கு நூறு அரசே கொள்முதல் செய்ய வேண்டுமென்ற நிலைக்கு, கட்டத்திற்குப் போயிருக்கிறோம். அது வேதனையான கட்டம் தான், விருப்பமில்லாத கட்டம்தான். விவசாயிகளுக்கும் வியாபாரிகளுக்கும் கஷ்டம் தரும் கட்டம்தான், விவசாயிகளிடத்தில் நேரடியாக நூற்றுக்கு நூறு அரசே கொள்முதல் செய்ய வேண்டுமென்றும், வியாபாரிகள் பண்ணக் கூடாது என்றும், விவசாயிகள் தங்களுடைய சொந்த உபயோகத்திற்குப் போக மீதி விற்க வேண்டுமென்றால் அரசுதான் கொள்முதல் செய்ய வேண்டுமென்று உத்தரவு போட்டு, அதற்குப் பிறகு தஞ்சை மாவட்டத்தைச் சுற்றியுள்ள திருச்சி மாவட்டத்திலுள்ள தாலுக்காக்களுக்கும் அதை நீட்டித்தால், இரண்டு கஷ்டங்கள் ஏற்படுகின்றன. அங்கேயுள்ள வியாபாரிகளுக்கு வியாபாரம் செய்ய முடியாத கஷ்டம் ஏற்படுகிறது. 50 சதவிகிதம் அரசு வாங்கிக்கொண்டு, 50 சதவிகிதத்தை வியாபாரிகளுக்கு விட்டால்தான், அந்த நெல்லை சேலம், கோவை, தர்மபுரி அல்லது பற்றாக்குறை மாவட்டங்களுக்கு அவர்கள் எடுத்துச் செல்ல வாய்ப்பு இருக்கும், விளைகின்ற தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் நாம் கொள்முதல் செய்தால், உபரி மாவட்டத்திலிருந்து பற்றாக்குறை மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்ல அரிசி இல்லாத காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னது போல, மற்ற மாவட்டங்களில் ஒரு கிலோ அரிசி 4 ரூபாய், 4-1/2 ரூபாய், 5 ரூபாய் அளவுக்குப் போகும் நிலைமை இருக்கிறது. ஓரளவுக்கு ஆந்திராவுக்குச் சென்று தனியார் வியாபாரிகள் வாங்கலாமென்று சொன்னார்கள். நாம் வாங்கக்கூடாது என்று சொன்னார்கள். நமது நுகர்பொருள் வாணிபக் கழகம் அந்த மாநிலத்து வாணிபக் கழகத்தோடு பேசி, வாங்கலாம் என்றால், 'அதற்கு அனுமதியில்லை' என்றார்கள். இந்த அரசு, ஆந்திர அரசுடன் பேசலாமா என்றால், அதற்கும் அனுமதியில்லை. அப்படி ஆந்திரா 'அரிசி கொடுக்க முடியும்' என்றால், அதை எங்களுக்குத் தாருங்கள், அதை ஏன் தமிழகத்திற்குத் தருகிறீர்கள் என்று சொல்லி விட்டார்கள். தனி வியாபாரிகள் லெவி கொடுத்துவிட்டு வரலாம் என்று வைத்திருக்கிறார்கள்.

50 சதவிகிதம் லெவி கொடுத்துவிட்டு 50 சதவிகிதத்தை இங்கே கொண்டு வந்து, விலை சற்று கூடுதலாக இருந்தாலும் பரவாயில்லை, தமிழகத்திலே அரிசி இல்லை என்ற நிலை இல்லாமல், அரிசி கிடைக்கிறது என்ற நிலையை வெளிச் சந்தையில் ஏற்படுத்த வேண்டுமென்று அவர்களை அனுமதித்து விட்டோம். இப்போது இன்னொரு சங்கடம் ஏற்பட்டிருக்கிறது. இப்போது 50 சதவிகிதம் நெல்லைக் கொள்முதலுக்குத் தந்துவிட்டு, மீதியைக் கொண்டு வருகிறார்கள். அங்கேயுள்ள மாண்புமிகு முதலமைச்சரவர்கள் போட்டுள்ள திட்டத்தால் 500 ரூபாய்க்குக் கீழே வருமானம் உள்ளவர்களுக்கு ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்குத் தருவது என்பதை தெலுங்கு வருடப் பிறப்பு தினத்தி லிருந்து நடைமுறைப் படுத்துவதாகச் சொல்லி, அதற்கு ஒவ்வொரு வியாபாரி யும் முதலில் 50 சதவிகிதம் லெவி கொடுத்த பிறகு, மீண்டும் 25 சதவிகிதம் லெவி இந்தத் திட்டத்திற்குத் தர வேண்டுமென்றும், மீதி 25 சதவிகிதத்தை வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லலாம் என்றும் சொல்லியிருக்கிறார்கள்

(பிற்பகல் 1-10)

நம்முடைய வியாபாரிகள் ஆந்திராவுக்குப் போய் அங்குள்ளவர்களுக்கு 75 சதவிகிதம் லெவியைக் கொடுத்து விட்டு, 25 சதவிகிதத்தைக் கொண்டு வருவதில் ஏற்படுகிற நஷ்டத்தை ஓரளவு ஈடுகட்ட வேண்டியிருப்பதால் தான், ஓரளவு நம்மைப் பொறுத்தவரையில் விலை உயர்வு என்பது தவிர்க்க இயலாததாகிவிடுகிறது. காரணம் நாம் அங்கிருந்து அதிக விலை கொடுத்து கொள்முதல் செய்ய வேண்டியிருக்கிறது. ஏற்கெனவே நமக்கு மத்திய அரசு கொடுத்து வந்த நிலைமை தொடர்ந்து இருந்திருந்தால், நாம் ஓரளவு விலைகளைக் கட்டுப்படுத்தியிருக்க முடியும். ஆனால் நிலைமை இப்போது அப்படி இல்லை.

அடுத்து, பிற மாநிலங்களுடைய நிலைமையைப் பார்ப்போமேயானால், இன்றைக்கு ராஜஸ்தானில் ஒரு கிலோ அரிசி 7 ரூபாய்க்கு மேல் விற்கிறது. இதுபற்றி எக்கனாமிக் டைம்ஸ்-ல் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். சென்ற ஆண்டு மத்திய அரசு வெளிநாடுகளிலிருந்து 20 லட்சம் டன் கோதுமையை அதிக விலை கொடுத்து வாங்கி பிறகு சப்சிடி கொடுத்து குறைந்த விலைக்கு விற்றது என்று சொன்னார்கள். அதிலும் ஜம்மு-காஷ்மீர் போன்ற மாநிலங்களுக்கு அதிகமாக சப்சிடி கொடுத்தார்கள். 800 கோடி ரூபாய்க்கு மேல் மத்திய அரசு சப்சிடி என்கிற பெயரில் அதற்காக அதிகமாகச் செலவு செய்திருக்கிறது. அப்போது கோதுமை பற்றாக்குறை இருந்தபடியால், மத்திய அரசு கோதுமையை வெளிநாடுகளிலிருந்து வரவழைத்தது. இப்போது நமக்கு அரிசிப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது.



இதுபற்றி நாம் கேட்டால், மத்திய அமைச்சர் "அரிசியை வெளிநாடுகளி லிருந்து வரவழைக்க முடியாது, இருப்பதை வைத்துத்தான் சமாளிக்க வேண்டும்" என்று சொல்லியிருக்கிறார். இதுகுறித்து அத்தனை பாராளு மன்ற உறுப்பினர்களும் பாராளுமன்றத்திலே வற்புறுத்தியிருக்கிறார்கள். கோதுமையை வரவழைத்து சப்சிடி கொடுக்கும்போது, மத்திய அரசு இப்போது அரிசிப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கும் நேரத்தில் ஏன் அரிசியை வரவழைக்கக் கூடாது என்று இங்கே கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் மத்திய அரசு வெளிநாடுகளிலிருந்து கோதுமையை வாங்கி, சப்சிடி கொடுத்துக்கொண்டிருக்கும் நிலையில், நாம் ஏன் நம்முடைய நெல் உற்பத்தியாளர்களின் நலன் கருதியும், விவசாயிகளின் நலன் கருதியும் விலையை உயர்த்திக்கொடுக்கக் கூடாது என்று கேட்டார்கள். அந்தக் கருத்தை நாமும் வற்புறுத்திக்கொண்டுதான் இருக்கிறோம். நாம் அதற்கு தயங்கக் காரணம் ரிசர்வ் பாங்கின் கிரடிட் நமக்கு வேண்டும். அவர்கள் மேற்கொண்டு அதிக விலை கொடுக்கக் கூடாது என்கிறார்கள். விவசாயிகளிடமிருந்து கட்டாயக் கொள்முதல் செய்ய நிர்ணயிக்கப் பட்டிருக்கும் விலை குவிண்டால் ஒன்றுக்கு 122 ரூபாய். ஆனால் நாம் 15 ரூபாய்க்கு மேல் அதிகமாக 137 ரூபாய், 141 ரூபாய், 145 ரூபாய் என்று அதிக விலை கொடுத்துத்தான் வாங்குகிறோம். அதோடுகூட 145 ரூபாய் என்று விலையை நிர்ணயிக்க வேண்டுமென்றும் கேட்டிருக்கிறோம். இப்போது அவர்களுக்கும் இதனால் பலவிதமான செலவுகள் அதிகமாகி இருக்கின்றன. அவர்கள் இப்போது கோதுமையின் விலையை 151 ரூபாய்க்குத் தூக்கியிருக் கிறார்கள். அரிசியின் விலையையும் தூக்க வேண்டுமென்று நாங்கள் சொல்லி யிருக்கிறோம். மாநாடு நடைபெற்றபோது, அதிலேகூட இந்தக் கருத்தைச் சொன்னோம். இதோடு மாத்திரமல்லாமல், கோதுமையை ஒரு ஏக்கரில் உற்பத்தி செய்யும்போது ஆகிற செலவு, இடுபொருள் போன்றவைகளுக்காக ஆகிற செலவு போன்றவற்றையும் ஒப்பிட்டுப் பார்த்தால், அரிசி உற்பத்தி செய்ய அதிகச் செலவாகிறது. அந்த வகையிலாவது அரிசியின் விலையை உயர்த்த வேண்டுமென்று கேட்டோம். அதற்கு அவர்கள் 1948 ஆம் ஆண்டிலே விலை நிர்ணயிக்கப்பட்டதாகவும், அதன் அடிப்படையில், பெர்சன்டேஜ் அடிப்படையில் விலையைக் கூட்டிக் கொண்டு போகிறோம் என்றும் சொன்னார்கள். எப்போதோ நடைபெற்ற தவறைத் திருத்தக் கூடாதா என்று கேட்டதற்கு. அதுபற்றிய தன்மைகளையெல்லாம் ஆராயவில்லை என்று சொன்னார்கள். எப்போதோ நடந்த தவறைத் தொடர்ந்து இப்போதும் பெர்சன்டேஜ் அடிப்படையில்தான் விலையை உயர்த்திக் கொண்டிருக் கிறார்கள். கோதுமைக்கு 17 பெர்சன்ட் விலையை உயர்த்துகிறார்கள் என்றால் அரிசிக்கு 15 பெர்சன்ட்தான் விலையை உயர்த்துகிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** கோதுமைக்கும் அரிசிக்கும் எப்போதுமே ஒருமைப்பாடு கிடையாது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துச்சொன்ன கருத்துக்களுக்கு ஏற்ப நாங்களும் மக்கள் கஷ்டப்படக் கூடாது என்பதற்காக 80 ஆயிரம் டன்னிலிருந்து 85 ஆயிரம் டன் வரை பொதுமக்களுக்கு விநியோகிப்பதற்காக தருகிறோம். அதையும் கிலோ 1 ரூபாய் 75 காசுக்குத் தருகிறோம். அதேசமயத்தில் கடைகளிலேயிருந்து கிலோ ஒன்றுக்கு 4 ரூபாய்க்கு வாங்குகிற நிலைமை இருக்கிறது. இப்போது பலர் கடைகளிலேயிருந்து வாங்குகின்ற நிலைமை இருந்தும்கூட, நம்முடைய 'ஆப்டேக்' 85 ஆயிரம் டன் அளவுக்கு உயர்ந்திருக்கிறது. ஆனால் இது முன்பு ஆயிரம் டன் அளவுக்குத்தான் இருந்து வந்தது. நம்மிடம் இதற்கு மேலும் 1 லட்சம் டன் இருக்கும் நிலைமை இருக்கிறது என்றால், கேட்பவர்கள் எல்லோருக்கும் கொடுத்து விடலாம்.

இப்போது இருக்கிற சூழ்நிலையில் ஒரு குவிண்டால் நெல்லின் விலை ரூபாய் 122. ஆனால் நாம் அதனை 15 ரூபாய் அதிகமாகக் கொடுத்து வாங்குகின்ற நிலைமை இருக்கிறது. ஆக, அது அரிசியாக வருகின்றபோது ஒரு குவிண்டால் அரிசியின் வாங்கும் அடக்க விலை 254 ரூபாய் வருகின்றது. அப்படி என்றால், ஒரு கிலோ அரிசியின் வாங்குகின்ற அடக்க விலை 2 ரூபாய் 54 காசு ஆகிறது. ஆனால் நாம் ஒரு கிலோ அரிசியை 1 ரூபாய் 75 காசு என்று விற்கிறோம். ஆக, ஒரு கிலோ அரிசியில் நமக்கு நஷ்டம் 79 காசு, ஒரு லட்சம் டன் அரிசியை இந்த வகையில் நாம் விநியோகித்தால், நமக்கு ஏற்படும் நஷ்டம் 7 கோடியே 90 லட்சம் ரூபாய். இது லெவியைப் பொறுத்தவரை நிலைமை.

ஆனால் வெளிச்சந்தையில் நாம் வாங்குகின்றபோது, ஓரளவுக்குக் கூடுதலாக விலை உயர்கிறது. அப்படி இருந்தால்கூட பரவாயில்லை, மக்கள் எந்த வகையிலும் கஷ்டப்படக்கூடாது என்கிற அடிப்படையில், வாங்கலாமென்கிற எண்ணத்தில் அனுமதி கேட்டால், இப்போது மொத்தம் 70 ஆயிரம் டன் வாங்கலாமென்ற கிரடிட்டை அளித்திருக்கிறார்கள். 20 ஆயிரம் டன் அரிசியை பஞ்சாப், அரியானா போன்ற மாநிலங்களிலிருந்தும், 50 ஆயிரம் டன் அரிசியை ஆந்திராவிலிருந்தும் வாங்கலாம் என்று அனுமதி அளித்திருக்கிறார்கள்.

வெளிச்சந்தையில் நாம் வாங்கினால், ஒரு குவிண்டால் அரிசியின் விலை ரூ. 330. வெளிச்சந்தையில் வாங்குவதன் மூலம் நமக்கு ஒரு குவிண்டாலுக்கு ஆகின்ற அடக்க விலை ரூபாய் 363. ஆக, கிலோ ஒன்றின் அடக்க விலை ரூபாய் 3.69. ஆனால் நாம் நியாய விலைக் கடைகளின் மூலமாக விற்கின்ற



விலை ரூபாய் 1.75. ஒரு கிலோ அரிசியை விற்பதன் மூலம் நமக்கு ஏற்படுகின்ற நஷ்டம் ரூபாய் 1.94. ஒரு லட்சம் டன் அரிசியை நாம் வாங்கி, குறைந்த விலையில் விற்பதனால், நமக்கு ஏற்படுகின்ற நஷ்டம் ரூபாய் 19 கோடியே 40 லட்சம். இந்த வகையில் நாம் வழங்குகின்ற சப்சிடி இந்த ஆண்டு ரூபாய் 100 கோடியைத் தாண்டி விடும். இருந்தாலும்கூட, பொதுமக்களின் நன்மையைக் கருதி, எல்லோருடைய ஒத்துழைப்பின் அடிப்படையில் இதற்கு வேண்டியவைகளை நாம் செய்ய வேண்டிய அத்தியாவசியத்தில் அல்லது கட்டாயத்தில் இருக்கிறோம். எப்படியாவது நமக்குக் கிடைக்க வேண்டும் என்பதுதான் நம்முடைய விருப்பம்.

இங்கே எல்லோரும் நியாய விலைக் கடைகளின் மூலம் பங்கீடு செய்கின்ற வேளையில் ஏற்படுகின்ற குறைகளை எடுத்துச் சொன்னார்கள். அப்படிப்பட்ட பிரச்சினைகள் என்னுடைய கவனத்திற்கும் அடிக்கடி வருகின்றன. பேரவையிலும், மேலவையிலும்கூட இப்படிப்பட்ட பாங்குகள் நடைபெறுவதாகச் சுட்டிக்காட்டப்படுவதை நாம் அடிக்கடி பார்க்கிறோம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணவு மற்றும் நுகர் பொருள் வழங்கல் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பை அவை முன் வைத்துவிட்டுப் பேசும்போது, தமிழகத்தைப் பொறுத்தவரையில், லட்சக்கணக்கான டன் அரிசி பற்றாக்குறை இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதை மத்திய அரசு கொடுக்கும் என்று எதிர்பார்ப்பதாகவும் இங்கே குறிப்பிட்டார்கள். மத்திய அரசு அப்படிக் கொடுக்குமா? அப்படி அவர்கள், இவர்கள் கேட்கும் அளவுக்குக் கொடுக்காவிட்டால் என்ன செய்வார்கள்? அவர்கள் கொடுக்கிற மாதிரியும் தெரியவில்லை. இது குறித்து இந்த அரசு என்ன செய்ய இருக்கிறது? மாண்புமிகு அமைச்சர் அவர்களின் முடிவு என்ன?

திரு. ஆற்காடு நா. வீராசாமி: கையில் இப்போது எவ்வளவு இருப்பு இருக்கிறது? கையிருப்பு இப்போது எவ்வளவு இருக்கிறது என்று தெரிந்து விட்டால், அதற்கேற்றாற்போல் பக்கத்து மாநிலங்களிலிருந்து அரிசி கிடைக்காவிட்டாலும்கூட — மத்திய அரசிடமிருந்து நமக்கு கோதுமை கிடைக்காவிட்டாலும் கூட — சோளம், கேழ்வரகு போன்றவைகளை இப்போதே வெளி மாநிலங்களிலிருந்து தேவைக்கு வாங்கி வைத்துக்கொள்ளலாம் அல்லவா? இப்போது எவ்வளவு அரிசி கையிருப்பு இருக்கிறது? எவ்வளவு கோதுமை கையிருப்பு இருக்கிறது? இருக்கிற கையிருப்பு எத்தனை நாட்களுக்கு வரும்? மத்திய அரசு நாம் கேட்கிற அளவுக்குக் கொடுக்காவிட்டால், நம் மக்களுடைய நிலைமை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் மிகத் தெளிவாக ஒன்றைக் குறிப்பிட்டார்கள். கொள்முதலைப் பொறுத்தவரையில், தஞ்சை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், ஓரளவுக்குத்தான் கிடைக்கிறது. திருச்சி மாவட்டத்தை பொறுத்த மட்டிலும், நாம் கேட்டுக் கிடைக்கிற அளவுக்கு நிலைமை இல்லை. பிற மாவட்டங்களிலிருந்தும் நாம் கேட்டால், கொள்முதல் கிடைக்கின்ற அளவுக்கு நிலைமைகள் இல்லை. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், நாங்கள் எதிர்பார்த்ததைவிட ஓரளவுக்கு நன்றாகக் கொள்முதல் நடைபெற்றிருக்கிறது. கொள்முதல் செய்து அதை அரிசியாக ஆக்கி இந்த இந்த இடங்களுக்குத் தாருங்கள் என்று கேட்டிருக்கிறோம். குறுவை சாகு படியைப் பொறுத்தவரையில், பயிரிடப்பட்ட பரப்பளவு குறைவு. ஆனால் எதிர்பாராத வகையில் எதிர்பார்த்ததைவிட விளைச்சல் அதிகம். எப்போதும் மூன்று லட்சத்திற்கும் குறைவாகத்தான் குறுவை கொள்முதல் செய்வது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு இவ்வளவு பெரிய வறட்சியிலும் கூட தஞ்சை மக்கள் நமக்குக் கொடுத்த மகத்தான ஆதரவின் பயனாக நாம் மூன்று லட்சத்திற்கு மேல் குறுவை சாகுபடி கொள்முதல் செய்ய முடியும். ஆகவே நம்முடைய இலக்கை தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எட்ட முடியும். ஆனால் கோதுமையைப் பொறுத்தவரையில், நம்மிடம் கையிருப்பு இல்லை. மத்திய அரசு நமக்கு மாதந்தோறும் நான்காயிரம் டன், நான்காயிரம் டன் என்று கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். அவர்கள் இவ்வாறு கொடுக்கின்ற நான்காயிரம் டன்னையும் நாம் அப்போதைக்கப் போது விநியோகம் செய்து தீர்த்து விடுகிறோம். அவர்கள் தருகின்ற 15 ஆயிரம் டன் அரிசியையும், 15 ஆயிரம் டன் கோதுமையையும், இன்னும் நாம் 70 ஆயிரம் டன் வெளி மாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்ய இருப்ப தால் அதையும், நாம் லெவி மூலம் கொள்முதல் செய்வதையும் வைத்து ஓரளவுக்குச் சமாளிக்கலாம். இது போதாது, மறுபடியும் தர வேண்டுமென்று எல்லோருமாகச் சேர்ந்து இப்போது மத்திய அரசை வேறு வற்புறுத்திக்

(பிற்பகல் 1-20)

கொண்டிருக்கிறோம். ஆக வற்புறுத்துகிறோம்; வற்புறுத்திக் கொண்டேயிருக்கிறோம். அடுத்து என்ன செய்ய இருக்கிறோம் என்பதுபற்றிச் சொல்ல வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் கேட்டார்கள். இன்னமும் 'பர்சுவேஷன்' என்பதிலே நம்பிக்கையை வைத்திருக்கிறோம். "இதை இத்துடன் முடித்துக் கொள்ளுங்கள் போராடலாம்" என்றுகூட பேரவையிலே கம்யூனிஸ்ட் கட்சியினர் சொன்னார்கள். எப்படிப் போராடலாம் என்று தெரியவில்லை. பண்டைக் காலத்து





நெடுஞ்செழியனாக இருந்தால், நாலு படைகளைத் திரட்டிக் கொண்டு போயிருக்க முடியும். வெறும் அமைச்சர் நெடுஞ்செழியனாக இருப்பதால் என்னிடம் படையும் கிடையாது. ஒன்றும் கிடையாது. சண்டையும் போட முடியாது. ஆகவே (சிரிப்பு) எப்படி சண்டை போடுவது என்று தெரிய வில்லை. ஆனால் 'பர்சுவேஷன்'-இல்தான் நம்பிக்கை கொண்டிருக்கிறோம். அடுத்து என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறோம் என்று சொல்லவும் முடியாது. சொன்னால் "நீங்கள் தான் செய்யப் போகிறீர்களே, நாங்கள் தர முடியாது" என்று சொல்லிவிட்டால் கஷ்டம். தர வேண்டும் என்பதற் காக நாம் காரியங்கள் ஆற்றிக் கொண்டிருக்கிறோம். அந்தக் கட்டம் வருவ தற்கு முன் நாம் யோசித்து யோசித்துச் செய்யலாம். இருந்தாலும் இருக்கிற நிலைமையை உத்தேசித்து, இந்தியா முழுவதும் பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தால், ஒவ்வொருவரும் தேவை தேவை என்று போகிறார்கள். அவர்கள், "ஒவ்வொருவருக்கும் தேவைப்படுவது நாங்கள் ஆராய்ந்து பார்த்த வரையில் இவ்வளவுதான் வருகிறது. ஆனால் எங்களிடம் இருப்பது இவ்வளவுதான். 75 சதவீதம் தான் இருக்கிறது. நீங்கள் கேட்பது 100 சதவீதம் என்று சொல்கிறார்கள். உங்களுக்கு 80 ஆயிரம் டன் வேண்டு மென்று கேட்டாலும், அதில் 75 சதவீதம் தான் தருவோம். அது பீகாராக இருந்தாலும், மகாராஷ்டிராவாக இருந்தாலும், கேரளாவுக்கும் அவ்வளவு தான், உங்களுக்கும் அவ்வளவுதான்" என்று சொன்னார்கள். அந்த நியாயத்தை நாங்களும் ஏற்றுக் கொள்கிறோம். இந்தியாவுக்கு வருகிற கொடுமைகளை நாமும் அனுபவிக்கிறோம். இருக்கிற இருப்பு அது. ஆக அந்தக் கணக்கையாவது தாருங்கள் என்று தான் பகவத் ஜா ஆசாத்திடம் கேட்டேன். "உங்களுக்குத் தேவை எவ்வளவு, கேட்கிற அளவு தர முடியாது, இவ்வளவுதான் தர முடியும்" என்கிறார்கள். நம்மைவிட மேற்கு வங்காளத்தின் உணவு அமைச்சர் மட்டும் "இன்றைக்கு நாலரை லட்சம் டன் இருந்தால் தான் சமாளிக்க முடியும்" என்று சொன்னார்கள். கேரளா இரண்டேகால் லட்சம் டன் வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே நாம் 1 லட்சத்து 20 ஆயிரம் டன்தான் வேண்டுமென்று கேட்டோம். அதிகம் கேட்கிறார்கள் என்று வைத்துக்கொண்டால், உங்களுக்கு இவ்வளவுதான் நியாயம் என்று கணக்கு பார்த்து 60 சதவீதம் தான் தர முடியும் என்று சொல்கிறார்கள். அதையாவது எல்லோருக்கும் பங்கிடும் போது நமக்கும் தந்தால், எல்லோரும் ஏற்றுக்கொள்கிற, இடுக்கண் துயரங்களை நாமும் பகிர்ந்துகொள்ள முடியும் என்று சொன்னேன். அந்தக் கணக்கும் அவர்களிட மிருந்து வரமாட்டேன் என்கிறது. உணவுப் பங்கீடு முறை மெள்ள மெள்ளத் தான் நடந்துகொண்டு வருகிறது. 1967-68லிருந்து 1969-70 வரையிலும்

சென்னையிலும், அதைச் சுற்றியும், கோவையிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் இந்தப் பங்கீட்டு முறையை நாம் வைத்திருந்தோம். தேவைக்கு அதிகமாக ஆக தனியார் கடைகளுக்குக் கொடுத்து 1970 முதல் 1973 வரை அதை விற்கச் சொன்னோம். அதிலே சில பல சிக்கல்கள், தகராறுகள், மோசடிகள் வந்ததன் காரணமாக அரசே இந்தக் கடைகளை வைப்பது நல்லது என்ற முடிவு செய்த பிறகு, அரசு கடை வைக்க ஆரம்பித்தது. 1974-75-ல் மொத்தம் அரசு நடத்திய நியாய விலைக் கடைகள் 9,933. அதற்குப் பிறகு படிப்படியாக உயர்த்திக் கொண்டே வந்து, இப்போது 17,844 நியாய விலைக் கடைகளை வைத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களும், வேறு பல உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னது மாதிரி, சில கடைகளில் நெருக்கடிகள் இருக்கின்றன. சென்னையைப் பொறுத்தவரையில், 2500 கார்டு 2700 கார்டுகள் வரையில் உள்ள கடைகள் சில இருக்கின்றன. அதிலே ஓரளவுக்குச் சமாளிக்க வேண்டிய காரணம் இருக்கிறது. அண்மையில் ஒரு திட்டத்தை நாம் ஏற்படுத்தி, அதன்படி மொத்தத்திலிருந்து 60 கடைகளை பரிட்சார்த்தமாக எடுத்து 'ஸ்டாக்கிங்' என்ற அளவுக்கு ஆக்கி ஒரு குறிப்பிட்ட நாளை ஒதுக்கி, 200 கார்டுகள் விதம் ஒதுக்கி, அன்றைக்கு அந்தக் கார்டுகளுக்கு எல்லாப் பொருட்களும் தரப்படும், வாங்கிக் கொள்ளலாம் என்று சொல்லி, அப்படி எக்காரணம் கொண்டாவது அவர்களால் வாங்க முடியாமல் போய்விட்டால், அடுத்து வருகிற ஞாயிற்றுக் கிழமையைப் பொது நாளாக்கி அந்தக் கார்டுகளுக்கு கொடுக்கும்படி செய்யலாம். இதில் திங்கள், செவ்வாய், புதன், வியாழன் சனி என்ற ஐந்து நாட்களிலும் வாங்கத் தவறிவிட்டால், வாங்கிக் கொள்ளாதவர்களுக்கு எல்லாம் ஞாயிற்றுக்கிழமையை ஒதுக்கி, அன்று வேறு யாரும் வாங்காமல் செய்யலாம் என்ற அளவுக்கு 60 கடைகள் போட்டிருக்கிறோம். எனக்கு வந்திருக்கிற ரிப்போர்ட்படி அது ஓரளவுக்குத் திருப்திகரமாகவும் சிறப்பாகவும் இருக்கிறதென்று சொல்கிறார்கள். அந்த முறையிலேதான் எல்லாக் கடைகளுக்கும் அதை விஸ்தரிக்க வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் சொல்லிய கருத்துக்களையும் நான் சிந்திக்க வேண்டியவனாக இருக்கிறேன். இப்போது 17,844 கடைகளில் அவர்களுக்கு 150 ரூபாய் தான் பார்ட் டைம் வேலை என்று சொல்லி அவர்களை வைத்திருக்கிறோம். அந்த இருப்பவனுக்கு ஏதாவது உடம்புக்கு வந்து விட்டால், வேறு வேலைக்குப் போய்விட்டால், மூன்று நாளைக்கு வராவிட்டால் அந்த மூன்று நாளைக்கும் கடைகள் மூடப்பட்டிருக்கும் என்ற நிலைமையும் வருகிறது. இதை எப்படிச் சமாளிப்பது, இப்படிப்பட்ட இடையூறுகள், இடுக்கண்கள் இவைகளை எப்படிச் சமாளிப்பது என்பதை நானும் சிந்தித்துக்கொண்டுதான் இருக்கிறேன். குறைபாடுகள்



பற்றிச் சொன்னார்கள். சில பல இடங்களில் நல்ல முறையில் நடக்கின்றன. சில பல இடங்களில் குறைகள் இருக்கின்றன. அவை கண்டு பிடிக்க முடியாத அளவுக்கு இருக்கின்றன. ஆகவே தனியாரிடத்தில் கொடுத்தால் என்ன என்று கேட்கிறபோது, நான் அடிக்கடி அதிகாரிகளிடத்தில் கலந்து பேசும்போது, அதிலே சில பல குறைபாடுகள் வருகின்றன என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் சொல்கிறபோது, அதிலே இருக்கிற குறைபாட்டைவிட இதிலே குறைபாடுகள் வருவது குறைவு தான் என்று சொன்னார்கள். நான் இப்போது எண்ணிக் கொண்டிருப்பது விரைவில் அதற்கு ஒரு முடிவு காண வேண்டுமென்பது. இந்தப் பங்கீட்டு முறை ஒழுங்காக நடைபெற வேண்டும், சீராக நடக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் எடுத்துத் தெரிவித்தற்கிணங்க, ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நியாய விலைக் கடைக்கும் ஒவ்வொரு கண்காணிப்புக் குழு நியமிப்பது என்றும், அதில் அந்த ஊர் மட்டத்தில் இருக்கிற ஒருவர் அதிகாரியாக இருக்க வேண்டும் என்றும், அதில் எல்லாக் கட்சிக்காரர்களும், யார் அந்த ஊரைச் சேர்ந்தவர்களோ அவர்களே ஐந்து பேர், எட்டு பேர், ஏழு பேர் என்ற அளவுக்கு குறிப்பாகப் போட்டு கண்காணிப்புக் குழு என்று வைத்து, எந்தச் சரக்கு கடைக்கு வந்து இறங்கினாலும் சரி, அவர் அதைப் பார்த்து எடை போட்டு, சீல் பண்ணலாமா என்ற அளவுக்கு ஒரு 'ஐடியா' இருக்கிறது. வருவதே வந்து சேரமாட்டேன் என்கிறது, நடுவிலே விற்றுவிட்டு வந்து விடுகிறார்கள் என்ற குறைபாடுகள் இருப்பதன் காரணமாக 'இன்டென்ட்' போட்டபடி வந்திருக்கிறதா என்ற அளவுக்கு வாரத்திற்கு ஒரு அரை மணி நேரமாவது பார்க்கிற அளவுக்குப் போடலாமா என்ற எண்ணம் இருக்கிறது. தனியார் கடைகளுக்கு, சென்னையைப் பொறுத்தவரையில் சங்கடங்கள் இருக்கின்றன. இரண்டாயிரத்துச் சில்லரை கார்டுகளுக்குத் தகுந்த இடம் கிடைக்கவில்லை. இப்போது பல இடங்களில் வைத்திருக்கிற வாடகை இடங்களிலிருந்து, வீட்டுக்காரர்களிடமிருந்து நோட்டீஸ் வருகிறது. சுவரெல்லாம் என்னமோ ஆகி விடுகிறது. கட்டடங்களில் எல்லாம் எண்ணெய் தடவுகிறார்கள், நாங்கள் வெள்ளை அடித்துக் கொடுக்க மாட்டோம், கடைகளை காலி பண்ணுங்கள் என்றெல்லாம் நோட்டீஸ் கொடுத்து விடுகிறார்கள். ஒரே கூட்டமாக இருக்கிறது. வீட்டுக்கு முன்னால் தெருவில் நிற்கிறார்கள். எங்களுக்குப் பிரைவசி இருப்பதில்லை, காலி செய்யுங்கள் என்று நிறைய வந்து கொண்டிருக்கிறது. அப்படி அவர்கள் சொன்னபடி ஒரு முறையைக் கையாளலாமா என்று யோசிப்பதற்கு இந்தப் பிரச்சினையை எல்லாம் ஆராய்ந்து, இந்தப் பங்கீட்டு முறையை ஒழுங்காக முறையாக நடத்த வேண்டும். நாம் செலவழிப்பதில் குறையில்லை, அவர்கள் கேட்பது

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 ஏப்ரல் 8

போல் சப்சிடி கொடுப்பதிலும் குறையில்லை. அதற்காக ஏராளமாகப் பணம் செலவழிக்கிறோம். ஏராளமாக 'சப்சிடி' கொடுக்கிறோம். கிட்டத்தட்ட 60 கோடி ரூபாய் போகிறது. அடுத்த ஆண்டு அது 100 கோடியில் வந்து நிற்கும் என்று நினைக்கிறேன். இவ்வளவு சப்சிடி கொடுக்கிறபோது, அது ஒழுங்காகப் போக வேண்டும், முறையாகப் போக வேண்டும், திருப்திகரமாக நடக்க வேண்டும். அதை ஆராய்வதற்கு அட்வைசரி கமிட்டி என்ற அளவிற்கு ஒரு ஆலோசனைக் குழு அமைத்து அதில் பேரவை உறுப்பினர்களும், மேலவை உறுப்பினர்களும், இந்தத் துறையிலே நல்ல அனுபவம் பெற்ற மற்றவர்களும் இடம்பெறச் செய்து, நானே அதற்குத் தலைவராக இருந்து, விரைவில் இதற்காக அதிகாரிகளைக் கூட்டி இந்தப் பிரச்சினையை நீங்களும் எடுத்து வைத்து, நானும் அவர்களைத் தனியாகக் கலந்து பேசி, அவர்கள் சொன்னதை நானும் கேட்கிற அளவுக்கும், மறுத்துச் சொல்கிற அளவுக்கும், நான் ஏதாவது சொன்னால் அவர்கள் சமாதானம் சொல்ல முடியும், ஆனால் பொது மக்களிடம் நாம் சொல்லும் போது பொதுமக்களுக்கு விபரம் புரியாது என்ற வகையில், பொதுமக்களின் பிரதிநிதிகள் ஒருபுறம், அதிகாரிகள் ஒருபுறம் இருக்க, அரசாங்கத்தில் இருப்பவர்களுக்கு உள்ள நடைமுறைக் கஷ்டங்களை உங்களுக்கும் சொல்லி, எப்படி அதைப் போக்கலாம், என்ற ஒட்டுமொத்தமான ஒரு கருத்தின்மீது முடிவு செய்தால், அந்த முடிவின் அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்க நான் ஆயத்தமாக இருக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன். விரைவில் அப்படி ஒரு கமிட்டியை அமைத்து, ஒரு நாளைக்கு அல்லது இரண்டு நாளைக்கு வேண்டுமானாலும் உட்கார்ந்து பேசி எந்தெந்தப் பிரச்சினைகளை எப்படியெப்படித் தீர்க்க முடியும் என்று ஆராய்ந்து, இந்த சிஸ்டம் சரியாக இருக்க வேண்டும் என்பதைக் கண்டறிந்து சொல்ல முடியும்.

மண்ணெண்ணெய் பற்றிச் சொன்னார்கள். இப்படிப்பட்ட ஒரு குழு அமைப்பது நல்லது என்ற கருத்தில் அமைக்கப்பட்டது. இதில் ஓரளவுக்குப் பிரச்சினை இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் சொன்ன மாதிரி, மதுரை மாவட்டத்தில் இந்தக் குழு அடிக்கடி கூடுவதால் நிறையப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டிருக்கின்றன. சில மாவட்டங்களில் இந்தக் குழு அடிக்கடி கூட்டப்படாததால், பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை என்று தெரிகிறது. சங்கடங்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட சங்கடங்கள் தீர்க்கப்பட வேண்டிய ஒன்று என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆகவே இந்த ஆலோசனைக் குழுவை இந்த மாதத்திற்குள்ளேயே அமைக்க ஏற்பாடுகளைச் செய்கிறேன். அப்போது இந்த யோசனைகளையெல்லாம் எடுத்துச் சொல்லி, திட்டவட்டமான தெளிவான முடிவை எடுத்து பிரச்சி



1983 ஏப்ரல் 8] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

(பிற்பகல் 1—30)

னையைத் தீர்ப்பதில் உறுப்பினர்களுடைய ஒட்டுமொத்தமான ஒத்துழைப்பும் ஆதரவும் இருக்குமானால், உணவுப் பங்கீட்டு முறையைச் சீராக ஆக்க முடியும். அத்தகைய குழுக்களை நாம் விரைவில் அமைப்பது நல்லது என்பதை இந்த வாய்ப்பில் எடுத்துச் சொல்லுகிறேன். இங்கே வேறு பல கருத்துக்களையும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட கருத்துகளுக்கெல்லாம் அவ்வப்போது வினாக்கள்-விடைகள் மூலமாகவும் விளக்கங்கள் மூலமாகவும் பதில் சொல்லியிருக்கிறேன். மண்ணெண்ணையைப் பொறுத்தவரையில், நமக்கு மத்திய அரசிலிருந்து கிடைக்கிற அளவு மிகக் குறைவாக இருக்கிறது. நம்முடைய குறைந்த பட்சத் தேவையின் அடிப்படையில் பார்த்தால்கூட, நமது மாநிலத்திற்கு 6,90,00,000 லிட்டர் மண்ணெண்ணெய் தேவைப்படுகிறது. ஆனால் நமக்கு வந்து சேருவது 4,40,00,000 லிட்டர்தான். கூடுதலாக இன்னும் 2,50,00,000 லிட்டர் தரவேண்டும். அவ்வளவு தரவில்லை என்றாலும் இன்னும் 1,25,00,000 லிட்டர் அளவுக்குக் கொடுத்தால்கூட, ஓரளவுக்குப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். எனவே அதைக்கூட மத்திய அரசிடம் நாம் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

மற்றபடி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொன்ன சீரிய கருத்துக்களையெல்லாம் ஆராய்ந்து தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தனிப்பட்ட வியாபாரிகள் கூட இந்த வகைகளில் முன்வருவது நல்லது. கிட்டத்தட்ட அரிசியைப் பொறுத்தவரையில், குறைந்த விலையில் விற்கிறோம் என்று விளம்பரப்படுத்தியிருந்தார்கள். நெல்லூர் பச்சரிசி 75 கிலோ வெளியே ரூ. 300-க்கு விற்கிறது என்றால், நாங்கள் ரூ. 275-க்குத் தருகிறோம், அதை 30ஆம் தேதிக்குள் வாங்கிக் கொள்ளுங்கள் என்று விளம்பரப்படுத்தினார்கள். அதைப் போலவே ஆந்திரா பர்மா அரிசி வெளியே 75 கிலோ ரூ. 345-க்கு விற்றபோது, நாங்கள் ரூ. 300-க்குத் தருகிறோம் என்றும் விளம்பரப்படுத்தினார்கள். இப்படி சில வியாபாரிகள் ஒத்துழைப்பைத் தருகிறார்கள். இப்படிப் பலரும் ஒத்துழைப்புத் தர முன்வந்தால், நாட்டு மக்களுடைய பிரச்சினைகள் தீரும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துக் கூறிய வண்ணம், கட்சிக்கு அப்பாற்பட்டு இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டியிருப்பதால், நாட்டினுடைய நலத்தை மனதில் கொண்டு இருக்கிற குறைபாடுகளைப் போக்க, சீரிய

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 ஏப்ரல் 8

யோசனைகளை எடுத்துச் சொல்லி மக்கள் சமுதாயத்திற்கு அரசு மன நிறைவோடு பணியாற்ற உதவ வேண்டும் என்ற அடிப்படையில் இந்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிடவும், அதோடு எனக்கு விளக்கம் சொல்லவும் வாய்ப்பு ஏற்படுத்தித் தந்தமைக்கு என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்து, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : I would like to have a clarification on two points. In the month of 'Chitrai', a lot of ragi is to be harvested even in Tamil Nadu because a lot of ragi has been cultivated. May I know whether the Government will have any proposal to procedure ragi, because, in the rural areas, we can atleast distribuet 'kezhvaragu' instead of rice ? The second point is this. We now have shops run by the Civil Supplies Corporation and the private shops. In some places, the Government may have representatives of political parties to supervise the running of these shops. But, in some villages they may not have such persons. I would like to suggest an arrangement for such villages. If 1,000 shops are attached to a shop, they may select at random—say, the card-holders of card numbers 101, 201, 301, 401, etc.—ten representatives from among the family card-holders themselves to supervise that shop. If possible, some ladies also may be selected to do this supervision.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் சொன்ன கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். அப்படிப் போகிறபோது, அந்தந்தப் பகுதியில் குடும்ப அட்டை வைத்திருக்கும் பொறுப்புணர்ச்சி உள்ளவர்களாகப் பார்த்துப் போடுவது நல்லது. குறிப்பிட்ட கட்சியைச் சார்ந்தவர்களைப் போட்டால், வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்ற பிரச்சினை ஏற்படும். இப்படிப்பட்ட நிலைமைகள் ஏதும் இல்லாமல் சரியாகக் கண்காணிக்கிற நிலைமை வந்தால்தான் நல்லது. நம்மை சரியாகக் கண்காணிக்கிறார்கள் என்று அச்சப்படும் நிலை வந்தால்தான், எதுவும் செம்மையாக நடைபெறுவதற்கான சூழ்நிலை ஏற்படும்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டபடி, ராகி, கம்பு போன்றவைகளை எவ்வளவு கொள்முதல் செய்ய முடியுமோ அந்த அளவுக்குக் கொள்முதல் செய்ய வேண்டும் என்பதோடு அவைகளைப் பயன்படுத்தாத இடங்களில் கொள்முதல் செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். "கருநாடக மாநிலத்திற்குச் சென்று அங்கிருந்து 10,000



1983 ஏப்ரல் 8] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அல்லது 20,000 டன் கொள்முதல் செய்துகொண்டு வந்து, இருப்பில் வைத்துக் கொள்ளுங்கள், நெருக்கடி ஏற்படும்போது, கிராம மக்களுக்கு வேறு எதுவும் கிடைக்காத சூழ்நிலை ஏற்பட்டால், ராகி, கம்பு போன்றவைகளைத் தரலாம்" என்று முன்யோசனையாகவே தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக இதைச் செய்ய ஆணையிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து அவை மீண்டும் நாளை சனிக்கிழமை 9—4—1983 அன்று காலை 9—30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-34)

6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

239. Notification issued in G.O. Ms. No. 638, Housing and Urban Development Department, dated 20th July 1982 regarding variation to the Master Plan for Madras Metropolitan Area S. Nos. 34, 35 36, 37, 43 and 44 of Kadaperi village (Tamil, English) Laid on the table of the House under section 123 (3) of Tamil Nadu Town and Country Planning Act 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

240. Notification issued in G.O. Ms. No. 652, Housing and Urban Development Department, dated 20th July 1982 regarding variation to the Master Plan for Madras Metropolitan Area S. Nos. 224, 225 of Thiruneermalai village (Tamil and English) [Laid on the table of the House under section 123 (3) of Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

241. Notification issued in G.O. Ms. No. 653, Housing and Urban Development Department dated, 20th July 1982 regarding the variation to the Master Plan for Madras Metropolitan Area in Ayyappan Thangal village (Tamil, English) [Laid on the table of the House under section 123 (3) of Tamil Nadu Town and Country Planning Act 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

[1983 ஏப்ரல் 8

242. Notification issued in G.O. Ms. No. 659, Housing and Urban Development Department, dated 20th July 1982 regarding the variation to the Master Plan for Madras Metropolitan Area in Poonamallee village (Tamil, English) [Laid on the table of the House under section 123 (3) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

*B. Reports, Notifications and other papers.*

126. Policy Note on Information and Film Technology, 1983—84 (Tamil and English).

127. Policy Note on Co-operation Department, 1983–84 (Tamil and English).

128. A Short Note on the Working of the Tamil Nadu State Co-operative Bank Limited, as on 31st December 1982 (Tamil and English).

129. A Note on Working of the Tamil Nadu Consumer's Co operative Federation Limited, 1982–83 (Tamil and English).

130. A Short Note on the Working of the Tamil Nadu Co-operative State Land Development Bank Limited as on the 30th June 1982 (Tamil and English).

131. A Booklet on "Central Co-operative Banks in Tamil Nadu" 1982–83 (Tamil and English).

132. A Booklet on Farmer's Friend TANFED—A Co-operative for the Farmers of Tamil Nadu (1982–83) (Tamil and English).



1983 ஏப்ரல் 8]

## இணைப்பு I

(13 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண் 239-க்கான விடையைக் காண்க.)

(அ) தமிழ் நாட்டில் 3,36,043 எக்டேர் பரப்பளவு நிலங்கள் நிரந்தர தரிசு நிலங்களாக உள்ளன.

| மாவட்டம். | நிரந்தர தரிசு நிலங்களின் பரப்பளவு (எக்டேர்களில்) |
|---|---|
| 1. சென்னை. | .. |
| 2. செங்கல்பட்டு | 16,760 |
| 3. தென்னாற்காடு | 45,917 |
| 4. வட ஆற்காடு | 26,915 |
| 5. சேலம் | 24,420 |
| 6. தர்மபுரி | 10,191 |
| 7. கோயம்புத்தூர் | 2,296 |
| 8. பெரியார் | 4,035 |
| 9. திருச்சிராப்பள்ளி | 44,585 |
| 10. புதுக்கோட்டை | 13,724 |
| 11. தஞ்சாவூர் | 18,878 |
| 12. மதுரை | 19,198 |
| 13. இராமநாதபுரம் | 35,911 |
| 14. திருநெல்வேலி | 59,777 |
| 15. கன்னியாகுமரி | 460 |
| 16. நீலகிரி | 12,976 |
| மொத்தம் | 3 36,043 (எக்டேர்கள்) |

(உ) நிரந்தர தரிசு நிலங்களைப் பயிரிடும் நிலங்களாக மாற்றுவதற்கு முறையான திட்டங்கள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

## இணைப்பு

(27 ஆம் பக்கத்தில் இனம் (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

1—6—1981-க்கு முன்பு வரை, ஆண்டுதோறும் சில ஊராட்சிய ஒன்றியப் பள்ளிகள் அரசு உயர் நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டபோது, அப் பள்ளிகளில் பணி புரிந்த ஆசிரியர்களில் விருப்பமுள்ளவர்கள் அரசுப் பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டனர். மேலும், அரசு ஆணைகளின்படி, சில குறிப்பிட்ட தனியார் உயர்நிலைப் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களும்

அரசுப் பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டனர். இவ்வாறு அரசுப் பள்ளிகளுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட ஆசிரியர்களை அரசுப் பணிக்கு உட்படுத்தி ஆணை வெளியிடுவதில் உள்ள கால தாமதத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

2. மேற்சொன்ன ஆசிரியர்களை அரசுப் பணிக்குட்படுத்தி அரசு ஆணை வெளியிடுவதற்கான கருத்துருக்களை பள்ளிக் கல்வி இயக்குநர் அவ்வப்போது அரசுக்கு அனுப்புகிறார். அவற்றை அரசு ஆய்வு செய்து அவ்வாசிரியர்களை அரசுப் பணிக்குட்படுத்தி ஆணை வெளியிடுகிறது. பள்ளி உதவி ஆசிரியர்கள் ( School Assistants ) மற்றும் முதனிலைத் தமிழாசிரியர்கள் முதலியவர்களின் நியமனம் தமிழ் நாடு தேர்வாணைக் குழுவின் வரம்பிற்குட்பட்டிருப்பதால் அக்குழுவின் இசைவைப் பெற்ற பிறகே, அவர்களை அரசுப் பணிக்குட்படுத்தி அரசாணை பிறப்பிக்கப் படுகிறது. இவ்வாசிரியர்கள் அரசுப் பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நாளில் குறிப்பிட்ட பதவியில் இரண்டு ஆண்டுகள் தற்காலிகப் பணியினை முடிக்காதவராயின் அவர்களை அரசுப்பணிக்கு உட்படுத்தி ஆணையிட தேர்வாணைக் குழு தன் இசைவை அளிப்பதில்லை. தேர்வாணைக் குழுவின் இசைவைப் பெற வேண்டியவர்களில், அரசுப் பணிக்கு எடுத்துக் கொள்ளப் பட்ட நாளில் குறிப்பிட்ட பதவியில் இரண்டாண்டுகள் பணிக்காலம் முடிக்காதவர்களின் சார்பாக ஒட்டுமொத்தமானதொரு கருத்துருவை பள்ளிக் கல்வி இயக்குநர் அனுப்பியுள்ளார். அவ்வாசிரியர்கள் தற்பொழுது ஈராண்டுகளுக்கும் மேலாக அரசு உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரிவதால் அவர்களின் நலன் கருதி மேற் குறிப்பிட்ட கருத்துருவை பரிசிலனை செய்து மீண்டும் தமிழ்நாடு தேர்வாணைக் குழுவின் இசைவைப் பெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

3. தமிழ் நாடு தேர்வாணைக் குழுவின் இசைவு தேவைப்படாத மற்ற ஆசிரியர்களில், சிலரை அரசுப் பணிக்கு உட்படுத்தி, ஏற்கெனவே அரசாணை பிறப்பித்திருக்கிறது. எஞ்சியுள்ள ஆசிரியர்களையும் அரசுப் பணிக்கு உட்படுத்தி ஆணை வெளியிடுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.



## இணைப்பு III

[29 ஆம் பக்கத்தில் இனம் 4 (2) க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

பொறியியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், வேளாண்மைக் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள் உட்பட்ட தொழிற் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு, அரசின் பிற படிப்புதவித் தொகைகள் வழங்கப்படாத பட்சத்தில் அவர்களின் கல்விக்கு உதவும் வண்ணம் 1962 ஆம் ஆண்டு முதல் கல்விக் கடன் வழங்கப்படுகிறது. இக்கடன் 'தமிழ் நாடு கல்விக் கடன் விதிகள்'' என்னும் விதிகளின் கீழ் அளிக்கப்படுகின்றது. 'இவ்விதிகளில் பிரிவு 4ன்கீழ் உள்ள விதிப்படி, அங்கீகரிக்கப்பட்ட தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி ஆகியனவற்றில் பணியாற்றும் ஆசிரியர்களின் மக்கள் இக் கடன் தொகைக்கு விண்ணப்பிக்கலாம். தமிழகத்தில் 1979 ஆம் ஆண்டு முதல் மேனிலைக் கல்வி (Higher Secondary Education தொடங்கப்பட்டுள்ளது. அதன்விளைவாக மேனிலைப் பள்ளி ஆசிரியர்கள் என்னும் ஓர் புதிய பிரிவு ஏற்பட்டுள்ளது. முன்பு இவர்களில் பலர் உயர்நிலைப்பள்ளிகளில் பணி புரிந்தவர்களே. 1962 ல் வெளியிடப்பட்டுள்ள கல்விக் கடன் விதிகள் பிரிவு 4 க்கு, மேனிலைப் பள்ளி ஆசிரியர்களையும் உள்ளடக்கும் வண்ணம் ஒரு திருத்தம் வெளியிட வேண்டும் என, இக்கடன் விதிகளைக் கையாளும் தொழில் நுட்பக்கல்வி இயக்குநர் அண்மையில் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார். அதன்படி, மேற்படி விதிகளில் மேனிலைப் பள்ளி ஆசிரியர்களின் பெயரையும் உள்ளடக்கி, விதிகளுக்குத் தக்க திருத்தங்கள் செய்வது குறித்து அரசின் பரிசிலனையில் உள்ளது.

## இணைப்பு IV

(31 ஆம் பக்கத்தில் இனம் 5-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

### I உணவு நிலைமை.

கடந்த ஆண்டு தென் மேற்கு பருவக் காற்று மழையும், அதைத் தொடர்ந்து வட கிழக்கு பருவக் காற்று மழையும் பெருமளவில் பொய்த்ததன் காரணமாக தமிழகத்தின் உணவு முனையில் ஒரு சங்கடமான சூழ்நிலை உருவாகி இருப்பதை இம்மாமன்றம் நன்கு அறியும். நெல் உற்பத்தியைப் பொறுத்தவரை பஞ்சாப், அரியானா, ஆந்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களைப் போன்று தமிழ் நாடு உபரி மாநிலமல்ல. அதே நேரத்தில் கேரளம், மேற்கு வங்காளம் போன்று இம் மாநிலம் பற்றாக்குறை மாநிலமும் அல்ல. சாதாரணமாக பருவ மழை பொய்க்காத காலங்களில் தமிழகத்தில் தன் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு அரிசி உற்பத்தி இருக்கும். ஆனால், ஒரு பருவமழை தவறினால்கூட நெல் உற்பத்தியைப் பொறுத்தவரை இது பற்றாக்குறை மாநிலமாக் மாறிவிடும்.

2. 1982 ஆம் ஆண்டு தென் மேற்கு பருவக் காற்று மழை மாநிலம் முழுவதும் அநேகமாக பொய்த்துவிட்டதென்றே கூறலாம். மாநிலம் முழுவதற்கும் இப்பருவத்தில் ஏறக்குறைய 37 விழுக்காடு அளவிற்கு மழை குறைந்துள்ளது. இந்நிலையில், நாம் வடகிழக்குப் பருவக் காற்று மழையைப் பெரிதும் நம்பியிருந்தபோது, அதுவும் நம்மை ஏமாற்றத்திற்குள்ளாக்கியது. சாதாரணமாக, ஒரு ஆண்டில் தமிழகத்தில் பெய்யும் மழையின் அளவு 942.8 மில்லி மீட்டராகும். ஆனால் கடந்த ஆண்டு பெய்த மழையின் அளவு 670.1 மில்லி மீட்டராகும். நம் மாநிலத்தில் பெரும்பகுதி விவசாயத்திற்கு கிணற்றுப் பாசனத்தையும், ஏரிப் பாசனத்தையும் நம்பியுள்ளது. பருவக் காற்று மழை பொய்த்ததன் காரணமாக கிணறுகளில் நீர் மட்டம் மிகவும் குறைந்துவிட்டது. அதேபோன்று பல பெரிய நீர்ப்பாசன ஏரிகளில் தண்ணீரே இல்லை என்ற ஒரு நிலைமை உருவாகியது.

3. தமிழகத்தின் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களில் பல திட்டங்கள் மாநிலத்தின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ளன. தென் மேற்கு பருவக் காற்று மழையின் மூலம் இவை நிரம்புகின்றன. கடந்த ஆண்டு இப்பருவக் காற்று மழை பொய்த்ததன் காரணமாக, பல நீர்ப்பாசன அணைகளுக்கு போதிய நீர் வரவில்லை. தமிழகத்தின் நெற்களஞ்சியமான தஞ்சை மாவட்டமும், திருச்சி, தென் ஆற்காடு மாவட்டங்களில் காவிரி நதியின் டெல்டாப் பகுதிகளும், நீர்ப்பாசனத்திற்கு மேட்டூர் நீர்த் தேக்கத்தையே பெரிதும் நம்பியுள்ளன. உரிய காலத்தில் இந்த தேக்கத்திலிருந்து பாசனத்திற்கு நீர் விடப்பட்ட போதிலும், தொடர்ந்து தேவையான அளவுக்கு நீர் விடமுடியாத காரணத்தால், காவிரி டெல்டாப் பகுதிகளில் விவசாயம் கணிசமாக பாதிக்கப்பட்டது. சாதாரணமாக 4.25 இலட்சம் ஏக்கர்களில் தஞ்சை மாவட்டத்தில் குறுவை பயிர் செய்யப்படும். கடந்த ஆண்டு 3.02 இலட்சம் ஏக்கர்களில்தான் குறுவை பயிர் செய்யப்பட்டது. அதேபோன்று திருச்சி, தென் ஆற்காடு மாவட்டங்களிலும் குறுவை விவசாயம் கணிசமாகப் பாதிக்கப்பட்டது.

4. வட கிழக்கு பருவக் காற்று மழை தவறியதின் காரணமாக ஏறக்குறைய மாநிலம் முழுவதும் வறட்சியின் கோரப் பிடியில் சிக்கியுள்ளது. நெல் விளைச்சலைப் பொறுத்தவரை உபரி மாவட்டங்களான செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து போதிய நீர் கிடைக்காததாலும், வடகிழக்குப் பருவமழை போதிய அளவில் இல்லாததாலும் சம்பா பயிரில் ஒரு பகுதியும், தாளடிப் பயிரில் பெரும் பகுதியும் தஞ்சை மாவட்டத்தில் பதிக்கப்பட்டுள்ளன.





5. தமிழகத்தில் சாதாரணமாக 26.50 இலட்சம் ஹெக்டேர்களில் 55 இலட்சம் டன்கள் அரிசி உற்பத்தியாகும். ஆனால் இந்த ஆண்டு 17.11 இலட்சம் ஹெக்டேர்களில்தான் நெல் பயிரிடப்பட்டது. போதிய பாசன வசதியின்மையால் 9.39 இலட்சம் ஹெக்டேர்களில் நெல் பயிரிடப்படவில்லை. பயிரிடப்பட்ட பகுதிகளிலும், வறட்சியின் காரணமாக கணிசமான பகுதிகளில் பயிர் பாதிக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் 1982—83ஆம் பயிர் ஆண்டில் அரிசி உற்பத்தி ஏறக்குறைய 28 இலட்சம் டன்கள் அளவுக்கு இருக்கும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மின் நீர்த் தேக்கத் திட்டங்களில் போதிய அளவு நீர்ப் பிடிப்பு இல்லாததாலும், பாசனக் கிணறுகளில் நீர் மட்டம் மிகவும் குறைவாக இருப்பதாலும், இந்தப் பயிர் ஆண்டில் மேற்கொண்டு நெல் பயிரிடுவதற்கு வாய்ப்புகள் இல்லை. மேலும், செங்கல்பட்டு, வடஆற்காடு, தென்ஆற்காடு மாவட்டங்களில் சொர்ணவாரி, நவரைப் பட்டங்களில் நெல் பயிரிடும் வாய்ப்பும் இல்லை.

6. பொது விநியோகத் தேவை.—பொது விநியோகத் திட்டத்தின் கீழ் ஏறக்குறைய 17,844 நியாய விலைக் கடைகள் மூலம் குடும்ப அட்டைகளுக்கு அரிசி வழங்கி வருகின்றோம். மாதமொன்றுக்கு ஏறக்குறைய 85,000 டன்கள் அரிசி பொது விநியோகத் திட்டத்திற்கும், முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்திற்கும் வழங்கப்படுகிறது. சாதாரணமாக குறுவை அறுவடை தொடங்கியவுடன், பொது விநியோகத் தேவை கணிசமாகக் குறைந்து, மே மாதம் இறுதி வரை அந்த நிலை தொடர்ந்து காணப்படும். ஆனால், இந்த ஆண்டு நிலைமை அதற்கு நேர்மாறாக, தேவை அதிகரித்துள்ளது என்பதைக் கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து அறியலாம்.

<u>வழங்கப்பட்ட அரிசி.</u>

| | 1980 | 1981 | 1982 | 1983 |
|---|---|---|---|---|
| ஜனவரி : | 11,540 | 24,866 | 48,407 | 76,632 |
| பிப்ரவரி : | 8,961 | 35,680 | 43,123 | 66,143 |
| நவம்பர் : | 12,441 | 60,504 | 82,567 | .. |
| டிசம்பர் : | 18,755 | 62,214 | 86,665 | .. |

7. ஜூன் மாதம் முதற்கொண்டு அக்டோபர் மாதம் வரை, நெல் அறுவடை எதுவும் இல்லாத காரணத்தால் அந்தக் காலங்களில் பொது விநியோகத் தேவை இன்னும் அதிகரித்து ஏறக்குறைய மாதம் ஒன்றுக்கு ஒரு இலட்சம் டன்கள் அளவிற்கு இருக்குமென எதிர்பார்க்கலாம். தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் கைவசம் தற்போது 1,15,000 டன்கள் அரிசியும், 98,749 டன்கள் அரிசிக்கீடான நெல்லும் கையிருப்பில் உள்ளது. மின் வெட்டு இருப்பதன் காரணமாக கைவசம் உள்ள நெல் அனைத்தையும்

உடனடியாக அரைப்பதற்கும் போதிய வாய்ப்புகள் இல்லை. நடப்பு சம்பா பருவத்தில் மேலும் சுமார் 75,000 டன்கள் நெல்தான் கொள்முதல் செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதிலிருந்து ஏறக்குறைய 51,000 டன்கள் அரிசி கிடைக்கும். ஆக மொத்தம் 1-4-83-ல் தமிழக அரசின் கைவசம், எதிர்கால கொள்முதலையும் சேர்த்து 2.65 இலட்சம் டன்கள் அரிசி இருக்கும். அடுத்த அறுவடையை நாம் அக்டோபர் 1983-ல் தான் எதிர் பார்க்கலாம். அப்படி அறுவடை ஆகும் நெல்லை கொள்முதல் செய்தாலும் கூட அதை அரைத்து அரிசியாக்க வேண்டியிருப்பதால், நவம்பர் 1983-ல் தான் அரிசி கிடைக்கும். எனவே, ஏப்ரல் 1983 முதல் நவம்பர் 1983 வரை பொது விநியோகத்திற்கு மாதமொன்றுக்கு 85,000 டன்கள் வீதம் நமக்கு எட்டு மாதங்களுக்கு சுமார் 6.80 இலட்சம் டன்கள் அரிசி தேவைப்படும். எதிர்பாராத் தேவைகளுக்காகவும், ஜூன் மாதத்திற்குப் பிறகு தேவை அதிகரிப்பதாலும் நம் தேவைக்கு துண்டு விழும் அரிசியின் அளவு சுமார் 6.00 இலட்சம் டன்களாகும் என்று கணக்கிட வேண்டும்.

8. மத்திய அரசு தன் தொகுப்பிலிருந்து பொது விநியோகத் தேவைக்கு அரிசி வழங்குவதை 1982-ம் ஆண்டு ஜூன் மாதம் முதற்கொண்டு நிறுத்தி விட்டது. ஜூன் 1982 முதல் ஜனவரி 1983 வரை பொது விநியோகத் திற்கும், சத்துணவுத் திட்டத்திற்கும் 6,01,987 டன்கள் அரிசியை நம் இருப்பிலிருந்து வழங்கியிருக்கிறோம். மத்தியத் தொகுப்பிற்கு தமிழகம் அரிசி எதுவும் தரவில்லை என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. நம்முடைய தேவைக்கு மேல் உற்பத்தியிருந்த காலங்களிலெல்லாம் மத்தியத் தொகுப்பிற்கு நாம் அரிசியை அளித்து வந்திருக்கிறோம். 1970-ல் 50,000 டன்கள் அரிசியும், 1972-ல் 1,11,000 டன்கள் அரிசியும், 1975—76-ல் 2,93,000 டன்கள் அரிசியும் மத்தியத் தொகுப்பிற்கு தமிழகம் வழங்கியுள்ளது. நெல் விளைச்சல் அதிகமாக இருந்த 1979—80-ம் ஆண்டில் 2 இலட்சம் டன்கள் அரிசியை மத்தியத் தொகுப்பிற்குத் தருவதற்கு நாம் முன் வந்தோம். ஆனால் மத்திய அரசு சுமார் 5,000 டன்கள் அரிசியை எடுத்துக் கொண்டது. எஞ்சியதில் 73,000 டன்களை வேலைக்கு உணவு திட்டத்தின் கீழ் பயன்படுத்திக் கொண்டது. மீதியை அவர்கள் எடுத்துக்கொள்ளவில்லை. தவிர 1981—82-ம் ஆண்டில் இந்திய உணவுக் கழகம் தமிழ்நாட்டில் கொள் முதல் செய்ய அனுமதிக்கப்பட்டது. அவர்கள் 12,000 டன்கள் நெல் கொள் முதல் செய்தனர். இதுவும் மத்தியத் தொகுப்பிற்குப் போயிற்று. எனவே. மத்தியத் தொகுப்பிற்குத் தமிழகம் அரிசி தரவில்லையென்ற குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இல்லையென்பதை பலமுறை தெள்ளத் தெளிவாக மத்திய அரசுக்கு எடுத்துக் காட்டியுள்ளோம்.



9. தமிழகத்தில் பருவமழை பொய்த்ததன் காரணமாக உற்பத்தி குறைந்து இருப்பதை எடுத்துக்காட்டி மத்தியத் தொகுப்பிலிருந்து அரிசி கொடுத்து உதவும்படி மத்திய அரசை பல்முறை கேட்டுள்ளோம். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய விவசாய அமைச்சர் அவர் களுக்கும், பாரதப் பிரதமர் அவர்களுக்கும் கடிதங்கள் எழுதியுள்ளார்கள். ஆனால் நாம் மேற்கொண்ட முயற்சிக்குப் பலன் கிடைக்காத ஒரு நிலையில் மத்திய அரசின் கவனத்தை தமிழகத்தில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடிக்கு ஈர்ப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிப்ரவரி மாதம் 9-ம் தேதி ஒரு நாள் உண்ணா விரதத்தை மேற்கொண்டார்கள். இதைத் தொடர்ந்து மத்திய விவசாய அமைச்சரின் அழைப்பின் பேரில் முதலமைச்சர் அவர்கள் டெல்லி சென்று மத்திய உணவு அமைச்சர் அவர்களையும், விவசாய அமைச்சர் மற்றும் பிரதமர் அவர்களையும் சந்தித்து நிலைமையைத் தெளிவாக்கி தமிழகத்திற்கு அரிசி தந்து உதவும்படி கோரினார்கள். 7-3-83 வரையில் மத்திய அரசிடமிருந்து ஒதுக்கீடு வரவில்லை. 8-3-1983 அன்று மத்தியத் தொகுப்பிலிருந்து ஏப்ரல் மாதத்திற்கு 5,000 டன்கள் ஒதுக்கீடு செய்து தந்தி வந்தது. தமிழகத்தின் வறட்சி நிலைமையைக் கருத்தில் கொண்டு அதிக அளவில் நிச்சயமாக உதவி செய்வார்கள் என்று நம்பு கிறோம்.

10. மத்தியத் தொகுப்பிலிருந்து நம் தேவைக்கு அரிசி கிடைக்காத ஒரு நிலையில் வெளி மாநிலங்களிலிருந்து அரிசி வாங்கும் முயற்சியை தமிழக அரசின் சார்பாக தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் மேற் கொண்டது. ஆனால் ஒரு மாநிலம், மற்றொரு மாநிலத்திலுள்ள நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக மத்திய அரசின் ஒப்புதல் இன்றி வெளிச் சந்தையில் அரிசி வாங்கக்கூடாது என்ற ஒரு நிபந்தனையையும் மத்திய அரசு விதித்துள்ளது. அதுமட்டுமின்றி வெளிச் சந்தை அரிசியை வாங்குவதற்கும் தேவைப்படும் நிதி உதவிக்கும் மத்திய அரசின் ஒப்புதல் கிடைத்தால்தான், ரிசர்வ் வங்கியிலிருந்து நாம் அந்த உதவியைப் பெற முடியும். வெளி மாநிலங்களிலிருந்து நாம் அரிசி வாங்குவதற்கு முதல் கட்டமாக 35 கோடி ரூபாய் கடன் நிதி உதவி அனுமதிக்குமாறு மத்திய அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளோம். 7-3-83 வரையில் அவர்களது ஆணை கிடைக்கவில்லை. இருந்தாலும், தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் பிற மாநிலங்களிலுள்ள தனியார் வியாபாரிகள் மூலம் அரிசி வாங்க ஏற்பாடுகள் செய்து வருகிறது. இந்த அரிசியின் விலை அதிகமாக இருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

11. தமிழகத்தில் இன்றுள்ள நிலைமையில் கூடுதலான கோதுமையையும் ஒதுக்கீடு செய்யும்படி மத்திய அரசை நாம் கேட்டுக்கொண்டுள்ளோம். மாதம் ஒன்றுக்கு 4,000 டன்கள் கோதுமைதான் மார்ச் மாதம் வரை வழங்கப்பட்டது. இதைக் கணிசமாக உயர்த்தி மாதம் ஒன்றுக்கு 40,000 டன்கள் அளவிற்கு கோதுமை வழங்கும்படி கேட்டுக் கொண்டுள்ளோம். பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அதிகமாக கோதுமையை வழங்கினால், அந்த அளவுக்கு அரிசி விநியோகத்தை நாம் கட்டுப்படுத்த முடியும். வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கோதுமையை தமிழகத்தின் பல பகுதிகளில் இந்திய உணவு வர்த்தகக் கழகம் வைத்திருக்கிறது. ஏப்ரல் மாதத்திற்கு மத்திய அரசு 9,000 டன் கோதுமையை ஒதுக்கீடு செய்துள்ளது. எனவே, மத்திய அரசு நாம் கோரும் அளவிற்கு மத்தியத் தொகுப்பிலிருந்து அரிசியையும், கோதுமையையும் கொடுத்து உதவவில்லை என்றால், தமிழகத்தின் உணவு நிலைமை மிகவும் சங்கடமான ஒரு கட்டத்தை அடையும் என்பதை இம் மன்றத்திற்கு எடுத்துக் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசு உதவி செய்யும் என்று இந்த அரசு இன்னமும் நம்புகிறது.

## II நெல்/அரிசி கொள்முதல்

12. பொது விநியோகத்திற்குத் தேவையான அரிசியை, 50 விழுக்காடு வர்த்தக லெவி மூலம் கொள்முதல் செய்யப்படுகிறது. 1982-ஆம் ஆண்டு சம்பா பட்டத்தில் 4.09 இலட்சம் டன்கள் அரிசிக்கு ஈடான நெல்லும் அரிசியும் வர்த்தக லெவி மூலம் கொள்முதல் செய்யப்பட்டது. கடந்த ஆண்டு தென் மேற்குப் பருவ மழை தவறியதன் காரணமாக மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து காவிரி டெல்டாப் பகுதிகளின் விவசாயத்திற்குத் தேவையான அளவிற்கு நீர்ப்பாசன வசதி கிடைக்காத காரணத்தினால் குறுவைப் பயிர் மிகவும் பாதிக்கப்பட்டுவிட்டது.

13. தஞ்சாவூர் மாவட்டத்தில் ஏறக்குறைய 1.2 இலட்சம் எக்கர்களில் குறுவைப் பட்டத்தில் நெல் சாகுபடி செய்யப்படவில்லை. ஆயினும் தேவையான முயற்சிகள் அனைத்தையும் அரசு எடுத்து குறுவை 82 பட்டத்தில் 2.08 இலட்சம் அரிசி டன்களுக்கு ஈடான நெல்லும் அரிசியும் மாநிலம் முழுவதிலும் கொள்முதல் செய்யப்பட்டது. தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாயிகளிடமிருந்து நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மூலமாக குறுவை 82 பட்டத்தில் 77,922 டன்கள் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும். அரசாங்கம் நிர்ணயித்த விலையிலேதான் உற்பத்தி செய்த நெல்லை விற்பதற்கு, விவசாயிகளுக்கு நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மூலம் வசதி ஏற்படுத்தித் தரப்பட்டது. இதற்காக 300க்கு மேற்பட்ட நேரடிக் கொள்முதல் நிலையங்களை தஞ்சை மாவட்டத்தில் தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் திறந்திருக்கிறது.



14. வடகிழக்குப் பருவமழை பொய்த்ததன் காரணமாக சம்பா, தாளடி பட்டத்திலும் இந்த ஆண்டு நெல் விளைச்சல் பாதிக்கப்பட்டது. பொது விநியோகத் தேவைக்கும், முதலமைச்சர் அவர்களின் சத்துணவுத் திட்டத்திற்கும் தேவையான அரிசியை கொள்முதல் செய்ய வேண்டிய ஒரு கட்டாய நிலைமை அரசுக்கு ஏற்பட்டுள்ளது. எனவே கொள்முதலை அதிகப்படுத்தும் வகையில் தஞ்சாவூர் மாவட்டத்தில் அரசு சார்பில் தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகமே ஏகபோகமாக கொள்முதல் செய்ய வேண்டுமென்று அரசு முடிவெடுத்து அதன்படி தனியார் வியாபாரி தஞ்சாவூர் மாவட்டத்தில் நெல்/அரிசி வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படவில்லை. ஏறக்குறைய 500 நேரடிக்கொள்முதல் நிலையங்களை மாவட்டம் முழுவதிலும் தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் ஏற்படுத்தியுள்ளது. இதைத் தொடர்ந்து தென்னார்க்காடு மாவட்டத்தில் சிதம்பரம், காட்டுமன்னார்குடி வட்டங்களிலும் லால்குடி, முசிறி, குளித்தலை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் ஏகபோகக் கொள்முதல் செய்யப்படுகிறது. இந்தப் பகுதிகளிலும் தனியார் வியாபாரிகள் செயல்பட அனுமதிக்கப்படவில்லை. மாநிலம் முழுவதிலும் சம்பா 1983 பட்டத்தில் 1—3—83 வரையில் 1,37,403 டன்கள் நெல்லும் 18,000 டன்கள் அரிசியும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

### கொள்முதல் விலை

15. 1982-83 பயிர் ஆண்டிற்கு கொள்முதல் விலைகளைக் கீழ்க்கண்டவாறு அரசு நிர்ணயித்துள்ளது :—

| ரகம். | விலை (1 குவிண்டாலுக்கு). ரூ. |
|---|---|
| சாதாரண ரகம் | 122.00 |
| சன்ன ரகம் | 126.00 |
| மிகச் சன்ன ரகம் | 130.00 |

அரசு சார்பிலேயே ஏகபோக கொள்முதல் செய்யும் பகுதிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருப்பதாலும் தனியார் வர்த்தகர்களின் வியாபாரம் தடை செய்யப்பட்டிருப்பதாலும், அப்பகுதிகளில் கொள்முதல் விலைகளுக்கு மேலாக வறட்சி அலவன்ஸாக விவசாயிகளுக்கு ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ.15 அளிக்கப்படுகிறது. இதன் காரணமாக இப்பகுதிகளில் நுகர் பொருள்

வாணிபக் கழகத்துக்கு தன் நெல்லை விற்கும் விவசாயிக்கு சாதாரண ரக நெல்லுக்கு குவிண்டால் 1-க்கு ரூ.137. சன்ன ரக நெல்லுக்கு குவிண்டால் 1-க்கு ரூ.141. மிகச் சன்ன ரக நெல்லுக்கு குவிண்டால் 1-க்கு ரூ.145. கிடைக்கின்றது.

## III பொது விநியோக முறை.

16. தமிழகத்தில் எல்லா மாவட்டங்களிலும் பொதுவிநியோக முறை செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏற்கெனவே வழங்கப்பட்டிருந்த குடும்ப அட்டைகள் நீண்டகாலமாக உபயோகத்தில் இருந்த காரணத்தினால் கிழிந்து போய் அதற்கு பதிலாக புதிய அட்டைகள் தர வேண்டிய நிலைமை இருந்ததாலும், போலி அட்டைகளை நீக்குவதற்கும், அட்டைகள் இல்லாத குடும்பங்களுக்கு புதிய அட்டைகள் வழங்குவதற்கும் மாநிலம் முழுவதிலும் கணக்கெடுப்பு செய்யப்பட்டது. ஒவ்வொரு வீட்டிற்கும் கணக்கு எடுப்பவர்களை அனுப்பி குடும்பங்களைக் கணக்கிட்டு, புதிய குடும்ப அட்டைகள் தயாரித்து அவற்றை வீடுகளுக்கே எடுத்துச் சென்று விநியோகிக்கப்பட்டன. குடும்ப அட்டையில் குடும்பத்திலுள்ள எல்லா நபர்களின் பெயர்களையும் பதித்ததோடு, இந்த குடும்ப அட்டைகள் ஐந்து ஆண்டு காலத்திற்கு நடைமுறையில் இருக்குமாறு வழங்கப்பட்டுள்ளது. குடும்ப அட்டைகள் அழுக்கு படாமல், பழுது படாமல் இருக்கும் வகையில் அதை ஒரு பாலிதீன் உறைக்குள் வைத்து வழங்கப்பட்டது.

17. தமிழகம் முழுவதிலும் சுமார் 118 லட்சம் குடும்ப அட்டைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் 17,844 நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 2002 கடைகள் நகர்ப் புறங்களிலும், 15,842 கடைகள் கிராமப்புறங்களிலும் இயங்கி வருகின்றன. இந்த நியாய விலைக் கடைகளை பெரும்பாலும் தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகமும், கூட்டுறவு சங்கங்களும் மட்டுமே நடத்தி வருகின்றன. 72 கடைகளை மட்டும் தேயிலைத் தோட்டம், தொழிற்சாலை போன்ற நிறுவனங்கள் நடத்துகின்றன. தமிழகத்தில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் தனிப்பட்ட வணிகர்கள் எவரையும் சேர்த்துக் கொள்ளாதது பொது விநியோகத் திட்டத்தின் ஒரு முக்கியமான அம்சமாகும்.

18. நீலகிரி மாவட்டம் தவிர, மற்ற மாவட்டங்களில் பெரியவர் ஒருவருக்கு வாரத்திற்கு ஒரு கிலோ வீதமும், சிறியவர்களுக்கு வாரத்திற்கு அரை கிலோ வீதமும் அல்லது ஒரு குடும்ப அட்டைக்கு மாதம் ஒன்றுக்கு 20 கிலோ இவற்றில் எது குறைவோ அந்த அளவு அரிசி வழங்கப்படுகிறது. நீலகிரி





அரிசி—

மாவட்டத்தைப் பொறுத்தவரை பெரியவர் ஒருவருக்கு வாரம் ஒன்றுக்கு 1½ கிலோ வீதமும், சிறியவர் ஒருவருக்கு வாரத்திற்கு ½ கிலோ வீதமும் ஒரு குடும்ப அட்டைக்கு மாதம் ஒன்றுக்கு 28 கிலோ அல்லது இவற்றில் எது குறைவோ அந்த அளவு அரிசி வழங்கப்படுகிறது. மத்திய அரசு நெல்லின் விலையை உயர்த்திய போதிலும் நுகர்வோரின் நலனைக் கருத்திற்கொண்டு தமிழக அரசு அரிசியின் சில்லறை விற்பனை விலையை உயர்த்தவில்லை. சாதாரண ரக அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ.1.75 வீதமும், சன்ன ரக அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ. 2 வீதமும், மிகச் சன்ன ரக அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ.2.15 வீதமும் குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படுகிறது. தமிழ் நாட்டில் பருவ மழைகள் தவறியதன் காரணமாக பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசியின் தேவை கணிசமாக அதிகரித்துள்ளது. இதற்குக் காரணம், வெளிச் சந்தையில் போதிய அரிசி கிடைக்காததும், கிடைக்கும் அரிசியின் விலை உயர்வாக இருப்பதுமாகும். 1982-ம் ஆண்டு சனவரி முதல் டிசம்பர் மாதம் வரை 7.33 லட்சம் டன்கள் அரிசி நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

லெவி கோதுமை :

19. மத்திய அரசு தமிழகத்திற்கு மாதம் ஒன்றுக்கு 4,000 டன்கள் அளவிற்குத்தான் லெவி கோதுமையை மார்ச்சு மாதம் வரை ஒதுக்கீடு செய்து வந்தது. மாதம் ஒன்றுக்கு ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு கிலோ கோதுமை வழங்க வேண்டுமென்றால்கூட, நமது மாநிலத்திற்கு ஏறக்குறைய 11,800 டன்கள் தேவைப்படும். ஒரு அட்டைக்கு ஒரு மாதத்திற்கு இரண்டு கிலோ கோதுமை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. ஆனால் இன்று கிடைக்கும் அளவை வைத்து எல்லோருக்கும் கோதுமை வழங்க இயலாது. கோதுமையின் ஒதுக்கீட்டை உயர்த்தித் தருமாறு பல முறை மத்திய அரசை நாம் வற்புறுத்தி வந்ததின் பேரில் 1983 ஏப்ரல் மாத ஒதுக்கீட்டை 9,000 டன்களாக அதிகரித்து தரப்பட்டுள்ளது. தற்போது லெவி கோதுமை கிலோ ஒன்றுக்கு ரூ. 1.75 வீதம் நியாய விலைக் கடைகளில் வழங்கப்படுகிறது.

கோதுமைப் பொருள்கள் :

20. மைதா, ரவை ஆகியவற்றின் சில்லரை விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 2.70 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மைதா, ரவை நியாய விலைக் கடைகளின் மூலமாக குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் மாதம் ஒன்றுக்கு இரண்டு கிலோ மைதாவும், ஒரு கிலோ ரவையும் வழங்கப்பட்டு வருகிறது.

[1983 எப்ரல் 8

21. தமிழ் நாட்டில் 33 கோதுமை உருளை மாவு ஆலைகள் உள்ளன. இவைகளுக்கு கோதுமைப் பொருள்கள் தயாரிக்க மத்திய அரசு கோதுமை ஒதுக்கீடு செய்கிறது. மத்திய அரசு தற்போது மாதந்தோறும் 30,000 டன்கள் கோதுமையை இந்த ஆலைகளுக்கு ஒதுக்கீடு செய்கின்றது. கோதுமை பொருள்களின் மீது போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் எதுவும் இல்லை. அதே போன்று விநியோகக் கட்டுப்பாடும் இல்லை. ஆனால் குடும்ப அட்டைகளுக்கு விநியோகிப்பதற்கென தேவைப்படும் மைதா, ரவையை நாம் உருளை மாவு ஆலைகளிடமிருந்து பெறலாம். பொது விநியோகத்திற்கும், பிஸ்கட் தயாரிப்போர், ரொட்டி தயாரிப்போர், சேமியா தயாரிப்போர் போன்ற மொத்த நுகர்வோருக்கு வழங்குவதற்கும் உருளை மாவு ஆலைகள் ஒவ்வொரு மாதமும் தாங்கள் உற்பத்தி செய்யும் மைதா, ரவையில் 60 விழுக்காட்டை தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கும், கூட்டுறவு சங்கங்களுக்கும் தர வேண்டுமென்று அரசு பணித்துள்ளது. 1982-ம் ஆண்டில் உருளை மாவு ஆலைகளிடமிருந்து 98,648 டன்கள் மைதாவையும், 28,230 டன்கள் ரவையையும் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகமும் கூட்டுறவுச் சங்கங்களும் எடுத்து பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைகளுக்கும் மொத்த நுகர்வோருக்கும் விநியோகித்துள்ளன.

22. கோதுமை உருளை மாவு ஆலைகள் தரமான கோதுமைப் பொருள்களை உற்பத்தி செய்கின்றனவா என்பதைக் கண்காணிக்க உதவி ஆணையர் ஒருவரும், அவருக்கு உதவியாக தொழில் நுட்ப உதவியாளர்களும் உணவுப் பொருள் வழங்கு துறையில் நியமிக்கப்பட்டுள்ளனர். உருளை மாவு ஆலைகளிலிருந்து எடுக்கப்படும் மாதிரிப் பொருள்களை சோதனை செய்வதற்கென உணவுப் பொருள் வழங்கு துறை ஆணையர் அலுவலகத்தில் ஒரு **ஆய்வுக் கூடமும் நிறுவப்பட்டு** செயல்பட்டு வருகிறது.

**லெவி சர்க்கரை :**

23. குடும்ப அட்டைகளுக்கு வழங்குவதற்கென மத்திய அரசு மாதந்தோறும் 20,526 டன்கள் லெவி சர்க்கரையை தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்து வருகிறது. நபர்களின் அடிப்படையில் நபர் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 425 கிராம் விதம் லெவி சர்க்கரை கிலோ ஒன்றுக்கு ரூபாய் 3.75 என்ற விலையில் குடும்ப அட்டைகளுக்கு நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகிக்கப்படுகிறது.

**பாமாலின் எண்ணெய்**

24. இது வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சமையல் எண்ணெய் ஆகும். மத்திய அரசு தமிழகத்திற்கு மாதம் ஒன்றுக்கு 2,500 டன்களிலிருந்து 3,000 டன்கள் வரை சாதாரணமாக ஒதுக்கீடு செய்து வருகிறது. ஆனால் பண்டிகைக் காலங்களில் ஒதுக்கீட்டை உயர்த்தி மாதத்திற்கு 5,300 டன்கள் அளவிற்கு வழங்கியுள்ளது. மத்திய அரசு செய்யும் ஒதுக்கீடு நமக்கு போதுமானதாக இல்லை. ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு மாதத்திற்கு ஒரு கிலோ வழங்க வேண்டுமானால் கூட நம் மாநிலத்தின் தேவை 11,800 டன்கள் ஆகும். நம்முடைய தேவைக்கு மிகவும் குறைவாகவே மத்திய அரசின் ஒதுக்கீடு அமைந்திருப்பதால், தற்போது பாமாலின் எண்ணெய் மாநகராட்சி, நகராட்சி மற்றும் நகரியப் பகுதிகளில் மட்டும் இரு மாதத்திற்கொருமுறை வழங்கப்பட்டு வருகிறது. பாமாலின் எண்ணெய் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம், மத்திய அரசு நிறுவனமான ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷனிலிருந்து எடுத்து விநியோகம் செய்கிறது. பாமாலின் எண்ணெய் ஒரு கிலோ ரூபாய் 8.90 என்ற விலையில் குடும்ப அட்டைகளுக்கு நியாய விலை கடைகள் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது. 1981-82 எண்ணெய் ஆண்டில் மத்திய அரசு தமிழகத்திற்கு 42,491 டன்கள் பாமாலின் எண்ணெய்யை ஒதுக்கீடு செய்தது. அந்த எண்ணெய் முழுவதையும் எடுத்து பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது.





**மண்ணெண்ணெய்.**

25. மண்ணெண்ணெய், பொது விநியோகத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைகளுக்கு நியாய விலைக் கடைகள் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. மண்ணெண்ணெய் தொழிலையே வாழ்க்கைக்கு ஆதாரமாகக் கொண்டிருக்கும் தனியார் சில்லரை வியாபாரிகளுக்கும் குடும்ப அட்டைகளை இணைத்து அவைகளுக்கு வழங்குவதற்கென மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. அதேபோன்று மண்ணெண்ணெய்யை தெருவிற்கு எடுத்துச் சென்று குடும்பங்களுக்கு விற்பனை செய்வதற்காக கைவண்டிக்காரர்களுக்கும் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. கடந்த ஆண்டு பொது கணக்கெடுப்பு செய்து எல்லா குடும்பங்களுக்கும் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு இருப்பதனால், மாநிலத்தில் தேவை அதிகரித்துள்ளது. தற்போது மண்ணெண்ணெய் மாநகராட்சிப் பகுதியிலும் மாவட்டத் தலைமையிடங்களிலும் ஒரு குடும்ப அட்டைக்கு மாதம் ஒன்றுக்கு 10 லிட்டர் விதமும், மற்ற மாநகராட்சிப் பகுதிகளிலும், நகரியப் பகுதிகளிலும் மாதம் ஒன்றுக்கு 6 லிட்டர்கள் விதமும் நகரப் பஞ்சாயத்துப் பகுதிகளில் 5 லிட்டர்கள் விதமும் கிராமப் பஞ்சாயத்துப் பகுதிகளில் 3 லிட்டர் விதமும் வழங்கப்பட்டு வருகிறது. இந்த அடிப்படையில் குடும்ப அட்டைகளுக்கு வழங்குவதற்கும், தொழிற்சாலைகள் போன்ற மொத்த நுகர்வோரின் தேவைகளுக்கும் ஏறக்குறைய 69,016 கிலோ லிட்டர் எண்ணெய் மாதந்தோறும் தேவைப்படுகிறது. ஆனால் மத்திய அரசு ஒதுக்கீடு 44,000 கிலோ லிட்டர்கள் என்ற அளவில் அமைந்துள்ளது. பருவ மழை தவறியதன் காரணமாக மின்வெட்டு அமுலில் இருப்பதால் பொதுவாக

மண்ணெண்ணெய் தேவை அதிகரித்துள்ளது. நாம் 10,000 டன்கள் மண்ணெண்ணெய் கூடுதலாக ஒதுக்கீடு செய்யும்படி மத்திய அரசை கோரியிருந்தோம். ஆனால் சனவரி மாதத்திற்கு மட்டும் 2,000 டன்கள் கூடுதலாக ஒதுக்கீடு செய்தார்கள்.

26. 1983 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15-ந் தேதியிலிருந்து மத்திய அரசு மண்ணெண்ணெய்யில் இரு விலைக் கொள்கையை கொண்டு வந்துள்ளது. இந்தத் திட்டத்தின்படி மாநிலத்திற்குச் செய்யும் ஒதுக்கீட்டில் 70 விழுக்காடு மண்ணெண்ணெய் ஆதரவு விலையிலும் (Subsidised Price) மீதம் உள்ள 30 விழுக்காடு எண்ணெய்யை அதிக விலையிலும் (Non-Subsidised Price) வழங்கப்படும். சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கு (Weaker Sections) கொடுக்கப்படும் மொத்த மண்ணெண்ணெய்யையும் ஆதரவு விலையில் வழங்கப்படும் மற்றப் பிரிவினருக்கு கொடுக்கப்படும் மண்ணெண்ணெய்யில் 70 விழுக்காடு ஆதரவு விலையிலும், மீதம் உள்ள 30 விழுக்காடு அதிக விலையிலும் வழங்கப்படும். அரசாங்க மருத்துவ விடுதிகள், அரசால் அங்கீகரிக்கப்பட்ட மாணவ விடுதிகள் போன்றவற்றிற்கு மண்ணெண்ணெய் ஆதரவு விலையில் வழங்கப்படும். ஆனால் தொழிற்சாலை போன்ற மொத்த நுகர்வோருக்கு மண்ணெண்ணெய் அதிக விலையில் வழங்கப்படும். சமுதாயத்தில் நலிந்த பிரிவினரை எந்த அடிப்படையில் நிர்ணயிப்பது என்பது பற்றி மத்திய அரசு பரிசீலித்து வருகிறது. முதல் கட்டமாக, தற்போது வழங்கப்படும் மண்ணெண்ணெய்யின் மொத்த அளவில் 70 விழுக்காடு ஆதரவு விலையிலும், மீதி 30 விழுக்காடு அதிக விலையிலும் வழங்கப்படுகிறது. குடும்ப அட்டைதாரர்கள் அதிக விலை உள்ள எண்ணெய்யை வாங்கத்தான் வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. கை வண்டிக்காரர்களுக்கு, பொது மக்களுக்கு விற்பனை செய்ய அதிக விலையில் Non-subsidised Price மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது.

மத்திய அரசு தன்னுடைய மண்ணெண்ணெய் இருவிலைக் கொள்கையை மறுபரிசிலனைக்குப் பிறகு உடனடியாக விலக்கி கொண்டதாக இந்த அரசுக்கு 19—3—1983 ஆம் நாள் அறிவிப்பு வந்தது. மண்ணெண்ணெய் விலையை கிலோ லிட்டர் ஒன்றுக்கு, தற்போதுள்ள ஆதரவு விலையை விட, ரூபாய் 100 அதிகமாக உயர்த்தி உள்ளது. இதன் அடிப்படையில் மண்ணெண்ணெய் மொத்த, சில்லறை விலையை நிர்ணயித்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**வனஸ்பதி :**

27. மத்திய அரசு வனஸ்பதி உற்பத்தியாளர்களுடன் செய்துள்ள ஏற்பாட்டின்படி 16.5 கிலோ கொண்ட ஒரு டின் வனஸ்பதி ரூபாய் 217-க்கு விற்பதற்கு வனஸ்பதி தயாரிப்பாளர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். இவ்வாறு



அவர்கள் முன்வந்து வழங்கும் வனஸ்பதியை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும், கூட்டுறவுச் சங்கங்களும் வாங்கி நியாயமான விலையில் பொது மக்களுக்கு விநியோகம் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## IV கிராமம்தோறும் நியாய விலைக் கடை திட்டம்.

28. நகரப்பகுதிகளிலுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் அத்தியாவசியப் பண்டங்கள் அனைத்தும் கிராமப் புறங்களிலுள்ள மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற ஆர்வத்தினால் இந்த அரசு பொறுப்பேற்றதும் கிராமம் தோறும் நியாய விலைக் கடைகளைத் திறப்பது என முடிவு செய்து, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தையும் கூட்டுறவுச் சங்கங்களையும் நியாய விலைக் கடைகளைத் திறக்கும்படி பணித்தது. தென் ஆற்காடு, தஞ்சாவூர், தருமபுரி, திருநெல்வேலி ஆகிய 4 மாவட்டங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 4,083 நியாய விலைக் கடைகளை இந்தத் திட்டத்தின்கீழ் நடத்தி வருகின்றது. மற்ற மாவட்டங்களில் கூட்டுறவு சங்கங்கள் இந்தத் திட்டத்தின்கீழ் நியாய விலைக் கடைகளை நடத்தி வருகின்றன. இவைகள் மூலம் பொது மக்களுக்கு குடும்ப அட்டையின் அடிப்படையில் அரிசி, கோதுமை, மைதா, ரவை, மண்ணெண்ணெய், லெவி சர்க்கரை ஆகிய பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இவை தவிர சமையல் எண்ணெய், தனியா, மிளகாய், பருப்பு வகைகள் ஆகிய இதர அத்தியாவசியப் பண்டங்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

29. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இந்த நியாய விலைக் கடைகள் மூலம் 1982 ஆம் ஆண்டில் ஏறக்குறைய ரூபாய் 39.54 கோடி பெறுமான இன்றியமையாப் பண்டங்களை பொது மக்களுக்கு விற்பனை செய்துள்ளது. அதே போன்று கூட்டுறவுச் சங்கங்கள் ரூபாய் 77.85 கோடி பெறுமான பொருட்களை விற்பனை செய்துள்ளது. இந்த விநியோகத் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வருகின்ற நியாய விலைக் கடைகள் திறம்பட செயல்படுகின்றனவா, பொது மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பண்டங்களை சீரான முறையில் வழங்குகின்றனவா என்பதைக் கண்காணிக்க மாவட்ட அளவிலும், வட்ட அளவிலும் ஆலோசனைக் குழுக்கள் அமைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அதன்படி எல்லா மாவட்டங்களிலும் வட்ட அளவில் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மாவட்ட ஆலோசனைக் குழு சேலம் மாவட்டத்தில் அமைக்கப்பட்டு விட்டது. பிற மாவட்டங்களில் அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### வர்த்தகக் கட்டுப்பாடு ஆணைகள்.

30. இன்றியமையாப் பண்டங்கள் நியாயமான விலையில் தாராளமாக பொது மக்களுக்கு வெளிச் சந்தையில் கிடைப்பதற்கு தனியார் வர்த்தகர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டியது அவசியம். அந்த முறையில் 1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்தின்கீழ் தமிழக அரசு கீழ்க்கண்ட வர்த்தகக் கட்டுப்பாடு ஆணைகளைப் பிறப்பித்துள்ளது:

1. தமிழ்நாடு நெல், அரிசி (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை 1974.
2. தமிழ்நாடு கோதுமை, கோதுமைப் பொருட்கள் (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை 1974.
3. தமிழ்நாடு வனஸ்பதி (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை 1974.
4. தமிழ்நாடு மண்ணெண்ணெய் (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை 1973.
5. தமிழ்நாடு மளிகை, மளிகை பொருட்கள் (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை 1974.
6. தமிழ்நாடு பயிறுகள் (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை 1978.
7. தமிழ்நாடு சர்க்கரை (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை 1981.

31. வர்த்தகக் கட்டுப்பாடு ஆணைகளின்படி வர்த்தகம் செய்வதற்கு உரிமம் வாங்க வேண்டும். அவ்வாறு உரிமை வாங்காமல் மேற் குறிப்பிட்டுள்ள இன்றியமையாப் பண்டங்களை வர்த்தகம் செய்தால் அது குற்றமாகும். மேலும், வியாபாரிகள் இன்றியமையாப் பண்டங்களின் இருப்பை முடக்கி வைத்து வெளிச் சந்தையில் விலைகளை உயர்த்துவதைத் தடுப்பதற்காக, வியாபாரிகள் ஒரு சமயத்தில் வைத்துக் கொள்ளக் கூடிய இருப்புக்கு உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் தங்களுடைய கொள்முதல், விற்பனை, கையிருப்பு ஆகிய விவரங்களைத் தெரிவிக்கும் அறிக்கையை உரிமம் வழங்கும் அலுவலருக்கு அனுப்பும்படி வகை செய்யப்பட்டுள்ளது. உணவுப் பொருள் வழங்கு துறை அமுலாக்கப் பிரிவினரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் வியாபாரிகளின் இருப்பிடங்களை அடிக்கடி சோதனை செய்து அவர்கள் கணக்குகளைத் தணிக்கை செய்து வருகின்றனர்.

### உணவுப் பொருள் வழங்கு துறையின் குற்றப் புலனாய்வுப் பிரிவு.

32. உணவுப் பொருள் வழங்கு துறையில் வர்த்தகக் கட்டுப்பாடு ஆணைகளை செயலாக்குவதற்கும், அத்தியாவசியப் பண்டங்களின் விலைவாசிகளை ஒழுங்கு முறை ஆணைகளை செயல்படுத்தவும் உணவுப் பொருள் வழங்கு துறையில் குற்றப் புலனாய்வுப் பிரிவு ஒன்று 1964 முதல் இயங்கி வருகின்றது. இந்தப் புலனாய்வுப் பிரிவு 1955 ஆம் ஆண்டு அத்தியாவசியப் பண்டங்களின்



சட்டத்தின்கீழ் மாநில அரசு பிறப்பித்துள்ள வர்த்தகக் கட்டுப்பாடு ஆணைகளை, குறிப்பாக, இருப்புக் கட்டுப்பாடு, விலை, இருப்பு ஆகியவற்றை அறிவிப்பு செய்தல், கணக்கு பராமரித்தல் ஆகியவற்றை கண்காணித்து வருகிறது.

33. 1982 ஆம் ஆண்டில் இந்தப் பிரிவு 1,536 வழக்குகளைப் பதிவு செய்தது. அவற்றில் 119 வழக்குகளில் நீதிமன்றங்களில் வழக்கு தொடரப்பட்டது. அவ்வாறு தொடரப்பட்ட வழக்குகளில் 32 வழக்குகளில் தண்டனை விதிக்கப்பட்டது. ஒரு வழக்கில் விடுதலை செய்யப்பட்டது. மற்ற குற்றங்கள் எல்லாம் விசாரணையில் இருந்து வருகிறது. இந்தப் பிரிவினிடம் சிமெண்ட் விநியோக பராமரிப்பில் தவறுகள் நிகழாவண்ணம் கண்காணிக்கும் பொறுப்பும் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவைச் சேர்ந்த அலுவலர்கள் முன் அறிவிப்பின்றி உரிமதாரர்களின் வியாபார நிலையங்களைப் பார்வையிட்டு வர்த்தகக் கட்டுப்பாடு ஆணைகளைச் செயல்படுத்தி, அத்தியாவசியப் பண்டங்களைப் பதுக்கல் செய்யாவண்ணம் தடுப்பு நடவடிக்கை எடுத்து வருகின்றனர். மேலும், அத்தியாவசியப் பண்டங்களில் கலப்படம் செய்வதைத் தடுப்பதில் இந்தப் பிரிவு கவனம் செலுத்தி வருகிறது. சுமார் இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் பெறுமானமுள்ள பொருட்களை இப்பிரிவு கைப்பற்றியுள்ளது. அதில் ஏறக்குறைய 81 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள நெல்லும், 91 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள அரிசியும் உள்ளடங்கும். அதில் ஏறக்குறைய 49 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்களை அரசாங்கத்திற்குப் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

### அரிசி அரவை ஆலைகளை நவீனமயமாக்குதல்.

34. தமிழ் நாட்டில் 16,969 அரிசி அரைவை ஆலைகள் உள்ளன. அவற்றில் 16,569 ஆலைகள் ஒற்றை ஹல்லர் பொருத்தப்பட்டவையாகும். மீதமுள்ள 400 ஆலைகள் ஒன்றுக்கு மேற்பட்ட ஹல்லர், ஹல்லர் மற்றும் ஷெல்லர் பொருத்தப்பட்ட ஆலைகள் ஆகும். அரிசி அரைவை ஆலைகளை நவீனமயமாக்கினால் அதன் காரணமாக நெல் அரைவை செய்யும்போது கூடுதலான அரிசி கிடைக்கும். மேலும், சேதாரங்களைத் தவிர்ப்பதோடு எண்ணெய் நிறைந்துள்ள தரமான தவிடும் கிடைக்கும். எனவே மத்திய அரசு அரிசி அரைவை ஆலைகளை நவீனமயமாக்கும் பொருட்டு 1970-ல் ஆணை பிறப்பித்தது. பின்பு, ஆலைகளை நவீன மயமாக்குவதற்கு ஆலை உரிமதாரர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த காலக் கெடுவை அவ்வப்போது நீட்டித்துக் கொண்டு வந்தது. தற்போதுள்ள ஆணைகளின்படி அரிசி அரைவை ஆலைகளை நவீன மயமாக்குவதற்கு அளிக்கப்பட்டுள்ள காலக் கெடு கீழ்க்கண்டவாறு ஆகும்:

[1983 ஏப்ரல் 8

| அரிசி அரைவை ஆலையின் வகை. | அனுமதிக்கப்பட்ட கால வரையறை. |
|---|---|
| 1. ஒன்றுக்கு மேற்பட்ட ஹல்லர், ஹல்லர் மற்றும் ஷெல்லர், ஷெல்லர் வகை ஆலைகள். | 31—7—1983 |
| 2. வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள ஒற்றை ஹல்லர் ஆலைகள் | 29—7—1983 |
| 3. கூலி அரைவை செய்யும் ஒற்றை ஹல்லர் ஆலைகள். | 6—9—1983 |

35. ஒன்றுக்கு மேற்பட்ட ஹல்லர் பொருத்தப்பட்ட ஆலைகள், ஹல்லர் மற்றும் ஷெல்லர், ஷெல்லர் ஆலைகள் 400 உள்ளன. அவற்றில் இதுவரை 332 ஆலைகள் நவீன மயமாக்கப்பட்டுள்ளன. வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் ஒற்றை ஹல்லர் ஆலைகளைப் பொறுத்தவரை 3,052 ஆலைகள் உள்ளன. அவற்றில் இதுவரை சுமார் 500-க்கும் மேற்பட்ட ஆலைகள் நவீனமயமாக்கப் பட்டுள்ளன.

36. அரிசி ஆலைகளை நவீனமயமாக்குவதைத் துரிதப் படுத்துவதற்காக தமிழக அரசு உணவுப்பொருள் வழங்கு துறை இணை ஆணையர் தலைமையில் ஆலோசனைக் குழு ஒன்றை அமைத்துள்ளது. அக் குழுவில் அரிசி ஆலை சங்கத்தின் பிரதிநிதிகளும் சேர்க்கப்பட்டுள்ளனர். இக்குழு இதுவரை 7 முறை கூடி நவீன மயமாக்குவதைத் துரிதப்படுத்துவதற்குத் தேவையான ஆலோசனைகளைத் தெரிவித்துள்ளது.

37. மத்திய அரசு ஒற்றை ஹல்லர் ஆலைகளை நவீனமயமாக்குவதை ஊக்குவிக்கும் வகையில் ஒரு புதிய திட்டத்தை வகுத்துள்ளது. அத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் கீழ்க்கண்டவாறாகும் :—

1. மாவட்டங்களில் நவீன மயமாக்குவதனால் ஏற்படும் நன்மைகளை விளக்குவதற்கு 'விளக்க ஆலைகளை அமைத்தல்'.

2. அரிசி ஆலைகளை நவீனமயமாக்குவது பற்றி கருத்தரங்குகள் நடத்தல்.

3. ஒற்றை அரைவை ஆலைகளை நவீனமயமாக்குவதற்கு மானியம் அளித்தல்.

மேற்கண்ட திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு மத்திய அரசு தெரிவித்த ஆலோசனையின்படி தமிழ்நாடு அரசு ஒரு குழுவை அமைத்துள்ளது.



1983 ஏப்ரல் 8]

## VII விலைவாசி நிலைமை

38. தமிழ் நாட்டில் புழுங்கல் அரிசியே முக்கிய உணவாகும். பிப்ரவரி 1983-ல் சாதாரண புழுங்கல் அரிசியின் விலை கிலோ ஒன்றுக்கு ரூபாய் 2-40 முதல் ரூபாய் 4-20 வரை நிலவியது. சென்ற ஆண்டில் இந்த மாதத்தில் இதே அரிசியின் விலை கிலோ ஒன்றுக்கு ரூபாய் 2-40 முதல் ரூபாய் 3-60 வரை இருந்தது. இவ்வாண்டில் நம் மாநிலத்தில் பருவ மழைகள் பொய்த்து நெல் உற்பத்தி குறைந்ததால் அரிசி விலை உயர்ந்து காணப்படுகிறது. வெளி மாநிலங்களிலிருந்து கொண்டு வரப்படும் நெல், அரிசிக்கு தமிழக அரசு லெவி யினின்றும் விலக்கு அளித்துள்ளது. எனவே, வெளிச் சந்தையில் அரிசியின் விலை நிதானமாகவே உள்ளது. மேலும் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைகளுக்கு மாதமொன்றுக்கு ஏறக்குறைய 85,000 டன்கள் அளவிற்கு அரிசி விநியோகிப்பதால், வெளிச்சந்தையில் அரிசியின் விலை கட்டுப்பாட்டிற்குள் உள்ளது.

### சிறு தானியங்கள் :

39. சோளம், கம்பு, கேழ்வரகு போன்ற சிறு தானியங்களின் விலை 1983 ஆம் ஆண்டில் பிப்ரவரி திங்களில் கிலோ ஒன்றுக்கு ரூபாய் 1-55 லிருந்து ரூபாய் 2-25 வரையில் இருந்தது. கடந்த ஆண்டு பிப்ரவரி மாதத்தில் கிலோ ஒன்றுக்கு ரூபாய் 1-55 லிருந்து ரூபாய் 1-75 வரை இருந்தது. சிறு தானியங் கள் விலை வெளிச்சந்தையில் அதிகமாக உயர்ந்துள்ளது என்றோ அல்லது கிடைக்கவில்லை என்றோ புகார்கள் இல்லை.

### கோதுமை :

40. தமிழ்நாடு, கோதுமைத் தேவைக்கு, கோதுமை உற்பத்தி செய்யும் வட மாநிலங்களைச் சார்ந்துள்ளது. வெளிச்சந்தையில் கோதுமை கிலோ ஒன்றுக்கு சுமார் ரூபாய் 2-80 என்று விற்கப்படுகிறது. கடந்த ஆண்டு பிப்ரவரி மாதத்தில் 1 கிலோ ரூபாய் 2-45 என்ற விலைக்கு விற்கப்பட்டது.

### பருப்பு வகைகள் :

41. பருப்பு வகைகளைப் பொறுத்த வரையிலே இம்மாநிலம் ஆண்டொன்றுக்கு மொத்தம் 5.35 இலட்சம் டன்கள் அளவிற்கு கீழ்க்கண்ட வாறு பற்றாக்குறையாக உள்ளது.

| பருப்பின் பெயர். | தேவை. | உற்பத்தி. | பற்றாக்குறை |
|---|---|---|---|
| | | (இலட்சம் டன்களில்) | |
| 1. துவரம்பருப்பு | 2.00 | 0.16 | 1.84 |
| 2. உளுத்தம்பருப்பு | 1.50 | 0.34 | 1.16 |
| 3. பச்சைப்பருப்பு | 0.50 | 0.11 | 0.33 |
| 4. கடலைப்பருப்பு | 2.00 | 0.04 | 1.96 |
| மொத்தம் | 6.00 | 0.65 | 5.35 |

பருப்பு வகைகள் பெருமளவில் உற்பத்தியாகும் இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம், மகாராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களையே, தன் தேவைக்கு தமிழகம் பெரிதும் நம்பியுள்ளது. பருப்பு உற்பத்தியாகும் மாநிலங்களிலிருந்து வரத்து தற்போது அதிகரித்துள்ளது. அதன் காரணமாக வெளிச்சந்தையில் பருப்பு வகைகளின் விலை கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது குறைந்துள்ளது. துவரம் பருப்பின் விலை பிப்ரவரி 1983-ல் 1 கிலோ சராசரி ரூபாய் 6.15. செப்டம்பர் 1982-ல் 1 கிலோ சராசரி விலை ரூபாய் 6.45. உளுத்தம் பருப்பு செப்டம்பர் 1982-ல் 1 கிலோ சராசரியாக ரூபாய் 6.10 என்ற அளவில் இருந்தது. தற்போது அதன் சராசரி விலை 1 கிலோ ரூபாய் 5.25. கடலைப் பருப்பைப் பொறுத்த வரை செப்டம்பர் 1982 ல் சராசரி விலை 1 கிலோ ரூபாய் 4.20. தற்போது சராசரி விலை ரூபாய் 3.65.

**வெளிச்சந்தை சர்க்கரை :**

42. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது வெளிச்சந்தை சர்க்கரையின் விலை குறைந்துள்ளது. பிப்ரவரி 1982-ல் சராசரி விலை 1 கிலோ ரூபாய் 5.65 ஆக இருந்தது. பிப்ரவரி 1983-ல் சராசரி விலை ரூபாய் 4.45 ஆக உள்ளது.

**சமையல் எண்ணெய் :**

43. சாதாரண ஆண்டில் தமிழ்நாடு கடலையெண்ணெய் உற்பத்தியில் ஓரளவு உபரி மாநிலமாகும். ஆனால் கடலை எண்ணெய் மற்றும் கடலைப் பொருட்களை ஒரு மாநிலத்திலிருந்து மற்ற மாநிலங்களுக்கு எடுத்துச் செல்வதில் தடையேதும் இல்லை. மற்ற சமையல் எண்ணெய் வகைகளைப் பொறுத்த மட்டில் இம்மாநிலத்தில் மிகுதியாக பற்றாக்குறை உள்ளது என்பதைக் கீழே கண்ட புள்ளி விவரங்கள் காணலாம்.





| எண்ணெய் பெயர். | தேவை. | கிடைக்கும் | பற்றாக்குறை அளவு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (இலட்சம் டன்களில்) | |
| 1. கடலை எண்ணெய் | 1.74 | 1.44 | 0.30 |
| 2. நல்லெண்ணெய் | 0.96 | 0.59 | 0.37 |
| 3. தேங்காய் எண்ணெய் | 0.30 | 0.15 | 0.15 |
| மொத்தம் | 3.00 | 2.18 | 0.82 |

44. கடலையெண்ணெய் விலை சென்ற ஆண்டில் கிலோ ஒன்று ரூ. 13.00 லிருந்து ரூ. 14.90 வரை நிலவியது. பிப்ரவரி 1983-ல் ரூ. 13.40 லிருந்து ரூ. 15.40 வரை நிலவியது.

45. நல்லெண்ணெய்யைப் பொறுத்த மட்டில் தமிழகம் தன்தேவைக்கு ஆந்திரப்பிரதேசம் மற்றும் இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களிலிருந்து இறக்குமதியை நம்பியுள்ளது. பிப்ரவரி 1983-ல் நல்லெண்ணெயின் விலை கிலோ ரூ. 15.30 முதல் ரூ. 17.60 வரை விற்கப்படுகிறது. பிப்ரவரி 1982-ல் சராசரி விலை கிலோ ரூ. 13.30 முதல் ரூ. 15.40 விலை உயர்வுக்கு காரணம் நடப்பாண்டில் மத்திய அரசு வெள்ளை எள் ஏற்றுமதியை அனுமதித்ததே யாகும் என்று தெரியவருகிறது.

46. தேங்காய் எண்ணெய்யைப் பொறுத்தவரை தமிழ்நாடு தன் தேவைக்கு கேரள மாநிலத்தையே நம்பியுள்ளது. தற்போது தேங்காய் எண்ணெய் கிலோ ஒன்றுக்கு ரூபாய் 19.60 முதல் ரூபாய் 24.20 வரை விற்கப்படுகிறது. பருவ மழை தவறியதன் காரணமாக உற்பத்தி பாதிக்கப்பட்டதே இந்த விலை ஏற்றத்திற்கு முக்கியமான காரணமென தெரியவருகிறது.

47. பிப்ரவரி 1982-ல் மிளகாய் வற்றல் விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 8.50 முதல் ரூ. 15 வரை இருந்தது. பிப்ரவரி 1983-ல் 1 கிலோ ரூ. 7 முதல் ரூ. 12 வரை நிலவி வந்தது. புளியின் விலையைப் பொறுத்தவரை பிப்ரவரி 1982-ல் 1 கிலோ ரூ. 5 முதல் ரூ. 9 வரை இருந்தது. பிப்ரவரி 1983-ல் 1 கிலோ ரூ. 5 முதல் ரூ. 8.50 வரை இருந்தது.

48. அத்தியாவசியப் பண்டங்களான அரிசி, பருப்பு வகைகள் சமையல் எண்ணெய் போன்ற பொருள்களின் விலை வெளிச் சந்தையில் உயர்ந்து காணும்போது, வர்த்தக நிறுவனங்களின் பிரதிநிதிகளை உணவுப் பொருள் வழங்குதுறை அலுவலர்கள் அழைத்து அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி விலைகளைக் குறைப்பதற்கு அவ்வப்போது தேவையான முயற்சிகளை எடுத்து வருகிறார்கள். விளைச்சல் பாதிக்கப்பட்ட நிலையில், நடப்பு ஆண்டில் விலைவாசி சற்று உயர்ந்தே காணப்படும்,

## (VIII) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் :

49. தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் 1972-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதற்கொண்டு செயல்பட்டு வருகிறது. இது முழுவதும் தமிழக அரசுக்குச் சொந்தமான நிறுவனமாகும். இந்த நிறுவனம் தமிழக அரசின் சார்பாக இன்றியமையாப் பண்டங்களின் கொள்முதல், சேமிப்பு விநியோகம் ஆகிய பணிகளைச் செய்து வருகிறது. தமிழக அரசு பொது விநியோகத்திற்குத் தேவைப்படும் அரிசியைக் கொள்முதல் செய்வதற்கு தமிழக அரசு முறையைச் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் வர்த்தகர்கள் லெவியாகச் செலுத்தும் நெல்/அரிசியை தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் வாங்குகிறது. மேலும் வெளிச் சந்தையில், நெல் விலை வீழ்ச்சி அடையும்போது, விவசாயிகள் நட்டமடைவதைத். தடுப்பதற்கு அவர்கள் தாங்கள் தாமாகவே முன்வந்து அரசுக்கு விற்கும் நெல்/அரிசியை ஆதாவு விலையில் வாங்குவதற்குத் தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் நேரடி கொள்முதல் நிலையங்களை நடத்தி வருகிறது. குறிப்பாக தஞ்சை, தென்னார்க்காடு மாவட்டங்களில் குறுவை அறுவடையின் போது மழை பெய்கிற காரணத்தால் குறுவை நெல் ஈரம் உள்ளதாக இருக்கும். ஈரமாக உள்ள குறுவை நெல்லை வாங்குவதில் வியாபாரிகள் ஆர்வம் காட்ட மாட்டார்கள் ; அல்லது விலையை மிகவும் குறைத்து வாங்குவார்கள். இதைத் தவிர்க்கும் முறையில் 300க்கும் மேற்பட்ட நேரடி கொள்முதல் நிலையங்களை திறந்து அவற்றின் மூலம் விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வரும் நெல்லை வாங்குகின்றது. சம்பா 1982 பட்டத்தில் இந்நிறுவனம் 604 நேரடி கொள்முதல் நிலையங்களையும் 257 லெவி வாங்கும் நிலையங்களையும் செயல்படுத்தி வந்தது. இவற்றின் மூலமாக 3.67 லட்சம் டன்கள் நெல்லையும் 1.65 லட்சம் டன்கள் அரிசியையும் இப்பருவத்தில் கொள்முதல் செய்தது. 1982 குறுவைப் பட்டத்தில் 2.61 லட்சம் டன்கள் நெல்லையும், 34,154 மெட்ரிக் டன்கள் அரிசியையும் கொள்முதல் செய்தது. இப்பட்டத்தில் 482 நேரடி கொள்முதல் நிலையங்களையும், 218 லெவி வாங்கும் நிலையங்களையும் இந்த நிறுவனம் திறந்திருந்தது.

50. பருவமழை தவறியதின் காரணத்தினால்; தமிழகத்தில் பல மாவட்டங்களில் வறட்சி நிலைமை ஏற்பட்டுள்ளது. பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவைப்படும் அரிசியை கொள்முதல் செய்வதற்கு தமிழக அரசு தஞ்சை மாவட்டத்திலும், தென்னார்க்காடு மாவட்டத்தில் சிதம்பரம் காட்டு மன்னார்குடி வட்டங்களிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குளித்தலை, முசிறி, லால்குடி, திருச்சிராப்பள்ளி ஆகிய வட்டங்களிலும் அரசே ஏகபோக கொள்முதல் செய்வதென முடிவு செய்தது. இப்பகுதிகளில் அரசின் சார்பாக தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் இந்தப் பகுதிகளில் விவசாயிகளிடமிருந்து நெல்லை வாங்குகிறது. தஞ்சை மாவட்டத்தில் மட்டும் ஏறக்



குறைய 500 கொள்முதல் நிலையங்கள் மூலம் நெல் வாங்கப்படுகிறது. 1983 ஆம் ஆண்டு சம்பா பருவத்தில் இதுவரை 1.37. லட்சம் டன்கள் நெல்லையும் 18,000 டன்கள் அரிசியையும் கொள்முதல் செய்துள்ளது.

51. பொது விநியோகத்திற்குத் தேவைப்படும் அரிசியை நுகர் பொருள் வாணிபக் கழகம் வழங்கி வருகிறது. 1982-ம் ஆண்டில் 7.33 லட்சம் டன்கள் அரிசியை பொது விநியோகத்திற்காக இந்த நிறுவனம் நடத்தும் சில்லறை கடைகளுக்கும், கூட்டுறவு நிறுவனங்கள் நடத்தும் நியாய விலைக் கடைகளுக்கும், மாணவர் விடுதிகள் போன்ற மொத்த நுகர்வோருக்கும் வழங்கியுள்ளது.

52. மத்திய அரசு தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்யும் லெவி சர்க்கரையை இந்த நிறுவனம்தான் கையாளுகிறது. 1982-ம் ஆண்டில் மத்திய அரசு தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்த சர்க்கரை முழுவதையும் எடுத்துள்ளது. இது மட்டுமின்றி வெளிச் சந்தையில் சர்க்கரை விலையைக் கட்டுப்படுத்தும் வகையில் வெளிச்சந்தை சர்க்கரையையும் வாங்கி இருப்பு வைத்திருந்து மொத்த நுகர்வோருக்கும் திருமணம் போன்ற நிகழ்ச்சிகளுக்கு பொது மக்களுக்கும், வழங்கி வருகிறது இதன் காரணமாக வெளிச்சந்தையில் சர்க்கரையின் விலையை நிதானமாக வைத்துக்கொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டு உள்ளது.

53. மத்திய அரசு தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்யும் கோதுமையின் ஒரு பகுதியை தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் எடுத்து அதை தன்னுடைய நியாய விலைக் கடைகளின் மூலம் குடும்ப அட்டைகளுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.1.75 விதம் வழங்கி வருகிறது.

54. மத்திய அரசு தமிழகத்திற்கு பாமாலின் எண்ணெயை ஒதுக்கீடு செய்து வருகிறது. இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படும் எண்ணெயை சென்னை துறைமுகத்தில் மத்திய அரசு பொது நிறுவனமான ஸ்டேட்டிரேடிங் கார்ப்பரேஷனிடமிருந்து எடுத்து பல்வேறு மாவட்டங்களுக்கும் பொது விநியோகத்திற்கு வழங்கி வருகிறது. 1982-ம் ஆண்டில் 42,491 டன்கள் பாமாலின் எண்ணெயை எடுத்து இந்த நிறுவனம் விநியோகம் செய்துள்ளது. இது மட்டுமன்றி மத்திய அரசின் பொது நிறுவனம் ஒன்று டின்களில் அடைத்து விற்பனைக்கு வழங்கும் பாமாலின் எண்ணெயை இந்த நிறுவனம் பெற்று சென்னையில் பொது மக்களுக்கு விநியோகம் செய்து வருகிறது. ஏறக்குறைய மாதம் ஒன்றுக்கு 500 டன்கள் அளவிற்கு இந்த முறையில் பாமாலின் எண்ணெயை விநியோகம் செய்கிறது.

55. மண்ணெண்ணெயின் மொத்த விநியோகத்தை சென்னை நகரில் இந்த நிறுவனம் மேற்கொண்டுள்ளது. இதைத் தவிர வட ஆர்க்காடு மாவட்டத்தில் திருப்பத்தூரிலும், தென்னார்க்காடு மாவட்டத்தில் மந்தாரகுப்பத்திலும்,

தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டையிலும் பெட்ரோல், டீசல் விநியோகத்தையும் ஏற்று நடத்தி வருகிறது.

56. கிராமந்தோறும் நியாய விலைக் கடைகள் திட்டத்தின்கீழ் இந்த நிறுவனம் தென்னார்க்காடு, தஞ்சாவூர், திருநெல்வேலி, தர்மபுரி ஆகிய நான்கு மாவட்டங்களிலும் நியாய விலைக் கடைகளை நடத்தி வருகின்றது. தென்னார்க்காடு மாவட்டத்தில் 1823 கடைகளையும், தர்மபுரி மாவட்டத்தில் 614 கடைகளையும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 1074 கடைகளையும் திருநெல்வேலி மாவட்டத்தில் 572 கடைகளையும் நடத்தி வருகின்றது. தமிழக அரசின் சார்பாக இந்த நிறுவனம் கொள்முதல் செய்யும் நெல்லையும், அரிசியையும் சேமித்து வைப்பதற்குத் தேவையான கிடங்கி வசதிகளை பெற்றுள்ளது. இந்த நிறுவனத்திடம் 2,31,215 மெட்ரிக் டன்கள் சேமிப்பு கொள்ளளவு கொண்ட சொந்த 143 கிட்டங்கிகள் உள்ளன. இதைத் தவிர தனியார்களிடமிருந்து வாடகை கொடுத்து 2,08,015 மெட்ரிக் டன்கள் சேமிப்பு வசதி உள்ள 687 கிட்டங்கிகளை எடுத்து வைத்துள்ளது. இத்துடன் தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம், மத்திய சேமிப்பு கிடங்கு நிறுவனம் ஆகியவற்றினிடமுள்ள கிட்டங்கிகளையும் இந்நிறுவனம் பயன்படுத்திக் கொள்கின்றது. 1982—83-ம் ஆண்டில் 57,200 டன்கள் சேமிப்பு வசதி கொண்ட கிட்டங்கிகளை கட்டு வதற்கு உத்தேசித்துள்ளது.

57. கொள்முதல் செய்யும் நெல்லை அரவை செய்வதற்கு 13 நவீன அரிசி அரைவை ஆலைகளை இந்நிறுவனம் நடத்தி வருகிறது. இந்த அரைவ ஆலைகளின் மொத்த அரைவைத் திறன் ஆண்டு ஒன்றுக்கு ஏறக்குறைய 1,57,820 மெட்ரிக் டன்கள் நெல் ஆகும். இந்த ஆலைகளில் எரிகலன்களை இயக்குவதற்கு என்ணெய்க்குப் பதிலாக உமியைப் பயன்படுத்துவதன் மூலம் இதுவரையில் ஏறக்குறைய 260 இலட்சம் ரூபாய் சேமித்துள்ளது குறிப் பிடத்தக்க அம்சமாகும். இந்த நவீன அரைவை ஆலைகள் முழுத் திறனுக்கு இயக்கப்பட்டு வருகின்றது. 1981-82-ம் ஆண்டில் 1,45,000 டன்கள் அளவிற்கு நெல் அரைவை செய்துள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாள் ஒன்றுக்கு 100 டன்கள் நெல் அரைவை செய்யும் அரைவைத் திறன் கொண்ட ஒரு நவீன அரிசி ஆலையை தஞ்சை மாவட்டத்தில் சீர்காழி வட்டத்தில் இரண்டு கோடி ரூபாய் செலவில் அமைப்பதற்கு திட்டக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த ஆலையை அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1983-ம் ஆண்டில் இந்த ஆலை இயங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

58. தமிழகத்திலுள்ள வறட்சி நிலைமை காரணமாக அரிசி உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே பொது விநியோகத்திற்கு தேவைப் படும் அரிசியை தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் பிற மாநிலங்





களில் வெளிச்சந்தையில் வாங்குவதற்கு தீவிர நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது. இதுவரையில் 2,76,900 டன்கள் வாங்க ஏற்பாடு செய்யப் பட்டு அதில் 43,000 டன்கள் அளவிற்கு தமிழகத்திற்கு ஏற்கெனவே வந்து சேர்ந்துள்ளது.

59. காவல் துறை, தீயணைப்பு துறை அலுவலர்களுக்கு மலிவு விலையில் அத்தியாவசியப் பண்டங்களை வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்திற்குத் தேவைப்படும் அரிசி, பருப்பு முதலிய அனைத்து அத்தியாவசியப் பண்டங்களையும் தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம்தான் கொள்முதல் செய்து வழங்கி வருகிறது. அதே போன்று விதவை தாய்மார்கள், உடல் ஊனமுற்றோர், வயது வந்தோர், விவசாய கூலிகள் இவர்களுக்கு வாரம் ஒன்றுக்கு ஒரு கிலோ அரிசியை இலவசமாக அரசு வழங்கி வருகின்றது. இந்தத் திட்டத்திற்குத் தேவையான அரிசியையும் தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம்தான் வழங்கி வருகின்றது.

60. 1982-ம் ஆண்டு ஜூலை மாதம் முதற்கொண்டு முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் ஏறக்குறைய 61,671 மையங்களில் ஏறக்குறைய 64 இலட்சம் குழந்தைகளுக்கு உணவு தயாரித்து வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்திற்கு தேவைப்படும் அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய் ஆகிய பொருள்களை தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் கொள்முதல் செய்து வழங்கி வருகிறது. மாதம் ஒன்றுக்கு 17,000 டன்கள் அளவுக்கு அரிசி, 2,500 டன்கள் அளவுக்கு பருப்பு, 1,500 டன்கள் அளவுக்கு சமையல் எண்ணெய் ஆகியவற்றை இந்த நிறுவனம் வழங்கி வருகிறது. தர்மபுரி, திருநெல்வேலி, தென் ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் உள்ள சத்துணவு நிலையங்களுக்கு தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் நேரடியாக இந்தப் பொருட்களை எடுத்துச் சென்று வழங்கி வருகின்றது. மற்ற மாவட்டங்களில் கூட்டுறவு நிறுவனங்கள் இப்பொருட்களை தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத் திடமிருந்து பெற்று சத்துணவு மையங்களுக்கு எடுத்துச் சென்று வழங்கி வருகின்றன.

## XI தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம்.

61. தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் விவசாய விளை பொருட்கள் மற்றும் இதர இன்றியமையாப் பண்டங்களை சேமித்து வைப்பதற்கு கிட்டங்கி வசதிகளை செய்து வருகின்றது. விவசாயிகள், உற்பத்தியாளர்கள், வர்த்தகர்கள் மற்றும் அரசு பொது நிறுவனங்கள் போன்றவை தாங்கள் கையாளுகின்ற பொருட்களை சேதம் இன்றி விஞ்ஞான ரீதியில் சேமித்து வைப்பதற்கு இந்த நிறுவனம் உதவி செய்து வருகிறது. இவ்வாறு தக்க முறையில் பொருட்களை சேமித்து வைப்பதினால் சேதாரம் ஏற்படாமல்

காப்பாற்ற முடிகிறது. இந்த நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட / பங்குத் தொகை ரூபாய் 6 கோடி 31—3—1982 வரை செலுத்தப்பட்ட மூலதனத் தொகை ரூபாய் 3.91 கோடி. இதை மாநில அரசும் மத்திய சேமிப்பு கிட்டங்கி நிறுவனமும் சம அளவில் செலுத்தியுள்ளது. 1982-83 ஆம் ஆண்டில் ரூபாய் 40 லட்சம் பங்கு மூலதனமாக செலுத்தப்பட்டுள்ளது. இன்னும் ரூபாய் 10 லட்சம் பங்கு மூலதனமாக செலுத்தப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

62. இந்த நிறுவனம் 31-3-82 வரை 33 கிட்டங்கிகளை கட்டியுள்ளது. அவற்றின் கொள்ளளவு 2,15,512 மெட்ரிக் டன்களாகும். 1982-83ம் ஆண்டில் 31,600 மெட்ரிக் டன்கள் அளவிற்கு கூடுதல் கிட்டங்கி வசதிகளை ஏற்படுத்துவதற்கு இலக்கு நிர்ணயித்து இதுவரை 20,800 மெட்ரிக் டன்கள் கொள்ளளவு உள்ள கிட்டங்கிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு இறுதிக்குள் இந்த நிறுவனத்தின் மொத்த சேமிப்பு அளவு 2,47,112 மெட்ரிக் டன்கள் அளவிற்கு உயரும் என்று நம்பப்படுகிறது. 1983-84-ம் ஆண்டில் இந்த நிறுவனம் ரூபாய் 125 இலட்சம் செலவில் 29,000 மெட்ரிக் டன்கள் அளவிற்கு கிட்டங்கிகளைக் கட்டுவதற்கு உத்தேசித்துள்ளது.

63. இந்த நிறுவனத்திடம் 2,33 லட்சம் மெட்ரிக் டன்கள் கொள்ளளவு கொண்ட சொந்த கிட்டங்கிகளும், 54,000 டன்கள் கொள்ளளவு கொண்ட வாடகைக் கிட்டங்கிகளும் உள்ளன. இந்த நிறுவனம் தன்வசம் உள்ள மொத்த சேமிப்பு வசதியை (2,87 லட்சம் மெட்ரிக் டன்கள்) முழுமையாகப் பயன்படுத்தி வருகிறது. 1982-83 ஆண்டு இந்த நிறுவனத்திற்கு வெள்ளிவிழா ஆண்டாகும். இந்த நிறுவனம் 1969-70 முதற்கொண்டு இதுவரையிலும் 1974-75-ம் ஆண்டு தவிர மற்ற ஆண்டுகளில் லாபத்துடனேயே இயங்கி வந்துள்ளது. 1975-76ம் ஆண்டு முதற்கொண்டு இந்த நிறுவனத்திற்கு கிடைத்த லாபங்களின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| ஆண்டு | நிகர லாபம் (இலட்சம் ரூபாயில்) |
|---|---|
| 1975—76 | 28.85 |
| 1976—77 | 18.52 |
| 1977—78 | 42.59 |
| 1978—79 | 38.63 |
| 1979—80 | 22.35 |
| 1980—81 | 24.62 |
| 1981—82 | 69.31 |

61. இந்த நிறுவனத்தின் 1981-82-ம் ஆண்டின் கணக்குகள் தணிக்கைக்கு பின்பு இயக்குநர் குழுவின்முன் 10—8—82 அன்று வைக்கப்பட்டது. 1982-83-ம் ஆண்டு கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு வருகிறது.

(317)
தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி
5 ஏப் 1984
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

[ISSUED 19—12—1983

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

SATURDAY 9th APRIL 1983

Volume CXCVIII (No. 2)

© GOVERNMENT OF TAMIL NADU 1983

Legislative Council Department
Fort St. George, Madras-600 009.

Price Rs. 2.75 Paise]

# தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

---

சனிக்கிழமை, 1983 ஏப்ரல் 9.

பங்குனி 26, துந்துபி—திருவள்ளுவராண்டு 2014.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில், மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### இருபோக நஞ்சை நிலங்கள்.

*257 வினா—திரு. பா. ரா. தாமஸ் (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்) : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் வட்டம், சிவகளை கீழ்ப்பிடாகையில் 1979 முதல் இதுவரை பயிர் செய்யப்படாமல் இருக்கும் இருபோக நஞ்சை நிலங்களின் பரப்பு எவ்வளவு?

(இ) இந்த நிலங்களில் பயிர் செய்யப்படாமல் இருப்பதற்குரிய காரணம் யாது?

(உ) இது பற்றி அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா?

(எ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, சிவகளை, கீழ்ப்பிடாகை அப்பன் கோவில் கிராமத்தில் 42.41 ஏக்கரும், கீழ்ப்பிடாகை கஸ்பா கிராமத்தில் 299.95 ஏக்கரும் ஆக மொத்தம் 342.36 ஏக்கர் நிலத்தில் 282.36 ஏக்கர் நிலங்கள் பயிரிடப்பட்டு வருகின்றன. மீதம் சுமார் 60 ஏக்கர் நிலங்கள் கீழ்ப்பிடாகை கிராமத்தில் பயிரிடப்படாமல் உள்ளன.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவர் அவர்களே, உணவுத் தட்டுப்பாடு இருக்கும் காலத்திலே நஞ்சை நிலங்களை ஏன் தரிசாகப் போடுகிறார்கள்? அப்படித் தரிசாகப் போடுகிற நிலங்களை அரசு எடுத்து பயன்படுத்தும் உத்தேசம் உண்டா?

## உள்ளடக்கம்

**9—4—1983**


பக்கங்கள்

**வினாக்கள்—விடைகள்:** .. .. *133—154*

கவன ஈர்ப்பு :

(1) தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் எரி எண்ணெய்க் குழாயில் ஏற்பட்ட ஒழுக்கில் தீப்பிடித்து எரிந்ததால் மின்சார உற்பத்திக்குக் குந்தகம் ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது குறித்து .. .. .. *155—156*

(2) சென்னை தொலைக்காட்சி மூலம் இனி வாரம் இருமுறை இந்தி சினிமா காட்சிகள் காட்டப் பட இருப்பது குறித்து .. .. *157—162*

3. அரசின் தீர்மானம்—

ஊரகத் தொழில்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம் .. *162—190*
*191—231*

4. அறிவிப்புகள்—

(1) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு *172*

(2) 4–4–1983 அன்று மேலவை நிகழ்ச்சிகளை மேலவைத் துணைத் தலைவர் ஒத்தி வைத்தது குறித்து 'நியூஸ் டுடே' பத்திரிகையில் வெளியான செய்தி குறித்து .. *191*

5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. 232—23[illegible]



143178

தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி
5 ஏப் 1984
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, இந்த மாதிரியாக தரிசு நிலங்கள் எல்லா இடங்களிலும் போடுவதில்லை. சில ஊர்களில் வாரம் கொடுப்பதிலே தகராறு வரும்போது தரிசாகப் போடு கிறார்கள். எல்லா மாவட்டங்களிலும் ஏற்படவில்லை. எல்லா மாவட்டங் களிலும் வாரத்திற்கு என்னென்ன செய்ய வேண்டுமென்று அரசு உத்தரவு போட்டு, இன்றைக்கு வாரம் ஒழுங்காகக் கொடுக்கப்படுகிறது. சில இடத் திலே தகராறு இருந்தாலும், வாரம் கொடுப்பதிலே தகராறு இருந்தாலும், சாகுபடி செய்வதில் தகராறு இல்லை. திருநெல்வேலி மாவட்டத்திலே மட்டும் பேத்துவாரதாரர்கள், நீர்ப்பாசனதாரர்கள் என்று இருக்கிறார்கள். பேத்துவாரதாரர்கள் 250 பேர் இருக்கிறார்கள். நீர்ப்பாசனதாரர்கள் 1,281 பேர் இருக்கிறார்கள். அங்கே எப்படி வாரம் என்றால் தண்ணீர் பாய்ச்சு வது, உரங்களைப் போடுவது, வரப்பைச் சரிப்படுத்துவது, உழுவது, நடுவது போன்றவைகளை மேற்பார்வை செய்வார்கள்; அவைகளுக்கெல்லாம் வேண் டிய பொருள்களை நிலச்சொந்தக்காரர்கள் கொடுப்பார்கள். மேற்பார்வை செய்கிற போது வாரத்திலே ஐந்தில் ஒரு பங்கு மேற்பார்வையாளர்களுக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஐந்தில் ஒரு பங்கு என்பது இடத் திற்கு இடம் சிறிது மாறும். அப்படி மாறுகிறபோது, ஒற்றுமை இல்லாத தால், சில இடங்களில் தகராறு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

**கள்ளுக் கடைகள்.**

* 258. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம் தலைஞாயிறு ஒன்றியத்திலுள்ள மணக் குடி கிராமத்திலுள்ள நெடுஞ்சாலையில் ஒரு பர்லாங் தொலைவிற்குள் மூன்று கள்ளுக்கடைகள் உள்ளதை அரசு அறியுமா?

(இ) அவற்றில் இரண்டு கடைகள் பொதுமக்களுக்கு பலவிதங்களில் இடையூறாக இருப்பதால் இடமாற்றம் செய்யப்பட வேண்டும் என அவ்வூர் மக்கள் 13—8—1982-ல் கடையடைப்பு செய்ததையும், 16—8—1982-ல் உண்ணாவிரதம் இருந்ததையும் அரசு அறியுமா?

(உ) ஆம் எனில், இது குறித்து அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தஞ்சாவூர் மாவட்டத்திலே மணக்குடி, காடாந்தேத்தி, வெண்மணச்சேரி ஆகிய கிராமங்களில் கள்ளுக் கடைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கள்ளுக் கடைகள் ஒரே ஊரில் இல்லை. அந்தந்த கிராம எல்லைக்குள் இருக்கின்றன என்றாலும், ஒரே ஊரில் இருப்பதாகச் சிலர் எண்ணி, அதற்கு ஒரு நாள் உண்ணாவிரதம் இருந்தார்கள். பிறகு நாகப்பட்டினம், மன்னார்குடி கோட்டாட்சியாளர்கள் கூடிப் பேசி அந்தந்த கிராமங்களில் இருக்கிறது என்பதைச் சொல்லி அதற்குப் பிறகு, இப்போது ஏலம் எடுத்து நடைமுறையில் இருப்பதாகவும் இந்த ஆண்டு இருக்கின்ற இடத்திலேயே இருக்க வேண்டும் என்றும் 15—7—1983 வரையில் அந்தக் கடைகள் அங்கே இருப்பதால், எந்தவிதத் தடைகளும் இல்லை யென்றும் அவர்கள் சம்மதம் தெரிவித்து இப்போது எந்தவிதத் தகராறும் இல்லாமல் கடைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவரவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்திலே மணக்குடி கிராமத்தில் 3 கள்ளுக் கடைகள் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூன்று ஊர் எல்லைக்குள் இருக்கின்றன என்று சொல்லு கிறார்கள். நான் அந்த ஊரிலேயே பணியாற்றியவன். மூன்று ஊர் எல்லைக்குள்ளாக இல்லாமல் ஒரே ஊரிலேதான் இருக்கின்றன. ஒரு ஊரினு டைய எல்லை முடிகிற இடத்திலே மற்றொரு ஊர் எல்லை ஆரம்பிக்கிறது. ஒரு ஊரின் எல்லை முடிகின்ற அந்த பார்டர் இடத்தில் கொண்டு வந்து வைத்துவிட்டு ரெவின்யூ இலாக்கா குறிப்பிட்டபடி அது அந்த எல்லைக்குள் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். காடாந்தேத்தி, வெண்மணச்சேரி, மணக்குடி ஆகிய மூன்று கிராமங்களும் கூடுகின்ற அந்தப் பகுதிக்குள்ளே இருக்கின்றன. ஆனால் அமைச்சர் அவர்கள் வரைபடத்திலுள்ள கோடு களைக் காட்டி அந்தக் கடைகள் இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். ஒரு ஊருக்குள்ளேதான் அந்தக் கடைகள் இருக்கின்றன. அமைச்சர் அவர்கள் நேரில் சென்று பார்த்தால் தெரியும். அதிகாரிகள் இந்தத் தவறு செய்து விட்டு, அதற்குப் பின்னாலே மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே பேசிய பிறகு, "இந்த ஆண்டு இருந்துவிட்டும், அடுத்த ஆண்டு வேண்டுமானால் நிராகரித்துவிடுகிறோம்" என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே தவறு செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பார்களா? மணக்குடியில் பெண்கள் குளிக்கின்ற படித்துறைக்கு எதிரே இருக்கிறது. வெண்மணச் சேரியில் பக்தர்கள் கோவிலுக்குச் செல்லுகிற வழியில் இருக்கிறது.

வெண்மணச்சேரி கடையும், காடாந்தேத்தி கள்ளுக் கடையும், மணக்குடிக் குள்ளே இருக்கின்றன. அதை அகற்ற இனியாவது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, அரசு ஒரு முடிவு எடுத்துவிட்டால், அந்த முடிவு சரிதான் என்று வாதிடுவதற்கு இந்த அரசு தயாராக இல்லை. ஏனென்றால் முடிவு எடுக்கிறபோது, அப்போது இருக்கின்ற தகவல்களை வைத்துக்கொண்டு முடிவு எடுக்கிறோம். அதற்குப் பிறகு வருகிற தகவல்களைக் கொண்டு மாற்றிக்கொள்வது என்பது ஜனநாயக மரபு. மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவது சரி என்றால், மறுபரிசிலனை செய்து, தவறாக இருந்தால், தவறு செய்தவர்கள் மீது தக்க நடவடிக்கை இந்த அரசு எடுக்கும் என்று அவைக்கு உறுதி அளிக்கிறேன்.

என்னிடத்திலே கொடுக்கப்பட்ட கணக்குப்படி, மணக்குடியில் 48 ஆம் நெம்பர் கடையும், காடாந்தேத்தியில் 49 ஆம் நெம்பர் கடையும், வெண்மணச்சேரியில் 46 ஆம் நெம்பர் கடையும் இருக்கின்றன. ஒரே இடத்திலே எல்லாக் கடைகளையும் வைத்தாலும், கடைக்காரர்களுக்கு இலாபம் வராது. அவர்களே வெவ்வேறு இடத்திலே தான் வைக்க விரும்புகிறார்கள். மணக்குடி 48-ஆம் நெம்பர் கடைக்கும் காடாந்தேத்தி 49-ஆம் நெம்பர் கடைக்கும் இடையே உள்ள தூரம் 609 மீட்டர். அதைப் போலவே காடாந்தேத்தி 49 ஆம் நெம்பர் கடைக்கும் வெண்மணச்சேரி 46-ஆம் நெம்பர் கடைக்கும் இடையே உள்ள தூரம் 163 மீட்டர். அதைப்போலவே மணக்குடி 48-ஆம் நெம்பர் கடைக்கும் வெண்மணச்சேரி 46-ஆம் நெம்பர் கடைக்கும் இடையே உள்ள தூரம் 446 மீட்டர் என்று என்னிடத்திலே கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் கொடுத்த கணக்கைத்தான் படிக்கிறேன். நேரிடையாக நான் பார்க்கவில்லை. இதெல்லாம் தவறாக இருந்தால், நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன்.

(முற்பகல் 9-40)

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மணக்குடி வார்மக்கள் மணக்குடிக்குள்ளே 3 கடைகள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, 609 மீட்டர், 163 மீட்டர், 446 மீட்டர் என்று சொல்கிறார்கள் என்றால், அது எவ்வளவு தூரம் என்பது உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். அந்தக் கணக்குப்படி பார்த்தாலும், அது பக்கம் பக்கமாக இருப்பது தெரியும். அப்படி அந்த ஊரிலே வைத்துவிட்ட காரணத்தினாலே, அந்த ஊரிலேதான் குடிகாரர்கள் இருக்கின்றார்கள் என்ற கேவலமான கருத்து ஏற்பட்டு, அவர்



களைப் பாதிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அந்த ஊர்க் காரர்களே பொங்கி எழுந்து உண்ணாவிரதம் இருந்து கடையடைப்பு செய்திருக்கின்றார்கள். அப்போது அந்தக் கடைக்காரர்கள் குடிக்கின்ற பழக்கம் உள்ளவர்களிடத்திலே அவைகள் அந்தப் பகுதியிலே இருப்பதிலே ஆட்சேபனை இல்லை என்று எழுதி வாங்கிக்கொண்டு, அரசுக்கு அனுப்பி, அங்கே அவைகளைத் தக்க வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நான் ஏற்கெனவே சொன்னபோது, இதுகுறித்து நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்கள். அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இந்த மீட்டர் கணக்கு சொல்கிறபோது அது கொஞ்ச தூரம் என்று சொல்லிக்கொள்கிறேன். கிராமத்தில் உள்ள அந்தக் கடைகள் கொஞ்ச தூரத்தில் இருக்கின்றன என்று தெரிவித்திருக்கிறார்கள். நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் அந்தக் கடைகள் அந்தந்த ஊர் எல்லைக்குள்ளேதான் இருக்கின்றன என்பது ஒன்று. அதை அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். இல்லாவிட்டால் இன்னொரு கடை எடுத்தவர் அதனால் என்னுடைய வியாபாரம் பாதிக்கப்படுகிறது என்று அவர் அதற்குத் தடை வாங்கிவிடுவார். அப்படித் தடை வாங்காததாலே, அதிலே தடை வாங்க வாய்ப்பில்லை என்று தெரிகிறது. ஆனால் ஒரே ஊருக்குப் பக்கத்திலே, அந்தந்த ஊர் எல்லைக்குள்ளேயே வைத்துவிட்டார்கள் மற்ற ஊர்க்காரர்கள், அதனாலே அந்தக் குறிப்பிட்ட ஊர்க் காரர்கள், அதிகமான குடிகாரர்கள் என்று மற்றவர்கள் என்றுவார்கள் என்றும் அவர்கள் எல்லாம் வருத்தப்படுகிறார்கள் என்றும் சொன்னார்கள். அப்படி அவர்கள் வருத்தப்படுவது உண்டு. இதில் குடிகாரர்கள் என்ன சொல்வார்கள் என்றால், ஒரு கடைக்குப் பதிலாக மூன்று கடைகள் இருந்தால், போட்டியிலே அவர்களுக்குக் குறைந்த விலைக்குக் கிடைக்கும் என்றும், நல்ல கள் கிடைக்கும் என்றும் அவர்கள் நினைப்பார்கள். இப்படி இவர்கள் நினைப்பார்கள். அவர்கள் அப்படி நினைப்பார்கள். ஆகவே இதில் அந்த ஊர்க்காரர்கள் ஒரு ஊர்க்கூட்டம் போட்டு அந்த ஊரிலே இருப்பவர்கள் குடிக்கக்கூடாது என்று ஒரு கட்டுப்பாடு வைக்க வேண்டும், அவர்கள் குடிப்பதால் ஊருக்குக் கெட்ட பெயர் வருகிறது என்று சொல்லி அதை மாற்றச் செய்யலாம். ஒரு நல்ல காரியத்தை அவர்கள் செய்யலாம். நல்ல காரியத்தைச் செய்கின்றபோது, இடைஞ்சல் அதிகமாக வரும். கெட்ட காரியத்தைச் செய்கின்றபோது அவ்வளவு இடைஞ்சல் வராது. நான் வருத்தப்படுவதைத் தவிர, வேறு ஒன்றும் செய்ய முடியாது.

நல்ல காரியம் செய்வதற்கு இடையூறு வரும். கெட்ட காரியம் செய்வதற்கு இடையூறு இல்லை. இதுதான் நாட்டிலே நடக்கின்றது. நாட்டில் நம் சமுதாயத்திலே வந்திருக்கின்ற வளர்ச்சி அப்படி இருக்கின்றது. அதனாலே மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சொன்ன கருத்தை மீண்டும் பரிசீலனை செய்து, தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தினையொட்டி சொல்லிக்கொள்கிறேன். லைசென்சிங் அத்தாரிட்டியைப் பொறுத்தவரையிலும் இந்த மூன்று கிராமங்களுக்கும் ஒருவர்தான் அத்தாரிட்டியாக இருந்திருக்க முடியும். அதிலே அந்த இடத்திலே கள்ளுக் கடைகள் வைக்கப்படுவதற்கான அனுமதி (Sanction) கொடுப்பதும் அதே அத்தாரிட்டிதான் அவர்கள் "" Moral behind the rules and Act ". "படி செய்ய வேண்டும். என்ன நோக்கத்திற்காக அரசாங்கம் இந்தமாதிரி கடைகளை பக்கத்தில் பக்கத்தில் வைக்கக்கூடாது என்று உத்தரவு போட்டதோ, சட்டம் போட்டதோ அதுபற்றி அவர்களுக்குத் தெரியும். ஆனால் அதை மீறுவதற்கு, அதை அவர்கள் to get over செய்வதற்கு வேறு வழிகளிலே பார்த்து வைத்திருக்கிறார்கள். எங்கேயிருந்து எங்கே போவது, இந்த 3 கிராமங்கள் தனித்தனி கிராமங்களாக எப்படி வருகின்றன என்றும் இது ஒரே கிராமமாக இல்லை என்பதையும் சொல்வதற்கு வழிசெய்கிறார்கள். Maybe trueMaybe as per rules ஆனால் உண்மையிலேயே 'They are not carrying out the moral behind the instructions given by by the Government" அதுபோன்ற நிலையிலே அரசு அதிகாரிகள் இந்தக் கள்ளுக் கடைகளுக்கு சாராயக் கடைகளுக்கு அனுமதி வழங்குகின்ற போது, அந்த முறையிலே இயக்கக்கூடாது என்பதற்காக ஒரு பொதுவான உத்தரவை, பொதுவான (instructions) இன்ஸ்ட்ரக்ஷனை அரசு தர முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** இப்படிப்பட்ட இடத்தை அனுமதித்தால் தகராறு வரும் என்று அரசு உணர்ந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் மேலவையிலும் பேரவையிலும் பேசியிருக்கிறார்கள். இதையெல்லாம் மனதிலே வைத்துக்கொண்டுதான் அந்த அனுமதி வழங்குகின்ற அதிகாரியும், எக்சைஸ் தாசில்தாரிடம் இருந்ததை இந்த ஆண்டு மாற்றி கோட்டாட்சித் தலைவர்களுக்கு, ஆர்.டி.ஓ. க்களுக்கு மாற்றிக்கொடுத்திருக்கிறோம். அது ஒரு நல்ல நோக்கத்துடன் மாற்றப்பட்டது. ஏனென்றால் அதைக் கொடுக்கின்ற அதிகாரி கொஞ்சம் மேல் மட்ட அதிகாரியாக இருக்க வேண்டும் என்று செய்திருக்கிறோம். அது எக்சைஸ் இலாகாவில் சம்பந்தம்



இல்லாமல் இருக்கின்ற அதிகாரியிடத்திலே கொடுக்கப்பட்டது. அது ஒரு நல்ல காரியமாகத்தான் செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் குறிப்பைப் பார்க்கும்போது, அதில் ஒரு ஊர் நாகப்பட்டினம் தாலுக்காவிலே இருக்குமோ, இன்னொரு ஊர் வேதாரண்யம் தாலுக்காவிலே இருக்குமோ என்று நான் நினைக்கிறேன். அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களிடம் கேட்கிறேன். அப்படி வேறு வேறு தாலுக்காவில் இருக்கின்றபோது, அதற்கும் இதற்கும் தனிப்பட்ட கோட்டாட்சித் தலைவர்கள் தான் அதை வழங்கியிருக்க முடியும். இதையெல்லாம் நான் ஊகித்துச் சொல்கிறேன். நான் பல கிராமங்களுக்குச் சென்றிருக்கிறேன். அந்த கிராமம் எல்லாம் எந்தெந்த தாலுக்காக்கள் என்று யோசித்துக்கொண்டிருக்கிறேன். ஒரு கடைக்குக் கொடுத்த அதிகாரி வேறு, இன்னொரு கடைக்குக் கொடுத்த அதிகாரி வேறு. ஒன்று மன்னார்குடி கோட்டாட்சித் தலைவர் கொடுத்திருக்கிறார். இன்னொன்று நாகப்பட்டினம் கோட்டாட்சித் தலைவர் கொடுத்திருக்கிறார் என்று தெரிகிறது. அங்கே தவறு நடந்திருந்தால், அதை ஏன் கொடுத்தார் என்று அரசு கேட்டு தக்க நடவடிக்கை எடுக்கும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** அங்கே அதிகமாகக் குடிப்பவர்கள் இருப்பதற்கு இந்த ஊரினுடைய பெயர் காரணமாக இருந்திருக்குமா? மனக்குடி என்று இருக்கிறது. அந்த மக்கள் இந்தப் பெயரை மாற்றச் சொல்லிக் கேட்டிருக்கிறார்களா?

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** நேரத்தை வீணாக்குகிறார்கள். குடி என்று இருப்பதனாலேயே குடிப்பது பற்றி வந்துவிடுமா?

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** நான் சொல்லி முடித்துவிடுகிறேன். நீலகிரியில், அந்த மாவட்டத்தில் அதிகக் கடைகள் இருந்து, அங்கு போட்டியின் காரணமாக இங்கே போனாலும் அடி, அங்கே போனாலும் அடி என்ற காரணமாக மக்கள் அங்கே குடிப்பதையே விட்டுவிட்டார்கள். அதிகக் கடைகள் இருப்பதுகூட இப்படி ஒரு நன்மையை ஏற்படுத்தும் என்று அமைச்சர் அவர்கள் கருதுகிறார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** அங்கே கடைகள் உள்ள ஊர்கள் மனக்குடி அருகாமையில் இருக்கின்றனவா, காடாந்தேத்தி அருகாமையில் இருக்கின்றனவா, வெண்மணச்சேரி அருகாமையில் இருக்கின்றனவா, ஒன்றுக்கொன்று அருகாமையில் கடைகள் இருக்கின்றனவா என்பது பற்றி விவரமாக எனக்குத் தெரியாது. அங்கே உள்ள தூரத்தை மட்டும் நான்

தெரிவித்துக்கொண்டேன். இதை நான் தெரிவிக்கின்றபோது, அந்தப் பகுதி மக்களே இதிலுள்ள சங்கடங்களைப் பார்த்து குடிக்காமல் இருப்பது தான் நல்லதே தவிர வேறல்ல. அவர்கள் அப்படி இருக்க வேண்டும் என்பதுதான் என் கருத்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இந்த ஒரு குடிப் பிரச்சினை கேள்விக்கு கிட்டத்தட்ட 10 நிமிடங்கள் ஆகியிருக்கின்றன.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** நான் ஒரு கேள்விதான் கேட்டதாக நினைவு.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உறுப்பினர் ஏற்கெனவே இரண்டு கேள்விகள் கேட்டாகிவிட்டது. இரண்டு கேள்விகள் கேட்டிருப்பது எனக்கு ஞாபகம் இருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** நான் அதிகமாகக் கேட்க விழையவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல அல்ல. மணக்குடி கூத்தபிரான் பிறந்த ஊர் இந்த மணவை என்று வரலாற்றிலே வருகிறது. ஒட்டக்கூத்தருக்கு இழுக்கு வரும் வகையிலே சொல்ல வேண்டாம். மணக்குடி குடியினால் வந்ததாகக் கருத வேண்டாம். அந்த 3 கடைகளை, முன்பு அவையில் சொன்னதுபோல, எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவிலே நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** கடை என்று இல்லாவிட்டால் அங்கே கள்ளச் சாராயம் வந்துவிடுகிறது. அதனால், கடை வைப்பதன் காரணமாக நாம் அவர்களைக் கள்ளச் சாராயத்திலிருந்து காப்பாற்ற முடிகிறது. அவர்கள் கள்ளச் சாராயம் குடிக்காது நல்ல சாராயமாவது குடிக்கட்டும்.

### செய்தி சினிமாப்படங்கள்

*** 259. வினா—திரு. ஈ. எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழக அரசால் 1—1—1981ஆம் தேதியிலிருந்து 15—3—1982 ஆம் தேதி வரை எத்தனை செய்தி சினிமாப் படங்கள் எடுக்கப்பட்டன?

(இ) அவைகளை அனைத்து திரையரங்குகளிலும் கட்டாயமாகக் காட்ட வேண்டும் என்று அரசு ஆணை எதும் பிறப்பித்துள்ளதா?



**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** (அ) தமிழக அரசால் 1—1—1981 முதல் 15—3—1982 வரை எடுக்கப்பட்ட படங்களின் எண்ணிக்கை—

| | |
|---|---|
| செய்திப்படங்கள் | 16 |
| விளக்கப்படங்கள் | 8 |

(இ) தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு திரையரங்குகள் (முறைப்படுத்தல்) சட்டத்தின் 6-வது பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி தமிழக அரசினரால் தயாரித்து வெளியிடப்படும் செய்தி விளக்கப்படங்களைத் திரையரங்குகள் சட்டப்படி திரையிட வேண்டும்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன்:** செய்தி சினிமாப்படங்கள் எடுக்க ஏதாவது வரைமுறைகள் இருக்கின்றனவா? அப்படியானால் அவை என்ன? தனியார் நிறுவனங்கள், அமைப்புகள் நடத்துகின்ற முக்கியமான வைபவங்கள், விழாக்கள் போன்றவைகள் செய்தித் துறையினர் மூலம் சினிமாப் படமாக எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** எந்தெந்தச் செய்திகள் மக்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டுமென்றும் அதன் மூலமாக மக்களுக்குப் பயன் கிடைக்கும் என்றும் அரசு கருதுகிறதோ அவைகளை எல்லாம் செய்திப் படமாக எடுக்கிறது. துறைகளின் மூலம் சில திட்டங்களை, அந்தத் திட்டங்களில் உள்ள நோக்கங்களை மக்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற அவசியம் ஏற்படுகிறபோது, அந்தக் கருத்துக்களை விளக்க படங்கள் எடுக்கப்படுகின்றன.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** இந்தச் செய்திப்படங்களில் நல்ல கருத்துக்களை விளக்கும் சில படங்களை நாம் பார்த்திருக்கிறோம். அதிலே பல் நோயினால் வரக்கூடிய தொல்லைகளைப்பற்றி ஒரு அற்புதமான படத்தை தமிழக அரசு திரைப்படமாக எடுத்தது. மனதிலே பதிய வைக்கின்ற அளவுக்கு அந்தப் படம் இருக்கிறது. தற்போதைய பிரச்சினைகள், குடிநீர்த் தட்டுப்பாடு, மின்சாரத் தட்டுப்பாடு இதுபோன்ற அனைத்துத் தரப்பினரையும் பாதிக்கக்கூடிய பிரச்சினையாக இருக்கின்ற நேரத்தில், மக்கள் அவைகளைச் சிக்கனமாகப் பயன்படுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இதைப் பாமர மக்களும் புரிந்துகொள்ள வைக்கின்ற வகையிலே திரைப் படங்கள் எடுத்து விளக்குவதற்கு என்று எதுவும் கருத்தில் இருக்கிறதா?

(முற்பகல் 9-50)

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தது போல, எந்தெந்த சமயங்களிலே மக்களுடைய பிரச்சினைகள் மக்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டுமென்று அரசு விரும்புகிறதோ அந்த நேரத்தில் அதைப் பற்றிய செய்திப் படங்களை, விளக்கப் படங்களை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இப்போது ஒரு செய்திப் படத்திற்குள்ளேதான் பற்பொடித் திட்டத்தை ஏன் அரசு அறிவித்திருக்கிறது என்பதை விளக்கக்கூடிய வகையில் பல்லைப் பாதுகாக்கும் அந்த உணர்வை மக்கள் இவ்வளவு காலம் உணர்ந்துகொள்ளாமல், அதனாலே எவ்வளவு கடுமையான விளைவுகள் ஏற்படுகின்றன, கொடுமையான நோய்கள் ஏற்படுகின்றன என்பதை பல் மருத்துவ நிபுணர்களை வைத்துச் சொல்லி, மக்களுக்குப் பயன்படுகிற வகையிலே அந்தச் செய்திப் படத்திலே அந்தக் காட்சியைச் சேர்த்திருக்கிறோம். அதைப்போலவே தண்ணீர்ப் பஞ்சம் வரும் என்று எதிர்பார்த்து சென்ற ஆண்டிலேயே தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்குவதற்கு அரசு எப்படி நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதையும், எப்படி மக்கள் தண்ணீரைச் சேமிக்க வேண்டுமென்பதையும் கடந்த ஆண்டிலேயே செய்திப் படமாக எடுத்திருக்கிறோம். இப்போதும் எடுக்கிற படங்களிலே இப்படி மக்களை வாட்டிக் கொண்டிருக்கும் பிரச்சினைகள் அல்லது மக்களுக்கு அறிவுறுத்த வேண்டிய செய்திகளைத் தெரிவிக்க. செய்திப் படங்களிலே அவ்வப்போது அதற்காக ஒரு குறிப்பிட்ட அளவுக்கு பகுதியை ஒதுக்கி, கருத்துக்கள் சேர்க்கப்பட்டு வருகின்றன.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** செய்திப் படங்கள் கலரில் எடுக்கப்படுகின்றனவா? செய்திப் படங்களை தியேட்டர்களில் காட்டுவதுபோல, டி.. வி. நிகழ்ச்சிகளில் காட்டும் நோக்கம் அரசுக்குண்டா? பணம் செலுத்தியாவது டி.வி.-ல் காட்டுகிற முயற்சி உண்டா? அதோடு இரு அவைகளின் நிகழ்ச்சிகளையும் காட்டி, நாம் எப்படிப் பணியாற்றுகிறோம் என்று மக்களுக்குத் தெரிவிக்கும் யோசனை அரசுக்குண்டா?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** பல்லைக் காட்டுவதற்கும் அவை நிகழ்ச்சியைக் காட்டுவதற்கும் என்ன சம்பந்தம்?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** செய்திப் படங்களை வண்ணத்திலே எடுப்பதால், பணம் அதிகமாகச் செலவாகிறது என்கிற காரணத்தாலே, வண்ணத்திலே எடுப்பதை அதிகமாக ஊக்குவிக்க அரசு விரும்பவில்லை. சில நேரங்களில் கருத்து விளக்கப் படங்கள் அந்தந்தத் துறைகளின் மூல





மாகத் தயாரிக்கப்படுகிறபோது, அவைகள் வண்ணத்திலே தயாரிக்கப்படுகின்றன. ஆனால் மத்திய அரசு சில நேரங்களிலே செய்திப் படங்களை வண்ணத்தில் வெளியிடுகின்ற அந்த உணர்வைப் பரிசீலித்து, சில முக்கியமான நிகழ்ச்சிகளை வண்ணத்திலே வெளியிட்டால் நல்லதென்று கருதுகிறோம். குறிப்பாக நம்முடைய மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா நடைபெற்றது. தமிழகத்திலே இதுவரை நடைபெறாத அளவுக்கு மகத்தான பெண்கள் பேரணி எல்லாம் நடைபெற்றது. அப்படிப்பட்ட காட்சிகளை, என்றைக்கும் மக்களுடைய மனதிலே வரலாறாகப் பதியும் காட்சிகளை வண்ணத்திலே எடுத்தால், அதற்குக் கொஞ்சம் செலவு அதிகமானாலும் பரவாயில்லை என்று கருதி, அப்படிப்பட்ட சில விசேஷ சந்தர்ப்பங்களிலே செய்திப் படங்களை வண்ணத்திலே எடுக்கலாமா என்பதுபற்றி அரசு பரிசீலிக்கிறது. தொலைக்காட்சியிலே இந்தச் செய்திப் படங்களை வெளியிடுவது என்னும்போது. சில நேரங்களில் தொலைக்காட்சியினர் சில செய்திப் படங்களை அவர்களாகக் கேட்டு வாங்கி, அதை ஒளி பரப்புகிறார்கள். ஆனால் நம்முடைய செய்திப் படங்கள் அனைத்தையும் அவர்கள் ஒளி பரப்புவதில்லை. தனியார் செய்வதுபோல பணம் கொடுத்து விளம்பரமாக ஒளி பரப்பலாமா என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஒரு மாநில அரசினுடைய செய்தியை மக்களுக்குத் தெரிவிப்பதற்கு மத்திய அரசு பணம் வாங்கிக்கொண்டுதான் ஒளி பரப்பும் என்ற உணர்வை அது பெற்றிருக்காது என்று கருதுகிறேன். ஆனாலும் நாம் வெளியிடுகிற செய்திப் படங்கள் அனைத்தையும் ஒளி பரப்பு நிகழ்ச்சிகளில் சேர்க்க வேண்டுமென்ற உணர்வை மத்திய அரசுக்குத் தெரிவிப்பதைப்பற்றி அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** செய்தி சினிமாப் படங்கள் எடுப்பதால், அரசுக்கு ஆண்டுக்கு எவ்வளவு செலவாகிறது?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** ஆண்டுதோறும் செய்தித் துறைக்கு ஒதுக்குகிற நிதி ஒதுக்கீட்டிலே இதற்குச் செலவு செய்யப்படுகிறது. அதற்கான குறிப்பான விவரங்கள் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால், அதன் தொடர்பான தகவல்களைச் சேகரித்துத் தர முடியும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** செய்திப் படங்கள் அரசினுடைய சாதனைகளை, மற்றவைகளை விளக்குகின்ற, நல்ல கருத்துக்களை விளக்குகின்ற படங்களாக வருவது வரவேற்கத்தக்கது. என்றாலும். மத்திய அரசு செய்திப் படங்கள் வெளியிடும்போது. அரசுக்கு எதிரான. கருத்துள்ள அல்லது அரசினிடத்திலே கோரிக்கை வைக்கின்ற சங்கங்கள் அல்லது கட்சிகள்

நடத்துகின்ற போராட்டங்களைக்கூட செய்திப்படமாக எடுத்து, வெளியிட்டிருப்பதைப் பார்க்கிறேன். இதுவரை அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏதும் செய்திப் படமாக நம்முடைய அரசு எடுத்திருக்கிறதா ? அப்படி எடுக்கவில்லை என்றால் அப்படிப்பட்ட முக்கியமான நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்டுவதற்கு நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம வீரப்பன் :** இந்தச் செய்திப் படத்தினுடைய செயல் முறைகளை உருவாக்கிய அந்தக் காலத்திலிருந்து அப்படி அரசுக்கு எதிரான அல்லது வேறு கிளர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சிகளைச் செய்திப் படங்களிலே காட்டுவது என்பதற்கான ஏற்பாடுகள் ஆரம்பத்திலேயிருந்து கிடையாது. அதையொட்டித்தான் இந்த அரசும் இப்போது செயல்பட்டு வருகிறது. ஆனால் மத்திய அரசு சில நேரங்களிலே அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை எடுத்துக் காட்டுகிறது அல்லது எதிர்க் கட்சி நிகழ்ச்சிகளைக் காட்டுகிறது என்றால், மத்திய அரசு அகில இந்தியாவுக்கும் என்ற அடிப்படையில் சில திட்டங்களை வைத்து, செயல்படுத்துகிறார்கள். ஆகவே எதிர்க் கட்சி நிகழ்ச்சிகளை மத்திய அரசு காட்டுகிறபோது, அதே நிகழ்ச்சியை மாநில அரசும் காட்ட வேண்டும் என்பதில்லை. இரண்டும் ஒரே திரை அரங்கிலேதான் திரையிடப்படுகின்றன. மேலும் அரசை எதிர்த்து நடைபெறும் நிகழ்ச்சிகள், ஆர்ப்பாட்டங்கள் இவைகளுக்கெல்லாம் தினசரி விளம்பரங்களும், பத்திரிகைச் செய்திகளும் கிடைக்கும் நேரத்தில், மேலும் அதற்காக அரசு பணத்தைச் செலவு செய்ய வேண்டுமென்ற நிலை இருப்பதாகத் தெரியவில்லை.

**திரு. பா. ரா. தாமஸ் :** குடும்பக் கட்டுப்பாடு குறித்து செய்தித் திரைப் படங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றனவா ? எத்தனை படங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன ? அந்தப் படங்கள் நம்முடைய திரை அரங்குகளிலே காட்டப்படுகின்றனவா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** குடும்பக் கட்டுப்பாட்டைப்பற்றி மிகச் சிறந்த கருத்து விளக்கப் படங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இப்போது இந்தக் கேள்வி கேட்டிருக்கிற இந்த நிலையில், 'கல்யாணத்திற்கு ஒரு நிபந்தனை' என்ற அருமையான கதையம்சம் உள்ள ஒரு கருத்து விளக்கப் படம் நல்ல நடிகர்களை வைத்து தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதைப் போல மிகச் சிறந்த படங்கள், குடும்பக் கட்டுப்பாட்டின்மூலம் மக்களுக்குக்





கிடைக்கும் நன்மைகளை விளக்குகின்ற கருத்து விளக்கப் படங்கள் எடுக்கப் பட்டிருக்கின்றன. ஆனால் செய்திப் படங்களிலே, நியூஸ் ரீலிலே எடுப்பதில்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இப்படிப்பட்ட செய்திப் படங்களை மாணவர் சமுதாயம் கட்டாயம் பார்க்க வேண்டும். ஆனால் இன்று அவர்கள் திரைப்படக் காட்சிகளுக்குச் செல்லும்போது மட்டும் பார்க்க வாய்ப்பு இருக்கிறது. கல்வி நிலையங்களில் அந்தப் படச் சுருள்களை வாங்கி வைக்கும் அளவுக்கு நிதி நிலைமை கிடையாது. இன்றைய தினம் பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் 16 எம்.எம். ப்ரொஜக்டர்கள் இருக்கின்றன. எனவே 16 எம்.எம். படங்களை எடுத்து, அவர்களுக்கு வாடகைக்குக் கொடுக்க வேண்டும். இப்போது கமெர்ஷியல் படங்கள் வாடகைக்குத் தரப்படுகின்றன. அதைப்போல் செய்திப் படங்களுக்கும் குறைந்தபட்ச வாடகை நிர்ணயித்து, அவர்களுக்கு வாடகைக்குக் கொடுக்க நடவடிக்கை எடுத்தால் மாணவர் சமுதாயம் பெருமளவுக்குப் பயன்படும். அந்த அளவில் அரசு சிந்திக்குமா ?

**மாண்புமிகு திரு. இராம வீரப்பன் :** குறிப்பாக கருத்து விளக்கப் படங்கள் திரை அரங்குகளிலே திரையிடப்படுவதில்லை. காரணம், அது 3000 அடி, 2500 அடி என்று இருக்கிறது. சுமார் 1000 அடி அளவிற்குள்ளேதான் திரை அரங்குகளிலே செய்திப் படங்களைத் திரையிட முடியும். ஆகவே அப்படிப்பட்ட செய்திப் படங்கள், கருத்து விளக்கப் படங்களை திரை அரங்குகளிலே திரையிட 35 எம்.எம்.லே பிரதிகள் எடுக்கிறோம். அதே நேரத்திலே 16 எம்.எம். பிரதிகளும் எடுத்து, செய்தித் துறை மூலமாக மக்களுக்குப் பொது இடங்களிலும், பொது நிகழ்ச்சிகளிலும் திரையிட்டுக் காண்பிக்கிறோம். அதே நேரத்திலே பள்ளிகளிலேயிருந்து வேண்டுகோள் விடுத்தால், அவர்களுக்கும் இந்தப் பிரதிகளை நாங்கள் இனாமாகத் தந்து வருகிறோம். ஆனால் எல்லாப் பள்ளிகளுக்கும் கொடுக்கும் சூழ்நிலை இப்போது இல்லை. அப்படிக் கொடுக்கவேண்டுமென்றால் நூற்றுக் கணக்கான பிரதிகள் எடுக்க வேண்டி வரும். அதற்கான நிதி ஒதுக்கீடு செய்தித் துறையிடத்தில் இல்லை. கல்வித் துறை இதிலே ஓரளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்து, இந்தப் பிரதிகளைக் கேட்டால், எந்த அளவுக்கு செலவு ஆகிறதோ அந்தச் செலவைப் பெற்றுக் கொண்டு, அந்தப் படங்களை எடுத்துக் கொடுக்க முடியும். இதற்கிடையில் மாணவர்களுக்குத் திரையிட வேண்டுமென்று கல்வித் துறை, செய்தித் துறையிடம் கேட்டால், எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்குக் கட்டணம் இல்லாமல் வழங்க செய்தித் துறை முன்வரும்.

(முற்பகல் 10-00)

**திரு. செ. முத்துசாமி :** மேலை நாடுகளிலே, முன்னேற்றமடைந்த நாடுகளிலே எல்லாம், கல்வி போதனைகளை இப்போது வீடியோ டேப் மூலம் பதிவு செய்து, டி.வி. வழியாகப் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். அதே முறையை தமிழகத்தில் நடைமுறைப்படுத்த, கல்வித் துறை வீடியோ தயாரித்துக் கொடுக்க வேண்டுமென்று செய்தித் துறையைக் கேட்டால், அதற்குரிய வசதிகள் இத்துறையில் இருக்கின்றனவா? அந்தவகையில் நம்முடைய மாணவர்கள் நல்ல தரமான கல்வியைப் பெற முடியுமே. அதற்கான யோசனையை மனதில் கொண்டு இந்த அரசு செயல்படுமா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** வானொலி என்பதிலிருந்து முன்னேறி இப்போது தொலைக்காட்சிக்கு வந்திருக்கிறோம். தொலைக்காட்சியிலிருந்து இப்போது வீடியோவுக்கு வந்திருக்கிறோம். வீடியோ என்பது நிகழ்ச்சிகளை வீடியோ டேப்பிலே பிடித்து வந்து, இல்லங்களிலேயே, இருக்கிற இடத்திலேயே, தொலைக்காட்சி பெட்டி மூலம் பார்ப்பது ஆகும். உலகத்தில் நடக்கிற நிகழ்ச்சிகள் அனைத்தையும் இப்படிப் பார்ப்பதற்கான வசதிகளை விஞ்ஞானத்தின் மூலம் நாம் பெற்றிருக்கிறோம்.

நம்முடைய நாட்டிலே இது இப்போதுதான் ஆரம்பக் கட்டத்தில் இருக்கிறது. வீடியோ டேப்பில் படத்தைப் பதிவு செய்கின்ற இயந்திரங்கள், மத்திய அரசின் மூலம் சென்னையிலே, ஒரு நிறுவனத்திலே அமைக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய தமிழக அரசைப் பொறுத்தவரையில், நம்முடைய திரைப்படப் பயிற்சிக் கல்லூரியிலே தொலைக்காட்சி பற்றிய பயிற்சியையும் சேர்த்துச் சொல்லிக்கொடுக்கிறோம். வீடியோ டேப் பற்றி நல்முறையில் தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்களைக் கொண்டு அவற்றை உருவாக்குகிற பணியைப்பற்றி மாணவர்களுக்குச் சொல்லிக்கொடுத்து, அவர்களை நாம் தயார் செய்துகொண்டிருக்கிறோம். எதிர்காலத்திலே இப்படி பயிற்சி பெற்று வருபவர்கள் மற்றும் மத்திய அரசால் அமைக்கப்பட்டிருக்கிற நிறுவனம்—இவையெல்லாம் இணைந்து மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற கல்வியை வீடியோ மூலம் நாடு முழுவதும் உள்ளவர்கள் பார்க்கும் படி பரப்ப வாய்ப்பிருக்கிறது. அப்படி கல்வியை மாத்திரமல்லாமல், பெரிய ஆராய்ச்சிகளையெல்லாம் தெரிந்துகொள்ளுகின்ற வாய்ப்புகளைக் கூட இன்றைக்கு இந்த வீடியோ டேப்புகள் ஏற்படுத்த இருக்கின்றன. அந்தச் சூழ்நிலை வளர்வதற்கான அடிப்படைகள் இப்போதே அமைந்திருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





## அர்ச்சகர்களுக்கு ஈட்டுறுதித் திட்டம்.

*260. வினா—**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்,—

(அ) இந்து சமய அறக்கட்டளை நிர்வாகத்தின் கீழ் உள்ள ஆலயங்களில் அர்ச்சகர்களாக பணியாற்றுபவர்களுக்கு ஈட்டுறுதித் திட்டம் ஒன்று ஏற்படுத்த வேண்டும் என்ற செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** (அ) மற்றும் (இ) ஆம்.

தற்போது இந்து சமய அறநிலையத் துறையின் நிர்வாக மேற்பார்வையிலுள்ள அர்ச்சகர் உட்பட அனைத்துத் திருக்கோயில் ஊழியர்களுக்கும் பாகுபாடின்றி ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் மூலம், ஒரு திருக்கோயில் ஊழியர் இறப்பின் அவரது வாரிசுதாரருக்கு ரூ. 5,000 வழங்கும் திட்டமொன்று 15—7—1982 முதல் அமுல்படுத்துவதற்காக ஆயுள் காப்பீட்டுக் கழகத்தோடு பேசப்பட்டுவருகிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** இந்து சமய அறக்கட்டளை நிர்வாகத்தில் பணியாற்றுகின்ற அர்ச்சகர்கள் மற்றும் ஊழியர்களுக்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் மூலமாக 5 ஆயிரம் ரூபாய் தருகின்ற திட்டத்தைப் பரிசீலிக்கின்ற இந்த அரசு அதையொட்டியே அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குகின்ற திட்டம், குடும்ப நலத் திட்டம் என்கிற பெயரால் 10 ஆயிரம் ரூபாய் வழங்குகின்ற திட்டம் போன்ற திட்டங்களையும் இப்போது இல்லாவிட்டாலும் கூட வருங்காலத்திலாவது பரிசீலிக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** ஆலயங்களின் நிதிநிலையையொட்டித்தான் அந்தந்த ஆலயங்களில் பணியாற்றுகின்றவர்களுக்கு ஊதியங்கள் வழங்கப்படுகின்றன. ஆகவே, ஒட்டுமொத்தமாக, இப்படிப்பட்ட சில உதவிகளை நாம் வேறு நிதிகளிலிருந்து ஒன்று திரட்டித்தான் அவர்களுக்குப் பாதுகாப்பாக உருவாக்க முடியும். அதைப்பற்றித் தான் பரிசீலித்து நடைமுறைப்படுத்த முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஓய்வூதியம் வழங்குவதைப் பொறுத்தவரையிலும், மிகுந்த சிக்கல்கள், பிரச்சினைகள் இருக்கின்றன. மேலும் மாண்புமிகு உறுப்பினர் சொல்லும் போது, ஒன்றைக் குறிப்பிட்டார். இப்போது குடும்பப் பாதுகாப்புத் திட்டம் என்கிற பெயரால், அரசு அலுவலர்கள் யாராவது இறந்து போனால், அவர்களுடைய குடும்பத்திற்கு 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வருவதைப்

களிலே இது நடந்து விட்டது, ஆகவே அதற்காக அரசாங்க அதிகாரிகளை தண்டிக்க வேண்டியதில்லை என்கிற அடிப்படையில் மேல் முறையீட்டின் பேரில் தள்ளுபடி செய்யப்பட்டதா ? அப்பீல் அல்லது (Affidavit) அபிடவிட்டில் உள்ள ( Prayer ) கோரிக்கை என்ன ? கவுன்டர் அபிடாவிட்டில் அல்லது அப்ளிகேஷனில் என்ன கேட்டிருக்கிறார்கள் ? ஜட்ஜ்மென்டிலே அபராதத்தைத் தள்ளுபடி செய்ததற்கு என்ன காரணம் சொல்லியிருக்கிறார்கள் ?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** இது பெரிய கதை. துவக்கத்திலிருந்து சொல்வதென்றால் இது ஒரு பெரிய கதை. 1976 ஆம் ஆண்டிலே அந்த நபருக்கு 78 ஏக்கருக்கான லீஸ் முடிவடைகிறது. அதற்குப் பின்னாலே, அதனைப் புதுப்பிக்க வேண்டுமென்று அவர் விண்ணப்பம் செய்தார். ஆனால் அவர் பாக்கி கட்ட வேண்டியிருந்ததாலும், மேக்னசைட்டை அவர் முறையாக மைனிங் செய்யவில்லை என்ற அடிப்படையிலேயும் அவருடைய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. அவர் அதை எதிர்த்து மத்திய அரசுக்கு மனு செய்தார். மத்திய அரசு இம்மாநில அரசுக்கு ஒரு டைரக்ஷன் அனுப்பி அதை புதுப்பித்துக் கொடுக்க வேண்டும் என்று சொன்னது. அதை நாங்கள் அனுமதிக்கவில்லை. அந்தப் பகுதியை தமிழ் நாடு மேக்னசைட் கார்ப்பரேஷனுக்கு, ஒரு அரசு நிறுவனத்துக்கு ஒதுக்க முடிவு செய்திருக்கிறோம், அவர் ஒரு தனி நபர், அதனால் லீசைப் புதுப்பிக்கவில்லை என்று நாங்கள் பதில் கடிதம் எழுதினோம். இப்படி நாங்கள் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியதும் அவர் ஹைக்கோர்ட்டுக்கு போனார். மத்திய அரசு கொடுக்க வேண்டுமென்று டைரக்ஷன் செய்தும் கொடுக்கவில்லை என்று சொல்லி, கோர்ட்டுக்குப் போனார். ஹைகோர்ட்டிலே இருந்து "நீங்கள் மத்திய அரசு டைரக்ஷன் கொடுத்ததற்கு பின்னாலேயும் கொடுக்காமல் இருப்பது தவறு, கொடுக்க வேண்டும்" என்று உத்தரவு போடுகிறார் நீதிபதி. அதை மீறி நாங்கள் பெஞ்சுக்குப் போனோம். பெஞ்சும் 'கன்பர்ம்' பண்ணி 'கொடுத்துத்தான் ஆக வேண்டும்' என்கிறது. பிறகு சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனோம். அவர்களும் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதற்குப் பிறகு ஓராண்டுக்கு நாங்கள் கொடுத்தது தவறு, 20 வருடங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்கிற நிலையிலே தான் அபராதம் போட்டார்கள்.





(முற்பகல் 10-10)

அப்படி மைய அரசும் அவர்களுக்கு அனுமதி கொடுத்திருக்கிறது. கோர்ட் ஆர்டரை நடைமுறைப்படுத்தவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே ரூ. 2,000 அபராதம் போட்டார்கள். அப்பீல் செய்தோம். மைய அரசு எத்தனை ஆண்டு அவர்களுக்குக் கொடுத்ததோ அதை மாநில அரசு கொடுக்க வேண்டுமென்று மனுவில் சொல்கிறபோது, அந்த மனுவை எதிர்த்து மனு கொடுக்கப்பட்டது. 20 ஆண்டு கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். சுப்ரீம் கோர்ட்டும் 20 ஆண்டு கொடுக்க வேண்டுமென்று தீர்ப்பு தந்தது. அப்படி வந்தபிறகு, நாங்கள் கொடுத்துவிட்ட காரணத்தால், அவர்கள் மீண்டும் ரிட் போட்டுவிட்ட காரணத்தால், அந்த சமயத்தில் தர முடியவில்லை. ஆகவே அபராதம் போட வேண்டியதில்லை என்று அரசு தெரிவித்தது. அதை ஏற்றுக் கொண்டார்கள். இதுதான் பிரச்சினை.

### பத்திரிகைக் காகித ஆலை.

* 264. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பெரியார் மாவட்டம் ஈரோட்டில் உலக வங்கி உதவியுடன் பத்திரிகைக் காகித ஆலை ஒன்றை அமைக்கும் திட்டம் ஏதும் தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** பெரியார் மாவட்டத்தில் இது போன்ற திட்டம் எதுவும் இல்லை. ஆனால் பெரியார் மாவட்டத்திலே உள்ள சர்க்கரை ஆலைகளிலிருந்து பகாஸ் எடுத்து உபயோகப்படுத்தி அதை திருச்சி மாவட்டம் கரூரில் ஒரு காகிதத் தொழிற்சாலை அமைக்க கேட்டுக் கொண்டிருக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் கட்டிக்கொண்டிருக்கிற இந்தப் பத்திரிகைக் காகிதத் தொழிற்சாலையுடைய முதலீடு எவ்வளவு ? அதனுடைய உற்பத்தித் திறன் என்ன ? இதற்காக உலக வங்கி ஏதேனும் உதவி செய்து இருக்கிறதா, எப்போது இது தன்னுடைய உற்பத்தியைத் துவங்கும் என்று அறிய விரும்புகிறேன்.

போலத்தான் இப்போது திருக்கோயில் ஊழியர் இறப்பின் அவரது வாரிசுதாரருக்கு ரூ. 5,000 என்று வைத்திருக்கிறோம். உயிரோடு இருக்கும்போதே 10 ஆயிரம் ரூபாய் வழங்குவது என்கிற திட்டம் இப்போது எந்தத் துறையிலும் நடைமுறையில் இல்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** இப்போது அரசு பரிசிலித்திருக்கிற திட்டங்கள், இன்னும் வருங்காலத்தில் வழங்க இருக்கிற திட்டங்கள், இவை எல்லாம் வந்தால் பெரும்பாலும் எல்லோரும் பாராட்டுவார்கள். அப்போது பொதுவாக எல்லோரும் அர்ச்சகர்களாக வர விரும்புவார்கள். ஆலயங்களில் அர்ச்சகர்களாக ஆதி திராவிடர்கள் வர வேண்டுமென்ற ஒரு திட்டம் இயற்றப்பட்டு, பிறகு அது நீதிமன்றத்தால் தடை செய்யப்பட்டிருக்கிறது. அதுபற்றி அரசின் கொள்கை எந்த அளவில் இருக்கிறது? அர்ச்சகர்களாக எல்லா சாதியினரும் தகுதி பெற்றிருந்தால் வரலாம் என்கிற அளவில் அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** எல்லா சாதியினரும் தகுதி இருந்தால் அர்ச்சகர்களாக ஆகலாமென்ற கொள்கையை இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் இதை நடைமுறைப்படுத்துவதில் என்னென்ன சிக்கல்கள் இருக்கின்றன என்பதைப்பற்றி நான் அறிவிக்க வேண்டுமானால்—மாண்புமிகு உறுப்பினர் தனியாகக் கேள்வி கேட்டால், விளக்கமாகப்பதில் அளிக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள் 261 மற்றும் 262 ஒத்தி வைக்கப்படுகின்றன.

### அரசு அதிகாரிக்கு அபராதம்.

*263. வினா—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1982ஆம் ஆண்டு மார்ச் மாதம் சென்னை உயர்நீதிமன்றம் தமிழக அரசு தொழில்துறை செயலாளருக்கு ரூ. 2,000 அபராதம் விதித்தது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணம் யாது?

(உ) அபராதம் பெறவேண்டிய நிலை உருவானதற்கு பொறுப்பானவர்கள் யார், யார்?





**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** (அ) ஆம்.

(இ) மற்றும் (உ) இந்த அபராதம் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது. வாதி உயர்நீதிமன்றத்தில் மறுஆய்வு விண்ணப்பத்திற்கெதிரான அவமதிப்பு மேல்முறையீடு contempt appeal against review application செய்து இருக்கிறார்கள். இது நிலுவையில் உள்ளது.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** இது தமிழ் நாடு மேக்னசைட் கார்ப்ரேஷன் சம்பந்தப்பட்டது என்று நான் நினைக்கிறேன். இதில் தனியார் ஒருவர் தவறு செய்ததால், அரசு தீவிரமாக நடவடிக்கை எடுத்தது. இப்போது இது நீதிமன்றத்தில் இருக்கும் நிலையில், தனியார்கள், முறையாகத் தகுதி பெற்றவர்கள், மனுசெய்தால் அவர்களுக்கு மீதியைத் தரலாம் என்கிற வகையில் இதனைப் பரிசீலிக்கின்ற நோக்கம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** தமிழ் நாடு மேக்னசைட் கார்ப்பரேஷன் என்கிற ஒரு பொது நிறுவனம் துவக்கப்பட்டு, மேக்னசைட்டைப் பொறுத்தவரையில், இந்த நிறுவனம் தான் வெட்டி எடுத்துக்கொண்டிருக்கிறது. அதனால் தான் சேலத்தில் முனுசாமி செட்டியார் என்பவருக்கு லீசை மேற்கொண்டு புதுப்பித்துக்கொடுக்க மறுக்க வேண்டிய நிலை வந்தது. அதுமட்டுமல்லாமல், இவர்கள் தவறு செய்ததாக பல குற்றச்சாட்டுகள் இருந்ததன் அடிப்படையிலேயும், பணம் கட்டவில்லை என்ற அடிப்படையிலேயும் அவருடைய லீசைப் புதுப்பித்துக்கொடுக்க மறுக்க வேண்டிய நிலை இருந்தது. ஆனால் மத்திய அரசும் உயர் நீதிமன்றமும் கண்டிப்பாக அவருக்குக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டதற்கிணங்க 20 வருடத்திற்குப் புதுப்பிக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல், இப்படி உயர் நீதிமன்றத்தின் ஆணைகள் மற்றும் மத்திய அரசின் உத்தரவு எல்லாம் இருப்பதால், தமிழ் நாடு மேக்னசைட் நிறுவனத்திற்குத் தேவையான பகுதிகளைத் தவிர மற்ற பகுதிகள், அதுபோல் தமிழ் நாடு மேக்னசைட் கார்ப்பரேஷன் பயன்படுத்தாத ஏரியாக்கள் போன்றவைகளை தனியார்கள் முறையாக பகுதிகள் வேண்டி மனு செய்கிறபோது, அவற்றைத் தனியாருக்குக் கொடுக்கலாமா என்பதுபற்றியும், ஏற்கெனவே நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையிலேயும், மத்திய அரசின் டைரக்ஷன் அடிப்படையிலேயும் தமிழ் நாடு அரசு மீண்டும் பரிசீலனை செய்யும்.

**திரு. க. இராமமூர்த்தி :** அபராதம் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது எந்த அடிப்படையில்? தவறே நடைபெறவில்லை என்கிற அடிப்படையில், அது அப்பீலில் தள்ளுபடி செய்யப்பட்டதா?. அல்லது பல சூழ்நிலை

[1983 ஏப்ரல் 9

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினுடைய மொத்த மதிப்பீடு சுமார் 190 கோடி ரூபாயாகும். இதிலே உலக வங்கி 100 கோடி ரூபாய் கடனாகக் கொடுக்கிறது. ஆண்டுக்கு 50 ஆயிரம் டன் செய்தித்தாளும், 40 ஆயிரம் டன் அச்சு மற்றும் எழுது பொருள் தாளும் தயாரிக்கப்படும். ஏற்கெனவே கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. இதற்கான மெஷின்கள் வந்து கொண்டிருக்கின்றன. 1984 இறுதியிலே அல்லது அதிகபட்சம் 1985 ஆரம்பத்தில் இதனுடைய உற்பத்தி வெளிவரும் என்று கணக்கிட்டு அதற்கேற்ற பணிகள் நடக்கின்றன.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** கரும்புச் சக்கையை வைத்துக்கொண்டு அதன் அடிப்படையில் இந்த ஆலை துவங்குவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். பத்திரிகைக் காகிதம் தட்டுப்பாடு இருக்கிற இந்த நேரத்தில், இதுபோன்று எங்கெங்கு எல்லாம் கரும்புச் சக்கை மிக அதிகமாகக் கிடைக்கிறதோ அதைப் பயன்படுத்தி இதுபோன்ற திட்டத்தின் அடிப்படையில் வேறு தொழிற்சாலைகளை ஆரம்பிக்க அரசிடம் ஏதும் விபரங்கள் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** நான் ஏற்கெனவே சொன்னதைப் போல் இதுவே 190 கோடி ரூபாய் திட்டம். முதலிலே உற்பத்தி வெளியே வரட்டும். வெற்றி பெறட்டும். அதற்குப் பின்னாலே அடுத்ததைப்பற்றி யோசிக்கலாம்.

Thiru J. M. MIAKHAN : Sir, it has been estimated that hay, that is 'vaikol' can be used for the manufacture of quality newsprint and also writing paper. It has been estimated that huge quantities of hay, which can be profitably used, are now going waste in Thanjavur district. There is a private proposal for this production of paper using hay, at an estimated investment of Rs. 10 crores. Will the Government consider supplying hay to this private unit at Tiruchirappalli so that they may get the necessary raw material?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** இது கரும்பு சக்கையையும் அது போல் மூங்கிலையும் வைத்து, ஒரு புது முறையாக (நியூ டெக்னிக்காக) தொழிற்சாலை கட்டப்பட்டு வருகிறது. வைக்கோலை வைத்து செய்தித் தாள் காகிதம் செய்ய தனியார் யாரேனும் முன்வந்தால், அவர்களுக்கு அரசு வேண்டிய உதவிகளைச் செய்யும்.



1983 ஏப்ரல் 9]

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** இந்தத் தொழிற்சாலை தமிழகத்திற்கு ஒரு பெருமையைத் தேடித்தருகிறது. தமிழகத்தின் காகிதத் தேவையை இது எந்த அளவுக்குப் பூர்த்தி செய்யும்? நம்முடைய மாநிலத் தேவையை இந்தத் தொழிற்சாலை எந்த அளவுக்குப் பூர்த்தி செய்யும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** ஏற்கெனவே சொன்னேன், 50 ஆயிரம் டன் செய்திக் காகிதத் தாளும், 40 ஆயிரம் டன் அச்சு மற்றும் எழுது பொருள் தாளும் தயாரிக்கிற தொழிற்சாலையாக இது இருக்கும். இது நம் மாநிலத்தினுடைய தேவையைப் பூர்த்தி செய்வதோடு, மற்ற மாநிலங்களுடைய தேவைகளுக்கும் ஏற்றுமதி செய்ய முடியும். அப்படி உற்பத்தி செய்யலாம் என்று நம்புகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** 1985லே உற்பத்தி துவங்குகிற இந்தத் தொழிற்சாலைக்கு இதுவரையில் கட்டிடப் பணிகளுக்காக, மெஷினரிகளுக்காக என்று எவ்வளவு செலவிடப்பட்டிருக்கிறது? எக்ஸ்பர்டைஸ் (Expertise) அல்லது (Advice) அட்வைஸ் அல்லது வேறு மற்ற இனங்களுக்கு இதுவரையில் எவ்வளவு செலவு செய்திருக்கிறது? இப்போது 190 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இது இன்னும் எவ்வளவு அதிகமாகும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது? அப்படியென்றால் எத்தனை கோடி ரூபாய்?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** கேள்வி பெரியார் மாவட்டத்தில் ஏதாவது இதுபோன்று காகிதத் தொழிற்சாலைத் திட்டம் இருக்கிறதா என்பதுபற்றி. ஆனால் இந்த மூலக் கேள்வியிலிருந்து இன்னொரு கேள்வி போட்டு அதற்கு பதில் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதற்கான கோப்பு இல்லை. ஞாபகத்தை வைத்துச் சொல்கிறேன். திட்டம் போட்டது ரூபாய் 190 கோடிக்கு. அமெரிக்காவிலிருந்து இறக்குமதி அனுமதி பெற்று விலாய்த்தி கார்ப்பரேஷன் அனுப்புகிறது. 20-25 சதவிகிதம் வந்து கொண்டிருக்கிறது. சிவில் கன்ஸ்ட்ரக்ஷன் நடந்து கொண்டிருக்கிறது.

இந்தத் திட்டத்தின் மதிப்பீடு அதிகரிக்கப்பட்டது. இந்த மாநில அரசைப் பொறுத்தவரையில், அதற்கும் இதற்கும் திட்ட மதிப்பீடு அதிகரிப்பதற்கும் தொடர்பு இல்லை. மைய அரசு புதிய இம்போர்ட் டேட்டியைப் புகுத்தியிருப்பதால், ரூ. 190 கோடி என்பது ரூ. 200 கோடியாகும் என்ற அளவில் அச்சம் இருக்கிறது. அதை மைய அரசிடம் சொல்லியிருக்கிறோம், அந்த இறக்குமதி வரியில் விலக்கு தரவேண்டுமென்று. இதற்காக உலக வங்கியும் அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டுமென்று கண்டிஷன் போட்டிருக்கிறது. இதையும் மத்திய அரசுக்குச் சொல்லியிருக்கிறோம். இது ஒரு அரசு நிறுவனம் என்று சொல்லி விலக்கு கேட்டிருக்கிறோம்.

திரு. க. இராமமூர்த்தி : இது ரூ. 80 கோடி, ரூ. 100 கோடி என்ற அளவில் துவங்கி, இப்போது ரூ. 190 கோடி, ரூ. 200 கோடி என்ற அளவில் போகிறது, என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. ஆரம்ப காலத்திலே எதிர்க் கட்சி வரிசையிலே சுட்டிக்காட்டிய நிலையில் ஒருவேளை இந்தத் தொழிற்சாலை முழுமை பெறாமல் போனால், அதை பகாஸ் (Baggase) தவிர வேறு எதையாவது வைத்து வயபிள் (Viable) ஆக நடத்த விபரமாக திட்டங்கள், ஆராய்ச்சிகள் இவைகளில் அரசு ஈடுபட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : ரூ. 70, 80 கோடியில் இது துவக்கப்படவில்லை. துவக்கியது ரூ. 170 கோடியில். இறக்குமதி வரி போட்டதால் அது ரூ. 190 கோடி ஆகியிருக்கிறது. 15 சதவிதம் அதிகமாகிவிட்டது. இன்னும் போட்டால் இன்னும் 10 கோடி அதிகம் ஆகுமோ என்ற சந்தேகம் இருக்கிறது என்று சொன்னார்கள். இப்போது நம்மிடத்தில் பகாஸ் தான் இருக்கிறது. மைய அரசு அந்த இம்போர்ட் டேட்டியிலிருந்து விலக்கு தர வேண்டும். புதிய முறைப்படி (நியூ டெக்னாலஜி) பகாஸ் திட்டம் வெற்றிகரமாக ஆகும் என்று நம்புகிறோம். அதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி(*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



## 2. கவன ஈர்ப்பு.

(1) "தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் எரி எண்ணெய்க் குழாயில் ஏற்பட்ட ஒழுக்கில் தீப்பிடித்து எரிந்ததால் மின்சார உற்பத்திக்குக் குந்தகம் ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது குறித்து."

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களின் கவனத்துக்குக் கொண்டுவருகிறேன் :—

"தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் எரி எண்ணெய்க் குழாயில் ஏற்பட்ட ஒழுக்கில் தீப்பிடித்து எரிந்ததால் மின்சார உற்பத்திக்கு எதிர் காலத்தில் குந்தகம் ஏற்படும் சூழ்நிலை உருவாகி உள்ளது குறித்து."

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் தீ விபத்திற்கான காரணங்கள் புலனாய்வில் இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. 8—3—1983-ல் ஏற்பட்ட தீவிபத்துக்கு, இன்றைக்கு 9—4—1983 அதாவது ஒரு மாதம் ஆகியும் காரணம் கண்டுபிடிக்கப்பட வில்லை. அந்தக் காரணம் என்ன என்று கண்டுபிடித்து நடவடிக்கைகளைத் தீவிரமாக எடுக்க அரசு முனைந்ததாகத் தெரியவில்லை. அது மட்டுமல்லாமல், இந்தத் தீ விபத்தினால் அனல் மின் உற்பத்தி பாதிக்கப்படவில்லை என்று சொன்னதோடு கூட, 8 ஆம் தேதி நடந்த தீ விபத்துக்குப் பிறகு, 8, 9, 10 ஆகிய நாட்களில் 500 மெகாவாட்டுக்கு மேலாக உற்பத்தி ஆகியுள்ளது என்று கூறப்பட்டுள்ளது. இந்தத் தீ விபத்து ஏற்பட்டதால், இந்த உற்பத்தி அதிகமானதா ? அப்படியென்றால் வருங்காலத்தில் இப்படிப்பட்ட அதிக உற்பத்தி பெறும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஆய்வு என்று சொல்லும்போது, ஆய்வுக்குக் காலக்கெடு விதிக்க முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். உற்பத்தித் திறனைக் குறிப்பிடும்போது, உற்பத்தித் திறன் இத் தீ விபத்தால் பாதிக்கப்படவில்லை என்பதற்காகக் குறிப்பிடப்படுகிறதே தவிர, தீ விபத்தின் காரணமாகத்தான்

@ 234 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.